
அழைக்கப்
பட்டவர்கள்...
தெரிந்து
கொள்ளப்பட்டவர்கள்
எல்லா காலத்திலும் தேவன் தனக்கென
ஒரு கூட்ட மக்களை வைத்திருந்தார்
கென் மெக்ஃபார்லாண்ட்

கீழ்க்காணப்படுபவைகளில் ஏதேனும் உங்களுக்கு பொருந்துகின்றதா? அப்படியானால் இந்த புஸ்தகம் உங்களுக்கு உதவியாயிருக்கும்.

- வெறும் விசுவாசத்தை மட்டும் சுதந்தரித்து கொண்டு விசுவாசம் ஏன் முக்கியமானது என்று அறியாத யாரையாயினும் உங்களுக்கு தெரியுமா?
- குறிக்கோளற்று சௌகரியமாயிருக்கும் பாரம்பரிய அட்வென்டிஸ்த்தர்கள் யாரையாயினும் உங்களுக்கு தெரியுமா?
- தங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சி இன்னும் ஆழமாக வேண்டும் என்று எண்ணும் புதிய சபை அங்கத்தினர்கள் யாரையாயினும் உங்களுக்கு தெரியுமா?
- தங்களுடைய விசுவாசத்திலிருந்து விலகி மேலும் அதிக உற்சாகம் தேவைப் படுகிற யாரையாயினும் உங்களுக்கு தெரியுமா?
- அட்வென்டிஸ்த்தராக இருப்பதில் மைய தத்துவம் என்ன என்று உங்களுக்கு தெரியுமா?

இந்த புஸ்தகத்தின் அதிகப்படியான பிரதிகளைப்பெற விரும்புவோர் இப்புஸ்தகத்தின் கடைசி உள் அட்டையில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களைப் பார்க்கவும்.

அழைக்கப் பட்டவர்கள்...
தெரிந்துகொள்ளப் பட்டவர்கள்

எல்லா காலத்திலும் தேவன் தனக்கென

ஒரு கூட்ட மக்களை வைத்திருந்தார்

கென் மெக்ஃபார்லாண்ட்

வெளிப்புற அட்டை "இடுக்கமான வழியின் கிறிஸ்து"

எல்பிரட் லீ என்பவரால் வடிவமைக்கப்பட்டது.

பதிப்புரிமை எலென் ஜி. உவைட் எஸ்டேட்.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.

அனுமதியுடன் பயன்படுத்தப்படுகிறது.

பதிப்புரிமை © 2006

ஹாலிஸ் ஸ்கார்ப்ரோ

அமெரிக்கா ஐக்கிய நாடுகளிலுள்ள

ரேவ்யூ அண்டு ஹெரால்ட்டு கிராபிக்ஸ் வெளியீட்டார்

மூலம் அச்சடிக்கப்பட்டது

www.thecalledthechosen.com

தமிழாக்கம்: போதகர். மனுவேல் மனாசே, திருமதி. தீனா தாமஸ்

இந்த புஸ்தகத்திலுள்ள வசனங்கள் அனைத்தும்

பரிசுத்த வேதாகமத்திலிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

பதிப்புரிமை © 1871 தி பைபிள் சொசைட்டி ஆப் இந்தியா

பொருளடக்கம்

மதிப்புரை

முன்னுரை

அறிமுகம்

1. முன்னொரு காலத்தில் 17

2. யுத்தங்களிலெல்லாம் மேலான யுத்தத்தில் பக்கங்களை தேர்ந்தெடுத்தல் 31

3. விசுவாசமுடையோர்களின் ஒரு உடைக்க முடியாத வரிசை 44

4. அன்பினால் கலகக்காரர்களை வெற்றிக் கொள்ளுதல் 56

5. தவறான அரசனுக்காக காத்திருத்தல் 69

6. அக்கினிப்புயல் 78

7. மழையை கொண்டு வருதல் 89

8. வனாந்திர ஸ்திரீ 105

9. "இதோ நான் நிற்கிறேன்" 122

10. சாம்பலிலிருந்து வெற்றி 135

11. சத்தியத்தின் வெற்றி வீரர்கள் 150

12. வேறெதைபோலும் இல்லாத வரம் 165

13. நாம் யார்? 181

14. நீங்கள் யார்? 203

மதிப்புரை

எப்போதும் பெரிய படத்தை பார்ப்பது நல்லது. சில சமயங்களில் நம்மை சுற்றி இருக்கும் சிறிய உலகத்தின் சவால் மற்றும் பிரச்சனைகளில் அகப்பட்டு சிக்கி கொள்கிறோம். மேலே நோக்கிப்பார்த்து வானத்தை தொடும் அளவிற்கு பெரிய படத்தை பார்ப்பதை விட்டு விட்டு, காலணியின் கயிறு மற்றும், நம்மை சுற்றி இருக்கும் சிறிய காரியங்களில் நமது கவனத்தை செலுத்திக் கொண்டிருக்கிறோம். ஆவிக்குரிய ரீதியில் பெரிய படத்தைப் பார்க்க வேண்டும் அதே நேரத்தில் சிறிய தேவைகளையும் சந்திக்க வேண்டும். லூக்கா 16:10 ல் இயேசு, "கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான்," என்று கூறினார். மேலும் லூக்கா 21:28 ல் "உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்து பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்." என்றும், கூறி இருக்கிறார். வாழ்வில் சிறிய காரியங்களில் தாழ்மையுடனும் விசுவாசத்துடனும் இருப்பது மிகவும் முக்கியம், அது பெரிய படத்தை பார்ப்பது போன்றது.

அழைக்கப் பட்டவர்கள்... தெரிந்துகொள்ளப் பட்டவர்கள்: தேவனுக்கு எப்போதும் ஒரு கூட்ட மக்களுண்டு - என்ற இந்த விசேஷ புஸ்தகம் - வரலாற்று நெடுகிலும் தேவனுடைய கரம் அவர்களை தொடர்ந்து காப்பாற்றி விசுவாசத்தில் எப்படி வழி நடத்தினது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது நமதுள்ளம் பூரிக்கின்றது. இது மாபெரும் போராட்டத்தின் மையக் கருத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது. ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் என்ற வகையில் இந்த சபையின் வரலாற்றை அதன் தூரிலிருந்து நாம் ஆராய்ச்சி செய்து பார்க்கும் போது தேவன் நமது சபையை தெரிந்து கொண்டு உலக சரித்திரத்தின் கடைசி நேரத்தில் அது ஆற்றப்போகும் பங்கை நிச்சயமாக நமக்கு வெளிப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்து சீக்கிரம் வர போகிறார், ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் இயக்கம் பரலோக அனாதி

திட்டத்தின்படி ஏற்படுத்தப் பட்டது என்பதை நீண்ட நாட்களாக சத்தியத்தை விசுவாசிக்கும் தேவனுடைய பின்னடியார்கள் வேதாகமத்தின் மூலமும், தீர்க்கதரிசன ஆவி எழுத்துக்களின் மூலமும் அறிந்து கொள்வார்கள் - இவர்கள் தேவனுடைய பிள்ளைகள் - இது தேவனுடைய மீதமான சபை - இது பரிசுத்தாவியின் வல்லமையால் முத்தூதை அறிவிக்கும், இது ஜனத்தை கிறிஸ்துவினிடத்திற்கும், அவரது இரட்சிப்பிற்கும், மனம் திரும்புதலுக்கும், கிறிஸ்துவின் நீதிக்கும், தேவனின் மெய்யான தொழுகைக்கும், கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகைக்கும் வழி நடத்தும். இந்த வல்லமையான வார்த்தைகளை தீர்க்கதரிசன ஆவியோடு ஆழ்ந்து சிந்தனை செய்யுங்கள்:

"எனக்கு வலியுறுத்தி சொல்லும்படியாக உலகமெங்குமுள்ள ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தர்கள் அவருக்கு விசேஷித்த ஒரு பொக்கிஷ மென்றும், இந்த பூமியில் அவருடைய திருச்சபை பரிபூரண ஆவியில் ஐக்கிய பட்டு தேவனுடைய ஆலோசனைகளை எடுத்து செல்லும் ஒன்றாக இருக்கும் என எனக்கு வெளிப்படுத்தப்பட்டது." - 2SM 397.

ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் திருச்சபை சார்ந்த நீங்கள் எப்போதாகிலும் அதன் ஊழியத்தையும் அதன் நோக்கத்தையும் சந்தேகித்தது உண்டானால் இனிமேல் சந்தேக படவேண்டாம். உலக வரலாற்றில் இதுவரை இருந்திராத காலத்திற்குள் நாம் இப்பொது பிரவேசிக்கிறோம், வெளிப்படுத்தின விசேஷம் 14 ம் அதிகாரத்தின் தூதை அறிவிப்பதற்காக தேவன் வல்லமையான விதத்தில் தம்முடைய பிள்ளைகளை கிறிஸ்துவின் கிருபையாலே அவரின் அதிசீக்கிர வருகைக்காக ஆயத்தப்படுத்துகிறார். அதை செய்வதற்காக உங்கள் சபை அழைக்கப்பட்டிருக்கிறது. அதை செய்வதற்கு நீங்களும் அழைக்கைப்பட்டிருக்கிறீர்கள். கென் மெக்ஃபார்லாண்ட் எழுதிய *அழைக்கப் பட்டவர்கள்... தெரிந்துகொள்ளப் பட்டவர்கள்* என்ற புத்தகத்தின் மையக்கருத்து ஹோல்லிஸ் ஸ்கார்ப்ரொவிற்கு கிடைத்த

"பெரிய படம்" என்ற வெளிப்பாட்டிலிருந்து எடுக்கப்பட்டது. இதை கீழ்காணும் குறிப்புகள் உறுதி செய்கிறது:

"ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு தனித் தன்மையுடைய மக்கள், உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப் பட்டவர்கள். சத்தியத்தை பெரிய அளவில் வெட்டித்தருபவர் மூலமாக உலகம் என்னும் கல் குவாரியிலிருந்து வெட்டி எடுத்து அவரோடு இணைக்கிறார். இரட்சிப்பின் கடைசி பணியை செய்வதற்காக அவருடைய பிரதிநிதிகளாகவும், தூதுவர்களாகவும் அவர்களை அழைத்திருக்கிறார். சத்தியம் என்னும் மிகப் பெரிய செல்வத்தை அழிந்து போகிற மனிதனிடத்தில் தந்திருக்கிறார். இந்த உன்னதமான எச்சரிப்பை தேவன் மனிதனுக்கு கொடுத்து அதை உலகத்திற்கு கொண்டு சேர்க்கும்படி அதை அவர்களுக்கு அர்பணித்திருக்கிறார்" – 7T 138.

தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையே நடைபெறும் மிக பெரிய போராட்டத்தில் நம்மை நம்பி இந்த கடைசி நேரத்தில் உங்கள் மீதும், என் மீதும் வைத்திருக்கும் மிக முக்கியமான பொறுப்பை நம்மால் யூகித்து பார்க்க முடிகிறதா? இதற்காகவே வேதத்தையும், தீர்க்கதரிசன ஆவியையும் கவனமாகப் படித்து, தூய ஆவியானவரின் வல்லமைக்காக ஜெபித்து தேவ கிருபையால் இந்த ஆச்சரியமான சத்தியத்தை உலகமெங்கும் பறைசாற்ற வேண்டும். தேவனால் கொடுக்கப்பட்ட சத்தியத்தை நமது நம்பிக்கை மற்றும் பிறப்புரிமையாக கருதி உலகத்திற்கு எடுத்துரைக்க தயங்க வேண்டாம். எக்காரணத்தினாலும் அதை புறக்கணிக்கவும் வேண்டாம். இந்த புஸ்தகம் உங்கள் நம்பிக்கையை திடமான கற்களைப்போன்று உறுதி படுத்தவும், ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் மக்களிடம் உலகத்திற்கு அறிவிக்க வேண்டிய தேவ ஆவியினால் ஏவப்பட்ட தெளிவான அன்பின் கட்டளை ஒன்று உண்டு என்பதை எடுத்துக் காட்டுகிறது. இந்த சவாலை கீழே வாசியுங்கள்:

"ஆண்டவர் ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தர்களை மிக சிறந்த வகையில் உலகத்திற்கு ஒரு ஒளியை தாங்கினவர்களாகவும், ஒரு காவல் காரனாகவும் வைத்துள்ளார். அவர்களிடம் அழிந்து போகும் உலகிற்கு கடைசி எச்சரிப்பின் தூது ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்களிடம் மிகவும் புனிதமான முதலாம், இரண்டாம், மூன்றாம் தூதனின் தூதை அறிவிக்க முக்கியமான பொறுப்பை கொடுத்துள்ளார். இதைவிட முக்கியத்துவம் வாய்ந்த வேலை வேறும் எதுவுமில்லை. அவர்கள் கவனத்தை எதுவும் ஈர்க்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்" - 9T 19.

நீங்கள் இந்த புஸ்தகத்தை வாசிக்கும் போது தேவன் எவ்விதமாக தமது மக்களை யுகங்கள் நெடுகிலும் இப்போதுள்ள காலம் வரைக்கும் நடத்தினார் என்பதையும், இந்த இறுதிக்கால மீதமான சபையை நடத்துவதற்கு பரலோகத்திலிருந்து எவ்வளவு சிறப்பான வழிநடத்துதல் தேவை என்பதையும் அறிவீர்கள். அவர் தமது தீர்க்கதரிசன ஆவியைத்தந்து, அது திரும்பவும் நமக்கு வேதத்தையே சுட்டிக்காட்டுகிறது என்பதையும் அறிவீர்கள். தேவன் இதை ஏழாம் அட்வென்டிஸ்ட் சபைக்கு தந்திருக்கிறார் ஏனென்றால் அது பரலோகத்தால் தெரிந்தெடுக்கப்பட்ட வாகனமாக கடைசிக்கால எச்சரிப்பின் தூதை உலகத்திற்கு அறிவிக்கவும், கிறிஸ்துவை உலகத்திற்கு எடுத்து காட்டவும், அவரது அதிசீக்கிர வருகையையும், தேவனை உண்மையாக தொழுது கொள்ளுதலையும் அது நித்தியம் வரை நீடிக்கும் என்பதை காட்டுகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 12:17 ல் தேவன் தனது கடைசி கால திருச்சபைக்கு சிறப்பான இரண்டு குணலட்சணங்கள் இருக்கும் எனக்கூறுகிறார்: அவர்கள் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வார்கள், நான்காவது கற்பனையாகிய ஓய்வுநாள் உள்பட, இயேசுவின் சாட்சியை உடையவர்களாய் இருப்பார்கள், அது தீர்க்கதரிசனத்தின் ஆவி. நீங்கள் இந்த புஸ்தகத்தை வாசிக்கும் போது இந்த மாபெரும் போராட்டத்தின் ஒரு அங்கமாக இருக்கிறீர்கள் என்றும், எல்லா அத்தியாயங்களின் கடைசியிலும்: "எல்லா காலத்திலும், தேவன் தனக்கென்று ஒரு கூட்ட மக்களை

வைத்திருந்தார் - அவர்கள் உண்மை யுள்ளவர்களும், விசுவாச முள்ளவர்களும், அழைக்கப் பட்டவர்களும் தெரிந்து கொள்ளப் பட்டவர்களுமாவர் - மேலும் அவருக்காக விசேஷமான ஒரு கூட்ட மக்கள் இன்றும் இருக்கிறார்கள்" என்ற ஆவியின் வார்த்தைகளினால் நினைப்பூட்டப்படுவீர்கள்.

அப்படிப்பட்ட தேவ ஜனங்களோடு ஒரு அங்கமாக இருந்து தேவனுடைய அன்பையும், அவருடைய அதிசீக்கிர வருகையையும் இந்த உலகமுழுவதும் பகிர்ந்து கொள்வது ஒப்பற்ற ஒரு சந்தோஷமான சிலாக்கியமாகும். கென் மெக்ஃபார்லாண்ட் இந்த பரபரப்பான புஸ்தகத்தில் கூறுவது போல இந்த கிரகத்திலிருந்து உயிரோடு தப்பவும், அவரது ஊழியத்தை செய்து அதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவும் தேவன் இறுதியாக தெரிந்துகொண்ட மீதமான திருச்சபையின் தூதுவர்களில் நீங்களும் ஒருவராவீர்கள். நீங்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக, புதிப்பிக்கப்பட்டு, புத்துயிர்பெற்று ஆவியில் நிரம்பி ஊழியம் செய்து எல்லாம் வல்ல இயேசுவின் வல்லமையான நாமத்தினாலே தேவன் எவ்விதமாய் கடந்த காலத்தில் தம்முடைய ஜனத்தை நடத்தினாரோ அது போல வருங்காலத்திலும் மேலும் நித்தியகாலவரைக்கும் நடத்துவார். இப்படிப்பட்ட இந்த திருச்சபையின் அங்கமாக இருப்பது எத்தனை பெரிய சிலாக்கியம்!

டெட் என். சி. வில்சன்
தலைமை அதிகாரி
ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் ஜெனரல் கான்பரன்ஸ்

கதைகளிலெல்லாம் மேலான கதை

இந்த புத்தகம் ஒரு கதை.

இது நன்மைக்கும் தீமைக்கும் இடையே நீண்டநாளாய் நடைபெறுகிற போர், இது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் ஆரம்பிக்கப்பட்டது, அது இன்னும் முடியவில்லை. ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஒரு சிலர் நன்மையின் பக்கத்தில் உத்தமமாய், தைரியமாய், உறுதியாய் நின்ற கதை. குறிப்பாக இந்த கதையில், கதை முடியும் போது இந்த பெரிய யுத்தத்தை முடிக்க உதவப்போகிறவர்கள் யார் என்பதை பற்றியது.

இது *அழைக்கப்பட்டவர்கள் - தெரிந்து கொள்ளப்பட்டவர்களின்* கதை. இது தவறுக்கும், கலகத்திற்கும் மத்தியில் சத்தியத்திற்காக தேவனால் *அழைக்கப்பட்டவர்களின்* கதை. தேவனால் *தெரிந்து கொள்ளப்பட்டவர்களைக்* கொண்டு இந்த உலகத்திற்கு சத்தியத்தையும், தேவன் உண்மையில் எப்படிப் பட்டவர் என்பதை காட்டுகின்ற கதை.

இந்த புஸ்தகம் ஒரு முழுமையான, விரிவான வரலாறு அல்ல என்பதை புரிந்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு அத்தியாயங்களும் மற்ற புஸ்தகங்களை போல ஆழமாக எழுதப்படாமல் லேசான வரலாற்றுப் பிரிவுகளைக் கொண்டதாகும். மேலும் விபரங்களை மிக ஆழமாக முழுசாக தெரிந்து கொள்ள வேண்டுமென்று

விரும்புகிறவர்களுக்கு, ஏராளமான குறிப்புகளோடு, பல சிறந்த புஸ்தகங்கள் உண்டு.

நமது நோக்கம் இங்கே தனிப்பட்ட கண்ணோட்டத்தை ஏற்படுத்துவதைவிட - வேகமாக பயணித்து கடந்த காலங்களிலிருந்து, நிகழ்காலம் வரைக் கண்டறிந்து தேவனுக்கு உண்மையாய் இருக்கும் அவருடைய பின்னடியார்கள், விசுவாசத்தில் இன்னும் எவ்வாறு ஆதாம் முதல் உடைக்க முடியாத சங்கிலியில் இணைப்பை உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய உதவும்.

இந்த புஸ்தகம் ஒரு அடிக்குறிப்புடன் உள்ள அறிஞர்களின் ஆய்வு கட்டுரை அல்ல. அதற்குப்பதிலாக ஒரு தனிப்பட்ட மக்களை சார்ந்த தேவனுக்கும் அவருடைய பின்னடியார்களுக்கும் உள்ள உறவை மையமாக கொண்டுள்ளதாகும்.

இந்த புஸ்தகம் அதிகமாக சுருக்கப்பட்ட எலென் உவைட்டின் பிரமாண்டமான யுகங்கள் நெடுகிலும் நடந்த போராட்டத்தின் தொடர் நிகழ்ச்சியாகும். ஆனால் இது ஆரம்பத்திலிருந்தே தேவப்பிள்ளைகளின் பிரயாணத்தின் தொடர்ச்சியாகவும் எழுதப்பட்ட தொடர் கதையாகும்.

லூசிபரும் மைக்கேலும், ஆதாமும் ஏவாளும், நோவா, மோசே, பேதுருவும் பவுலும், வால்டென்சியர், மார்ட்டின் லூத்தர், ஜேம்ஸ்சும் எலென் உவைட்டும் - இங்கே இவர்களையும் இன்னும் அநேகரையும் கண்டடைவீர்கள்.

நீங்கள் உட்பட.

போலிக்கு எதிரான உண்மை

நீங்கள் ஒரு ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தர்.

நீங்கள் ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் சபையில் வளர்ந்தவராக இருக்கலாம் அல்லது பின்னால் ஞானஸ்நானம் எடுத்து சபையில் இருப்பவராக இருந்தாலும், அட்வென்டிஸ்ட் திருச்சபைதான் தெரிந்து கொள்ளப்பட்ட மீதமான சபை - இந்த இயக்கத்தை தேவன் தாமே எழுப்பி, குழப்பமான பாபிலோன் என்ற பிற சபைகளிலிருந்து வெளியே வரும்படி உண்மையான பின்னடியார்களை சபைக்கு அழைக்கிறார் என்பதை கற்று அறிந்திருப்பீர்கள்.

ஆனால் இதை குறித்து நிச்சயமாய் இருக்கிறீர்களா?

உண்மையாகவே *முழு* நிச்சயத்தோடு இருக்கிறீர்களா?

எப்படி இருந்தாலும் *உலக கிறிஸ்துவ கலைக்களஞ்சியம்*, உலகமுழுவதும் 10,000 வித்தியாசமான மதங்களை அடையாளம் காட்டுகிறது. அவைகளில் ஒன்றான - கிறிஸ்துவம் - 33,830 வித்தியாசமான உலகளாவிய ஸ்தாபனங்களை கொண்டுள்ளது எனத்தெரிவிக்கிறது.

இந்த 33,000 திற்கும் மேலான ஸ்தாபனங்களுமே தங்களது சபையே இந்த பூமியில் உண்மையானது என நம்புகிறது. இணைய தளத்தில் கூகிளில் - *உண்மையான திருச்சபை* என்று தேடினால் அரை கோடிக்கு மேலான சபைகள் இருப்பது தெரியவரும்.

ஒரு மோர்மோன், ஒரு யெகோவாவின் சாட்சி, ஒரு ரோமன் கத்தோலிக்கர் - இவர்களை கேட்டுப்பாருங்கள், அவர்கள் உடனே தங்கள்

திருச்சபைத்தான் இந்த பூமியில் உண்மையான திருச்சபை என்று கூறுவார்கள். இதுபோல எல்லாத் திருச்சபை அங்கத்தினர்களும் தங்கள் ஸ்தாபனம் தான் உண்மையானது என்று கூறுவார்கள். அது போல யூத விசுவாசத்திலுள்ளவர்களும் அல்லது முகமதியர், புத்தர், ஆங்கிலிக்கன் விசுவாசத்திலுள்ளவர்களும் அப்படித்தான் கூறுவார்கள்.

ஆனாலும் எல்லோருமே சரியானவர்களாக இருக்கமுடியுமா?

தேவனுக்கென்று இந்த பூமியில் ஒரு சபை இருக்குமானால் - அது ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் சபைத்தான் என்று நீங்கள் நிச்சயமாக கூற முடியுமா?

ஒருவேளை நீங்கள் நீண்ட நாட்களுக்கு முன்னதாகவே ஒரு சந்தேக நிழல் கூட இல்லாமல் இந்த கேள்வியின் பதிலை உங்களுக்குள்ளே நிச்சயத்திருப்பீர்கள். அப்படியானால் இந்த பக்கங்களில் சொல்லப்படும் கதை எந்த சந்தேகத்திற்கு இடமின்றி உண்மை என நிச்சயப்படுத்தும். சத்தியத்திற்கும் தவறுக்கும் மற்றும் நல்லதிற்கும் கெட்டதிற்கும் இடையே நடைபெறும் போராட்டத்தில் தனிப்பட்டவிதத்தில் நீங்கள் ஆற்றவேண்டிய உங்கள் பங்கு, உங்கள் அழைப்பு இவைகளைத் தெரிந்துகொள்ள இது வழிவகுக்கும்.

இந்த போராட்டத்தில் ஒரு வேளை எப்போதாகிலும் - ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் சபை - இது தேவனுடைய கடைசி கால தூதை வைத்திருக்கிறதா? - இவர்கள் தெரிந்து கொள்ளப்பட்ட பின்னடியார்கள் தானா? என்கிற கேள்விகள் எழுந்திருக்கலாம். இத்தகைய நினைப்பானது சில வேளைகளில் கொஞ்சம் துணிச்சலான, விசேஷமான, ஏன் கர்வமான எண்ணங்களை கொண்டு வந்துள்ளதா? பழைய ஏற்பாட்டின் இஸ்ரவேலர்கள் உங்களுக்கு நினைவிருக்கலாம், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட சத்தியத்தின் கருவூலமாய் இருந்தபோதிலும் மற்ற தேசத்தாரைக் காட்டிலும் ஆவிக்குரிய ரீதியில் தங்களை உயர்ந்தவர்களாக நினைத்தார்கள் அதே நேரத்தில் அவர்கள் அந்நிய தேசத்தின் பாகால் பழக்கவழக்கங்களில் மூழ்கி இருந்தனர்.

நீங்கள் இதுவரை உங்கள் திருச்சபையின் பங்கு என்ன என்பதைக் குறித்து முடிவுக்கு வராமல் இருந்திருக்கலாம். இந்த பக்கங்களில் சொல்லப்போகிற கதையின் மூலம் கிடைக்கும் தகவல்கள் நிச்சயமாக உங்கள் சொந்த பதிலை கண்டுபிடிக்க உதவும்.

1950 ம் மத்தியில், "உண்மையை சொல்லுதல்" என்ற விளையாட்டு நிகழ்ச்சி அமெரிக்கா தொலைக்காட்சியில் ஒளிபரப்பபட்டது. கொஞ்ச நாட்களில் நிறுத்தப்பட்டு திருப்பி மறுபடியும் தொடர்ந்து இப்படி பல தடங்கல் வந்தும் 2002 ம் ஆண்டு வரை இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பபட்டது.

உங்களில் அநேகர் இந்த நிகழ்ச்சியைப் பார்த்திருப்பீர்கள், மூன்று போட்டியாளர்கள் பார்ப்பதற்கு ஒரே மாதிரி காட்சியளிப்பார்கள் - ஆனால் அதில் இருவர் போலியானவர்கள். அந்த போட்டியை நடத்தும் குழு அந்த போட்டியாளர்களிடம் பல கேள்விகளை கேட்டு அவர்களில் யார் உண்மையானவர் என்று கண்டுபிடிக்க முயற்சிப்பார்கள்.

இறுதி வாக்கெடுத்து முடிந்த பின்பு அந்த நிகழ்ச்சி தொகுப்பாளர் இந்த கேள்வியைக் கேட்பார். "இங்கிருக்கும் உண்மையான நபர் (பெயரை கூறி) தயவு செய்து எழுந்து நில்லுங்கள்?

இன்றும் நாமும் அதை போலவே ஒரு கேள்வியை கேட்கலாம், "இங்கிருக்கும் உண்மையான சபை தயவு செய்து எழுந்து நிற்கட்டும்?

இந்த கேள்விக்கு பதிலை கண்டுபிடிக்க நாம் 10,000 மதங்களின் கோட்பாடுகளை ஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லை, இதில் 33,000 பல்வேறு கிறிஸ்துவ பிரிவுகளும் அடங்கும். அதிர்ஷ்டவசமாக அதற்கு தேவை இல்லை. அதை செய்வதற்கு யாருக்கு நேரமிருக்கிறது? இந்த செயல்முறைகள் குழப்பத்தைத்தான் கொண்டுவரும்.

இங்கே ஒரு ஆலோசனை. பூமியிலுள்ள ஒவ்வொரு தனித்தனி மதங்களை பற்றி படித்து எது உண்மையான சத்தியத்தை போதிக்கிறது என கண்டு கொள்வதற்கு பதிலாக, நேரடியாக வேதத்திற்கு சென்று

தேவனுடைய உண்மையான சபையை கண்டுகொள்ள போதுமான அடையாளங்களை அது நமக்கு வழங்கும்.

நாம் எல்லா போலிகளையும் படிப்பதற்கு பதிலாக சுலபமாக உண்மையான விஷயத்தை படிக்கலாம்.

ஐக்கிய அமெரிக்க நாட்டின் இரகசிய சேவையின் இணைய வலைத்தளத்தில், "போலியான பணங்களை கண்டு பிடிப்பது எப்படி," என்ற ஒரு பகுதி உள்ளது. அது இவ்விதமாகச் சொல்லுகிறது. "உங்களுக்கு கிடைத்திருக்கும் பணத்தை பாருங்கள். நீங்கள் சந்தேகிக்கும் அந்த பணத்தாளோடு ஒரு உண்மையான பணத்தாளை வரிசைப்படுத்தி... ஒற்றுமைகளை அல்ல வித்தியாசங்களை பாருங்கள்."

இந்த ஆலோசனையை நீங்கள் பின்பற்றுவதற்கு, தெளிவாக முதலாவது மற்ற பணத்தாள்களோடு ஒப்பிட்டு பார்க்க ஒரு உண்மையான பணத்தாள் தேவை. அந்த உண்மையான பணத்தாளையை நீங்கள் முன்னேயும் பின்னேயும், உள்ளேயும் வெளியேயும் நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

போலியானவைகளை கண்டறியும் துறையின் ஒரு பகுதியில் பணிபுரியும் ஒருவர் அல்லது ஒருத்தி தன்னுடைய அதிக நேரத்தை போலியான பொருளை பார்ப்பதில் அல்ல - உண்மையான பொருளை மிகவும் நன்கு அறிய செலவளிக்கிறார். அதை நேர்த்தியாக அறிந்தபிறகு போலிகளை கண்டறிவது மிகவும் சுலபம்.

இனி வரப்போகும் பக்கங்களில் உண்மைக்கு எதிரான போலியை பற்றியும் சத்தியத்திற்கு எதிரான பொய்யை பற்றியும் வேதாகமம் என்ன கூறுகிறது என்பதை பார்ப்போம்.

ஒவ்வொரு கதைக்கும் ஒரு ஆரம்பம் உண்டு. நாம் அந்த ஆரம்பத்தில் துடங்கலாமே, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

அத்தியாயம் - 1

முன்னொரு காலத்தில்

"முன்னொரு காலத்தில்" என உங்கள் காதுகளில் கேட்ட உடனே கதை ஒன்று துவங்க போகிறது என நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

1977 ம் வருடத்தில் "ஸ்டார் வார்ஸ்" (நட்சத்திரயுத்தம்) என்ற திரைப்படம் முதலில் திரையிடப்பட்ட போது "வெகு காலங்களுக்கு முன்பாக... மிக மிக தொலைவில் உள்ள ஒரு நட்சத்திர கூட்டத்தில்" என துவங்கியது. இதை கேட்ட உடனேயே - பார்வையாளர்களுக்கு கதை ஒன்று துவங்கவிருக்கிறது என தெரியும்.

பிற்காலத்தில் ஒரு நாள் என் தந்தை எனக்கு ஒரு கதையை கூறினார்.

பெரியத் திரையில் "ஸ்டார் வார்ஸ்" (நட்சத்திரயுத்தம்) திரையிடப்பட்ட அதே வருடத்தில், தனது ஆப்பிரிக்க மூதாதையர் குறித்து, குறுந்தொடர் எழுத்தாளர் அலெக்ஸ் ஹேலி எழுதிய "ரூட்ஸ்" (வேர்கள்) - என்ற குறுந்தொடர் சின்னத்திரையில் வெளிவந்தது. அநேக வாரங்களாக ஒரு பெருங்கூட்ட தொலைக்காட்சி நேயர்களை ஈர்க்க வைக்கும் அளவு இந்த தொடரை கண்டனர்.

திடீரென, கணக்கற்ற அமெரிக்கர்களுக்கு தங்கள் "வேர்கள்" குறித்து அறியும் ஆர்வத்தினால் தூண்டப்பட்டு வம்சவழி ஆராய்ச்சியில் ஈடுபட்டனர் - அவர்களுள் எனது பெற்றோரும் இருந்தனர்.

தக்க சமயத்தில், எனது தந்தை தனது விரிவான ஆய்வு மூலமாக தான் தெரிந்துக் கொண்டதை என்னுடன் பகிர வேண்டும் என எண்ணினார். ஆகையால் ஒரு வார இறுதி மத்தியானத்தில், அவர் என்ன கூற போகிறார் என்பதை அறிந்துக்கொள்ள அவர் வீட்டிற்கு சென்றேன். ஒரு நாற்காலியில் அமர்ந்து, அவர் இவ்வாறாக துவங்குவார் "நம்முடைய குடும்பத்தின் மூதாதையர்கள் ஸ்காட்லாந்தில் வாழ்ந்தனர்" என எண்ணி கேட்க ஆயத்தமானேன்.

ஆனால் அவ்வாறாக அவர் துவங்கவில்லை.

"நோவாவிற்கு மூன்று குமாரர்கள் இருந்தனர்," என துவங்கினார்.

கதை ஒன்று வரப்போகிறது என்று எனக்கு தெரிந்தது. இது ஒரு மிக *நீளமான* மத்தியானமாக இருக்கப்போகிறது என அறிந்தேன்.

திகைப்படையாதீர்கள், இந்த புத்தகம் அவ்வளவு நீளமாக இருக்கப் போவது இல்லை. ஆனால், என்னிடம் கூட உங்களுடன் பகர வேண்டிய கதை ஒன்று உள்ளது. உங்களிடம் நான் கூற நினைக்கும் கதை நோவாவின் காலத்திற்கு வெகு காலம் முன்பாகவே துவங்கிய கதை. உண்மையில் அது "ஸ்டார் வார்ஸ்" துவங்குகிறதுப் போலவே, "வெகு காலங்களுக்கு முன்பாக... மிக மிக தொலைவில் உள்ள ஒரு இடத்தில்," என துவங்கும், பரலோகம் என்ற ஒரு இடம்.

இந்த புத்தகத்தில் இனி வரவிருக்கும் பக்கங்களில் உங்களிடம் நான் பகரவிருக்கும் கதைக்கு "கதைகளிலெல்லாம் மேலான கதை" என்ற தலைப்பில் கிறிஸ்துவின் வாழ்க்கை குறித்து ஃபுல்டன் ஆர்ஸ்லேர் 1949 ம் ஆண்டு வெளியிட்ட புத்தகத்தின் தலைப்பை கடனாக பெற எண்ணுகிறேன்.

சத்தியத்திற்க்கு எதிர்மாறாக பொய்கள் என்ற கதைதான் கதைகளிலெல்லாம் மேலான கதை.

அன்பிற்கு எதிர்மாறாக சுயநலம் என்ற கதை.

வெளிச்சத்திற்கு எதிர்மாறாக இருள் என்ற கதை.

நன்மைக்கு எதிர்மாறாக தீமை என்ற கதை.

மீகாவேலுக்கு (இயேசு) எதிர்மாறாக லூசிபர் (சாத்தான்) என்ற கதை.

கிறிஸ்துவின் பின்னடியார்களுக்கு எதிர்மாறாக பிசாசின் பின்னடியார்கள் என்ற கதை.

இந்த புத்தகத்தின் மைய கருத்து கிறிஸ்துவின் பின்னடியார்களின் கதையின் மீது கவனத்தை செலுத்தும். மனித குலத்தின் விழுகைக்கு முன் துவங்கி குறைபாடற்ற உலகத்தின் எதிர்கால மறுசீரமைப்பு வரையிலான அவர்களது வரலாற்றை இந்த புத்தகம் அடையாளம் காட்டவிருக்கிறது.

தேவன் தனக்கென விசுவாசமான பின்னடியார்களை எப்போதுமே கொண்டுள்ளார் - இவர்கள் சத்தியத்திற்கு உண்மையுள்ளவர்களாகவும் அவருடைய சித்தத்தை பின்பற்றுவதற்கு உறுதிகொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

தன்னை குறித்த சத்தியத்தை தைரியமாக எடுத்துரைப்பவர்களையும் தேவன் தனக்கென எப்போதுமே கொண்டுள்ளார்.

தேவன் இந்த பூமியில் தனக்கென எப்பொழுதும் சில மக்களை வைத்திருந்தார். இவர்கள் உண்மையுள்ள, அழைக்கப்பட்ட மற்றும் - தேர்ந்தெடுக்கப்பட்ட சிலர், அவர்கள் அவரது சத்தியத்தை பாதுகாப்போரும் எடுத்துரைப்போரும் ஆவார்கள்.

தேவன் இப்பொழுதும் கூட தனக்காக சில மக்களை வைத்துள்ளார். வரவிருக்கும் அதிகாரங்களில் அவர்களை குறித்து உண்ணிப்பாக பார்க்கவிருக்கிறோம்.

ஆனால் இப்பொழுது ஆதியிலிருந்து துவங்கலாம்.

நினைத்து பார்ப்பதற்கு சற்று கடினமாக இருக்கும் காலக்கட்டத்திற்குள் இப்போது என்னுடன் வாருங்கள். பாவம், தொல்லைகள் மற்றும் தீமை இல்லாத காலக்கட்டம் அது. வேதாகமத்தின் முதல் அதிகாரங்கள் நம்மை வெகு வெகு காலங்களுக்கு முன்பாக - மிக மிக தொலைவில் அமைந்த அந்த இடத்திற்கு அழைத்து செல்கின்றது. பரலோகம் என்று நாம் அழைக்கும் அந்த இடம்.

இங்கு பரலோகத்தில் தான் தேவனுடைய சிங்காசனம் அமைந்துள்ளது. இந்த சிங்காசனத்திலிருந்து, தான் படைத்த விரிவான பிரபஞ்சத்தை தேவன் மேற்பார்வையிடுகிறார். அவர் சிருஷ்டித்த கணக்கற்ற புத்திசாலியான, அறிவார்ந்த மற்றும் பாவமில்லாத தேவதூதர்கள் அவருடைய பிரசன்னத்தில் இருக்கும் மகிழ்ச்சியிலும் அன்பிலும் சுகமாய் வாழ்ந்து வந்தனர். ஆனால் தேவன் இந்த தேவதூதர்களைப் படைத்தபோது, ஒரு பேராபத்தை எதிர்கொள்வதை தேர்ந்தெடுத்தார். அவருடைய சிருஷ்டிகள் எந்த வித கட்டாயமும் இல்லாமல் தானாகவே தெரிந்தெடுத்து தன் மீது அன்புக்கொள்ள வேண்டும் என விரும்பினார்.

ஆகையால் ஒவ்வொரு தேவதூதனுக்குள்ளும் தேர்ந்தெடுக்கும் உரிமை என்ற ஆச்சரியகரமான பரிசை உள்ளடக்கி சிருஷ்டித்தார். திட்டமிட்டு அன்பை வெளிக்காட்டும் கணிப்பொறி போல தேவன் அவர்களை சிருஷ்டிக்கவில்லை. தங்களை படைத்தவர் மீது அன்புகூரவும் அவருக்கு கீழ்ப்படியவும் தேர்ந்தெடுப்பதற்கு அவர்களுக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த தேர்ந்தெடுக்கும் உரிமையின் சுதந்திரத்தின் அர்த்தம் என்னவென்றால் அவர்கள் விரும்பினால் தேவனுக்கு விரோதமாகவும் தேர்ந்தெடுத்து கொள்ளலாம். இது தான் தேவன் எடுத்துக்கொண்ட மிக பெரிய ஆபத்து.

சரியான ஒழுங்குமுறையை நேசிக்கும் தேவனை பிரதிபலிக்க, ஒவ்வொரு தேவ தூதனுக்கும் குறிப்பிட்ட வேலைகள் ஒதுக்கப் பட்டிருந்தது. அவர்களுள் உயர்வாக இருந்த தேவதூதனின் பெயர்

லூசிபர், அவன் "பிரகாசிப்பவன்" என்றும் அறியப்பட்டான். தேவ சந்நிதானத்தின் அருகே "காப்பாற்றுகிற கேருபீனாக" இருந்தான்.

"நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம்பண்ணப்பட்ட கேருப்" என தேவன் எசேக்கியேல் 28:14 ல் கூறுகிறார். "தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்; அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய்." 12 ம் வசனத்தில்: "நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரைமோதிரம்; நீ ஞானத்தால் நிறைந்தவன்; பூரண அழகுள்ளவன்."

பாவமில்லாத நேர்த்தியான சமாதானத்திலும், கடந்த கால நித்திய வருடங்கள் உருண்டோடின. தனது படைப்பிற்கு பின்னால் எவ்வளவு காலம் லூசிபர் பரலோகத்தில் வாழ்ந்தான் என்று வேதாகமம் நமக்கு கூறவில்லை. ஒருவேளை ஆயிரமோ அல்லது லட்சக்கணக்கான வருடங்களாக கூட இருந்திருக்கலாம்.

ஆனால் காலம் சென்ற போது, தனது சுய அழகு மற்றும் ஞானத்தின் மீது லூசிபர் வெளிப்படையாக அதிக கவனத்தை செலுத்த ஆரம்பித்தான். பரலோக அதிகார வரிசையில் இன்னும் மேலான இடத்திற்கு உயர்த்தப்பட வேண்டும் என்று வெளிப்படையாக எண்ண ஆரம்பித்தான்.

பரலோகத்தில் பிதாவின் குமாரனான இயேசு கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவி இவ்விருவர் மாத்திரம் பிதாவாகிய தேவனுக்கு இணையானவர்களாய் இருந்தனர். தேவன் ஞாயமும் நீதியுமுள்ளவர் என்று லூசிபர் அறிந்ததினால் எந்த சந்தேகமுமில்லாமல் தேவன் தனது சுய வளர்ச்சி, தகுதிகள் மற்றும் சாதனைகளை அங்கீகரித்து தன்னை அவருடைய குமாரன் மற்றும் பரிசுத்த ஆவிக்கு இணையாக உயர்த்துவார் என எண்ணினான்.

அகந்தை - பின்பு விழுகை

மீண்டும் எசேக்கியேல் 28, வசனம் 17: "உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாயிற்று; உன் மினுக்கினால் உன் ஞானத்தைக் கெடுத்தாய்."

"உன் ஞானத்தைக் கெடுத்தாய்." வேறு வார்த்தைகளில் கூறவேண்டும் என்றால் லூசிபர் நேராக யோசிக்கவில்லை. மாறாக தன்னை பற்றிய தவறான படத்தை அவனே உருவாக்கி அதைத்தான் நம்ப தேர்ந்தெடுத்ததினால் அவனது தீர்ப்பு சிதைந்துபோனது. அவனுடைய ஞானம், பதவி, அழகு இவைகளினால் லூசிபர் தன்னை பரலோக காரியங்களின் திட்டத்தில் தனக்கு உண்மையாக இருந்த முக்கியத்துவத்தை காட்டிலும் அதிக முக்கியத்துவம் உள்ளது என எண்ண ஆரம்பித்தான். அவன் அகந்தையுள்ளவனானான். சுயநலக்காரனாக மாறினான்.

சுயநலத்தின் மிகைப்படுத்தப்பட்ட உணர்வுதான் - அகந்தை. இது ஒருவனை விழுகைக்கு எடுத்துச் செல்லும். கடைசியில், லூசிபர் கூட விழுந்தான். அவனுடைய விழுகைக்கு பிறகு எசேக்கியேல் 28:15 ல் தேவன் அவனை குறித்து இவ்வாறாக கூறுகின்றார்: "நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டதுமட்டும், உன் வழிகளில் குறையற்றிருந்தாய்."

மற்றும் ஏசாயா 14:12-14 ல் தேவன் இந்த வார்த்தைகளை சேர்த்துள்ளார்:

“அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே!... நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்குமேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே.”

லூசிபருடைய பதவி உயர்வு என்றுமே வரவில்லை. அவன் தெளிவாக யோசித்திருந்தால், தேவன் மட்டும்தான் சிருஷ்டிகர் அவனோ வெறும் சிருஷ்டிக்கப்பட்டவன் என்ற உண்மையை எப்போதும் இழந்திருக்கமாட்டான். எப்போதுமே நடக்க போகாத காரியத்திற்காக அதிக எதிர்பார்ப்புடனும் விரக்தியுடனும் காத்திருந்தான்.

காலம் கடந்தது, தேவன் லூசிபரின் உடனடி பதவி உயர்விற்காக ஆயத்தம் செய்கிறார் என்ற அடையாளம் எதுவும் தென்படவில்லை, ஆகையால் தேவதூதர்களின் இளவரசனான அவன் முதலில் வியக்க ஆரம்பித்தான், பின்பு கசப்பான ஏமாற்றம் ஏற்பட்டது, கடைசியில் - கோபத்தினாலும் பொறாமையினாலும் நிறைந்தவனானான்.

அந்த சமயத்தில், லூசிபரினால் இரண்டே காரியங்களை மட்டும் தான் யோசிக்க முடிந்தது. ஒன்று பிரச்சனை தேவனுடன் இருக்க வேண்டும் - இல்லையேல் லூசிபருடன் இருக்க வேண்டும் என்றெண்ணினான். லூசிபர் தனக்குத்தானே சம்பாஷித்து பிரச்சனை அவனுடன் இருக்க வாய்ப்பில்லை அது தேவனுடன் தான் இருக்கின்றது என்ற முடிவிற்கு வந்தான்.

அவன் அப்படி நினைப்பதற்கு மாறாக வெளிப்படையான ஆதாரங்கள் இருந்தபோதிலும் தேவன் நியாயமற்றவர் என்றும், தேவன் நீதியற்றவர் என்றும், தேவனிடம் சத்தியம் இல்லை என்றும் லூசிபர் முடிவெடுத்தான். பிரத்தியேக மரியாதைகள், சலுகைகள், மற்றும் அதிகாரம் இயேசுவினிடம் இருந்ததால் பிதா பாரபட்சம் பார்ப்பதாக லூசிபருக்கு வெளிப்படையாக தெரிந்தது போலிருந்தது. தேவன் பிரபஞ்சத்தில் தன்னை எவ்வாறு காட்டிக்கொள்கிறாரோ, ஆனால் உண்மையில் அதுபோல் இல்லை என்று எண்ணினான். ஆகையால் காப்பாற்றுகிற கேரூபினாக இருந்த லூசிபர் தேவனுடைய குணம் பற்றிய தனது தவறான கருத்துக்களை நேர்மையோடு நம்பி அதை - உண்மை என்று முற்றிலுமாக ஏற்றுக்கொண்டான்.

நீண்ட காலத்திற்கு, தேவனுடைய இந்த படம் தவறானது என்றும் - உண்மையில் அவர் பாரபட்சமுடையவரென்றும், நீதியற்றவரென்றும் நியாயமற்ற பொய்யர் என்றும் கூறி தனக்கு கீழேயிருந்த தேவ தூதர்களை நம்பவைக்கும் வேலையில் ஈடுபட்டான். இறுதியில், லூசிபர் விதைத்த அதிருப்தி விதை முழு அளவிலான கிளர்ச்சியாக வளர்ந்தது. இதை வேதாகமம் வெளிப்படுத்தின விசேஷம் 12:7-9 வசனங்களில் விவரிக்கின்றது:

"வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று. உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்."

வெளிப்படுத்தின விசேஷம் 12:3,4 கூறுகிறது, முற்றிலுமாக மூன்றில் ஒரு பங்கு தூதர்கள் லூசிபருடைய பொய்களை நம்பி அதை ஏற்றுக்கொண்டனர்.

கிறிஸ்துவிற்கும் இப்பொழுது பிசாசு அல்லது சாத்தான் என்றழைக்கப்படும் லூசிபருக்கிமிடையே ஒரு பெரிய யுத்தம் துவங்கியது. யுத்தங்களுக்கெல்லாம் பின்னால் உள்ள யுத்தம், உலகத்தில் இப்பொழுது நடந்துக்கொண்டிருக்கும் அல்லது நடந்தேறிய எல்லா யுத்தங்களுக்குமான காரணமான யுத்தம் அது.

தேவனுக்கும் அவருடைய அன்பின் அரசாங்கத்துக்கும் மற்றும் சாத்தானுக்கும் அவனுடைய சுயநல கலகத்திற்குமிடையே நடக்கும் இந்த பெரிய யுத்தத்தில் நீங்களும் நானும் எவ்வாறாக சம்பந்த பட்டுள்ளோம்? பெரிய சச்சரவு எவ்வாறு தேவ தூதர்களிடமிருந்து மனித குலத்திற்கு நகர்ந்தது?

பரலோகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பின் சாத்தானும் அவனை சார்ந்த கலகக்காரர்களும் தங்களுடைய புதிய எதிர் அரசாங்கத்தின் தலைமையகத்தை சிறிய கிரகமான பூமியில் நிறுவி நித்திய வெறுப்பிற்கு மற்றும் தங்களை படைத்தவரை - இறுதி அழிவிற்கு கொண்டுவருவதற்கும் உறுதிமொழி கொண்டனர்.

வேதாகமத்தின் முதல் புத்தகமான - ஆதியாகமம் கூறுகிறது, தேவன் இந்த பூமியில் தேவதூதர்களுக்கு சற்று குறைவான வல்லமையுடன் தனது சொந்த ரூபத்திலேயே ஒரு புதிய வித்தியாசமான குலத்தை உருவாக்கினார். படைப்பின் ஆறாவது நாளில் ஆதியாகமம் 1:26,27 ல் தேவன் கூறுகிறது என்னவென்றால்: "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்."

தேவன் முதல் மனிதர்களான - ஆதாம் மற்றும் ஏவாளை படைத்து தேவ தூதர்களுக்கு அவர் அளித்த அதே தேர்ந்தெடுக்கும் உரிமையை அவர்களுக்கும் அளித்தார். நம்முடைய முதல் பெற்றோரின் வீடாக ஏதேன் தோட்டத்தை அவர் சிருஷ்டித்தார். அவர் சிருஷ்டித்த மனிதன் மற்றும் மனுஷியை அணுக விழுந்துபோன சாத்தானிற்கு தேவன் முழு அனுமதியளிக்கவில்லை. அதற்கு பதிலாக, தேவன் அவனை அந்த தோட்டத்தின் நடுவிலிருந்த ஒரு மரத்தில் மாத்திரம் அனுமதித்திருந்தார். ஆதாம் மற்றும் ஏவாளை அந்த மரத்திலிருந்து தூரமாக இருக்குமாறும் அதனுடைய கனியை எப்போதுமே புசிக்க கூடாது என்றும் தேவன் கட்டளையிட்டிருந்தார்.

துன்பக்கதை

அந்த துன்பகரமான நாள் வந்தது, பூமியும் அதின் மனிதனின் வரலாற்றை நித்தியமாக மாற்றிப்போட்ட நாள். அந்த கதையை உங்கள் முன்னால் விவரித்து காட்ட விரும்புகிறேன்.

ஏவாள் தனது கணவனான ஆதாமிடமிருந்து தனியாக உலாவுவதற்கான எந்த நோக்கமும் கொள்ளவில்லை. ஆனால் எப்படியோ, அவள் செய்து கொண்டிருந்த வேலையில் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி திடீரென தான் தனியாக இருப்பதை உணர்ந்தாள், தேவன் முன்னமே தங்களை எச்சரித்திருந்த அந்த மரம் தனக்கு முன்பாக இருப்பதை கண்டாள்.

அவருடைய எச்சரிக்கை அவளுடைய மனதிற்கு வந்தது: "ஏதேனிலிருக்கும் எல்லா மரங்களின் கனியையும் நீங்கள் புசிக்கலாம் ஆனால் தோட்டத்தின் நடுவிலிருக்கும் மரத்தின் கனியை புசிக்கக்கூடாது. புசிப்பீர்களானால் மெய்யாகவே சாவீர்கள்."

ஆனால் சாத்தான் ஒரு சர்ப்பத்தின் வடிவில் அந்த மரத்தில் காத்திருந்தான். புகழ்ச்சி, வஞ்சகம், மற்றும் மரத்திலிருந்து தள்ளியிருக்குமாறு தேவன் ஆதாம் ஏவாளுக்கு கொடுத்த எச்சரிப்பின் நோக்கம் குறித்த கேள்வியை எழுப்பி சாத்தான் ஏவாளை அந்த மரத்தின் கனியை பறித்து புசிக்கிமாறு வசீகரித்தான்.

அந்த நாள் முடிவதற்குள், ஏவாள் மரத்தின் கனியை ஆதாமுடன் பகிர்ந்துக் கொண்டாள்.

அதே நாளில், பின்னர், லூசிபரும் அவனுடைய சேனையும் அவர்களது பெரிய வெற்றியை களிப்புடன் கொண்டாடிக் கொண்டிருக்கும் சமயத்தில், ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் தேவன் தங்களை அழைக்கும் சத்தத்தை கேட்டனர். பொதுவாக அவர் அழைக்கும்போது, மனமகிழ்ச்சியுடன் ஓடி சென்று அவரை சந்திப்பர். ஆனால் அந்த சாயங்காலத்தில், வேதம் ஆதியாகமம் 3:8 ல் கூறுகிறது அவர்கள் "கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள்."

"எங்கே இருக்கிறீர்கள்?" என தேவன் அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

"உங்களுடைய சத்தத்தை கேட்டேன், நான் பயந்து இருக்கிறேன்" என ஆதாம் இறுதியில் பதிலளித்தான்.

ஆதாம் - தேவனைக் கண்டு பயந்தாரா?

இப்பொழுது உயிருடன் இருக்கும் நம்மில் அநேகர் தேவனுடன் சகஜமாக இருப்பதற்கு இன்னும் நீண்ட தொலைவு செல்லவேண்டியிருக்கிறது. ஏதெனில் அந்த நாளிற்கு பிறகு, அவரால், சிருஷ்டிக்கப்பட்ட நாம் அவரிடத்தில் செல்லுவதற்கு கடினமாக உணருகின்றோம், ஏன் அவரை பார்த்து - பயப்படவும் செய்கிறோம், பாவமும் அத்தகையதுதான். பாவம் சிருஷ்டிகரிடத்திலான நமது உறவை முறித்து அவர் உண்மையில் எப்படிப்பட்டவர் என்பதை நாம் காணாமல் முழுமையான பொய் வெளிச்சத்தில் தேவனை நாம் காணுமாறு செய்கிறது.

இந்த நேரத்தில் தேவனை பற்றிய உங்களுடைய வரைப்படம் எப்படி பட்டது என்பதை நான் அறியேன். நான் அறிந்தது போல நீங்கள் தேவனிடம் சிறிதளவு கூட பயத்தினாலோ, கோபத்தினாலோ அல்லது சஞ்சலத்தினாலோ இருக்கிறீர்கள் என்றால் பாவத்தினால் வந்த விரிசலினால் தேவன் உண்மையில் எப்படி உள்ளவர் என்பதை நாம் பார்க்க முடியாமல் போகிறது.

தேவனிடமிருந்து துண்டிக்கப்பட்டிருப்பதால்தான் அவரைக்குறித்த உண்மையில்லாத பல்வேறு காரியங்களை நாம் கற்பனை செய்ய ஆரம்பிக்கிறோம். நம்முடைய சொந்த பாவத்தினால் ஏற்படும் வலியை நாம் அவர் மீது சுமத்த நினைக்கிறோம். அடிப்படையில் தேவன் நமக்கு விரோதமானவர் என்று அவரை காண துவங்குகிறோம். நம்முடைய சத்துருவாக அவரைக் காணாவிட்டாலும் - ஒரு கடுமையான நீதிபதியாகவோ அல்லது கோபமுள்ள தகப்பனாகவோ காண்கிறோம்.

தேவனை குறித்த தவறான வரைபடங்கள் உண்டுபண்ண நமக்கு அதிக உதவி கிடைக்கின்றது. விழுந்துப்போன லூசிபரான சாத்தான், தேவனுடைய நற்பெயர் மீது மண்ணை வாரி இறைத்து அவரை ஒரு

மோசமான வில்லனாக காணும் ஒரு வரைப்படத்தை உருவாக்குகிறான். தேவனை கொடியவராக காண செய்யும் இலக்கில் மூழ்கி அவரைக் குறித்த பொய்களை பரப்புகின்றான். ஆகவே தான் சோதனையான துன்பம், வலி, நோய், துயரம் போன்றவை நம் வாழ்வில் நுழையும் போது - அந்த பழியை தேவன் மேல் போடுவதற்கு சாத்தான் வற்புறுத்துகிறான்.

ஆனால் தேவனை குறித்த சாத்தானின் வரைப்படம் முற்றிலுமாக தவறானது. கண்டனம் செய்யும் நீதிபதியாகவோ அல்லது சத்துருவாகவோ இராமல் தேவன் நம்முடைய இரட்சகராகவும் பெரிய நண்பராகவும் இருக்கின்றார்.

தேவன் மனிதக்குலத்தின் மீது வைத்திருந்த பெரிய அன்பின் அத்தாட்சி வேதாகமத்தில் ஆதாம் மற்றும் ஏவாள் பாவத்தில் விழுந்த சோக கதையிலிருந்து சில வசனங்கள் கழித்து பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆதியாகமம் 3:15 ல், தேவன் சாத்தானுடன் பேசிக்கொண்டிருக்கிறார், அவர் அவனிடம் சொன்னதாவது: "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்."

இதுதான் தாம் படைத்த மனிதர்களை எப்படியேனும் தேவன் காப்பார் என்பதை காண்பிக்கும் முதல் வேதாகம வாக்குத்தத்த வார்த்தைகள். மனிதர்களுடைய பாவத்திற்காக மற்றொருவர் தண்டனை அனுபவிக்கும் ஒரு வழியை உருவாக்கியிருந்தார்.

தேவன் சாத்தானுக்கும் அவனுடைய சந்ததி அல்லது பின்னடியார்களுக்கும் அதை எதிர்த்து ஏவாளுக்கும் அல்லது ஸ்திரீயின் பின்னடியார்களுக்கு மிடையில் பகையை ஏற்படுத்தினார். ஏவாளின் பிள்ளைகளான ஒருவர், அவளுடைய பின் சந்ததியில் வந்த ஒரு "வித்து" எழும்பி சாத்தானின் தலையை நசுக்குவார், ஆனால் சாத்தானோ அவருடைய குதிங்காலை மாத்திரம் நசுக்கினான். இங்கு

கொடுக்கப்பட்டிருக்கும் கருத்து என்னவென்றால் சாத்தானின் சாவுக்கேதுவான காயம் மாறாக சாதாரண குதிங்காலின் காயத்துடன் வேறுபடுத்தப்பட்டு காண்பிக்கப்பட்டிருக்கின்றது.

சாத்தானின் தலையை நசுக்கப்போகும் வித்து பிதாவினுடைய குமாரனாகிய இயேசு. சர்வகாலத்திலும் வாழ்ந்த, இனிமேல் வாழவிருக்கும் ஒவ்வொரு மனுஷன் செய்த எல்லா பாவத்தையும் வாக்குத்தத்தத்தின் இரட்சகர் ஒருநாள் தன்மீதாக எடுத்துக்கொள்ளுவார். தன்னை விட்டு திரும்பிய ஒரு குலத்தின் எல்லா கலகங்களையும், சுயநலத்தையும், அகந்தையையும் அவர் தன் மேல் சுமப்பார். வெட்கத்தின் சிலுவையிலே, மரணத்தின் முழு அபராதத்தையும் சுமந்தார். ஆதாம் மற்றும் ஏவாளை இரட்சிப்பதற்காக தனது உயிரையும், ரத்தத்தையும் சிந்தினார்.

அவர்களுடைய பின் சந்ததியாரை இரட்சிப்பதற்காக.

உங்களை இரட்சிப்பதற்காக.

என்னை இரட்சிப்பதற்காக.

தேவனுக்கு எதிரான யுத்தம் பரலோகத்தில் ஒரு அகந்தை நிறைந்த தேவதூதனால் துவங்கப்பட்டது. அது பூமிக்குள்ளும் நுழைந்தது, மனிதர்களும் தேவனை எதிர்த்து நின்று தங்கள் சொந்த வழியில் சென்றனர். நற்செய்தி என்னவென்றால் ஒருநாள் விரைவில் இந்த யுத்தம் என்றென்றைக்குமாக முழுமையாக முடிவு பெறவிருக்கிறது.

ஆனால் அந்த பெரிய யுத்தத்தின் துவக்கத்திலிருந்து அதனுடைய இறுதி முடிவு வரைக்கும், சாகும் வரையிலும் தேவனுடைய சத்தியத்திற்கும் அவருடைய குணத்தை பாதுகாப்பதிலும் உண்மையாயிருக்கவும், அவர் பக்கம் உறுதியாய் நிற்கவும் முற்காலத்திலும், இப்போதும், எல்லாக்காலத்திலும் தேவன் ஒரு கூட்ட மக்களை வைத்திருந்தார்.

இந்த பெரிய யுத்தத்தின் கதையானது அந்த விசுவாசமுள்ள பின்னடியார்களின் கதை.

அந்த விசுவாசமுள்ளவர்களில் முதன்மையானவர்கள் யார்?

வரலாற்றின் ஊடாக அவர்கள் எப்படி இருந்தார்கள்?

இப்பொழுது அவர்கள் யார்?

இந்த மூன்று கேள்விகளின் விடையும் இரகசியத்தில் மூடப்பட்டு வைக்கப்படவில்லை.

எல்லா காலத்திலும், தேவன் தனக்கென்று ஒரு கூட்ட மக்களை எப்பொழுதும் வைத்திருந்தார் - அவர்கள் உண்மை யுள்ளவர்களும், விசுவாச முள்ளவர்களும், அழைக்கப் பட்டவர்களும் தெரிந்து கொள்ளப் பட்டவர்களுமாவர் - மேலும் அவருக்காக விசேஷமான ஒரு கூட்ட மக்கள் இன்றும் இருக்கிறார்கள்.

அத்தியாயம் - 2

யுத்தங்களிலெல்லாம் மேலான யுத்தத்தில் பக்கங்களை தேர்ந்தெடுத்தல்

நீங்கள் ஒரு எழுத்தாளர் என்று எண்ணிக்கொள்ளுங்கள். உங்களது புத்தகத்தை எழுதி முடிக்க நீண்ட மாதங்களையும் - ஏன் பல வருடங்களையும் செலவழிக்கிறீர்கள். அதிக விற்பனையாகும் புத்தத்தை எழுதிவிட்டேன் என்ற கனவுடன், அதை ஒரு முக்கிய புத்தக வெளியீட்டாரிடம் அனுப்பி வைக்கிறீர்கள்.

புத்தக எழுத்துக்கள் பதிப்பாசிரியரின் மேஜைக்கு வந்தடைந்தவுடனே அவர் அதை நுட்பமாய் அலச துவங்குகின்றார். அதில் நீங்கள் "அது" குறித்து எழுதியிருக்கிறீர்களா என்று பார்க்க முயற்சிக்கிறார்.

அது?

ஆமாம், உங்கள் புத்தகத்தில் அருமையான உரையாடல், ஆர்வமிக்க கதாபாத்திரங்கள், வர்ணனையான விளக்கம், விற்கக்கூடிய கதை நுணுக்கம் எல்லாம் உள்ளது. ஆனால் விரைவிலேயே பதிப்பாசிரியர் எதிர்பார்க்கும் "அது" இதில் காணப்படவில்லை என்பதை உறுதி செய்கின்றார், உங்களுக்கு நிராகரிப்பு சீட்டு வந்தடைகிறது. நீங்கள் எதை விட்டுவிட்டீர்கள் என யோசிக்கிறீர்கள்?

முரண்பாடு:

ஒரு கதையில் முரண்பாடு இல்லையென்றால் அது தொடங்குவதற்கு முன்பாகவே செத்துப்போகிறது. முரண்பாடு அநேக வடிவங்களை எடுக்கக்கூடும். நல்லவனுக்கு எதிராக கெட்டவன். நல்ல நாட்டிற்கு எதிராக கெட்ட நாடு. கதாநாயகிக்கு எதிராக இயற்கை (ஒரு புயல், ஒரு காட்டு மிருகம்). தனக்குத்தானே மனதில் உள்போராட்டத்தில் இருக்கும் ஒருவர் (ஒரு கெட்ட பழக்கம், சட்டத்திற்கு விரோதமாக செய்ய ஒரு சோதனை).

ஒரு கதையில் மிகவும் முக்கியமான மற்றும் தவிர்க்கமுடியாத காரியங்களில் ஒன்று முரண்பாடு. ஏன்? ஏனென்றால் இந்த உலகத்தில் வாழ்வதே முரண்பாடை எதிர்கொள்வதற்கு தான். இந்த பூமி கோளத்தின் அடிப்படை வாழ்க்கை தத்துவமே அது தான். ஒரு முழு நாள் கூட இதை சந்திக்காமல் உங்களால் வாழவே முடியாது, "அது" எது? முரண்பாடு.

- பள்ளிக்கூட விளையாட்டு மைதானத்தில் இரண்டு சிறுவர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக்கொண்டிருக்கலாம்.
- ஒருவேளை ஒரு கணவனும் மனைவியும் கசப்பான மற்றும் கடினமான வார்த்தைகளினால் வாக்குவாதம் பண்ணலாம்.
- ஒருவேளை ஒரு அரங்கத்தில் நடக்கும் குத்துச்சண்டையாக இருக்கலாம், ஒருவர் மற்றொருவரை கீழே அடித்து தள்ள முயற்சிக்கின்றனர்.
- தொலைக்காட்சியில் அரசியலை பற்றி கூச்சலிடும் நிகழ்ச்சி தொகுப்பாளர்கள், செய்தியை விளக்குவதற்கு பதிலாக இன்னும் அதிக குழப்பத்தை ஏற்படுத்தலாம்.
- அநேக நேரங்களில் நமக்குள்ளே நடக்கும் ஒரு போராட்டத்தை நாம் உணர்கிறோம், நம்முடைய நல்ல பக்கத்திற்கும் தீய பக்கத்திற்கும் இடையே ஏற்படும் போராட்டம்.

ஆனால் தேவன் சமாதானத்தின் தேவனாக இருக்கின்றார், முரண்பாடின் தேவனாக அல்ல. இந்த உலகத்தை முழு சமாதானம் உள்ளதாகவும் - மக்களுக்கிடையே நல்லிணக்கம் கொண்டதாகவும் படைத்தார். ஆதியிலே மிருகங்கள் கூட ஒன்றோடொன்று சமாதானமாக இருந்தன. முரண்பாடே இல்லாத நிலையைத்தான் தேவன் சிறந்ததாக எண்ணினார். வெகு விரைவிலேயே இந்த உலகம் மறுபடியும் ஒரு முழு சமாதானமான இடமாக மாறும் என்று வேதம் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

முரண்பாடு ஒரு அழையா விருந்தாளி. சரியான பாதையில் இருந்து விலகுவது. மாற்றம் உண்டாக்கக்கூடியது.

பாவத்தின் நேரடி பலனானது முரண்பாடு. பாவத்தின் மூல காரணமானது சுயநலம். தன்னுடைய சிருஷ்டிகரை விட நான் உயர்ந்தவன் என்று லூசிபர் நினைப்பதற்கு முன்பாக பாவம் இருந்ததில்லை:

"அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே!...

'நான் வானத்துக்கு ஏறுவேன்,

'நான் தேவனுடைய நட்சத்திரங்களுக்குமேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்;

'நான் வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும்,

'நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்;

'நான் உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே."" - ஏசாயா 14:12-14, முக்கியத்துவம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

லூசிபருக்கு "நான்" என்கிற சுயநலம் ஆரம்பித்தது. எப்பொழுதெல்லாம் "சுயம்" முதலாவதாக வருகிறதோ அதன் விளைவாக வருவது தான் முரண்பாடு. வாழ்க்கை முழுவதும் "என்னை" பற்றி என்பதாக மாறிவிடுகின்றது. சுயம் உயர்த்தப்படுகின்றது, பாதுகாக்கப்படுகின்றது, காத்துக்கொள்ளப்படுகின்றது, பராமரிக்கப்படுகின்றது, மற்றும் தன்னுடைய முதல் இடத்திற்கு எது போட்டி போடுகின்றதோ அதை உடனே எதிர்க்கின்றது.

வேதாகமம் சொல்கிறது, வானத்திலே யுத்தமுண்டாயிற்று.

லூசிபருக்கும் அவனை படைத்த இறைவனுக்கும் பெரிய போராட்டம் துவங்கியது. 6,000 வருடங்களுக்கு மேலாக கொந்தளித்துக் கொண்டிருக்கின்ற இந்த பெரிய யுத்தம் தான் எல்லா யுத்தங்களுக்கும் பின்னால் நடக்கும் யுத்தம்.

ஒரு பேச்சுக்கு சொல்வோம், ஒரு கோடீஸ்வரரின் தனிப்பட்ட கலைக்கூடத்திற்கு உங்கள் கண்களைக்கட்டி அழைத்து சென்று ஒரு ஓவியத்தின் முன்னால் மிக அருகிலே ஒன்று அல்லது இரண்டு அங்குல தொலைவில் நிக்க வைக்கிறார்கள். உங்கள் கண்கட்டு அகற்றப்படுகின்றது, நீங்கள் காண்பதை வரணிக்கவேன்றும் என்று கேட்கிறார்கள். எனக்கு கொஞ்சம் மஞ்சள் நிறம் மற்றும் பழுப்பு நிற மைப்பூச்சு தெரிகிறது என்று சொல்கிறீர்கள். சில அங்குலம் பின்னால் நீங்கள் நகர்த்தப்படுகிறீர்கள். இப்போது அந்த வர்ணத்தில் சில வகையான வடிவங்கள் தெரிகின்றது. இறுதியில் பல அடி தூரத்திற்கு நீங்கள் நகர்த்தப்படுகிறீர்கள். இப்போது நீங்கள் லியோனார்டோ டா வின்சியின் புகழ் பெற்ற குறைவான அளவில் பதிப்பான "மோனா லிசா" ஓவியத்தை பார்க்கிறீர்கள். அதன் அசல் ஓவியம் பிரான்ஸின், பாரிஸ் நகரத்திலுள்ள லூவ்ரெ அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இது ஒரு பெரிய படத்தை காண்பதற்கு உதவுகிறது.

இப்போது சாத்தான் என்று அழைக்கப்படுகிற லூசிபருக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே நடக்கும் பெரிய போராட்டம் தான் அந்த

பெரிய படம். ஒவ்வொரு முரண்பாடும், யுத்தமும், இந்த பூமியில் நடைபெறும் ஒவ்வொரு சண்டையும் அந்த பெரிய படத்தின் ஒரு சிறு அங்கம். அந்த யுத்தங்களுக்கு எல்லாம் பின்னால் உள்ள பெரிய யுத்தத்தின் ஒரு மிக சிறிய அங்கம் அது.

“நான்” மிக முக்கியப்படுத்த படும்போது முரண்பாடு ஏற்படுகின்றது.

"நான்" சரியென்றால் நீ தவறு.

"நான்" பயமுறுத்தப்பட்டால், நான் என்னை காத்துக்கொள்வதற்காக எதையும் செய்வேன்.

"நான்" எதை விரும்பினால், அது "எனக்கு" வந்தடைய வேண்டும், தேவைப்பட்டால் பலவந்தமாகவும் எடுத்துக்கொள்வேன்.

இந்த பிரபஞ்சத்தில் சுயநலமாகிய பாவம் நுழைவதற்கு முன்பு, முரண்பாடு இருந்ததில்லை. தேவன் பாவத்தை என்டென்றைக்குமாக அழித்து, பூமியை புதிப்பிக்கும்போது, முரண்பாடு இல்லாமல் போய்விடும். இந்த இடைப்பட்ட காலகட்டத்தில் தற்காலிகமாக அது காணப்படுகிறது.

பாவம் வருவதற்கு முன்பாக "உன்பக்கம்", "என்பக்கம்" என்ற "பக்கங்கள்" இருக்கவில்லை. பாவத்திற்கு முன்னால், தேவன் படைத்த எல்லா ஜீவராசிகளும் அவருடன் இருந்தன. பாவத்திற்கு பின்னால், சிலர் அவருக்கு விரோதமாக மாறினர். அதனால் 6,000 வருடங்களுக்கு மேலாக இப்போது இரு பக்கங்கள் இருந்து வருகின்றது: தேவனுடைய பக்கம் மற்றும் சாத்தானின் பக்கம்.

நன்கு கவனியுங்கள், மூன்றாவது "பக்கம்" என்று ஒன்றும் கிடையாது. இரண்டு பக்கம் மட்டும்தான். ஒவ்வொரு நாளில் இருக்கும் ஒவ்வொரு மணித்துளியும், நாம் யாவரும் இவ்விரண்டு பக்கங்களில் ஏதேனும் ஒன்றைத்தான் தேர்ந்தெடுக்க முடியும்.

வாழ்வு அல்லது மரணம்

நன்மை அல்லது தீமை

வெளிச்சம் அல்லது இருள்

உண்மை அல்லது பொய்

நம்பிக்கை அல்லது சந்தேகம்

அன்பு அல்லது சுயநலம்

நேர்மறை அல்லது எதிர்மறை

கிறிஸ்து அல்லது சாத்தான்

ஆனால் ஒருவர் எதிர்க்கிறார், முற்றிலுமாக எதிர் கொள்கைகளை வைத்திருக்கும் இரு பெரும் தலைவர்களுக்கிடேயே நடக்கும் இந்த போராட்டத்தில், நான் எந்த பக்கத்தையும் தேர்ந்தெடுக்க போவதில்லை. நான் "சுதந்திரமானவன்". நான் எனக்கு மட்டுமே விசுவாசமானவன். கிறிஸ்துவும் சாத்தானும் சண்டை போட்டு முடிக்கட்டும் - நான் இதில் சம்பந்த பட போவதில்லை.

நான் மறுபடியும் தவறின்றி தெளிவுப்படுத்திக்கொள்வோம்: *இரண்டு* பக்கங்கள் மட்டும் தான் உள்ளது. இந்த பிரபஞ்சத்தில் யாருமே நடுநிலை வகிக்கமுடியாது. யாரும் பக்கவாட்டில் உட்கார்ந்துக்கொள்ளமுடியாது. ஏன்? ஏனென்றால் நீங்கள் தீவிரமாக சரியான பக்கத்தை தேர்ந்தெடுக்காவிட்டால், இயல்பாக, தவறான பக்கத்தை தேர்ந்தெடுத்துக்கொள்வீர்கள். இந்த முரண்பாட்டில் கிறிஸ்துவின் பக்கத்தை தேர்ந்தெடுக்காவிட்டால், உங்களை தானாகவே அடுத்த பக்கத்தில் சேர்த்துவிடும். மூன்றாம் பக்கமான சுயாதீன "பக்கத்தில்" நிற்கலாம் என்றென்னினால், அது "நான்" மற்றும் "என்னை" பற்றி என்பதாகும். அது நம்மை மறுபடியும் சாத்தானின் பக்கத்தில் நிற்கவைக்கும்.

இந்த புத்தகத்தின் அடித்தளமாயிருக்கும் கதையானது - கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையிலான இறுதி போராட்டம் - முரண்பாட்டின் இரு பக்கங்களை குறித்த கதையாகும். ஆகையால் இந்த கதையானது நம்முடைய முதல் மனித பெற்றோர்களான ஆதாம் ஏவாளில் இருந்து நீங்களும் நானும் வரையும் மற்றும் இப்போது உயிருடன் இருக்கும் எல்லோர் வரையும், இந்த முரண்பாட்டில் எந்த பக்கத்தை தேர்ந்தெடுக்க போகிறோம் என்பதை குறித்ததாகும்.

நாம் கிறிஸ்துவுடன் இருக்கிறோமா அல்லது சாத்தானுடனா?

நாம் சத்தியத்திற்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிறோமா அல்லது பொய்களுக்கா?

நாம் அன்பினால் ஊந்தப்படுகிறோமா அல்லது சுயநலத்தினாலா?

இது எவ்வளவு எளிதான காரியமோ, அதே போன்று உண்மையான காரியமாய் கூட இருக்கிறது.

தங்களது சுய அறிவின் வல்லமையை போற்றுகிறவர்கள், இது ஒரு "கருப்பு - வெள்ளை சிந்தனை" போல் தோன்றுகிறது என்று அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கலாம். சரி தவறு, சத்தியம் பிழை என்று வருகிறபோது தெளிவான கருப்பு வெள்ளை போன்று தெரியாமல் மங்கிய சாம்பல் நிழல்கள் போன்று தெரிகிறது என்று அவர்கள் வலியுறுத்தலாம்.

ஆனால் அது முடியாது, ஏனென்றால் இரண்டு எஜமான்களுக்கு சேவை செய்ய முடியாது என்று வேதம் தெளிவாக கூறுகிறது. ஒருவருக்கு தான் சேவை செய்ய முடியும். கிறிஸ்துவா? அல்லது சாத்தானா? "யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்." - யோசுவா 24:15.

கலப்படம் அற்ற உண்மை சத்தியம் என்று ஒன்று இருக்கிறது. சுயநலம் இல்லாத அன்பு என்று ஒன்று இருக்கிறது. வேலியின் இரு

பக்கங்களிலும் விளையாடாமல் தேவனின் பக்கத்தில் முழுமையாக உண்மையுடன் இருக்க முடியும் என்று ஒன்று உள்ளது.

சாம்பல் நிறத்தின் நிழல்கள்

ஒரு பெரிய அளவு வெள்ளை சாயத்திற்குள் சற்று சிறிய அளவு கருப்பு சாயம் சேர்த்தால் லேசான சாம்பல் நிறம் வந்துவிடும். அதிகமான கருப்பு சாயத்தை சேர்க்க சேர்க்க, சாம்பல் நிறம் அதிகமாக மாறும்.

தேவன் சாம்பல் நிறத்தில் பல நிழல்களை படைக்கவில்லை. அவருடைய சத்தியத்தில் பிழைகள் ஏதும் கிடையாது. அவருடைய அன்பில் சுயநலம் கிடையாது. அவருடைய ஒளியில் இருள் கிடையாது. "தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் **இருளில்லை**" - 1 யோவான் 1:5, முக்கியத்துவம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இறுதி போராட்டத்தில் நடுநிலை கிடையாது. நன்மைக்கும் தீமைக்கும் இடையே, உண்மைக்கும் பிழைக்கும் இடையே எந்த "சாம்பலின் நிழல்களும்" கிடையாது. சமரசம் செய்துக்கொள்வது மற்றும் வேலியின் இருபக்கங்களிலும் காலைவைத்துக்கொண்டு விளையாடுவது கூடுகின்ற காரியம் போல தோன்றலாம் ஆனால் அது நடக்காது. எண்ணையும் தண்ணீரும் ஒன்றோடொன்று கலப்பதில்லை.

இந்த புத்தகத்தின் பெரிய மையக்கருத்து என்னவென்றால், தேவனுக்காகவும் அவரது சத்தியத்திற்காகவும் ஒரு கூட்ட உண்மைமிக்க மக்களை தேவன் எப்போதும் வைத்திருந்தார். வரலாறு முழுவதுமாக இந்த பெரிய போராட்டத்தில் அவரின் பக்கத்தை ஆணித்தரமாக தேர்ந்தெடுத்தோர் இருந்தனர். தேவனின் பக்கத்தை தேர்ந்தெடுத்தோர் சிறுபான்மையினராகவே இருந்தனர். சில சமயம் அந்த சிறுபான்மைக் கூட்டம் மிக சிறியதாகவும் இருந்திருக்கின்றது.

இயேசு சொல்கிறார், "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் **அநேகர்**. ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் **சிலர்**." மத்தேயு 7:13, 14. முக்கியத்துவம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

உங்களுக்கு ஏற்கனவே இந்த கதை தெரிந்திருக்கும், அதனால் அதை விரிவாக கூறுவதற்கு அவசியமில்லை. நீங்கள் அறிந்திருப்பீர்கள் தேவன் பரலோக வாசிகளை சிருஷ்டிக்கும் போது அவர்களுக்கு தெரிந்தெடுக்கும் உரிமையை அருளியிருந்தார், ஆதலால் அவர்கள் தேவனை கட்டாயத்தின் பெயரிலல்ல தங்கள் சுயத்துடன் சேவை செய்ய வேண்டுமென்று. லூசிபர் தான் தெரிந்தெடுக்கும் உரிமையை பயன்படுத்திக்கொண்டு தேவனை விட பெரியவனாக நினைத்தான். இது பரலோக யுத்தத்தை ஆரம்பித்தது, இதன் மூலமாக சாத்தானும் அவன் ஏமாற்றிய மூன்றில் ஒரு பங்கு தூதர்களும் பரலோகத்திலிருந்து வெளியே தள்ளப்பட்டார்கள் என்பது உங்களுக்கு ஏற்கனவே தெரியும். தேவன் பூமியை பூரணமாக படைத்து அதில் இரு பூரணமான மனிதர்களை வைத்தார், அவர்களுக்கும் அவர் தேர்ந்தெடுக்கும் உரிமையை அருளினதும் உங்களுக்கு தெரியும். சங்கடகரமாக அவர்களும் அந்த கொடூரமிக்க தவறான தேர்வை தேர்ந்தெடுத்து இந்த பூலோகத்தில் பாவத்தின் வெள்ள தடுப்பணையை திறந்துவிட்டனர்.

முதல் இலைகள் பழுப்பாக மாறியது

ஆதாமும் ஏவாளும் சபிக்கப்பட்டவர்கள் போல தோன்றினர். மலர்கள் உலர்ந்து சாகிறதையும்... இலைகள் பழுப்பாக மாறி மரங்களிலிருந்து உதிர்வதையும் கண்டு "இப்போது மனிதர்கள் மரணத்திற்கு எவ்வளவு துக்கம் கொண்டாடுகின்றனரோ அதே போல் துக்கம் கொண்டாடினர்" – முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும், ப. 62.

திடீரென அவர்கள் இழந்ததை எல்லாம் எண்ணி பரிதாபகரமான துயரத்தினால் துடித்தனர். வருத்த உணர்வு மற்றும் நம்பிக்கை இல்லாமையால் மேற்கொள்ளப்பட்டனர். ஒரு சுயநல தீர்மானத்தினால் அவர்களுக்கு மரணம் ஏற்பட்டு அவர்கள் ஒருபோதும் இருந்ததாகவே இல்லாமல் போல காணப்படும்.

தேவன் அவர்களை - உடனே அழித்திருக்கலாமே என சிலர் தர்க்கம் செய்யலாம். அவர்கள் செய்த பாவத்திற்கு தக்க தண்டனை கொடுக்க தேவனுக்கு எல்லா உரிமையும் இருந்தது. ஆனால் தேவன் இன்னொரு வழியை தேர்ந்தெடுத்தார் என்பது நமக்கு தெரியும். மனிதனின் தவறான தெரிந்தெடுத்தலுக்கும் அதன் இறுதி விளைவிற்கு நடுவிலே தேவன் தன்னை நிறுத்தினார். ஒவ்வொரு மனிதனுக்கும் தெரிந்தெடுக்கும் வாய்ப்பை அவர் மறுபடியும் அளிப்பார்.

இரக்கத்தினால் நிறைந்து அவர்களை இரட்சிக்கும் திட்டத்தை தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் விவரித்தார். தேவன் அவர்களுக்கு தெரிய படித்தினார், தங்கள் சுயநல தீர்மானத்தின் பலனாக பல விளைவுகளில் இருந்து தப்பிக்க முடியாவிட்டாலும் அவர்களை அதின் கொடிய இயற்கை விளைவாக நித்திய மரணத்திலிருந்து காப்பார் ஆனால் அதின் கொடூரமான விலையாக தன்னைத்தானே வைத்தார்.

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் மறுபடியும் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பத்தை தேவன் கொடுப்பார்.

பாவம் எவ்வளவு நாள் நீடிக்கிறதோ அவ்வளவு நாளளவும் அவர்கள் பின்வரும் சந்ததியார்களுக்கு சுயநலத்தை அல்லது அன்பை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு மற்றும் உண்மை அல்லது பொய், கிறிஸ்து அல்லது சாத்தான் ஆகிய இரு பக்கங்களில் ஒன்றை தெரிந்தெடுக்கும் அதே வாய்ப்பு வழங்கப்படும்.

ஆதாமும் ஏவாளும் அதிக காலம் வாழ்ந்தனர் என்பதை நாம் அறிவோம், அதில் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட இரண்டாம் வாய்ப்பை ஞானமாக பயன்படுத்தினர். இப்பொழுது அவர்கள் சேதமடைந்து

குறையுள்ளவர்களாய் காணப்பட்டனர், ஆனாலும் தினமும் தேவனின் பக்கத்தில் ஸ்திரமாய் நிற்பதை தேர்ந்தெடுத்தனர்.

அவர்களுக்கு பின் வந்தவர்களும் பக்கங்களை தேர்ந்தெடுக்க ஆரம்பித்தனர் என்பதையும் நாம் அறிவோம். ஆதாமின் ஏவாளின் மகனான ஆபேல், தேவன் கூறியிருந்தது போல, பலியிடுவதற்காக ஒரு ஆட்டுக்குட்டியை பலிபீடத்திற்கு கொண்டுவந்தான். அந்த ஆட்டுக்குட்டி தேவனின் இரட்சிக்கும் ஆட்டுக்குட்டியை குறிப்பதாகும், அது ஒருநாள் பாவத்தின் கடைசி விலையாக கொடுக்கப்பட இருந்த முடிவான பரிகாரமாயிருந்தது. அவனுடைய சகோதரனான காயின் தன்னுடைய கைகளின் பிரயாசமான பழங்களை பலிபீடத்திற்கு கொண்டுவந்தான், இது தேவனின் இலவச இரட்சிப்பை நம்பாமல் தனது சொந்த மனித முயற்சியை நம்பினான் என்று காண்பிக்கின்றது. தேவன் ஆபேலின் பலியை ஏற்று காயினின் பலியை நிராகரித்தபோது, கோபமடைந்த காயின் முதல் மனித கொலையில் ஈடுபட்டான். காயின் ஆபேலை கொன்றான்.

இந்த பயங்கரமான நிகழ்வை குறித்து கொடுக்கப்பட்டிருக்கும் முக்கிய வர்ணனையை கவனியுங்கள். கி.பி. 2000 திற்கு பிறகு வாழும் உங்களுக்கும் எனக்கும் இதன் பொருள் என்ன என்பதை எடுத்து காட்டுகிறது:

உலக முடிவுகாலம் வரை இருக்கப்போகின்ற இரண்டு வகுப்பு மக்களை காயினும் ஆபேலும் குறிக்கின்றனர். ஒரு கூட்டத்தினர் பாவத்தின் பலியாக நியமிக்கப்பட்டவரை தங்களுக்கென தெரிந்து கொள்ளுகின்றனர்; இன்னொரு வகுப்பினரோ தங்களுடைய சுய நன்மைகளை நம்பியிருக்கின்றனர்; அவர்களது பலி தெய்வீக தியாகத்தின் நல்லொழுக்கம் இல்லாதது. அதனால் அது மனிதர்களை தேவனுடைய தயவினுள் கொண்டு வர முடியாது. இயேசுவின் தகுதிகளால் மாத்திரம் தான் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும். கிறிஸ்துவின் உதிரம் தேவையில்லை என்று நினைப்போர், தெய்வீக கிருபை இல்லாமல் தங்களுடைய கிரியைகளை வைத்து தேவனின்

ஒப்புதலை பெறமுடியும் என்று நினைப்போர் எல்லோரும் காயின் அன்று செய்த அதே தவரைத்தான் செய்கின்றனர். சுத்திகரிக்கும் இந்த உதிரத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் போனால் ஆக்கினைக்குள்ளாக்கப்படுவர். பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுவிப்பதற்கு வேறெந்த வழிகளும் கிடையாது.

"காயினின் உதாரணத்தை பின்தொடரும் பக்தர்களின் கூட்டம் இந்த உலகத்திலுள்ள பெரும் பகுதியினரை உள்ளடக்கியதாகும்; ஏனென்றால் தவறான அநேகமான எல்லா மதங்களும் மனிதனின் சொந்த முயற்சியினால் இரட்சிப்பை பெறலாம் என்ற தவறான கோட்பாட்டின் மீது தான் நிலைகொண்டுள்ளது. மனித குலத்தின் தேவை மீட்பு அல்ல முன்னேற்றம் தான் என்று சிலர் கூறுகின்றனர், ஏனென்றால் அது அவர்களை சுத்திகரித்து, உயர்த்தி, சீர்திருத்தம் செய்யும் என நம்புகின்றனர். இரத்த பலி காணிக்கையில்லாமல் தேவனின் தயவு கிடைத்துவிடும் என்று காயின் நம்பியதுப்போல இவர்களும் பாவநிவாரணம் இல்லாமலேயே மனித குலத்தை தெய்வீக தரத்திற்கு உயர்த்தலாம் என்று நினைக்கின்றனர். இதின் விளைவு என்னதாக இருக்கும் என்று காயினின் வரலாறு நமக்கெடுத்துரைக்கின்றது. கிறிஸ்து இல்லாமல் மனிதன் என்ன ஆவான் என்று காண்பிக்கின்றது. மனிதகுலத்திற்கு தன்னை தானே சீர்திருத்திக் கொள்ளும் வல்லமை கிடையாது. அது மேல்நோக்கி பரிசுத்த தேவனிடம் அல்ல, கீழ்நோக்கி சாத்தானிடம் வழிநடத்தக்கூடியது. கிறிஸ்துதான் நமது ஒரே நம்பிக்கை. 'அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.' அப்போஸ்தலர் 4:12." - முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும், ப. 72, 73.

ஆதியிலிருந்தே, வெறும் இரண்டு பக்கங்கள்தான். ஆபேலும் அவன் பெற்றோரும் தேர்ந்தெடுத்த பக்கம் அல்லது காயின்

தேர்ந்தெடுத்த பக்கம். கிறிஸ்துவின் பக்கமா அல்லது சாத்தானின் பக்கமா. நம்பிக்கையின் பக்கமா அல்லது மனித முயற்சிகளின் பக்கமா. கீழ்ப்படிதலின் பக்கமா அல்லது பிடிவாதமிக்க சுய விருப்பத்தின் பக்கமா. தேவனுக்கு உண்மையாயிருக்கும் பக்கமா அல்லது சுயத்திற்கு உண்மையாய் இருக்கும் பக்கமா (தேவனின் பெரிய எதிரி). தேவனுடைய சத்தியத்தின் நம்பிக்கையின் பக்கமா அல்லது அவரை குறித்து சாத்தான் கூறிய பொய்களின் பக்கமா.

இன்றைக்கும், அந்த இரண்டு பக்கங்கள் மட்டும் தான் இருக்கின்றன. உயிருள்ள சுவாசிக்கும் எல்லா மனிதர்களுக்கும் எந்த பக்கத்தில் அவரோ அல்லது அவளோ நிற்க வேன்றுமென்று தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆதாமும் ஏவாளும் தேர்ந்தெடுத்தனர்.

காயினும் ஆபேலும் தேர்ந்தெடுத்தனர்.

முற்காலத்தில் வாழ்ந்த ஒவ்வொருவரும் தேர்ந்தெடுத்துள்ளனர்.

இப்பொழுது, பூமியில் வாழும் அனைவரும் அதே தேர்வை தேர்ந்தெடுத்துள்ளனர்.

எந்த பக்கத்தை நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள்?

எல்லா காலத்திலும், தேவன் தனக்கென்று ஒரு கூட்ட மக்களை எப்பொழுதும் வைத்திருந்தார் - அவர்கள் உண்மை யுள்ளவர்களும், விசுவாச முள்ளவர்களும், அழைக்கப் பட்டவர்களும் தெரிந்து கொள்ளப் பட்டவர்களுமாவர் - மேலும் அவருக்காக விசேஷமான ஒரு கூட்ட மக்கள் இன்றும் இருக்கிறார்கள்.

அத்தியாயம் - 3

விசுவாசமுடையோர்களின் ஒரு உடைக்க முடியாத வரிசை

தேவன் இறுதி போராட்டத்தில் தோல்வியை தழுவிக் கொண்டிருக்கிறாரா?

ஒருகாலத்தில், பரலோகத்தின் மிக உன்னதமான தேவ தூதனாயிருந்த லூசிபர், தன்னுடைய சுயநல தீர்மானத்தினால் சாத்தானாகவும், பிசாசாகவும் மாறினான். ஒரு வகையில் அவன் துவங்கிய இந்த மாபெரும் போரில் அவன் வெற்றிகாண்பது போல் தெரியலாம். அவனுடன் பரலோகத்திலிருந்த மூன்றில் ஒரு பங்கு தூதர்களை இழுத்து சென்றது மட்டுமல்லாமல், ஆதியிலிருந்தே மனிதர்களில் பெரும்பான்மையானோரை அவன் பக்கத்தில் இழுத்து கொண்டுள்ளான்.

சாத்தான் தேர்ந்தெடுத்தான். ஆதாமும் மற்றும் ஏவாளும் தேர்ந்தெடுத்தனர். காயின் மற்றும் ஆபேலும் கூட தேர்ந்தெடுத்தனர். துவக்கத்திலிருந்தே, உலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் அதே தேர்வை சந்தித்து வருகின்றனர். நாம் கி.பி. 2000 யிலிருந்து எண்ண ஆரம்பித்தால், இன்று உலகத்தில் வாழும் 6.5 பில்லியன் மக்களில் அதிகமானவர்கள் தேவனுக்கு எதிராக அவருடைய சத்துருவை தேர்ந்தெடுத்து வருகின்றனர்.

ஆனால், தேவனின் உண்மையான மற்றும் விசுவாசமுடைய பின்னடியார்கள் எப்போதும் ஏன் இறுதி வரையிலும் கூட - சிறுபான்மையாகவே இருப்பார்கள். இந்த உண்மையுள்ள சிலர், இடுக்கமாக இருக்கும், மேல்நோக்கி செல்லும் பாதையை தேர்ந்தெடுத்தவர்கள். என்ன விலைக் கொடுக்கவேண்டியிருந்தாலும் தேவனின் பக்கத்தில் நிற்பவர்கள்.

ஆதாம் மற்றும் ஏவாள் துவங்கி இன்றும் தேவனின் பக்கத்தை தேர்ந்தெடுக்கும் உடைக்க முடியாத சங்கிலியாக விளங்கும் அவரது உண்மை பின்னடியார்களின் கதையைத்தான் இந்த புத்தகத்தில் படிக்கவிருக்கிறோம்.

ஆதலால் நாம் இப்போது சற்று பின்னோக்கி சென்று சத்துருவின் பக்கத்தை அநேகர் தேர்ந்தெடுத்த போதிலும், தேவனின் பக்கத்தை தேர்ந்தெடுத்தவர்கள் பற்றிய கதையை தேட துவங்கலாம்.

ஆபேலின் மரணத்திற்கு பின்பு ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவன் - சேத் என்ற மற்றொரு மகனை தந்தார். தன் அறியா சகோதரனான ஆபேல் தேர்ந்தெடுத்ததைப் போலவே சேத்தும் தேவனுக்கு உண்மையாய் இருப்பதை தெரிந்துக்கொண்டான். சேத்தின் மரபு வழி வந்தவர்களும் பல தலைமுறைகளாக தங்களது முற்பிதா ஆதாமோடே சஞ்சரித்த தேவனை பின்தொடர்வதையே தாங்களும் தேர்ந்தெடுத்தனர். ஆதாம் கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து தன்னுடைய துயரகரமான தெரிந்தெடுத்தலின் கதையையும் அதனால் ஏற்பட்ட பயங்கர விளைவுகள் குறித்தும் தன்னுடைய சந்ததியாரை எச்சரித்தான்.

இதற்கிடையில் காயினும் அவருடைய சந்ததியும் தாங்கள் இருக்கவேண்டிய பக்கத்தை தேர்ந்தெடுத்து தலைமுறை தலைமுறையாக தேவனுக்கு எதிரான தங்களது கலகத்தை தொடர்ந்தனர்.

ஆனால் காலப்போக்கில் காயினின் சந்ததியும் சேத்தின் சந்ததியும் ஒன்றோடொன்று இணைந்து கலப்பு திருமணத்தில் ஈடுப்பட்டனர். காலம் செல்ல செல்ல சேத்தின் சந்ததியில் இருந்த அநேகர் தேவனிடம் இருந்த தங்களது விசுவாசத்தை கைவிட்டு காயினின் விரிவடைந்துக் கொண்டிருந்த குடும்பத்தின் கலக நிலைப்பாட்டை தேர்ந்தெடுத்தனர். விரைவில், மனித குலத்தின் பெரும்பான்மையானோர் தேவனின் சத்துருவின் பக்கத்தில் உறுதியாய் நின்றனர்.

"நிலவும் அக்கிரமம் ஒருபுறமிருந்தாலும் ஒரு வரிசை பரிசுத்தவான்கள் மாத்திரம் தேவனோடு ஒன்றி இருந்ததால் மேன்மைப்படுத்தப்பட்டு உயர்த்தப்பட்டு பரலோகத்தின் தோழமையில் வாழ்ந்தனர்." - முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும், ப. 84.

பரிசுத்தவான்களின் வரிசை

ஆதாம் ஏவாளில் துவங்கிய வரிசை.

6,000 ஆண்டுகளாக பல நூற்றாண்டுகள் தொடரும் உடைக்க முடியாத நீண்ட வரிசை.

இன்றும் காணமுடிகின்ற வரிசை.

அந்த பரிசுத்தவான்களின் வரிசையில், ஆதாமிலிருந்து ஏழாம் தலைமுறையில் ஏனோக்கு வாழ்ந்தார் என்று வேதாகமம் கூறுகிறது. மிக விரைவாக பெருகி கொண்டிருக்கும் உலக மக்கட்தொகையின் மத்தியில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் ஏனோக்கு, அதிலும் பெரும்பான்மை தேவனை வெளிப்படையாக எதிர்த்திருந்தும் அவருடைய சத்தியத்தை பரிகசித்தபோதும் அவர்கள் மத்தியில் ஏனோக்கு "தேவனோடு சஞ்சரித்தார்." உலகின் துன்மார்க்கமான பெரும்பான்மையானோர் தேவனிடம் எந்த பயனையும் அறியாவிட்டாலும், ஏனோக்கு தேவனை இன்னும் அதிகமாக அறிவதில் ஆர்வமாயிருந்தார்.

தேவனுக்கு எதிராக தங்களது தீர்மானத்தை தேர்ந்தெடுத்தவர்களிடமிருந்து தன்னை ஏனோக்கு ஒதுக்கி கொள்ளவில்லை. "பரிசுத்தம்" பெறுவதற்காக தன்னை ஒரு மலை ஸ்தலத்தில் பூட்டி வைத்துக்கொண்டு 24 மணிநேரமும் 7 நாட்களும் ஜெபத்திலும் தியானத்திலும் ஈடுப்படவில்லை. அதற்கு பதிலாக தேவனில்லாத உலகத்தில் மூழ்கியிருக்கும் நமக்கு, உலகத்திலிருந்தும் உலகத்திலில்லாமல் இருப்பது எப்படி என்பதை எடுத்துக்காட்டினார். ஒரு நினைவிழந்த நிலையிலோ அல்லது தரிசனத்திலோ ஏனோக்கு தேவனோடு சஞ்சரிக்கவில்லை ஆனால் தன்னுடைய அன்றாட வாழ்க்கையின் கடமைகளுக்கிடையில் தேவனோடு சஞ்சரித்தார். அவர் ஒரு துறவியாகவில்லை, உலகிலிருந்து தன்னை முற்றிலுமாக ஒதுக்கவில்லை; ஏனென்றால் இந்த உலகில் அவர் தேவனுக்காக செய்ய வேண்டிய வேலை இருந்தது." - முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும், ப. 85.

300 ஆண்டுகளாக ஏனோக்கு தேவனை ஆத்மாத்தமாகவும் முழு இருதயத்தோடு பின்தொடர்ந்தார். தேவனை மிக நெருக்கமாக அறிந்துக்கொண்டார். பின்பு ஒரு நாள் அற்புதமான காரியம் ஒன்று நடந்தது.

காணப்படாமற்போனார்

"ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், காணப்படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார்" - ஆதியாகமம் 5:24.

ஏனோக்கு பூமியிலிருந்து பரலோகத்திற்கு சாகாமலே தேவனுடைய சந்நிதானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்.

பூமியில், ஏனோக்கு இல்லாத குறை தெரிந்தது, அறியப்பட்டது. தேவன், இந்த அதிசயத்தின் மூலமாக, பூமியில் வாழ்ந்த தன்னுடைய பின்னடியார்களுக்கு ஒரு முக்கியமான பாடத்தை கற்பித்தார்.

“ஏனோக்கின் எடுத்துக்கொள்ளுதல் ஒரு முக்கிய பாடத்தை நமக்கு கற்பிப்பதற்க்காக தேவனால் வடிவமைக்கப்பட்டது. ஆதாம் செய்த பாவத்தின் பயங்கர விளைவினால் சோர்வடைந்து மறுபடியும் மனிதன் பாவத்தில் விழுவான் என்ற ஆபத்து இருந்தது. மனித குலத்தின் மீது விழுந்த பயங்கர சாபத்தினாலும், மரணம் நம்மெல்லோரின் பங்காக இருப்பதாலும் தேவனுக்கு பயந்து அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதினால் பயனென்ன?, என்று பலர் கேள்வி எழுப்பலாம். ஆனால் சேத்தினால் மறுபடியும் அறிவுறுத்தபடப் பட்டதுமான, ஏனோக்கினால் நிரூபிக்கப் பட்டதுமான, தேவன் ஆதாமிற்கு கொடுத்த அறிவுரைகள் இருளையும் சோர்வையும் அகற்றி, மனிதனுக்கு நம்பிக்கை அளித்து, ஆதாமின் மூலமாக மரணம் வந்ததுப்போல, வாக்குத்தத்தத்தின் இரட்சகர் மூலமாக நித்தியவாழ்வு கிடைக்கும் என்று அறிவுறுத்தியது. நீதிமான்களுக்கு வெகுமதியும் துன்மார்க்கருக்கு தண்டனையையும் விதிக்கப்படாது என்றும், பரிசுத்த பிரமாணங்களை மனிதனால் கடைப்பிடிக்க முடியாது என்றும் சாத்தான் மனிதனிடம் நிரூபிக்க முயன்றான். ஆனால் ஏனோக்கின் கதையின்மூலமாக, "தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்" - எபிரேயர் 11:6 என்று தேவன் உறுதியளிக்கின்றார். அவருடைய கற்பனைகளை கைக்கொள்ளுகிறவர்களுக்கு தேவன் என்ன செய்ய முடியும் என்று காண்பித்தார். தேவனுடைய சட்டதிட்டத்திற்கு கீழ்ப்படிய முடியும் என்று மனிதர்களுக்கு கற்பிக்கப்பட்டது; பாவமும் கேடுள்ளவர்களும் நிறைந்த இடத்தின் நடுவில் வாசம்செய்தாலும் தேவ கிருபையினால் சோதனைகளை எதிர்த்து நின்று தூய மற்றும் பரிசுத்த வாழ்க்கை வாழமுடியும் என்று கற்பிக்கப்பட்டது. ஏனோக்கின் வாழ்க்கையின் மூலமாக அத்தகைய வாழ்க்கையிலுள்ள ஆசீர்வாதம் என்ன வென்று எடுத்துக்காண்பிக்கப்பட்டது. ஏனோக்கின் எடுத்துக்கொள்ளப்படுதல், பின் வரவிருக்கும் தனது தீர்க்கதரிசனமான கீழ்ப்படிந்தவர்களுக்கு வெகுமதியாக சந்தோஷம், மகிமை மற்றும் நித்திய வாழ்வு என்றும்

மீறியவர்களுக்கு கண்டனமும், துயரமும், மரணமும் வந்து சேரும் என்ற சத்தியத்தை பறைசாற்றும் விதமாக அமைந்துள்ளது" - முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும், ப. 88.

ஏனோக்கின் வாழ்வு மற்றும் எடுத்துக்கொள்ளப்படுதலின் முக்கிய பாடங்கள் என்ன?

- பூமியில் இன்னும் விசுவாசிகளாய் இருப்பவர்களுக்கு ஏனோக்கின் எடுத்துக்கொள்ளுதல் ஒரு நம்பிக்கையை தருகின்றது.
- பாவிகளுக்கு இறுதி தண்டனை இருப்பதுப் போலவே நீதிமான்களுக்கும் தக்க பலன் இருக்கின்றது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.
- நீதியற்ற கலகம் நிறைந்த உலகினால் சூழப்பட்டிருந்தும் தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ளவும், சோதனைகளை எதிர்க்க முடியும் என்றும் ஏனோக்கின் வாழ்வு எடுத்துக்காட்டுகின்றது.
- பிற்காலத்தில், தேவனுக்கு விசுவாசமாய் இருப்பவர்களுக்கு கிடைக்க போகும் பலனை பறைசாற்றும் ஒரு சிறிய எடுத்துக்காட்டாக இந்த ஏனோக்கின் எடுத்துக்கொள்ளப்படுதல் இருக்கிறது.

இந்தப் பாடங்கள், ஏனோக்கின் எடுத்துக்கொள்ளுதலுக்கு பின் வாழ்ந்த அவரது நண்பர்களுக்கு மட்டுமானது அல்ல. இன்று வாழும் நமக்கும் உரியது. உங்களுக்கும், எனக்குமுரியது. தேவனுடைய பக்கத்தை தேர்ந்தெடுப்பது தக்க பலனை கொண்டுவரும். இப்போது மட்டுமல்லாமல் விரைவில் துவங்க இருக்கும் நித்தியத்திலும் தான். நம்மை சுற்றியிருக்கும் உலகம் எவ்வளவு தீமையுள்ளதாக இருந்தாலும் தேவனுக்கு கீழ்ப்படிந்து உண்மையுள்ளவர்களாக திகழ முடியும் என்று ஏனோக்கின் வாழ்க்கை நிரூபிக்கின்றது.

இங்கு கவனிக்க வேண்டியது என்னவென்றால், நமது சுய சக்தியினாலோ, முயற்சியினாலோ, மன உறுதியினாலோ கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கை வாழ முடியாது. இந்த அத்தியாயத்தில் நாம் வாசித்த ஒரு வாக்கியத்தை மறுபடியும் வாசிப்போம்.

"தேவனுடைய கற்பனைகளுக்கு மனிதர்களால் கீழ்ப்படிய முடியும் என்று அவர்களுக்கு கற்பிக்கப்பட்டது; பாவமும் கேடுள்ளவர்களும் நிறைந்த இடத்தின் நடுவில் இருந்தாலும் தேவ கிருபையினால் சோதனையை எதிர்த்து நின்று தூய மற்றும் பரிசுத்த வாழ்க்கை வாழ முடியும் என்று கற்பிக்கப்பட்டது."

மன்னிப்பு மற்றும் சக்தி

தேவ கிருபை. அந்த கிருபை இரட்டத்தனையானது. நம்முள் இருக்கும் அடிப்படை பாவத்தன்மையை மன்னிக்கவும், நாம் செய்யும் தவறுகளை மன்னிக்கவும் செய்கிறது.

மேலும், கிருபை பாவத்திலிருந்து நம்மை விலகியிருப்பதற்கும் *சக்தியளிக்கின்றது*. ஆகவே நமக்கு கிருபையின் மன்னிப்பு மற்றும் சக்தி இவ்விரண்டுமே தேவையாய் உள்ளது. பாவம் மற்றும் சுயநலம் என்னும் கிருமி நாம் பூமியில் இருக்கும் வரை நம்முள் இருக்கும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை அது நம்மைவிட்டு நீங்காது, ஆகையால் இந்த இரட்டத்தனையான கிருபை நமக்கு அவசியம் தேவை. அவருடைய "கிருபையில் வளரும்போது" தேவனைப்போல் மாறும் வாய்ப்பு உள்ளதாக தேவன் கூறுகின்றார். தேவன் மீது ஒவ்வொரு நாளும் முழுமையாக சார்ந்து வாழ நாம் கற்றுக்கொள்ளும்போது அத்தகைய வாய்ப்பு அதிகரிக்கின்றது.

“உண்மையுள்ளவர்களின் வரிசையை" நீங்கள் மறு ஆய்வு செய்ய விரும்பினால் ஆதியாகமம் 5 வது அதிகாரத்தை மறுபடியும் வாசியுங்கள். அங்கு, தலைமுறை தலைமுறையாக, ஆதாமிலிருந்து நோவா வரையிலான தேவனுக்கு விசுவாசமுள்ள பின்னடியார்களின்

வரிசையை வேதாகமம் அடையாளம் காட்டுகின்றது. அந்த வரிசையில், தனது எடுத்துக்கொள்ளுதலுக்கு முன்பாக ஏனோக்கிற்கு மெத்தூசலா என்ற மகன் பிறந்தான். மனித வரலாற்றிலேயே அதிக வயது வாழ்ந்த மனிதன் மெத்தூசலா, ஆச்சரியப்படத்தக்க 969 வருடம் வாழ்ந்தார். மெத்தூசலாவின் மகனான லாமேக்கு நோவாவின் தந்தை.

மறுபடியும், நோவாவின் வாழ்வு மற்றும் ஊழியத்தின் விவரங்களை ஒத்திகை செய்ய இப்போது அவசியம் இல்லை. ஒரு பேழையை கட்டிக்கொண்டே 120 ஆண்டுகளாக துன்மார்க்கமான உலகத்திற்கு போதனை செய்தவர் நோவா என்பதை கிறிஸ்துவ பள்ளியில் படிக்கும் சிறுபிள்ளைகளுக்கே தெரிந்திருக்கும். உலகம் விவரிக்கமுடியாத வண்ணம் கொடியதாக மாறியிருந்தது. "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டார்" - ஆதியாகமம் 6:5, முக்கியத்துவம் சேர்க்கப்பட்டுள்ளது.

பாவம் உத்தமத்தை முற்றிலுமாக மேற்கொள்ளும் முன்னமே தேவன் உள்ளே நுழைந்து உலகளாவிய ஒரு ஜலப்பிரளயத்தை உண்டு பண்ணி பூமியிலிருந்த அனைத்து பாவமனிதர்களையும் அழித்துப்போட்டார். பிரளயத்தின் போது பேழையில் பாதுகாப்பாக பயணித்த நோவாவின் குடும்பமான எட்டு பேர் மாத்திரம் தப்பினர்.

மனித குலத்திற்கு ஒரு புதிய ஆரம்பம், ஒரு புதிய துவக்கம் கிடைத்தது.

ஆனால் நோவாவிலும் அவருடைய குடும்பத்தினரிடத்திலும் கூட பாவம் என்ற கிருமி பிரளயத்திற்கு பின்பும் தொடர்ந்து காணப்பட்டது. ஆகையால் வெகு நாட்கள் செல்லுவதற்கு முன்னமே நோவாவின் சந்ததி அவருடைய எடுத்துக்காட்டையும் போதனைகளையும் உதறித்தள்ளி தேவனுக்கு விரோதமாக திரும்பவும், தங்களது சுய

இச்சைகளுக்கு இடம் கொடுக்க ஆரம்பித்தனர். மறுபடியும், சாத்தானின் இந்த பின்னடியார்கள் பலுகி பெருகி பூமியை நிரப்ப ஆரம்பித்தனர்.

தேவனுக்கு விரோதமான இந்த கலகக்காரர்கள் துரிதமாக வன்முறையிலும், அன்னிய தெய்வ வழிபாடுகளிலும், மிக தரக்குறையான ஒழுக்கக்கேடுகளிலும் இறங்க ஆரம்பித்தனர். தேவனின் விசுவாசமுள்ள பின்னடியார்களிடம் இருந்து தங்களை விலக்கிக் கொண்டு, பூமியின் பெரிய சமவெளியில் தங்களுக்கென்று ஒரு பெரிய நகரத்தை கட்டி அதற்கு நடுவில் உலக அதிசயங்களில் ஒன்றாக திகழும் ஒரு உயரமான கோபுரத்தையும் கட்டினர்.

ஆகாயத்திற்குள்ளாக பாபேலின் மகா கோபுரம் உயர துவங்கியது. திரைமறைவிற்கு பின்னால் தன்னுடைய சொந்த முடிவிற்காக மனிதர்களை கலகக்காரர்களாக மாற்றிய சாத்தான் பாபேல் நகரத்தின் முன்னேற்றத்தைக் கண்டு பூரித்திருப்பான். எதிர்ப்பில்லாமல் சத்துரு எந்த யுத்தத்திலும் இறங்குவதை தேவன் அனுமதித்ததில்லை. அந்த கோபுர வேலை முடிவுபெறுவதற்கு முன்பாகவே தேவன் குறுக்கிட்டு கட்டுகிறவர்களின் பாஷையை தாறுமாறாக்கினார். திடீரென அந்த கட்டிட வேலை வலுக்கட்டாயமாக நிறுத்தப் படப்பட்டது.

பாபேல் நகர கட்டுமானக்காரர்களின் திட்டங்கள் வெட்கத்திலும், தோல்வியிலும் முடிந்தது. அவர்களின் பெருமையின் நினைவுச்சின்னம் அவர்களது மடத்தனத்தின் நினைவாக மாறியது. இது தெரிந்தும் மனிதர்கள் தேவனுடைய சட்டத்தை உதறி, தங்கள் சுயத்தை நம்பி இன்னமும் அதே பாதையில்தான் பயணித்து வருகின்றனர். இதே கொள்கையைத்தான் சாத்தான் பரலோகத்திலும் கொண்டு வர முயன்றான்; இதுதான் காயினையும் தேவனுக்கு பிரியமில்லாத காணிக்கையை அளிக்குமாறு தூண்டியது.

நம்முடைய காலத்திலும் கூட *கோபுர கட்டுனர்கள்* உள்ளனர். தேவ நம்பிக்கையற்றவர்கள், தேவ வார்த்தையின் மூலமாக அவர் வெளிப்படுத்தின சத்தியத்தை உதறித்தள்ளி அறிவியலின் மீது

தங்களது கொள்கைகளை கட்டுகின்றனர். தேவனுடைய நீதிக்குரிய அரசின் மீது தங்களுடைய தவறான கருத்துக்களை பறைசாற்றுகின்றனர், அவருடைய சட்டத்தை மறுதலித்து, மனிதனின் பொது அறிவு போதுமென்று நினைக்கின்றனர்" - முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும், ப. 123, 124, முக்கியத்துவம் சேர்க்கப்பட்டுள்ளது

கோபுர கட்டுனர்கள்

பரிணாம வளர்ச்சி என்ற கோபுரம். மனிதனின் பொது அறிவு என்ற கோபுரம். அறிவியலெனும் கோபுரம் தேவ வார்தையைவிட உயரத் துவங்கியிருக்கிறது. தேவனுடைய சட்டத்தை நிராகரித்து மனிதனால் வகுக்கப்பட்ட சட்ட நீதி தொகுப்பேடு எனும் கோபுரம் தேவனுடைய சட்டத்தை நிராகரிக்கின்றது. ஆனால் ஒரு நாள் கடைசியில் இந்த எல்லா கோபுரங்களும் விழுந்துவிடும். வெளிப்படுத்தின விசேஷம் கூட இதை வலியுறுத்துகிறது: புதிய பாபிலோனை எதிர்ப்பில்லாமல் கட்டி முடிப்பதற்கு சாத்தானை ஒருபோதும் தேவன் அனுமதிக்க மாட்டார். ஆமாம், இப்பொழுதும் ஒரு புதிய பாபிலோன் எழுந்துக் கொண்டுதான் இருக்கிறது, ஆனால் அது கூட நிச்சயமாக விழும்.

ஜலப்பிரளயத்தினால் "நீதிமான்களின் வரிசைக்கு" மீண்டும் வாழ ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டது - அது வாழவும் செய்தது. ஆதியாகமம் 11 வது அதிகாரத்தில் நோவாவின் மகன் சேமிலிருந்து அவருக்குப்பின் வந்த பழைய ஏற்பாட்டின் மிக பெரிய பேராற்றல் வாய்ந்தவர்களில் ஒருவரான ஆபிராம் என்று பின்னர் அழைக்கப்பட்ட ஆபிரகாம் வரையிலும் உள்ள சந்ததிகளை அடையாளம் காட்டுகின்றது.

இந்த புத்தகத்தை வாசிப்பவர்களுக்கு ஆபிரகாமின் கதை நன்கு தெரிந்திருக்கும்: "பெரிய தேசத்தின்" தந்தையாக மாற்றுவேன் என்று தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் கொடுத்திருந்ததை அறிந்திருப்பீர்கள். எல்லாவற்றையும் பின்னால் விட்டு விட்டு எங்கு

போகவேண்டும் என்பதை கூட அறியாமல் தேவ வழிநடத்தலை பின்பற்றி தேவன் காண்பிக்கும் தேசத்திற்கு புறப்படுமாறு தேவனிடம் இருந்து அவருக்கு அழைப்பு வந்தது. ஆபிரகாமின் அண்ணன் மகன் லோத்து இருந்த சோதோம் கோமோராவில் உள்ள மிக விரைவாக பரவும் கொடூர பாவத்தை உலகத்திலிருந்து அழிக்கும் பொருட்டு தேவன் அந்த நகரங்களை அழித்தபோது லோத்துவின் குடும்பத்தை மாத்திரம் தப்ப விட்டார் என்பதை அறிந்திருப்பீர்கள். ஆபிரகாமிற்கு நூறு வயதிலும் - அவரது மனைவி சாராளுக்கு தொண்ணூறு வயதிலும் பிறந்த வாக்குத்தத்தத்தின் மகனான - ஈசாக்கு பற்றியும் நிச்சயமாக அறிந்திருப்பீர்கள்.

ஈசாக்கு, இரட்டை மகன்களுக்கு தகப்பனானார்: யாக்கோபு, ஏசா. மறுபடியும், இந்த மகன்களுக்கு தேவன் அருளிய தேர்ந்தெடுக்கும் உரிமையை பயன்படுத்தும் சக்தி கொடுக்கப்பட்டிருந்தது. அதை பயன்படுத்தி அவர்கள் தங்கள் வாழ்க்கையின் முடிவுகளை எடுத்தனர். ஏசா தேவனுக்கு எதிர்த்து நின்று சத்துருவின் பக்கத்தில் தனது நிலையை நிறுத்தினான். யாக்கோபு பல தவறுகளை செய்திருந்தாலும் விசுவாசமுள்ளவர்களின் வரிசையில் தொடர்ந்து நின்றான். ஒரு நீண்ட இரவு முழுவதும் யாக்கோபு ஒரு தூதனுடன் போராடினான் - அந்த தூதன் தேவனே - அதன் பிறகு அவன் பெயர் யாக்கோபிலிருந்து இஸ்ரவேல் என மாற்றப்பட்டது.

இஸ்ரவேலின் பனிரெண்டு மகன்களும், இஸ்ரவேலின் பனிரெண்டு கோத்திரங்களின் பிதாக்களாக மாறினர். தேவனின் குணத்தை குறித்த சத்தியத்தை கேடு நிறைந்த இந்த உலகத்திற்கு பகிர்வதற்கும், அதை பாதுகாப்பதற்காகவும், பத்திரப்படுத்துவதற்காகவும் இஸ்ரவேலை தேவன் தேர்ந்தெடுத்தார்.

இஸ்ரவேலுக்கு தேவன் கொண்டிருந்த நோக்கம், எண்ணம் ஆச்சரியகரமானது. தேவனுடைய அன்பு மற்றும் இரக்கத்தின் வல்லமையை நம்பிக்கையற்ற தேசங்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காகவே அவர்களை தேர்ந்தெடுத்தார். அவரது சத்தியத்தின்

பொறுப்பாளர்களாக - அதை மறைத்து வைக்காமல், தங்களை சுற்றியுள்ள தேவனை அறியாத மக்களிடம் பகிர்ந்து அதை பாதுகாப்பதற்காகவே அவர்களை தேர்ந்தெடுத்தார். அவர்களிடமிருந்து இரட்சகர் எழும்புவதற்கு வழியை ஆயத்தம் பண்ணும் பொருட்டு அவர்களை தேர்ந்தெடுத்தார்.

ஆதாம் மற்றும் சேத்தில் துவங்கிய உண்மையுள்ளவர்களின் வரிசை - முற்பிதாக்களான ஏனோக்கு, மெத்தூசலா, நோவா, ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு வழியாக வந்து - இப்போது ஒரு முழு தேசத்தையும் பூமியில் தன்னை பிரதிபலிக்கும் விசேஷித்த மக்களாக தேவன் தெரிந்தெடுத்துள்ளார்.

எப்படி அவர்கள் இந்த உயர்ந்த நிலைக்கு உயர்த்தப்பட்டனர்?

எல்லா காலத்திலும், தேவன் தனக்கென்று ஒரு கூட்ட மக்களை எப்பொழுதும் வைத்திருந்தார் - அவர்கள் உண்மை யுள்ளவர்களும், விசுவாச முள்ளவர்களும், அழைக்கப் பட்டவர்களும் தெரிந்து கொள்ளப் பட்டவர்களுமாவர் - மேலும் அவருக்காக விசேஷமான ஒரு கூட்ட மக்கள் இன்றும் இருக்கிறார்கள்.

அன்பினால் கலகக்காரர்களை வெற்றிக் கொள்ளுதல்

ஒருவன் தன்னை தானே தேவனின் இடத்தில் வைத்து - அவருடைய வல்லமை மற்றும் தெய்வீகத்தன்மையான தனிச்சலுகைகள் தனக்கும் இருக்கிறது என்று எண்ணி அதை நான் பயன்படுத்தக்கூடும் என்று நினைப்பது தேவ தூஷணமாகும்.

ஆனால் ஒருவர் தன்னை தானே தேவனுடைய இடத்தில் வைத்து அவ்விடத்திலிருந்து தேவனுடைய கண்ணோட்டத்தை உணர நினைத்தால் அது முற்றிலும் ஒரு வித்தியாசமான காரியம். ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் ஒருதடவை கூறினார் "தேவன் சிந்தித்தது போலவே அவருடைய எண்ணங்களை யோசிப்பது" தான் அறிவியல் என்று கூறினார். ஆனால் அதை செய்வதற்கு நாம் விஞ்ஞானிகளாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை.

ஆகையால், இப்பொழுது உங்களை சிறிது நேரம் தேவனுடைய இடத்தில் வைத்துப்பாருங்கள். நீங்கள் ஒரு நேர்த்தியான பிரபஞ்சத்தை படைத்துள்ளீர்கள். நீங்கள் நேர்த்தியான தேவ தூதர்களையும் - மனிதர்களையும் படைத்துள்ளீர்கள். மேலும் அவர்களுள் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தை வைத்து படைத்துள்ளீர்கள்.

தேர்ந்தெடுக்கும் சுதந்திரம், அவர்கள் தேர்ந்தெடுத்தால் மாத்திரம் உங்களை தொழுது கொள்ளவும், கட்டாயத்தினால் தொழுது கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்ற உத்திரவாதத்தை அவர்களுக்கு கொடுக்கின்றது. ஆனால், தேர்ந்தெடுக்கும் உரிமை ஒரு அபாயத்தையும் கூட கொண்டுவரும்: அவர்கள் உங்களுக்கு எதிராகவும் தேர்ந்தெடுக்க முடியும்.

சங்கடகரமாக அதை தான் அவர்கள் செய்தனர். பூமியிலே, பாவ மனிதர்கள் பலிகி பெருகி கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அவர்களில் பெரும்பான்மையினோர் உங்களுக்கு எதிரான கலகத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். எப்படி இருந்தாலும், அவர்களுடைய இந்த பாவ நிலையில் கூட விசுவாசமுள்ள சிலர் உங்களை சிருஷ்டிகராக தேர்ந்தெடுத்து தொழுது வருகின்றனர்.

விசுவாசத்தின் ஆதி தூண்கள் - 700, 800, 900 ஆண்டு வயதுள்ளவர்கள் கடைசியில் மரித்துப்போகின்றனர். உலகத்தில் அக்கிரமம் பெருகி கொண்டிருந்ததால் நீங்கள் ஒரு பெரிய ஜல பிரளயத்தை கொண்டுவந்து அந்த கலகக்கார ஜனக்கூட்டத்தை நிர்மூலம் செய்கின்றீர்கள். நோவாவின் குடும்பம் மட்டுமே கொண்ட கையளவு விசுவாசமுள்ள - பின்னடியார்களை வைத்து மீண்டும் உலகம் துவங்கியது.

ஆனால் காலப்போக்கில், மனிதர்கள் மறுபடியும் பெருகி பூமியெங்கும் பரவ ஆரம்பித்தனர் - மறுபடியுமாக அவர்களில் பலர் உங்களுக்கெதிராக திரும்ப ஆரம்பித்தனர்.

இந்த கலகக்காரர்களை எப்படி மறுபடியும் உங்கள் பக்கம் இழுப்பீர்கள்?

துன்மார்க்கமான, தெய்வபயமில்லாத, அந்நிய தெய்வ வழிபாட்டில் இருப்பவர்களிடம் எவ்வாறு சத்தியத்தை எடுத்து செல்வீர்கள்?

விழுந்துப் போகாத தூதர்களை அவர்களுக்கு பிரசிங்கிக்குமாறு அனுப்புவீர்களா? உலகத்திலுள்ள விசுவாசமான உங்களது பின்னடியார்களில் சிலரை அழைத்து இறுமாப்பாக இருக்கும் இந்த தீயோரிடம் - வழக்காடுவதற்கும், அவர்களுக்கு பிரசங்கிப்பதற்கும், அவர்களுடைய பாவங்களை கண்டனம் செய்யவும் அழைப்பீர்களா?

தேவனுடைய யோசனை

இந்த பிரச்சனையை தீர்க்கும் வேலை உங்களுடையதாகவோ அல்லது என்னுடையதாகவோ இருந்திருந்தால் நாம் இந்த தீர்வுகளில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுத்திருப்போம். ஆனால் தேவனுக்கு வேறொரு யோசனை இருந்தது.

கலகக்காரரிடம் தன்னை வெளிப்படுத்த எண்ணினார். தன்னுடைய அன்பான குணத்தை அவர்களிடம் எடுத்துக்காட்டி அந்த அன்பின் வல்லமையை சார்ந்து அவர்களை மறுபடியும் தன்னிடம் இழுக்க எண்ணினார்.

ஆனால் இதை அவர் தானே செய்யமாட்டார். பூமியிலுள்ள அவருடைய விசுவாசமுள்ள பின்னடியார்கள் மூலம் அதை செய்வார். ஆனால் இப்பொழுது உலகம் இருக்கிற நிலையில் தேவனை நம்பாத இந்த உலகத்தை அடைவது சொர்ப்ப பேரால் இயலாத காரியமென தோன்றுகிறது. அதனால், தேவன் இந்த வேலையை சிதறி இருக்கும் இந்த சொர்ப்ப பேரிடம் அல்ல - ஒரு முழு தேசத்தையும் தேர்ந்தெடுத்து அவர்கள் தங்களது நம்பிக்கையில்லாத அண்டையர்களுக்கு தேவனுடைய அன்பை எடுத்துக்கூறுவதற்கு தேவையாயிருக்கும் எல்லா ஆசீர்வாதங்களையும் தேவன் அருளினார்.

கிட்ட தட்ட கி.மு. 1800 ல் தேவன் தமது திட்டத்தை முதலில் ஆபிரகாமிற்கு வெளிப்படுத்தினார். சமய கோட்பாடுகளை எதிர்த்து, அன்னிய தெய்வ வணக்கம் மற்றும் சிலை வணக்கத்தினால்

சூழப்பட்டிருந்த மக்களில் - ஆபிராம் என்று அழைக்கப்பட்ட இவர் தேவனுக்கு விசுவாசமுள்ளவராய் இருந்தார்.

ஆபிராம் 75 வயது உள்ளவராய் இருந்தபோது, தேவன் அவரிடம் பேசி அவருக்கு ஒரு ஆச்சரியகரமான வாக்குத்தத்தத்தை கொடுத்தார்: "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்" - ஆதியாகமம் 12:2,3.

இந்த பெரிய வாக்குத்தத்தத்திற்கு மேலாக தேவன் ஆபிராமிற்கு ஒரு கட்டளையும் கொடுத்தார்: "நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ" - ஆதியாகமம் 12:1.

ஆபிராம் தயக்கமுமில்லாமல், எந்த கேள்வியுமில்லாமல் தேவனுக்கு கீழ்ப்படிந்தான். "விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான். விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்" - எபிரெயர் 11:8,9.

தன்னுடைய சொந்த ஊராகிய ஹாரானிலிருந்து ஆபிராம் தேவன் காட்டிய தேசத்திற்கு புறப்பட்டு சென்றான்: கானான்.

பூமியில் கி.மு. 1800 ல் ஆபிரகாமின் காலம் துவங்கி கிறிஸ்துவின் வாழ்க்கையின் காலம் வரையிலான இஸ்ரவேலின் விரிவான வரலாற்றை படமாக்குவது இந்த புத்தகத்தின் நோக்கம் அல்ல. ஆதாமில் ஆரம்பித்த விசுவாசமுடையோரின் உடைக்க முடியாத

சங்கிலி பல தலைமுறைகள் வழியாக வந்து ஆபிரகாமை தொடர்ந்து ஆபிரகாமின் மகனாகிய ஈசாக்கிற்கு பின் இஸ்ரவேலாக மாறிய அவரது மகன் - யாக்கோபு வரை வந்தது. மேலும் இஸ்ரவேலின் பன்னிரெண்டு மகன்களும் இஸ்ரவேல் தேசத்திலுள்ள பன்னிரெண்டு கோத்திரங்களின் நிறுவனர்களானார்கள்.

ஒரு அட்வென்டிஸ்த்தராக இருக்கும் நீங்கள் இஸ்ரவேலின் நீளமான வரலாற்றை ஏற்கனவே தெரிந்திருக்க அதிக வாய்ப்புகள் உள்ளது: முற்பிதாக்கள், தீர்க்கதரிசிகள், இராஜாக்கள், எகிப்தில் நீண்ட அடிமைத்தனம், நீண்ட யாத்திரை, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு வனாந்திரம் வழியாக சென்ற நாற்பது ஆண்டு பிரயாணம், பாபிலோனில் சிறைப்படுத்தல், முடிவாக இஸ்ரவேல் மேற்கு மற்றும் கிழக்கு ராஜ்யங்களாக பிரிவுபடுதல்.

பஸ்கா மற்றும் சிவந்த சமுத்திரம், சீனாய் மற்றும் பரிசுத்தக் கூடாரம், இஸ்ரவேல் மீண்டும் மீண்டும் தெய்வத்துரோகங்கள் பின்னர் பாவமன்னிப்பு, இஸ்ரவேலின் வரலாற்றின் பெரிய ஜாம்பவான்களான: யோசேப்பு, மோசே, தாவீது, சாலோமன், சாமுவேல், தானியேல் மற்றும் பலரை குறித்தும் நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள்.

சில முயற்சிகள் பெரிய பலன் அளிப்பவைகளாக உள்ளது, அவைகளுள் ஒன்று யூத தேசத்தின் வரலாற்றை ஆதியாகமம் 11 தொடங்கி அல்லது முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும் மற்றும் தீர்க்கதரிசிகளும் இராஜாக்களும் என்னும் புத்தகங்களை வாசிப்பது மூலம் அறிந்துகொள்ளலாம்.

இஸ்ரவேலின் சரித்திரம் அதனுடைய காலவரிசையில் அதன் தலைவர்கள் எந்த தேதியில் எந்த இடத்தில் அல்லது அவர்கள் எப்போது கீழ்ப்படிந்தார்கள், எப்போது மறுதலித்தார்கள் என்பதை முக்கியப்படுத்துவதற்கு அல்ல இந்த அத்தியாயத்தின் நோக்கம் அதற்கு பதிலாக தேவனுடைய விசுவாசமுள்ள பின்னடியார்கள் கொஞ்ச பேராயினும் உத்தமம் உள்ளவர்களாகவும் ஆதாம் முதல் இந்நாள்

வரையும் எப்படி உண்மையாய் நிலைத்திருந்தார்கள் என்பதை வெளிப்படுத்துவதாகும்.

ஒரு காரணத்திற்காக - தேர்ந்தெடுக்கப்படல்

பின் வரும் சில வாக்கிய தொடர்களில் தேவன் தேர்ந்தெடுத்த இஸ்ரவேல் பற்றியும், தேவன் ஏன் அவர்களை தேர்ந்தெடுத்தார் என்பதை பற்றியும் பார்ப்போம்.

இஸ்ரவேல் தேசத்திற்கு ஒரு பெரிய திட்டத்தை தேவன் வைத்திருந்தார். நம்மால் புரிந்து கொள்ளுவதற்கும் மேலான, ஆச்சரியமான ஆசீர்வாதங்களையும் வாக்குத்தத்தங்களையும் அவர் அவர்களுக்கு கொடுத்திருந்தார். ஆனால் அந்த ஆசீர்வாதங்களும் வாக்குத்தத்தங்களும் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டவை. அவருக்கு கீழ்ப்படிந்தால் அல்லது அவரை சார்ந்து அவருக்காக மற்றும் அவர் மூலமாக வாழ்ந்தால் பூமியிலுள்ள மற்ற தேசங்களுக்கு வியப்பூட்டும் ஆச்சரியமாக திகழுவார்கள். இல்லையென்றால் தோல்வியை சந்திக்க வேண்டியதிருக்கும் ஏன் தங்களுடைய எதிரிகளிடத்தில் கூட அடிமைகளாக செல்ல வேண்டியதாக நேரிடும்.

நமக்கு முன்னமே தெரிந்தது என்னவென்றால் இஸ்ரவேலுக்கு தேவன் வைத்திருந்த பயனையும் - அவருடைய திட்டத்தையும் - ஒரு சிறிய காலத்திற்கு மட்டும் ஒரு சிறிய அளவே அவர்கள் நிறைவேற்றினார்கள். மேலும் நாம் முன்னமே அறிந்தது என்னவென்றால், இறுதியில் முற்றிலுமாக தேவனை இயேசுவின் வடிவில் நிராகரித்து தங்களை சிருஷ்டித்தவரின் உயிரை எடுக்கும் வேலையில் முசிந்து நின்றனர்.

ஆனால் இஸ்ரவேலின் மிக தர குறைவான - விசுவாச துரோகம் நிறைந்த காலங்களில் கூட - விசுவாசமும், உத்தமமும், உண்மையும் உள்ள தேவ விசுவாசிகள் இஸ்ரவேலில் இருந்தனர். இஸ்ரவேலுக்கு

முன்பாகவும் இப்படியே இருந்தது. இஸ்ரவேலுக்கு பின்பாகவும் அப்படியே இருக்கும்.

வெகு நாட்களுக்கு முன்பு ஒவ்வொரு இஸ்ரவேலரும் தேர்ந்தெடுத்த தேர்வு இன்று உங்களுக்கும் எனக்கும் முன்னால் வைக்கப்பட்டுள்ளது. தேவனுக்கு முழு விசுவாசத்தையும் காட்டும் பக்கத்தில் நம்மை உறுதியாக நிறுத்துவோமா? உலகத்தில் இருக்கும் மற்றவர்கள் மட்டுமல்லாமல் - சபையில் இருக்கும் பெரும்பாலானோர் - ஏன் நம்முடைய சொந்த குடும்பம் கூட ஒருவேளை அவரை விட்டு திரும்பினாலும் கூட அவருக்காக உண்மையாய் நிற்போமா?

இஸ்ரவேலுக்கு தேவன் வைத்திருந்த பெரிய திட்டத்தையும் அதின் நோக்கத்தையும் நாம் திரும்பி பார்த்ததின் பயன் என்னவென்றால் அது தேவன் இன்றைக்கு நம்முடைய சபைக்கு வைத்திருக்கும் பயனையும் - உங்களுடைய மற்றும் என்னுடைய வாழ்க்கைக்கு அவர் வைத்திருக்கும் பயன் மற்றும் திட்டத்தின் ஒற்றுமையை அறிந்துகொள்ள உதவும்.

அந்த பயன் என்ன?

"அவருடைய ராஜ்யத்தின் கொள்கைகளை அவர்கள் வெளிப்படுத்த வேண்டியதாய் இருந்தது. விழுந்துபோன, பொல்லாத உலகத்தின் நடுவே தேவனுடைய குணத்தை எடுத்துக்காட்ட வேண்டியதாய் இருந்தது. தேவனுடைய திராட்சை தோட்டமான அவர்கள் தேவனை அறியாத மற்ற தேசங்களிலிருந்து முற்றிலுமாக வேறுபட்ட கனியை கொடுப்பவர்களாக இருக்க வேண்டியதாய் இருந்தது... தேவனுடைய குணத்தை பிரதிபலிப்பது யூத தேசத்தின் சிறப்புரிமையாக இருந்தது" - கிறிஸ்துவின் பொருள் பாடங்கள் (கி.பொ. பா), ப. 285.

"தன்னுடைய குணத்தை இஸ்ரவேல் மூலமாக மனிதர்களுக்கு வெளிப்படுத்தி அவர்களை தன்னிடம் இழுத்துக்கொள்வது தான் தேவ திட்டமாயிருந்தது" - கி.பொ.பா, ப. 290.

இஸ்ரவேலின் ஊழியம் என்ன? தேவன் என்ன காரணத்திற்காக அவர்களை தேர்ந்தெடுத்தார்? விசுவாசமில்லாத கலகக்கார நாடுகளிடம் தேவனுடைய குணத்தை எடுத்து காட்டுவதற்கு தான். தேவன் மோசேய்க்கு வெளிப்படுத்தியது போலவே, அவருடைய குணமே - அவரது நன்மை - அந்த நன்மையில் - தயை, கருணை, பொறுமை, சத்தியம் மற்றும் மன்னிப்பை உள்ளடக்கியது. தேவனுடைய எல்லா நன்மைகளும் அவருடைய அன்பில் காணப்படுகின்றது.

தன்னிடம் புறம் காண்பித்து திரும்பி சென்ற கலகக்கார உலகத்தை மீண்டும் தேவன் வெற்றிக் கொள்ள விரும்புகின்றார். தான் தேர்ந்தெடுத்த தேசத்தின் மூலமாக அவர்களிடம் சென்றடைவது தான் அவருடைய திட்டமாய் இருந்தது. தன்னுடைய குணத்தை இஸ்ரவேலர் தங்களுடைய சொந்த வாழ்க்கையின் மூலமாக உயர்த்தி - அவர்கள் மூலமாக இந்த உலகத்தை மறுபடியும் தன் வசமாக இழுக்க வேண்டுமென்பதே அவருடைய நோக்கமாக இருந்தது.

“யூத தேசத்தின் மூலமாக எல்லா ஜனங்களுக்கும் செழிப்பான ஆசீர்வாதங்களை அருளுவதுதான் தேவனுடைய நோக்கம். இஸ்ரவேல் மூலம் உலகமனைத்திற்கும் தன்னுடைய வெளிச்சத்தை பிரதிபலிப்பதற்காக ஒரு வழியை ஆயத்தம் செய்யவிருந்தார். உலகமெங்கும் இருக்கும் தேசங்கள் சீரழிந்த பழக்கங்களை பின்பற்றி தேவனுடைய அறிவை இழந்துபோயின. ஆனாலும் தன்னுடைய மிகுந்த இரக்கத்தினாலே தேவன் அவர்களை அழிவிற்கு ஒப்புக்கொடுக்கவில்லை. தன்னுடைய சபையின் ஒரு அங்கமாக இணைவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை கொடுக்க எண்ணினார்" கி.பொ.பா, ப. 286.

இஸ்ரவேல் எவ்வாறாக தேசங்களை தேவனிடத்திற்கு கொண்டுவர வேண்டுமென்பதை நன்கு கவனியுங்கள். சிலைவழிபாடு, அக்கிரமம், அஞ்ஞான வழிபாடுகளை கண்டனம் செய்வது மூலமாகவா?

மேலான ஒன்று

இன்றைக்கு அதிக நேரங்களில், தேவனற்ற வாழ்க்கை வாழுபவர்களின் பாவங்களை நன்கு அனுபவமிகுந்த பிரசங்கியாளர்கள் கூட பகிரங்கமாக கண்டனம் செய்கின்றனர். தேவனுடைய அதி கோபமான தீர்ப்புகளைக் கூறி பாவிகளைப் பயமுறுத்தி வருகின்றனர். இயற்கை பேரழிவு நிகழ்ந்தால், தேவனுடைய கோபத்திற்கும் அதிருப்திக்கும் அதை ஆதாரங்களாக காண்பிக்கின்றனர்.

இதை செய்வதற்காகவா நம்மை தேவன் அழைத்துள்ளார்? இஸ்ரவேலை இதை செய்வதற்காகவா அழைத்தார்?

"பொய்யான தெய்வங்களை உலக மக்கள் வணங்கி கொண்டிருக்கின்றனர். அவர்களின் விக்கிரகங்களை கண்டனம் செய்யப்படுவதை கேட்பதின் மூலமாக அல்ல, நன்மையான மற்றொன்றை பற்றிக் கொள்வதின் மூலமாக இந்த பொய்யான வணக்கங்களிலிருந்து அவர்களை திருப்ப வேண்டியிருக்கின்றது. தேவனுடைய நன்மையை அறியப்படுத்த வேண்டியுள்ளது" - கி.பொ. பா, ப. 299.

ஆமாம், தேவனை விட்டு விலகி வாழுபவர்கள் அருவருப்பான பாவங்களுக்குள்ளாக விழுவார்கள். ஆனால், பழைய இஸ்ரவேலோ அல்லது இப்பொழுது வாழும் தேவ மக்களான இஸ்ரவேலோ எவர்களாயினும் தேவனின் பின்னடியார்களின் நோக்கம் பாவிகளை கண்டனம் செய்வதோ, குற்றம்சாட்டுவதோ அல்லது தேவனின் சாபத்தை அவர்கள் மேல் சுமத்துவதாக இருக்க வேண்டுமோ?

அல்லது அதற்கு பதிலாக உலகிற்கு அதிக நன்மையான வேறொன்றை காண்பிப்பதா? "அதிக நன்மையானது" அது என்னது? தேவனுடைய நன்மை. அவருடைய குணம். அவருடைய அன்பு.

பாவ உலகத்தை தன்னுடைய பின்னடியார்களின் மூலம் அடைவதில், எப்போதாயினும் தேவ திட்டத்தில் பயமுறுத்தி இந்த

உலகத்தை அவர் வசப்படுத்த எண்ணினாரா? கோபம் மற்றும் கண்டனத்தினாலும் அவர்களை வெற்றிக் கொள்ள முயன்றாரா? அவர்களுடைய பாவங்களினிமித்தம் அவர்களை மிரட்டினாரா?

அல்லது அதற்கு பதிலாக கலகக்காரர்களை மீண்டும் தன் பக்கம் இழுக்க தேவனிடம் ஒரு வழி இருந்தது: தன்னுடைய அன்பை அவர்களிடம் தெளிவாக எடுத்து காட்டுவதன் மூலமாக அவர்கள் தேவனின் அன்பை எதிர்க்க முடியாததாக அவர் வசம் இழுத்துக்கொள்ளப்படுவார்கள்.

உங்களால் கசப்பான காடியை விட தேனைக் கொண்டு அதிக ஈக்களை பிடிக்க இயலும் என்று ஒரு பழமொழி கூறுகின்றது. இது அருவருப்பான, அழகற்ற ஈக்களுக்கு பொருந்துமானால், அருவருப்பான பாவமெனும் சேற்றில் மூழ்கி இருப்போருக்கும் இது பொருந்தும்.

தேவனுக்கு வழக்கு தொடரும் வழக்கறிஞர்கள் தேவையில்லை. தன்னை குறித்த உண்மைகளை எடுத்துரைக்கும் அதிகமான சாட்சியாளர்கள் தான் தேவைப்படுகிறார்கள்.

பழங்கால இஸ்ரவேலர்கள் தேவனோடு ஒத்துழைத்திருந்தால் அவர்களுக்கு வைத்திருந்த திட்டம் வெற்றி கண்டிருக்கும். தான் தேர்ந்தெடுத்த மக்கள் தனது பிரதிநிதிகளாவதற்கு தேவன் இன்னும் கொடுக்க வேண்டியது வேறொன்றுமில்லை. எதையும் அவர் தடுத்துவைக்கவில்லை:

"தங்களுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலை ஒரு துதி மற்றும் மகிமையாக மாற்ற வேண்டுமென்று தேவன் விரும்பினார். அவர்களுக்கு தேவையான ஒவ்வொரு ஆவிக்குரிய அனுகூலமும் அருளப்பட்டிருந்தது. தனது பிரதிநிதிகளாக அவர்களின் குணம் உருவாவதற்கு சாதகமான எந்த ஒரு காரியத்தையும் தேவன் அவர்களிடமிருந்து விலக்கி வைக்கவில்லை" - கி.பொ.பா, ப. 288.

ஆனால் தேவன் வாக்குத்தத்தம் கொடுத்திருந்த எல்லா ஆசீர்வாதங்கள் இருந்தும், அவர் அருளிய அளவில்லாத ஆதாரங்கள் அனைத்துமிருந்தும், இஸ்ரவேல் கடைசியில் தேவத்திட்டத்தை நிறைவேற்ற தவறியது. தேவன் அவர்களுக்கு விதித்திருந்த நிபந்தனைகளை அவர்கள் கைக்கொள்ள தவறியபடியால், அவர் வைத்திருந்த ஆசீர்வாதங்களை அதிக அளவில் இழந்தனர்.

இஸ்ரவேல் எதையெல்லாம் அனுபவத்திருக்கலாம் என கற்பனை செய்து பாருங்கள்:

"கீழ்ப்படிந்தார்களேயானால், மற்ற தேசங்களை அல்லல் படுத்திய நோய்களில் இருந்து தன்னை பாதுகாத்து இருந்திருக்கலாம். மேலும் அறிவாற்றலின் சக்தியினால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பர். அவர்களுடைய எல்லா வளமைகளிலும் தேவனுடைய மகிமையும், அவருடைய மாட்சிமையும், வல்லமையும் விளங்கியிருக்கும். அவர்கள் ஆசாரியர்களும், இளவரசர்களின் ராஜ்யமாக இருப்பார்கள். பூமியில் மிக பெரிய தேசமாக மாறுவதற்கான எல்லா வசதியும் அவர்களுக்கு தேவன் அளித்திருந்தார்" - கி.பொ.பா, ப. 288.

- வியாதிகளிலிருந்து பாதுகாப்பு.
- அறிவாற்றலின் சக்தி.
- வளமை.
- நினைக்கமுடிந்த எல்லா ஆசீர்வாதங்கள்.

உலகத்தின் அதிசயமாக, மிக பெரிய தேசமாக இஸ்ரவேல் இருந்திருக்கலாம். ஆனால் சங்கடகரமாக நீண்ட நூற்றாண்டுகள் தோல்வியிலும் சிறைப்பிடிப்பிலும் கழிப்பார்கள்.

ஐந்து பயங்கரமான, கூர்மையான வார்த்தைகள் இஸ்ரவேலின் இறுதி தோல்வியை எடுத்துக்காட்டுகிறது:

"ஆனால் இஸ்ரவேல் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றவில்லை" - கி.பொ.பா, ப. 290.

இது எவ்வாறு, *எப்படி* நடந்தது?

"தேவனை மறந்து, அவருடைய பிரதிநிதிகளாக இருக்க வேண்டியிருந்த உயர்வான சலுகைகளின் மீதுள்ள கண்ணோட்டத்தை இழந்தனர். அவர்களுக்கு அருளப்பட்டிருந்த ஆசீர்வாதங்கள் உலகத்திற்கு எந்த ஆசீர்வாதத்தையும் கொண்டுவரவில்லை. சுய மகிமைக்காகவே அவர்களுக்கு கிடைத்த எல்லா சிலாக்கியங்களும் உபயோகிக்கப்பட்டது. தேவனுக்கு கொடுக்கவேண்டிய சேவையை அவரிடமிருந்து பறித்து விட்டனர் மேலும் தனது சக மனிதர்களிடமிருந்து மத வழிநடத்துதல்களையும், பரிசுத்த எடுத்துக்காட்டையும் பறித்து கொண்டனர்" - கி.பொ.பா, ப. 291, 292.

ஒரு தேசமாக, தேவனின் ஊழியத்தை சீரான முறையில் இஸ்ரவேல் நிறைவேற்றி இருந்திருக்கலாம். ஆனால் அவர்களது தோல்வி பேரழிவாய் இருந்தது:

"பரலோகத்தின் விருப்பத்திற்குரியவர்கள் என்றும் தேவனுடைய சபை என்று எப்பொழுதும் போற்றப்பட வேண்டும் என்றும் யூத மக்கள் மனதார எண்ணினர். ஆபிரகாமின் புத்திரர் என்று தங்களை பிரகடனம் செய்தனர், தங்களுக்கு வழங்கப்பட்டிருந்த வளமையின் அடித்தளம் மிக உறுதியானதென தோன்றினதினால் பூமி மற்றும் பரலோகத்தில் தங்களது உரிமைகளை நீக்க யாரால் முடியும் என்று எண்ணினர். ஆனால் விசுவாசமில்லா வாழ்க்கையை வாழுவதினால் அவர்கள் தேவனுடைய கண்டனத்திற்கும் அவரிடம் இருந்து விலக்கி வைக்கப்படுவதற்கும் வழி வகுத்தது" - கி.பொ.பா, ப. 294.

யூத தேசம் கடைசியில் முழுமையாக தேவனிடத்திலிருந்து துண்டிக்கப்பட்டதாய் இருந்தாலும், தேவனுக்கு உண்மையாய் இருந்த ஆண்களும் பெண்களும் இந்த உலகத்தில் இல்லாமல் போகவில்லை. என்ன நேர்ந்தாலும் தேவனை தங்கள் முழு இருதயத்தோடும் நேசித்து அவரை உண்மையாய் சேவித்தவரும் உண்டு.

விசுவாச முள்ளவர்களின் சங்கிலி உடையாமலிருந்தது.

அதிகபட்சமான இஸ்ரவேலர்கள் தேவனை மறுதலித்தும் அவரை அங்கீகரிக்காமல் இருந்திருந்தும், இயேசு இவ்வுலகில் ஒரு பாலகனாக வந்தபோது, இந்த விசுவாசமுள்ளோரில் சிலர் அவருடைய பிறப்பை சந்தோஷமாக வரவேற்று அதை அங்கீகரித்தனர்.

கிறிஸ்து வளர்ந்து வந்த காலங்களிலும் மற்றும் அவரது மூன்றரை ஆண்டு ஊழிய காலங்களிலும் கூட தங்களுடைய சிருஷ்டிகருக்கோ அல்லது மேசியாவிற்கோ விசுவாச துரோகம் செய்வதை விட மரிப்பதையே மேலாக எண்ணிய மக்கள் இந்த உலகில் இல்லாமல் போகவில்லை.

இந்த விசுவாசமுள்ள சிலரை பற்றிய கதைதான் இந்த புத்தகத்தின் கதை. ஆதாமிலிருந்து முடிவு காலம் வரை நாம் பின்பற்றி வருகின்ற கதை. சுருக்கமான வரலாற்றை விட இது அதிக மேலான கதை ஏனென்றால் இந்த கதை உங்களையும் என்னையும் உள்ளடக்கிய கதை. முன் எப்பொழுதும் இல்லாத வகையில், இந்த வருடம், இந்த மாதம், இந்த நாள் - தேவனை பொறுத்த வகையில் வெறும் இரண்டு பக்கங்கள் மாத்திரமே இருக்கின்றது: அவருக்கு விசுவாசமாயும் உத்தமுமாய் இருக்கின்றவர்கள் - தங்கள் சொந்த போக்கில் செல்ல தேர்ந்தெடுப்பவர்கள்.

இன்னொரு இரவின் தூக்கத்திற்கு முன்னால் நீங்கள் மறுபடியும் சந்திக்கவேண்டிய தேர்வு. திரும்பவும் நாளை புதிய தினத்தை சந்திக்க எழும்பும் போது நீங்கள் சந்திக்கவிருக்கும் அதே தேர்வு.

எல்லா காலத்திலும், தேவன் தனக்கென்று ஒரு கூட்ட மக்களை எப்பொழுதும் வைத்திருந்தார் - அவர்கள் உண்மை யுள்ளவர்களும், விசுவாச முள்ளவர்களும், அழைக்கப் பட்டவர்களும் தெரிந்து கொள்ளப் பட்டவர்களுமாவர் - மேலும் அவருக்காக விசேஷமான ஒரு கூட்ட மக்கள் இன்றும் இருக்கிறார்கள்.

அத்தியாயம் - 5

தவறான அரசனுக்காகக் காத்திருத்தல்

காலையில் வேலைக்கு போய் மாலையில் வீடு திரும்பும் போது உங்கள் குடும்பம் உங்களை அடையாளம் கண்டுகொள்ளாமலோ அல்லது நீங்கள் அவர்களுக்கு முற்றிலும் ஒரு அந்நியனை போல் காணப்படுவதாக கற்பனை செய்து கொள்ளுங்கள்.

அல்லது உங்கள் குடும்பங்களெல்லாம் ஒன்று கூடும் கூட்டத்திற்கு நீங்கள் சென்றிருக்கும் போது உங்கள் உறவினர்கள் நீங்கள் யார் என்று கொஞ்சம் கூட அறியாதிருப்பதாக கற்பனை செய்து கொள்ளுங்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலை ஒருபோதும் உங்களுக்கு ஏற்படக்கூடாது. ஆனால் இது போன்ற ஒன்று இயேசுவுக்கு நேர்ந்தது.

> "அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று. *உலகமோ அவரை அறியவில்லை*. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், *அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை*" - யோவான் 1:10, 11, முக்கியத்துவம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இன்னொரு வேத மொழிபெயர்ப்பு இவ்விதமாக கூறுகிறது:

> உலகம் அவராலே படைக்கப்பட்டிருந்தும், அவர் இந்த உலகத்திற்கு வந்தபோது *அவரை இந்த உலகம் அடையாளம் கண்டு*

கொள்ளவில்லை. அவருடைய சொந்த தேசத்திற்குள்ளும், அவருடைய சொந்த ஜனங்களுக்குள்ளும் *அவர் ஏற்றுக்கொள்ளப்படவில்லை* - புதிய ஜீவிக்கிற மொழிபெயர்ப்பு, முக்கியத்துவம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இயேசு இந்த பூமிக்கு வந்தபோது அவரை இந்த உலகம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது துரதிஷ்டமானது. அவரை ஏற்று கொள்கிறார்களோ இல்லையோ எப்படி இருந்தாலும் அவர்தான் அவர்களையும் படைத்தவர். “தன்னுடைய ஜனங்களுக்கு” மட்டுமல்லாமல், “முழு உலகத்திற்கும்” இரட்சிப்பை அருளும்படி வந்தார்.

இந்த உலகம் அவரை அடையாளம் கண்டு கொள்ளவில்லை, ஆனால் நம்பமுடியாத காரியம் என்னவென்றால் அவரது "சொந்த ஜனங்களே" அவரை புறக்கணித்தனர்.

இயேசு கிறிஸ்துவின் வருகையை குறிக்கின்ற ஏகதேசம் 300 தீர்க்கதரிசனங்கள் தேவனால் முன்னறிவிக்கப்பட்டிருந்தும் அவரது மக்கள் அவரை புறக்கணித்தனர்.

இயேசு கிறிஸ்து எப்படி, எங்கே, எப்போது வருவார் என்று தெளிவாக எடுத்துரைக்கின்ற வசனங்கள் இருந்தும் அவரது மக்கள் அவரை புறக்கணித்தனர்.

ஆனாலும் எல்லாருமல்ல.

மேலும் நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்: ஆதியிலிருந்தே தேவனை அறிந்த, அவருக்கு உண்மையாயிருந்த, அவரை நேசித்த முறிக்க முடியாத வழியாக வந்த ஒரு கூட்ட உண்மையான ஜனங்கள் அவருக்கு இருந்தார்கள். ஆரம்பத்திலிருந்தே அவர்கள் சிறுபான்மையினர்களாக இருந்தனர். இந்த சிறு கூட்டம் தான் மேலே நோக்கி ஜீவனுக்கு போகும் இடுக்கமான வழியைக் கண்டுப்பிடித்து அதில் பிரயாணம் பண்ணினார்கள். ஆனால் அதிகபட்ச மக்கள் கீழ்நோக்கி அழிவுக்கு செல்கின்ற எளிதான பாதையைத்

தெரிந்தெடுத்து அந்த விசாலமான பாதையில் நடந்துபோக தீர்மானித்தார்கள்.

இந்த உலக சரித்திரம் முடியும் தருவாயில் வெகுசிலரே இரட்சிக்கப்பட்டு நித்திய வாழ்வைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும், அதிகபட்ச மக்கள் கைவிடப்பட்டு இறுதியாக அழிக்கப்படுவார்கள், இதன் மூலம் சாத்தான் வெற்றிப் பெற்றது போலவும், தேவன் தோல்வி அடைந்தது போலவும் சிலர் கருதுகின்றனர்.

உலகம் ஓர் முடிவைப் பெற்று நித்திய ஜீவன் தொடங்கும் போது உலகத்தில் வாழ்ந்த பல கோடிக்கணக்கான மக்களில் இரட்சிக்கப்பட்டவர்கள் ஒரு சிறுபான்மையினரே இருப்பர். ஆனால் குறிப்பிடப்பட்ட மூன்று முக்கிய காரியங்களை நாம் கவனிக்க வேண்டும்:

1. அனைவருக்கும் இலவசமான இரட்சிப்பை இயேசுவின் வாழ்வும் மரணமும் அளிக்கிறது. "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; *ஒருவரும்* கெட்டுப்போகாமல் *எல்லாரும்* மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" - 2 பேதுரு 3:9, முக்கியத்துவம் சேர்க்கப்பட்டிருக்கிறது. விளக்கமாக சொன்னால், தேவன் சிலரை இரட்சிப்பிற்கும் சிலரை அழிவிற்கும் தேர்ந்தெடுப்பதில்லை. தேவன் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் படைப்பில் இலவசமாக கொடுத்த தெரிந்தெடுக்கும் வல்லமையின் தன்மையே அவர்களது முடிவை தீர்மானிக்கிறது.
2. கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும், நன்மைக்கும் தீமைக்கும் இடையில் நடக்கும் பெரிய போராட்டத்தின் முடிவு இன்னமும் வரவில்லை. இயேசுவின் வருகைக்கு முன்பாக வியக்கத்தக்க வகையில் இறுதியாக நிகழும் காரியங்கள் பெரும் கூட்ட மக்களை, கிறிஸ்துவை உண்மையாக பின்பற்றுகிறவர்களுடன் இணைக்கும். சிலர் சத்துருவின் பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்கு

கடந்து வருவார்கள். தேர்ந்தெடுத்தலை தவிர்க்க முயற்சித்த மக்கள் கூட தனக்கென்று ஒரு பக்கத்தை தேர்ந்தெடுக்க வேண்டியதாகும். கடைசியாக இரட்சிக்கப்பட்ட சிறுபான்மையின் கூட்டம் பரிதாபகரமான ஒரு சிறுபான்மையாக இருக்கும் என்று நினைக்கவேண்டாம். எல்லாவற்றிற்கும் பிறகு யோவானின் பரலோக காட்சியில் "இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைகளிலிருமிருந்து வந்ததும், *ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள்*, வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்" வெளிப்படுத்தின விசேஷம் 7:9, முக்கியத்துவம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

3. தீர்க்கதரிசியாகிய ஏசாயா கூறுகிறார், இறுதி போராட்டம் முடிந்தவுடன் இயேசு தாமே "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்" ஏசாயா 53: 11 என்று கூறுகிறார். இந்த உலகத்தின் ஆண்களையும் பெண்களையும் மீட்க இயேசு மிகப் பெரிய தியாகத்தை செய்தார். அவர் மனிதனுக்கு கொடுத்த எல்லாவற்றையும், எல்லாவலியையும், ஏன் அவர் அடைந்த மரணத்தையும் பிரயோஜனமுள்ளதாக எண்ணினார்.

அதனால் நாம் இயேசுவின் உண்மையான தொண்டர்கள் வெகுசிலராய் இருக்கின்றனர் என்று எண்ணி கவலைப்படவேண்டாம். வாக்குத்தத்தத்தின் படியும் தீர்க்கதரிசன நிறைவேறுதலின் படியும் இயேசு இந்த பூமிக்கு வந்தபோது அவரை பின்பற்றியவர்கள் வெகுசிலரே. வேதாகமம் துல்லியமாக குறிப்பிடுவது என்னவென்றால் "அவருடைய சொந்த ஜனம்" அவர்கள் தன்னை இந்த உலகத்தில் பிரதிபலிப்பார்கள் என்று அவர் எண்ணிய ஜனங்கள் கூட அவரை ஏற்றுக் கொள்ளவில்லை.

அது எப்படி இருக்க முடியும்?

பார்வை இல்லா கண்கள், காது கேளா செவிகள்

அவர்களிடம் தீர்க்கதரிசனங்கள் இருந்தன. கிறிஸ்துவின் வருகையைப்பற்றிய எந்த ஒரு நுணுக்கத்தையும் தேவன் அவர்களிடமிருந்து விட்டு விலக்கிவைக்கவில்லை. ஆனால் வெகுநாளாக மற்றும் திரும்ப திரும்ப நிகழ்ந்த விசுவாச துரோகத்தின் நிமித்தம் தேவன் தெரிந்து கொண்ட ஜனங்கள் அதிலும் முக்கியமாக அதன் தலைவர்களின் கண்கள் கட்டப்பட்டிருந்தன. வாசிப்பதற்கு கண்கள் இருந்தும் காணக்கூடாதிருந்தார்கள். அவர்களுக்கு காதுகள் இருந்தும் அவைகள் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை கேட்டும், கேட்ககூடாதவர்களாய் இருந்தார்கள்.

தன்னை மேன்மை படுத்திக்கொள்ள லூசிபரை தூண்டின அதே ஆவியினால் தூண்டப்பட்டு, மற்ற ஜனத்தை ஆதிக்கம் செய்யவும் கட்டுப்படுத்தவும் மிகப்பெரிய ஜனமாக மாற அதிகமான ஆசை அவர்களை ஆட்கொண்டிருந்தது. தேவனின் மேன்மையை பிற நாடுகளுக்கு பறைசாற்ற அவர்கள் ஒரு ராணுவ அதிகாரத்தை அல்ல ஒரு சிறந்த ஏழ்மையின் தன்மையை உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதையே தேவன் எதிர்பார்த்தார்.

ஆம் இஸ்ரவேலர் ஒரு மேசியாவின் வருகையின் மேல் நம்பிக்கை உடையவர்களாக இருந்தனர். ஆனால் தீர்க்கதரிசனத்தின் படி முன்னறிவிக்கப்பட்ட அவரது வருகையை தங்கள் மனதில் ஏற்கனவே தீர்மானித்ததுபடிதான் இருக்க வேண்டுமென எதிர்பார்த்தனர். அவர் மாட்டுத்தொழுவத்தில் ஏழ்மையின் கோலத்தில் ஒரு அறை கூட வாடகைக்கு எடுக்க முடியாத மிக ஏழ்மையான பெற்றோர்களுக்கு பிறந்த மேசியாவாக அவர்கள் எதிர்பார்த்து காத்திருக்கவில்லை. அவர் ராணுவ தலைவராக, வெற்றி பெறும் ராஜாவாக தாங்கள் வெறுத்த ரோமானியர்களிடமிருந்து தங்களை விடுவிக்கிறவராக இருக்க வேண்டுமென விரும்பினர்.

தவறான மேசியாவை அவர்கள் எதிர்பார்த்து இருந்ததினால், அவர் வருகையை தவறிவிட்டனர்.

ஆனாலும் எல்லாருமல்ல.

சிலர் சரியான ராஜாவுக்காக காத்திருந்தனர்

வயல் வெளியிலிருந்த தாழ்மையான மேய்ப்பர்களுக்கு ஒரு தேவ தூதன் தோன்றி கிறிஸ்துவின் பிறப்பை குறித்த செய்தியை அறிவித்தான். ஆச்சரியத்தால் நிறைந்த மேய்ப்பர்கள் புதிதாக பிறந்த இராஜனை காணப் புறப்பட்டனர். கிழக்கிலே ஞானிகள் ஓர் அற்புதமான நட்சத்திரத்தை இரவில் வானத்தில் கண்டு கிறிஸ்துவின் பிறப்பிடத்திற்கு சென்று அவரைத் தொழுது கொண்டார்கள்.

உண்மையான சிலர் இயேசுவின்மேல் விசுவாசம் வைத்து அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் அவரை இவ்வுலகில் பின்தொடர்ந்தனர். அவரது பெற்றோர்கள். யோவான் ஸ்நானகன் மற்றும் அநேகர் அவருடைய உபதேசத்தை ஏற்றுக் கொண்டவர்கள். மேரி, மார்த்தா மற்றும் லாசரு. பன்னிரண்டு அப்போஸ்தலர்கள். எண்ணிலடங்கா நேர்மையான இருதயம் கொண்டவர்கள் அவருடைய உபதேசத்தை கேட்டு அற்புதங்களைக்கண்டு ஈர்க்கப்பட்ட இஸ்ரவேலர்கள், பரிசுத்த ஆவியினால் உணர்த்தப்பட்டு உடைக்க முடியாத சங்கிலியான விசுவாசமுள்ள மக்களோடு இடம்பிடித்தனர்.

ஒரு இருண்ட வெள்ளிக்கிழமையில் அந்த பயங்கரமான சிலுவையில் இயேசுவின் வாழ்க்கை மற்றும் அவரது ஊழியம் உச்சக்கட்டத்தை அடைந்தபோது அந்த வெறிகொண்ட கூட்டத்திலிருந்த சிலர் அவர் மரிப்பதை விரும்பவில்லை. சிரேனேனாகிய சீமோன் இயேசுவின் சிலுவையை சுமந்தான், அவனுடைய காலடிகள் சரியான சத்தியத்தின் மற்றும் இரட்சிப்பின் பக்கத்திற்கு அழைத்துச் சென்றது. ஒரு ரோமன் சிப்பாயும் சரியான பக்கத்தை தேர்ந்தெடுத்தான். இயேசுவின் ஒரு பக்கத்திலிருந்த கள்ளனும் அதே தீர்மானத்தை

எடுத்தான். அதே தீர்மானத்தைத்தான் சிலுவையின் கீழே ஆரவாரமாய் நின்ற கூட்டமக்களில் பலர் எடுத்தனர்.

கிறிஸ்துவின் இந்த உலக வாழ்க்கையில் எவ்வளவு பேர் அவரை பின் தொடர்ந்து நல்ல தீர்மானத்தை எடுத்தார்கள் என்று தேவனை தவிர வேறு யார் அறிவார்? சந்தேகத்திற்கிடமில்லாமல் நாம் ஆச்சரியத்தில் ஆழ்ந்து போகதக்கதாக அதை விரைவில் தெரிந்துகொள்ளுவோம்.

பூமிக்கு வந்து அவர் செய்து முடிக்கவேண்டியதை இயேசு செய்தபின்பு தேவனாகிய பிதாவின் வலது பாரிசத்தில் அமரும் படியாக பரலோகம் ஏறிச்சென்றார் என்று வேதம் கூருகிறது. ஆனால் இந்த பூமியிலிருந்து ஏறி செல்லுமுன், புதிய மற்றும் வித்தியாசமான ஓர் இஸ்ரவேலை ஏற்படுத்திவைப்பார். இந்த முறை ஒரு நாட்டை மற்றும் தேர்ந்தெடுப்பதற்கு பதிலாக ஒரு புதிய ஆவிக்குரிய இஸ்ரவேலை எல்லோருக்காகவும் ஏற்படுத்திவைப்பார். அதன் மூலமாக எல்லோரையும் எல்லா ஆணையும், பெண்ணையும், சிறுவரையும் தன்னை பின்தொடர்வதற்கு அழைப்பார்.

இயேசு தனது சபையை ஸ்தாபித்தார் - அவருடைய பின்னடியார்கள் *கிறிஸ்தவர்கள்* என்று தன்னுடைய பெயரை ஏந்தி செல்லுவர். அவருடைய சபையின் மூலமாக இயேசு தனக்கு விசுவாசமுள்ளவர்களின் வரிசையை எதிர்காலத்திற்குள் தொடர நிச்சயத்துள்ளார். அவருடைய சபை அவர் பரமேறி சென்றதிலிருந்து அவருடைய இரண்டாம் வருகை வரையில் நீடிக்கும்.

அதிசயமான வெற்றியுடன் அவரது சபை துவங்கியது. ஆயிரக்கணக்கானோர் ஒரே நாளில் மனமாறினர். காட்டுத்தீப்போல இயேசுவின் அன்பின் சத்தியம் இந்த உலகமெங்கும் பரவியது. ஆனால் இஸ்ரவேலுக்கு நடந்ததுப்போல சாத்தான் இந்த சபையையும் எதிர்ப்பான். தவறுகள் இதனுள்ளும் ஊடுருவும். தன்னை சுற்றியுள்ள உலகத்துடன் சமரசம் செய்துகொள்ள செய்வான். மறுபடியும்

பக்தியுள்ள சிலர் சபையின் எல்லைக்குள் காணப்படும்வரை விசுவாச துரோகம், சிலைவணக்கம் மற்றும் மதத்திற்கு எதிரான கொள்கைகளின் பக்கம் சபை வழுக்கி சென்று விடும்.

தேவன் அவர்களுக்காக வைத்திருந்த திகைப்பூட்டும்படியான நோக்கத்திலிருந்து எவ்வளவாக இஸ்ரவேல் குறைவுபட்டது என்று நாம் வரலாற்றின் பக்கங்களை திருப்பி பார்க்கும்போது அது மிகவும் கவலையளிப்பதாகவும் ஏன் மிக வருத்தம் தரக்கூடியதாக இருக்கின்றது. அதேப்போல இயேசுவின் இரண்டாவது இஸ்ரவேலும் அவருடைய சபையும் மீண்டும் அவருடைய நோக்கத்திலிருந்து வழிதப்பிச்சென்றதும் மிக வருத்தம் கொடுக்க கூடியதாக இருக்கின்றது.

ஆனால் சரியாக குறித்துக்கொள்ளுங்கள்: அதனுடைய மிக இருண்டக் காலங்களில் விசுவாச துரோகத்தின் ஆழத்தில் இருந்தபோதும் - *எப்போதும், எப்போதுமே* தங்கள் முழங்கால்களை பாகாலுக்கு முடக்காத விசுவாசமுள்ள சில இஸ்ரவேலர்கள் இருந்தனர் என சபையின் வரலாறு நமக்கு நிரூபிக்கின்றது. *எப்போதும், எப்போதுமே* விசுவாசமுள்ள சிலர் தங்களுடைய அசைக்க முடியாத விசுவாசத்துடன் மிகவும் மோசமான காலத்திலும் இயேசுவை பின்தொடர்ந்தனர்.

இப்போது நாம் கிறிஸ்துவ சபையின் ஆரம்பத்திற்கு திரும்பிச் சென்று அதனுடைய ஆதி வருடங்களின் பயணத்தை பின்தொடர்வோம். துவங்கப்பட்ட சில நாட்களுக்குள்ளாகவே சபை தடம்புரண்டு விசுவாச துரோகத்துக்குள்ளாக இழுக்கப்பட்டது. ஆனால் இந்த பேரிடரைக் குறித்து வருந்தாமல் என்னவந்தாலும் சரியான பக்கத்தில் உறுதியாய் நின்ற வெகு சிலரை தெரிந்து கொண்டு கொண்டாடுவோம். ஏனென்றால் இவர்கள் நமது ஆவிக்குரிய மூதாதையர்கள். நாம் இணைப்பாக சேர்ந்து இருக்க வேண்டும் என்று உடைக்கமுடியாத சங்கிலியின் வலிமையான இணைப்புகளாக இவர்கள் இருக்கின்றனர் இவர்கள் போல நாமும் இருக்கலாம்.

இந்த வார்த்தைகளை நீங்கள் படிக்கும் தருணத்தில் இந்த உலகத்திலுள்ள 6.5 பில்லியன் மக்களும் இறுதி போராட்டத்தில் தங்களுடைய பக்கத்தை தேர்ந்தெடுத்து அதில் வரிசையாக நின்றுக் கொண்டிருக்கின்றனர். தங்களுடைய சுய தேர்வினாலோ அல்லது தெரியாமலோ அநேகர் தவறான பக்கத்தை தேர்வு செய்து கொண்டிருக்கின்றனர். ஆனால் தேவனுக்கு விசுவாசமுள்ளவர்கள் இந்த நேரத்திலும் இருக்கிறார்கள். தேவன் மேல் அயராத அன்பு கொண்டுள்ளனர். அவருக்கு கீழ்ப்படியும் இருதயம் அவர்களுக்கு இருக்கின்றது. தேவன் மேல் நம்பிக்கை வைப்பதை தேர்ந்தெடுத்துள்ளனர். அவருடைய சத்தியத்திற்காக உறுதியாய் நிற்பார்கள். தங்களுடைய இறுதி மூச்சுள்ளவரை அவருடைய சத்தியத்தையும் அவருடைய குணத்தையும் பிரதிபலிப்பார்கள்.

நீங்கள் தேர்ந்தெடுத்து விட்டீர்களா? பின் திரும்பி பார்க்க வேண்டாம், இந்த இறுதி போராட்டத்தின் எந்த பக்கத்தில் உள்ளீர்கள்? தேர்ந்தெடுக்கவில்லை என்றால் - ஏன் காத்துக்கொண்டிருக்கிறீர்கள் - இந்த நாளை ஏன் தேர்ந்தெடுக்கும் நாளாக எண்ணக்கூடாது?

அப்படி எண்ணுவீர்களானால், நீங்கள் எந்தப் பக்கத்தில் நிற்கிறீர்க்ள் என்று இந்த உலகமும் அண்ட சராசரமும் சரியாக அறிந்து கொள்வதற்கு இது இன்னொரு நாளாக அமையும்.

எல்லா காலத்திலும், தேவன் தனக்கென்று ஒரு கூட்ட மக்களை எப்பொழுதும் வைத்திருந்தார் - அவர்கள் உண்மை யுள்ளவர்களும், விசுவாச முள்ளவர்களும், அழைக்கப் பட்டவர்களும் தெரிந்து கொள்ளப் பட்டவர்களுமாவர் - மேலும் அவருக்காக விசேஷமான ஒரு கூட்ட மக்கள் இன்றும் இருக்கிறார்கள்.

அக்கினிப்புயல்

நான் வாலிபனாக இருந்தபோது அமெரிக்காவின் பசிபிக் வடமேற்கு பகுதியிலுள்ள ஓரிகன் காடுகளில் ஒரு மரம் வெட்டும் இயக்கத்தில் வேலை பார்த்து கொண்டிருந்தேன். அசவுகரியமான வறண்ட மற்றும் உஷ்ணமான ஒரு ஆகஸ்ட் மத்தியானத்தில் நான் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து ஏகதேசம் 50 அடி தூரத்தில் ஒரு மின் கம்பி காற்றில் அசைந்து அங்கிருந்த பாறையின் மேல் உராய்ந்து தீப் பொறி கிளம்பி மிகுந்த பிரகாசத்தோடு காட்டில் காய்ந்திருந்த புல் தரையின் மீது பட்டது. உடனடியாக தீ பற்றி மள மள என்று எல்லா திசைகளிலும் பரவியது.

வேகமாக ஓடி நான் அணிந்த சட்டை மற்றும் தகர தொப்பியினால் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டேன், ஆனால் என்னுடைய முயற்சிகள் அனைத்தும் வீணாகப் போய் விட்டது. தீயோ அணைக்க முடியாத பெரிய வட்டமாக பரவத் தொடங்கிவிட்டது.

மரம் வெட்டும் பணியை நிறுத்தி கொண்டு அனைவரும் தங்களால் இயன்ற மட்டும் தீ அணைப்பில் ஈடுபட்டனர், ஆனால் அன்றைய தினம் மிகவும் உஷ்ணமாக இருந்தது, புல் தரையும் நன்கு காய்ந்திருந்தது, மரங்கள் கூட வறண்டு காணப்பட்டது. சாயங்காலத்துக்குள், பல நூறு ஏக்கர் நில பரப்பை எரித்து விழுங்கிய தீயின் மீது விமானங்களிலிருந்து இளஞ்சிவப்பு தீ அணைக்கும் இரசாயணம் போடப்பட்டது. தீயை கட்டுப்படுத்த இன்னும் பல நாட்கள் ஆயின.

அத்தினத்திலிருந்து, ஓரிகன் மலை பகுதியில் நிகழ்ந்த தீயை நினைவு கூறாமல் பெந்தெகொஸ்தேயை என்னால் நினைக்கவே முடியாது.

பூமியில், இயேசு கிறிஸ்து மூன்று வருடங்களை ஊழியத்தில் கழித்தார். தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரவேலுக்கு நற்செய்தியை அறிவிக்க அவர் முயலவில்லை. நம்பிக்கை இல்லாத புறஜாதியினருக்கும் அவர் நற்செய்தியை அறிவிக்க முயலவில்லை. ஆமாம், ஏரிக்கரையிலும் மற்றும் மலைப்பகுதியிலும் அவர் ஆவிக்குரிய இராஜ்யத்தை மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் எளிய கதைகளையும் உவமைகளையும் கூறினார்.

ஆனால் அவர் நற்செய்தி கூட்டங்களை நடத்தவில்லை, உலகத்தை வெல்லும் பரபரப்பான முயற்சியாக உலகப்படத்தை குறுக்கு மறுக்காகவும் பயன்படுத்தி இந்த உலகத்தை ஜெயிக்கவில்லை. அவருடைய அன்பு மற்றும் கிருபையின் செய்தியை உலகமக்கள் எல்லாரிடமும் சென்றடைவதற்கு எந்த அதிசயத்தையும் நிகழ்த்தவில்லை.

தன் மீதுள்ள நம்பிக்கையினால் தங்களுடைய வசதி வாய்ப்புகளை விட்டு விட்டு பின் தொடர்ந்த பன்னிரெண்டு எளிய மனிதர்களுக்கு தன்னை அர்ப்பணித்தார். மூன்றரை வருடங்களாக தன்னை அறிய வாய்ப்பளித்தார். தன்னை பின்தொடர்ந்து அவருடைய சேவை தேவைப்படும் மக்களுக்கு அவர் ஊழியம் செய்தபோதும், நொண்டிகளையும் குருடர்களையும் அவர் குணமாக்கின போதும், தேவனை பற்றிய உண்மைகளை எடுத்துரைத்த போதும், தேவனின் அன்பு இப்படித்தான் இருக்குமென்று மிக அருகாமையிலே அவர்களுக்கு எடுத்து காட்டினார்.

அவர் அந்த பன்னிரெண்டு இருதயங்களுக்குள்ளும் ஒரு தீப் பொறியை வைத்தார். ஆனால் அவர்கள் இன்னும் அக்கினி கந்தகமாக கொழுந்து விட்டு எரியத்தக்கதாக அவ்வளவு வறட்சியாகவும்

தாகத்துடனும் காணப்படவில்லை. அவர்கள் உலர்ந்தவர்களாக அல்ல பச்சை மரத்தை போலிருந்தனர். சிலுவையில் கிறிஸ்துவின் ஊழியம் உச்சகட்டத்தை அடைந்தபோது, பன்னிரெண்டில் ஒருவர் அவரை காட்டிக்கொடுத்தான்; இன்னொருவர் அவரை மறுதலித்தான்.

ஆனால் அவ்வளவு காலமளவும், ஒருவர் தவிர மற்ற அனைவர் இருதயங்களுக்குள்ளும் அன்பின் சுடர் அமைதியாக எரிந்து கொண்டிருந்தது. மூன்று நாட்கள் கழிந்து கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிரடைந்த பின்பு அந்த சுடர் இன்னும் பிரகாசமாக எரிய துவங்கியது. பின்பு அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட சீடர்கள் பார்த்து கொண்டிருக்கும் போதே பரமேறினார். ஆனால் அவர் அப்படி செய்வதற்கு முன், பரிசுத்த ஆவியானவரை அவர்களுடன் இருக்கும்படி அனுப்புவேன் என கூறியிருந்தார்.

பின்பு பத்து நாளளவும் அவர்கள் அந்த மேலறையில் தங்கி இருந்து ஜெபத்திலும், பாவ அறிக்கை செய்வதிலும் தங்களைத் தாழ்த்தி சுய நல இருதயத்தை அக்கினியால் சுத்திகரிக்கும், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பரிசுத்தாவியின் அபிஷேகத்திற்காகக் காத்திருந்தனர்...

பின்பு திடீரென்று... "பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள்" - அப்போஸ்தலர் 2:2-4.

பெந்தெகொஸ்தே!

நிலையாக அவர்களுள் மூன்று ஆண்டுகளாக எரிந்து கொண்டிருந்த அக்கினி அவர்கள் மீது இறங்கின அக்கினி நாவுடனே இணைந்தது. மிக வலிமையாக சுழற்றி அடிக்கும் காற்று அக்கினியை என்ன செய்யும் என்பது நாம் அறிந்ததே. கிறிஸ்துவின்

பின்னடியார்களுக்குள்ளே வல்லமையும், தூய அன்பின் கட்டுக்கடங்காத உணர்ச்சியும் ஒளிர்ந்தது. இந்த உலகத்தை உயிரோடு எழுந்த கர்த்தரும் மீட்பருமானவருக்கு வென்றிட அக்கினி புயலின் வைராக்கியம், விரைவுத்தன்மை மற்றும் தடுக்க முடியாத உறுதியான தீர்மானத்தினால் நிறைக்கப்பட்டனர். அவர்கள் மேலறையிலிருந்து கீழே வரும்போது பேதுரு அவர்களுக்காக பேசினார், பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு அவர் பிரசங்கித்தார், அவர் முடித்தபொழுது மூன்றாயிரம் மக்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானமுழுக்கு பெற்றனர்.

கிறிஸ்தவ சபை உருவானது. அதனுடைய வேகம் உலகம் முழுவதும் வெகு விரைவாகவும் அயராமல் பரவத்துவங்கியது, அதனால் விசுவாசிகளை எதிர்த்த சிலர் அவர்களை, "உலகத்தை கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்" அப்போஸ்தலர் 17:6, என்று குறை கூறினர்.

கிறிஸ்துவின் சக்திவாய்ந்த ஈர்ப்பாகிய அன்பினாலும் சத்தியத்தினாலும் - கிறிஸ்துவின் புதிய இஸ்ரவேலாகிய கிறிஸ்தவ சபை முழு உலகத்தையும் கிறிஸ்துவிடம் காந்தத்தைப் போல ஈர்க்க தொடங்கியது. வேறெந்த காரியத்தினாலும் செய்ய முடியாத அளவிற்கு அவருடைய தன்னலமற்ற வாழ்வு மற்றும் - இயேசுவின் தியாக மரணம் மூலம் எடுத்துரைக்கப்பட்ட அன்பிற்கு இருந்தது. அது இதயங்களை கரைய செய்தது. அது பிடிவாதத்தை அளித்து, பெருமையை வெறுப்பூட்டும் காரியமாக காண செய்தது. கிறிஸ்து கற்பித்து வாழ்ந்த வாழ்க்கையின் சத்தியம் - சாத்தானின் பொய்களை வெளிக்கொண்டு வந்தது. தனது கலகக்கார பிள்ளைகளை திரும்பவும் வெற்றிகொள்ள தேவன் தீர்மானித்தது பிதா-தேவனை மேன்மை படுத்தியது.

நிலையான, நீல சுடர்

மனதில் கொள்ளவேண்டியது என்னவென்றால் பெந்தெகொஸ்தே அக்கினி புதிதாக கொளுத்திய பந்தத்தில் எரிகின்ற நீண்ட, பிரகாசமான பெரிய அலைபோல காணப்படுகின்ற மஞ்சள் சுடர்போல அடக்கமுடியாத உணர்ச்சிகளின் வெளிப்பாடு அல்ல. இல்லை, அது கவனமாக சரிசெய்யப்பட்ட ஜோதியிலிருந்து வரும் நிலையான நீல-வெள்ளை நிற சுடர். வெள்ளை நிற பெந்தெகொஸ்தேயின் சுடர், தயாராக இருக்கும் மனிதர்களை தேவன் முழுவதுமாக நிரப்பினார் என்பதின் விளைவாகும். தேவன் அன்பாக இருப்பதினால், மற்றொருவரை தன்னுடைய அன்பின் ஜோதியினால் தீபமேற்றுபவர்களாய் ஒவ்வொரு விசுவாசியும் மாறுகின்றனர். ஒவ்வொரு புதிய ஜோதியும் மற்றொரு ஜோதியை ஏற்றுகின்றது. இது ஒரு தொடர்விளைவாக, ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்கும், ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கும், ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்திற்கும் பரவுகின்றது.

மனதில் கொள்ளவேண்டியது என்னவென்றால் தேவ அன்பின் தீயானது இந்த உலகத்தில் பொதுவாக பாடல்களிலும், கவிதைகளிலும், நாடகங்களிலும் கொண்டாடப்படும் அன்பை போலல்ல.

தேவனுடைய அன்பு வாங்குவதற்காக கொடுப்பது அல்ல.

அது உணர்ச்சிகளின் வேகம் அல்ல.

அது ஒரு விரைவான ஈர்ப்பு அல்ல.

அது சூழ்நிலை கடினமாகும் போது விட்டு விலகாமல் - நீங்காத உறுதியானது.

தேவனுடைய அன்பு தெளிவாக சிலுவையில் காணப்பட்டது: அந்த முழுமையான சுய பலி, அதற்கு தகுதி உடையவர்களுக்காக இல்லாமல் அதற்கு தேவை உள்ளவர்களுக்காகத்தான். அவர்கள் கலகக்காரர்களாக இருந்தாலும், தன்னை அழிக்க நினைப்பவர்களாய்

இருந்தாலும், தேவன் தான் படைத்த மக்களை மிகவும் நேசித்தார். அவர்களை அவர் சிருஷ்டித்ததால் அவர் நேசித்தார். அவர்கள் அவருக்கு சொந்தமானவர்கள் - அவர் தன்னுடைய உயிரை தியாகம் செய்து அவர்களை மீட்பார்.

தாக்குதலுக்குள்ளாகுதல்

சிலுவையில் சாத்தானின் இறுதி முடிவு முத்தரிக்கப்பட்டது. இப்பொழுது அதை தலைகீழாக மாற்ற இயலாது: கிறிஸ்துவுக்கும் அவனுக்கும் இடையில் நடக்கும் இந்த இறுதி போராட்டத்தில் அவனுக்கு தோல்வியே. அண்டத்தின் இன்னொரு மிக பெரிய வல்லரசாக மாறவேண்டும் என்ற அவனுடைய முயற்சி இப்பொழுது முடக்கப்பட்டுள்ளது. இப்பொழுது அவன் காயப்பட்டு, குற்றுயிராய் இருக்கின்ற நொண்டி வாத்து போலான ஒரு எதிரி.

ஆனால் அவனிடம் உயிரும் சுவாசமும் இருக்கும் வரையில் அவன் கிறிஸ்துவையும் - சபையாகிய அவர் மக்களையும் எதிர்த்தே நிற்பான். வெற்றி நடைபோடும் உணர்ச்சிமயமான இந்த சபையை அழிக்க அவன் தன்னால் முயன்ற அளவு சுயநலம் மற்றும் பொய்களை முழு வலிமையுடன் கட்டவிழ்த்துவிடுவான்.

கண்களால் காண செவிகளால் கேட்க முடிகிறவர்களுக்கு சாத்தானுடைய இந்த எதிர் தாக்குதல் எந்த ஆச்சரியத்தையும் தராது. பவுல் அப்போஸ்தலன் தன்னுடைய ஊழியத்தை முதலில் மனந்திரும்பிய யூதர்களுக்கும் பின்னர் மற்ற தேசத்தாருக்கும் எடுத்து செல்லும் போது அவர் எச்சரிக்கையாக சொன்னது என்னவென்றால்: "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆனபடியால், நான் மூன்றுவருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல்

அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள்" - அப்போஸ்தலர் 20:29-31.

சாத்தான் இந்த இளம் சபையை வெளியில் இருந்தும் உள்ளே இருந்தும் தாக்குவான். காட்டுமிராண்டி தனமான ஓநாய்கள் வெளியிலிருந்து வந்து இந்த மந்தையை தாக்கும். உள்ளே இருக்கும் மனிதர்கள் சிலர் எழும்பி "மாறுபாடானவைகளை" போதிக்க துவங்குவர்.

மாறுபாடானவைகள்?

பவுல் இதை மற்றொரு சபைக்கு எழுதின கடிதத்தில் விரிவுபடுத்தியிருக்கிறார்: "அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்கமனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்" 2 தீமோத்தேயு 4:3,4.

ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரான கட்டுக்கதைகள்.

உண்மைக்கு எதிரான பொய்கள்.

உண்மைக்கும் பொய்க்கும் இடையிலான போராட்டம் - ஆரோக்கியமான உபதேசத்திற்கும் கட்டுக்கதைகளுக்கும் இடையிலான போராட்டம் - குறிப்பிட தகுந்தவிதத்தில் ஒரு சபையில் காணப்பட்டதால் பவுல் மிகவும் அழுத்தமான வார்த்தைகளால் கண்டித்தார்: "உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து

வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" - கலாத்தியர் 1:6-9.

சபைக்குள்ளிருந்து எழும்பும் துரோகங்கள் பற்றி சிலர் கண்களால் பார்த்து கூறியதை பவுல் தன்னுடைய எச்சரிக்கையில் மறுபடியும் சபைக்கு வலியுறுத்தி சொல்லுகின்றார்: "அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது" - 2 தெசலோனிக்கேயர் 2:7.

இதனால் சிலுவைக்குப் பிறகும், கிறிஸ்துவுக்கு எதிரான சாத்தானின் யுத்தக்கதை தொடர்ந்து நடக்கிறது. அவன் எதையும் விட்டுக்கொடுக்கமாட்டான். அவன் தேவனுடைய குணத்தையும், அவரின் சட்டத்தையும், அவரின் சத்தியத்தையும், அவரின் நற்செய்தியையும், அவருடைய சபையையும் மற்றும் அவரின் மக்களையும் தாக்குவான்.

ஆதாமிலிருந்து நோவா வரை, நோவாவிலிருந்து ஆபிரகாம் வரை, ஆபிரகாமிலிருந்து கிறிஸ்துவரை, *எப்போதும் எப்போதுமே* தேவன் பேரிலும், அவருடைய சத்தியத்தின் பேரிலும் நம்பிக்கையாயிருந்த ஒரு கூட்ட மக்கள் இருந்தனர். சில சமயம் அநேகர், மற்ற சமயத்தில் நோவாவின் ஜலப்பிரளய காலத்தில் எட்டு பேரே இருந்தது போல சொற்பப் பேரே இருந்தனர். ஜலப்பிரளய காலத்தில் எட்டு பேரே இருந்தது போல அல்லது பெந்தெகொஸ்தே காலத்தில் மூவாயிரம் பேர் இருந்ததுப் போல தேவனுக்கென்று உடைக்க முடியாத சங்கிலியாக ஒரு கூட்ட மக்கள் காலம் காலமாக தொடர்ந்து இருந்து வருகின்றனர்.

ஆதிகால சபை வெற்றியின் உச்சக்கட்டத்தில் இருந்தபோது கிறிஸ்துவை எத்தனை உண்மை விசுவாசிகள் பின் தொடர்ந்தனர்

என்று நமக்குத் தெரியாது. ஒரு வேளை ஒரு மில்லியனாக இருக்குமோ? நமக்கு தெரிந்தது என்னவென்றால் பவுலார் முன் எச்சரித்தது போல, தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மீது சாத்தான் எழும்பி முழுமையாக தாக்குதல் புரிவான். அவன் வெளியில் இருந்து துன்புறுத்தவும், உள்ளேயிருந்து எதிரான கொள்கை மற்றும் சமரசம் போன்ற மோசமான காரியங்களை உபயோகிப்பான்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் - பெந்தெகொஸ்தேயில் இருந்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை உள்ள கிறிஸ்துவ சபையின் - முழு சரித்திரம் விவரிக்கப்பட்டுள்ளது. முதல் மூன்று அதிகாரங்களில் ஏழு சபைகளுக்கான செய்தி கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஏழு சபைகளும் உண்மையில் ஒரே சபையின் தொடர்ச்சி தான் - அது சரித்திரத்தின் ஏழு வெவ்வேறு காலகட்டத்தில் இருந்த சபையின் நிலையை குறிக்கிறது. ஒவ்வொரு சபையின் துவக்கம் மற்றும் முடிவு தேதியை துல்லியமாக நம்மால் கணிக்க முடியாது. இதைப்பற்றி ஒரு வேத அறிஞரிடமிருந்து மற்றொருவருக்கும் இடையே மாறுபாடு இருக்கலாம். ஆனால் சரித்திரத்தில் பொதுவாக அந்த ஏழு சபைகளின் தோராயமான கால கட்டங்கள் பின் வருமாறு:

எபேசு	பெந்தெகொஸ்தேயிலிருந்து ஏகதேசம் கி.பி. 100
சிமிர்னா	கி.பி. 100 லிருந்து ஏகதேசம் கி.பி. 313
பெர்கமு	கி.பி. 313 லிருந்து ஏகதேசம் கி.பி. 538
தியத்தீரா	கி.பி. 538 லிருந்து ஏகதேசம் கி.பி. 1517
சர்தை	கி.பி. 1517 லிருந்து ஏகதேசம் கி.பி. 1798
பிலதெல்பியா	கி.பி. 1798 லிருந்து ஏகதேசம் கி.பி. 1844
லவோதிக்கேயா	கி.பி. 1844 லிருந்து முடிவு காலம் வரை

இந்த புத்தகத்தின் மீதியுள்ள அத்தியாயங்களில் நாம் தேவனுடைய ஜனங்களின் சரித்திரத்தை அந்தந்த சபையின்

முத்திரைகளாக அந்த காலக்கட்டத்தை பின்பற்றியே படிக்கவிருக்கின்றோம். நம்முடைய அடுத்து வரும் அத்தியாயங்களில் முதல் மூன்று சபைகளாகிய எபேசு, சிமிர்னா, பெர்கமு மீது கவனத்தை செலுத்துவோம்.

அங்கிருந்து நாம் தியத்திராவின் அடையாளத்திற்கு கீழுள்ள சபையின் இருண்டகால நீண்ட சுரங்கப் பயணத்தை பின் தொடரவிருக்கின்றோம். சர்தையின் அடையாளத்திற்கு கீழே மறுமலர்ச்சி கால சபை தொடர்ந்தது. மறுமலர்ச்சி காலத்திலிருந்து 1844 க்குள் "பெரிய வருகையின் எழுச்சி" என்று சரித்திரத்தில் அறியப்பட்ட காலத்திற்குள் இருந்த பிலதெல்பியா சபையை குறித்து ஆராயவிருக்கிறோம்.

1844 வது வருடத்துடன், மீதமான சபையின் வளர்ச்சியை அடையவிருக்கின்றோம். இந்த புத்தகத்தின் கடைசி அத்தியாயங்களில் அந்த மீதமான சபையின் செயல்பாடு குறித்து ஆராயவிருக்கிறோம். இந்த அத்தியாயங்கள் உங்களுக்கும் எனக்கும் முக்கியத்துவமும் ஆர்வமுமானவை ஏனென்றால் அது நம்மைப்பற்றியது! உண்மையுள்ளவர்களின் அந்த உடைக்கமுடியாத வரிசையில் நாம் தொடர்ந்து செல்லுவதற்குள்ள நம்முடைய உரிமை மற்றும் கடமை பற்றி எடுத்துரைக்கும் அத்தியாயங்கள் அவை. மேலும் தேவன் எப்படி அன்றாட வாழ்க்கையில் நம்மை பயன்படுத்தி கலகக்காரர்களை தன் வசம் மீண்டும் வெற்றி கொள்ளுகின்றார் என்பதை பற்றி எடுத்துரைக்கும். இந்த அத்தியாயங்கள் நாம் யார்? ஏன் இங்கிருக்கின்றோம்? என்பதை நாம் அறிந்து கொள்ள அது விளக்கம் தருகிறது.

ஆதாமிலிருந்து உங்களுக்கும் - எனக்கும் வரையிலான ஒரு வரிசை இருக்கின்றது. மத்தியில் இருக்கும் இந்த ஆறாயிரத்துக்கும் அதிகமான ஆண்டுகளில், தேவனுக்காக உடைக்க முடியாத சங்கிலியாக உண்மையும் விசுவாசமும் உள்ள ஒரு கூட்ட மக்கள் இருந்து வருகின்றனர்.

அந்த சங்கிலியில் வலிமையான இணைப்பாக இருக்க நானும் ஆசைப்படுகிறேன். இந்த சங்கிலியில் மற்றவர்களும் தங்களை இணைத்துக்கொண்டு இன்னும் சிறிய காலம் இந்த யுத்தம் முடிவடையும் வரையிலும் அந்த சங்கிலி நீண்டு கொண்டே போகும்.

என் நண்பனே, ஒரு நாள் அது முடிவடையும்.

சீக்கிரம் - ஆனால் இன்னும் முடிவுபெறவில்லை.

எல்லா காலத்திலும், தேவன் தனக்கென்று ஒரு கூட்ட மக்களை எப்பொழுதும் வைத்திருந்தார் - அவர்கள் உண்மை யுள்ளவர்களும், விசுவாச முள்ளவர்களும், அழைக்கப் பட்டவர்களும் தெரிந்து கொள்ளப் பட்டவர்களுமாவர் - மேலும் அவருக்காக விசேஷமான ஒரு கூட்ட மக்கள் இன்றும் இருக்கிறார்கள்.

மழையை கொண்டு வருதல்

உண்மையில் அவர்தான் தீமூட்டினாரா என்பது சரித்திரத்தினால் உறுதியாக கூறமுடியாது. ஆனால் ஆரம்ப பழி அவர் மேல் விழுந்தது என சரித்திரம் உறுதிப்படுத்துகின்றது.

அது கண்டுபிடிப்பது வரை அவர் ஒரு பலி ஆட்டை தேர்ந்தெடுத்தார்.

கி.பி. 64 ல் ஒரு அக்கினிப்புயல் பரவி ரோமாபுரியிலுள்ள பதினான்கு மாவட்டங்களிலில் நான்கு தவிர மற்ற எல்லாவற்றையும் சுட்டெரித்தபோது, அதை கி.பி. 54 - 68 வரை ஆட்சிபுரிந்த நீரோ மன்னன் தான் தீமூட்டினார் என்ற வதந்தி பரவியது. நீரோ ஒரு மலை உச்சியில் நின்றுகொண்டு எரிகின்ற அந்த நகரத்தை பார்த்து தனது யாழை மீட்டி கீதங்கள் பாடினார் என்ற வதந்திகூட தீ பிடித்து எரிந்து கொண்டிருந்த அந்த வாரத்தில் பரப்பப்பட்டது. காலங்கள் செல்ல செல்ல ரோமாபுரி எரியும்போது நீரோ பிடில் வாசித்தார் என்ற புராணம் பேசப்பட்டது, ஆனால் பிடில் நீரோ காலகட்டத்தில் கண்டு பிடிக்கப்படவில்லை.

மக்களுடைய இந்த வரவேற்கப்படாத சந்தேகத்தை திசைதிருப்புவதற்காக நீரோ அந்த நகரத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் மீது பழிபோட்டர். ரோமானிய வரலாற்றாசிரியர் டெசிடஸ் இதை பற்றி கூறும்போது:

"வதந்தியை முடிவுக்கு கொண்டுவருவதற்காக நீரோ கிறிஸ்தவர்கள் என்று பொதுவாக அழைக்கப்பட்டவர்களை குற்றவாளிகளாக்கி அவர்களுக்கு மிக மேலான கொடூரமானமுறையில் தண்டனையை வழங்கினார். ரோமை சுற்றிக்கொண்டிருந்த வதந்தியின்

அழுத்தத்தை தற்காலிகமாக குறைப்பதற்காக நீரோவின் இந்த பலி ஆடுகள் ஒரு சிறந்த தேர்வாக இருந்தனர்."

அவர்களுடைய அருவருப்பான குற்றங்கள் என்ன?

ஆதி கிறிஸ்தவர்கள் மீது ஏன் இந்த தவறான எண்ணம்?

கிறிஸ்தவ சபையை கண்டெடுத்த இயேசு கிறிஸ்துவின் மரணத்துக்கு காரணமாக இருந்த தவறான புகார்கள் போலவே அவருடைய பின்னடியார்கள் மீதும் பொய்கள் பரப்பப்பட்டன. நன்மைக்கும் தீமைக்குமான, கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்குமான இந்த பெரிய போராட்டத்தை இயேசு கல்வாரியில் சிலுவை மரணத்தின் மூலமாக வென்றார். "எல்லாம் முடிந்தது" என்று சிலுவையில் இயேசு கூறியபோது சாத்தானின் இறுதி தண்டனையும் நிச்சயிக்கப்பட்டது.

சாத்தானின் இறுதி முடிவு அந்த இருண்ட வெள்ளிக்கிழமையில் முடிவு செய்யப்பட்டிருந்தாலும், படைத்தவருக்கும் ஒரு காலத்தில் பரலோகத்தின் மேலான தேவதூதனாக இருந்தவனுக்கும் இடையிலிருந்த போட்டி சார்ந்த மற்ற பிரச்சனைகள் முடிவு பெறாமல் இருந்தது. பிதாவின் நேர்மை, அவரின் சட்டம், அவரின் அரசாங்கம் மற்றும் அவரின் குணம் சார்ந்த கேள்விகளுக்கெல்லாம் இன்னும் முடிவான பதில்கள் கிடைக்கவில்லை.

இயேசு பரலோகத்திலிருக்கிற தனது பிதாவின் பக்கத்திற்கு திரும்பி சென்ற பிறகு சாத்தான் தனது திருப்திப்படுத்த படாத கோபத்தை கிறிஸ்துவின் பின்னடியார்கள் மீது திசைத் திருப்பினான். பாலஸ்தீன தெருக்களில் இயேசு நடந்த போது அவருக்கு எதிராக சாத்தான் பலவிதமான பயங்கரமான பொய்களை பரப்பினான். இப்பொழுதும் அதே தந்திரத்தை கிறிஸ்துவின் பின்னடியார்கள் மீதும் தொடர்ந்து பயன்படுத்துகிறான்.

வதந்திகள் ரோமின் தீயைப்போல பரவியது. இராபோஜன நடைமுறை மனித பலி மற்றும் நரமாமிசம் உண்ணும் பழக்கம்

என்றும், ஓய்வுநாளின் ஓய்வு சோம்பல் என்றும் தவறான குற்றச்சாற்றுக்கு வழிநடத்தியது. கிறிஸ்தவர்கள் காட்டுமிராண்டித்தனமான கொடூர குணங்கள் மற்றும் உக்கிரமான நடத்தை உடையவர்கள் என்று பேசப்பட்டது.

இதனால் நீரோ அந்த பெரிய தீயினால் தன்பேரில் இருந்த சந்தேகத்தை கிறிஸ்தவர்கள் மீது திசை திருப்புவது சுலபமாக இருந்தது. அந்த சகாப்தத்தின் வரலாற்றாசிரியர்கள் பதிவு செய்தது என்னவென்றால் கிறிஸ்தவர்கள் மீது தொடரப்பட்ட துன்புறுத்தலின் வேகம் தீயால் ஏற்பட்ட பழி சுமத்தலை விட மனிதகுலத்துக்கு கிறிஸ்தவர்கள் எதிரிகள் என்ற கண்ணோக்கம் காரணமாயிருந்தது.

அந்த துன்புறுத்தல் மிக கொடூரமானதாக இருந்தது.

டெசிடஸ் மறுபடியும் கூறுகிறார்: "மிருகங்களின் தோலில் மூடப்பட்டு நாய்களினால் பிற்கப்பட்டு மடிந்தனர், அல்லது சிலுவையில் அறையப்பட்டனர், அல்லது பகல் வெளிச்சம் குன்றிய உடன் இரவு வெளிச்சமாக அக்கினியால் எரிக்கப்பட்டனர்.

இரவின் வெளிச்சமாக கிறிஸ்தவர்கள் உயிருள்ள பந்தமாக கொளுத்தப்பட்டனர். சிலுவையில் அறையப்பட்டனர். நாய்களால் பிற்கப்பட்டு மாண்டனர். ஆமாம், மிக கொடூரமானது.

எலென் உவைட் அம்மையார் கூறும்போது: "கிறிஸ்துவை துன்புறுத்துவதற்காக அவருடைய ரூபத்திலிருந்த அவருடைய பின்னடியார்கள் மீது பூமியில் மற்றும் பாதாளத்திலுள்ள சக்திகள் எல்லாம் ஒன்று திரண்டது. நற்செய்தி வெற்றி பெறுமேயானால் தனது ஆலயங்களும் பலிபீடங்களும் அழிக்கப்படும் என்று பிற மார்க்கம் முன்பே கண்டதால் தன்னுடைய சக்திகளை அழைத்து கிறிஸ்துவத்தை அழிக்க முற்பட்டது" - இறுதி போராட்டம், ப. 39.

"அப்போஸ்தல திருச்சபையின் மீது அடிக்கப்போகும் பெருங்காற்றை ஒலிவ மலையிலிருந்து இயேசு கண்டார்,

எதிர்காலத்தை ஊடுருவி அவருடைய கண்களுக்கு தெளிவாக கடுமையாக தெரிந்தது என்னவென்றால், வரப்போகிற இருண்ட காலத்தில் தன்னுடைய பின்னடியார்களை தாக்கப்போகும் பேரலைகளை கண்டார்" - இறுதி போராட்டம், ப. 39.

ஒலிவமலையிலிருந்து இயேசு இந்த வார்த்தைகளை கூறினார்: "அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்" மத்தேயு 24:9.

ஆதியிலிருந்த, உண்மை கிறிஸ்தவர்களுக்கு கிடைத்த துன்புறுத்தல் நீரோவுடன் நிற்கவில்லை ஆனால் அது பல நூற்றாண்டுகளுக்கு தொடர்ந்தது. நீரோவின் காலக்கட்டத்தில் துவங்கி அவருக்கு பின் வந்தவர்களிடமிருந்து கிறிஸ்தவர்கள் ஏகதேசம் பத்து மிகப்பெரிய துன்புறுத்தல்களை சந்தித்தனர் என்று வரலாற்றில் பதிவுபெற்றுள்ளது.

- நீரோ (கி.பி. 64)
- தோமித்தியன் (கி.பி. 90-96)
- ட்ராஜன் (கி.பி. 98-117)
- ஹாட்ரியன் (கி.பி. 117-138)
- மார்கஸ் ஆரிலியஸ் (கி.பி. 161-181)
- செப்டிமஸ் செவிரஸ் (கி.பி. 202-211)
- திராசியன் என்ற மாக்ஸிமஸ் (கி.பி. 235-251)
- டெசியஸ் (கி.பி. 249-251)
- வேலெறியன் (கி.பி. 257-260)
- டையோகிலேசியன் / கலேரியஸ் (கி.பி. 303-311)

“நீரோவிற்கடியில் பவுல் கொலையுண்ட காலம் துவங்கி பல துன்புறுத்தல்கள் சிலநேரம் அதிகமாகவும் சிலநேரம் குறைவாகவும் பல நூற்றாண்டுகள் தொடர்ந்தது. மிக கொடூரமான குற்றங்கள் மற்றும் நிலநடுக்கம், கொள்ளை நோய்கள், பஞ்சங்கள் போன்றவைகளின்

காரணம் கிறிஸ்தவர்கள் என்று பொய்யான பழிகள் சுமத்தப்பட்டது. வெறுப்புக்கும் சந்தேகத்துக்கும் இடமளிப்பவர்களாய் இருந்ததால் சொந்த லாபத்துக்காக அப்பாவி மக்களுக்கு எதிராக துரோகம் செய்வதற்கும் காட்டிக்கொடுப்பதற்கும் சிலர் ஆயத்தமாக இருந்தனர். அவர்கள் ராஜ்யத்திற்கு விரோதமாக கலகம் செய்கிறவர்கள், மதத்தின் விரோதிகள், சமுதாயத்தை அழிக்கிறவர்கள் என்று கண்டனம் செய்யப்பட்டனர். அநேகர் காட்டு மிருகங்களுக்கு தூக்கி எறியப்பட்டனர் அல்லது அரங்குகளில் உயிருடன் எரிக்கப்பட்டனர். சிலர் சிலுவையில் அறையப்பட்டனர்; பிறர் மிருக தோலில் சுற்றப்பட்டு அரங்கில் நாய்கள் பிய்ப்பதற்காக வீசி எறியப்பட்டனர். இந்த தண்டனை அநேக நேரம் பொது மக்களின் பிரதான பொழுது போக்கு நிகழ்ச்சியாக நடத்தப்பட்டது. சாகும் தருவாயில் இருக்கும் இவர்களை பார்த்து சிரிக்கவும், கைகளைத்தட்டி கொண்டாடவும் மிக பெரிய அளவில் மக்கள் கூடினர்" - இறுதி போராட்டம், ப. 40.

வேதம் கூறுகிறது, இந்த உண்மையுள்ளவர்களில்: "வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்; கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள்; உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை; அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்" எபிரெயர் 11:36-38.

இந்த இடையூறா துன்புறுத்தலின் விளைவு என்ன? ஆரம்பகால கிறிஸ்தவர்களை அதைரியப் படுத்துவதில் வெற்றி கண்டனரா? இந்த திகில் அவர்களுக்கு அதிக பட்சமாகத் தெரிந்ததா? அவர்கள் கடைசியில் சோர்வடைந்துப்போய் விட்டுக் கொடுத்தனரா?

“கிறிஸ்துவின் சபையை வன்முறை மூலமாக வெற்றிகொள்ள சாத்தான் எடுத்த முயற்சிகள் வீணடைந்தது... தோல்வியின் மூலம் வெற்றியடைந்தனர்" - இறுதி போராட்டம், ப. 41.

"கிறிஸ்தவர்களின் உதிரமே விதை"

தெர்த்தூளியன் எழுதியபடி: "நீங்கள் எங்களை ஒவ்வொரு முறை வெட்டும் போதும், இன்னும் அதிக எண்ணிக்கையாக விருத்தியடைவோம்; கிறிஸ்தவர்களின் உதிரமே வித்து."

சாத்தான் செய்யவேன்றுமென்று முயற்சித்தது எதுவும் நடைபெறவில்லை. ஆனாலும் சாத்தான் ஒரு முட்டாள் எனவும் கருத முடியாது. மேட்டிமையினால் அவன் விழத்தள்ளப்பட்டபோது படைப்பில் அவனுக்கு இருந்த உயர்தரமான அறிவுத்திறமை ஒன்றும் மறையவில்லை. அவன் தனது பிரகாசமான மனதை தீய காரியங்களில் மறுபடியும் ஈடுபடுத்தினான்.

தெளிவாக, அவன் யுத்த தந்திரத்தை முழுமையாக மாற்றவேண்டிய நேரம் வந்தது.

“நம்முடைய பெரிய எதிரி தன் ஆதிக்கத்தினால் செய்ய முடியாததை தந்திரத்தால் அடைய முயற்சித்தான். துன்புறுத்தல்கள் முடிவுற்றன அதற்கு பதிலாக உலகமரியாதை மற்றும் உலகசெழிப்பு என்னும் ஆபத்தான காரியங்களால் வசீகரித்தான். விக்கிரகத்தை வணங்குபவர்கள் மற்ற முக்கிய உண்மைகளை மறுதலித்திருந்தும் கிறிஸ்துவத்திற்குள் வழி நடத்தப்பட்டனர். இயேசுவை பிதாவினுடைய குமாரனென்றும் அவருடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் அவர்கள் ஏற்றுக்கொண்டதாக அறிவித்திருந்தும், பாவத்தை குறித்து குற்ற உணர்ச்சி இல்லாமலும் அதற்காக மன்னிப்பு கோராமலும் இதய மாற்றமில்லாமலும் இருந்தனர். இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் அவர்கள் தரப்பில் சில காரியங்களை

விட்டுக்கொடுத்து கிறிஸ்தவ தரப்பிலும் சில காரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டும் என்று முன்மொழிந்தனர்.

"இப்பொழுது சபை மிகவும் பயங்கரமான ஆபத்தில் சிக்கிக்கொண்டது. சிறை, சித்திரவதை, தீ, வாள் போன்றவை இதை ஒப்பிட்டு பார்க்கும் போது பெரிய ஆசீர்வாதமாக தோன்றியது. சில கிறிஸ்தவர்கள் சமரசம் செய்ய இயலாது என்றுக் கூறி நிலையாக நின்றனர். மற்றவர்கள் கிறிஸ்தவ நம்பிக்கையில் உள்ள சில காரியங்களை மாற்றுவதற்கும், கிறிஸ்துவத்தின் ஒரு பகுதியை ஏற்றுக்கொண்ட மற்ற மக்களுக்கு இது முழு மனமாற்றமடைவதற்கு ஒரு துவக்கமாக அமையும் என்று கருதினர். கிறிஸ்துவின் உண்மையான மக்களுக்கு இது ஒரு ஆழமான வேதனையளிக்கும் சமயமாக இருந்தது. உண்மையிலிருந்து அவர்கள் மனதை திருப்பவும், அவர்கள் நம்பிக்கையை கெடுக்கவும் போர்வைக்குள்ளே ஒளிந்துகொண்டு சாத்தான் தன்னை சபைக்குள்ளே ஊடுருவ முயற்சித்தான்.

"தங்களுடைய நிலையை குறைத்துக்கொள்ள அநேக கிறிஸ்தவர்கள் இசைந்தனர், கிறிஸ்தவத்திற்கும் புறஜாதியருக்கும் இடையே ஐக்கியம் தொடங்கியது" - இறுதி போராட்டம், ப. 42, 43.

துன்புறுத்தல் வேலை செய்யவில்லை. ஆனால் சமரசம்? இதில் எதிரிக்கு மிகப்பெரிய வெற்றி கிடைத்தது.

ஏழு சபைகளின் முத்திரைக்கு கீழே, வெளிப்படுத்தின விசேஷம் கிறிஸ்தவ சபையின் துவக்கத்திலிருந்து மீண்டும் அதன் நிறுவனர் வரையுள்ள முழு சரித்திரத்தையும் அடையாளம் காட்டுகிறது. இதற்கு முன்புள்ள அத்தியாயத்தில் குறிப்பிட்டதுப் போல, இந்த சபைகளின் துல்லியமான துவக்கம் மற்றும் முடிவு தேதிகள் ஒரு வேத அறிஞரிடமிருந்து இன்னொருவருக்கு வேறுபடும், முதல் மூன்று சபைகளின் தோராயமான காலகட்டங்கள் பின்வருமாறு:

எபேசு - பெந்தெகொஸ்தேயிலிருந்து சுமார் கி.பி. 100 வரை

சிமிர்னா - கி.பி. 100 லிருந்து சுமார் கி.பி. 313 வரை

பெர்கமு - கி.பி. 313 லிருந்து சுமார் கி.பி. 538 வரை

எபேசு

ஏழில் முதன்மையான எபேசு சபைக்கு தேவன் அனுப்பிய செய்தியை கவனியுங்கள்:

"எபேசு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலதுகரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும்; நீ சகித்துக்கொண்டிருக்கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன். ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்" - வெளிப்படுத்தின விசேஷம் 2:1-5.

இந்த புத்தகத்தில் நாம் மேற்கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வார்த்தையையும் சொற்றொடரையும் ஆராய போவது கிடையாது. ஆனால் இந்த முதல் செய்தியிலிருந்து நாம் ஒரு காரியத்தை

உற்றுநோக்க வேண்டும்: தேவன் ஆதிக் கிறிஸ்தவர்களின் "வேலை" மற்றும் "பொறுமையும்" அங்கீகரித்தார்.

தன் தலைவன்மேல் சாவைவிட மேலான பற்று கொண்டிருந்ததால்தான் நினைத்து பார்க்க முடியாத கொடிய துன்புறுத்தல்களை அனுபவித்திருந்தாலும் அதை மேற்கொள்ள ஆதி கிறிஸ்தவர்களால் முடிந்தது. என்ன விலை கொடுக்க நேர்ந்தாலும் அவர்கள் உண்மையுடனும், விசுவாசத்துடனும் இருந்தனர்.

ஆனால் சில காலத்தில், சிலர் தடுமாற ஆரம்பித்தனர். அவர்கள் தலைவர் மீதுள்ள இணைப்பை இழக்க துவங்கினர். இயேசுவுடனிருந்த உறவை சிலர் சுலபமாக எடுத்துக்கொள்ள ஆரம்பித்தனர்.

இது அநேக சமயத்தில் நடப்பது தான். புதிதாக திருமணம் ஆனவர்கள் முதல் அன்பின் சுட்டெரிக்கும் அக்கினியினால் மேற்கொள்ளப்பட்டு, ஒருவருக்கொருவர் எதை வேண்டுமானாலும் செய்வதற்கு ஆயத்தமாகின்றனர், மரிப்பதானாலும் சரி. ஆனால் நேர காலத்தில், மன அழுத்தம் மற்றும் கவனக்குறைவு மிக மெதுவாக அறிந்துகொள்ளவே இயலாத விதத்தில் மாற்றத்தை கொண்டுவரும். முதல் அன்பின் அக்கினி மரிக்கத்துவங்கும், லேசாக எரியும் நிலக்கரி போல அல்லது குளிர்ந்த நிலக்கரி சாம்பல் போல மாறிவிடும்.

ஒருவேளை காலவரையின்றி இந்த முதல் அன்பின் உணர்வும் தீவிரமும் நீடிக்கும் என்பது நம்பத்தகாதது. நல்ல திருமணங்களில் அது நிலையான ஆழமான பரஸ்பர பாராட்டுக்கள் உள்ளதாகவும், அர்ப்பணிப்பு மற்றும் வலிமையான பிணைப்பாகவும் மாறிவிடும், இது "முதல் அன்பின்" காதல் தீயைவிட மிக நாள் நீடிக்க கூடியது.

ஆனால் கவலைக்குரியது என்னவென்றால் அநேக நேரங்களில் "முதல் அன்பு" எரிந்து முடிந்த நிலக்கரிப்போல சலிப்புக்கும், எரிச்சலுக்கும், அக்கரையின்மைக்கும் வழிநடத்தும்.

எபேசு சபைக்கு தேவன் சொன்னது: "நீ ஆதியில் கொண்டிருந்த அன்பைவிட்டாய். மனந்திரும்பி ஆதியில் செய்த கிரியைகளை செய்வாயாக." பல பதற்றமான உறவுகளில் ஒருகாலத்தில் சுலபமாக செய்ததை மறுபடியும் ஒருவருக்கொருவர் செய்ய ஆரம்பித்தால் அந்த உறவு பாதுகாக்கப்படும்.

தோராயமாக கி.பி. 100 ல் எபேசு சபையின் முடிவு காலத்தில் - துன்புறுத்தல்கள் துவங்க ஆரம்பித்த சமையத்தில் சபையின் தலைவர் - சிலர் சாகும்வரை உறுதியாக இருப்பதையும் மற்றவர் தங்களிடமிருந்த முதல் அன்பிற்கு பதிலாக மெத்தனப்போக்கை கையாடியதையும் கண்டிப்பது அவசியம் என்று கண்டறிந்தனர்.

இந்த போக்கு தொடர்ந்தால் தன் பின்னடியார்களால் நிலைத்து நிற்க முடியாது என்று சபைத் தலைவர் அறிந்திருந்தார். மனம் திரும்பவும், திரும்பிவரவும், உண்மையான பழைய வைராக்கியத்தை சீர்ப்படுத்தவும் அவர் அவர்களிடம் வலியுறுத்தினார். அவர்களுக்கு முதல் அன்பு தீவிரமாக தேவைப்பட்டது, ஏனென்றால் சிமிர்னா வெகு அருகாமையில் இருந்தது.

சிமிர்னா

சிமிர்னா - சுமார் கி.பி. 100 லிருந்து 313 வரையிருந்த சபை - தீவிர துன்புறுத்தல்களை சந்தித்த சபை. தேவன் எழுதிய ஏழு கடிதங்களுள் சிமிர்னாவுக்கு எழுதிய கடிதத்தில் மட்டும் தான் அவர் கடிந்துக் கொள்ளவில்லை.

"உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும், நீ ஐசுவரியமுள்ளவனாயிருந்தும் உனக்கிருக்கிற தரித்திரத்தையும், தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன். நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன்

உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" வெளிப்படுத்தின விசேஷம் 2:9, 10.

தங்களுடைய நம்பிக்கைக்காக சாவை எதிர்கொள்பவர்களுக்கு தேவன் "மரித்து பின் உயிரோடெழும்பினார்" என்பதை நினைவு கூறும்போது உண்மையாகவே ஆறுதலையும் தைரியத்தையும் கொடுத்திருக்கும். அதே போல் அவர்களுக்கும் நடக்கும் என்பதற்காக.

நீங்கள் எதை எதிர்கொள்ளவிருக்கிறீர்கள் என்பது நான் அறிந்ததே என்று அவர்கள் தலைவர் கூறினார். உங்களுடைய விசுவாசத்திற்காக சிலர் சிறையில் அடைக்கப்படுவீர்கள் என்று அறிந்திருக்கிறேன். சிலர் மரிப்பீர்கள். ஆனாலும் கலங்கவேண்டாம். மரிக்கும் வரை உண்மையாக இருந்தால் ஜீவக்கிரீடத்தை உங்களுக்குத் தருவேன்.

சிமிர்னா சபைக்கு சொன்ன காரியங்கள் கடைசிகால சபைக்கும் பொருந்தும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன் அவருடைய பின்னடியார்களில் சிலர் தமது விசுவாசத்திற்காக மரணத்தை எதிர்கொள்வார்கள். இப்பொழுது உயிருடன் இருக்கும் நாம் கூட அதில் இருக்கலாம். இறுதிக்காலத்தில் வாழ்பவர்களுக்கும் கூட ஜீவகிரீடத்தின் வாக்குத்தத்தம் இருக்கின்றது.

"பத்து நாள் உபத்திரப்படுவீர்கள்" என்று தேவன் சொல்லுகிறார். உண்மையிலே ஆதி நூற்றாண்டுகளில் ரோம அரசர்களுக்கடியில் உபத்திரவங்கள் விட்டு விட்டு நடந்திருந்தாலும் மிகவும் இரத்தம் தோய்ந்த தீவிர உபத்திரவம் டயோக்கிளேசியனுக்கடியில் கி.பி. 303 - 313 வரை உள்ள அந்த பத்து வருடங்கள் தான் என்பது பொதுவாக நம்பப்படுகிறது. ஒரு நாள் ஒரு வருடம் என்ற வேத தீர்க்கதரிசன கொள்கை அடிப்படையில் (பார்க்கவும் எண்ணாகமம் 14:34; எசேக்கியேல் 4:6) பத்து நாட்கள் என்பது பத்து வருடங்கள்.

பெர்கமு

சாத்தான் தனது யுத்த தந்திரத்தை துன்புறுத்தலில் இருந்து சமரசத்திற்கு மாற்றிய காலகட்டத்தை குறிக்கும் சபையை நாம் இப்பொழுது அடைந்துள்ளோம். கி.பி. 313 லிருந்து 538 வரை, சிலை வணக்கமும் கிறிஸ்துவத்துவமும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தது. இந்த காலகட்டத்தில் ரோம சபை, கிறிஸ்தவர்கள் மீது ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது, ஆதி சபைக்கு பழக்கமில்லாத பல நடைமுறைகள் மற்றும் கோட்பாடுகளை வரவேற்க ஆரம்பித்தது. கடைசியில் சபையையும் "நாட்டையும்" (அரசாங்கம்) பிரிக்கும் கோடு இன்னும் அதிகமாக மங்கத் துவங்கியது.

"பெர்கமு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளையும், சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும் நீ என் நாமத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறதையும், சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததையும் அறிந்திருக்கிறேன். ஆகிலும், சில காரியங்களைக்குறித்து உன்பேரில் எனக்குக் குறை உண்டு; விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம்பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர்முன்பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனை செய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு. அப்படியே நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும் உன்னிடத்திலுண்டு; அதை நான் வெறுக்கிறேன்" - வெளிப்படுத்தின விசேஷம் 2:12-15.

மறுபடியும் இந்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் எல்லா விவரங்களையும் விரிவுபடுத்தாமல், மரணம் வரை விசுவாசமுடன்

இருப்பதாய் தெளிவாக இயேசு அவரது மக்களுக்கு ஞாபகப்படுத்துகிறார். ஆனால் கோட்பாடுகளின் பரிசுத்தத்தை சமரசம் செய்வதற்கான காரணத்தை கேட்கின்றார். உண்மையின் இடத்தில் தவறை அங்கீகரித்தனர்.

கி.பி. 313 ல் பேரரசர் கான்ஸ்டன்டின் "மத மாறுதல்" அடைந்தபின் கிறிஸ்துவத்தை நாட்டு மதமாக மாற்றியதிலிருந்து, போப்பின் ஆதிக்கம் கி.பி. 538 நிறுவியது வரை கிறிஸ்துவம் சமரசத்தில் ஈடுபட்டது. வேதாகமத்தை சார்ந்த ஏழாம் நாள் ஓய்வுநாள் போலியான ஞாயிறு ஓய்வுநாளுக்கு வழிவிட்டது. கிறிஸ்தவர்களுக்கு ஒரு உண்மை அதிகாரத்துவமாக இருந்த வேதாகமம் மனித பாரம்பரியத்துக்கு விட்டுக்கொடுக்கப்பட்டது. மத சுதந்திரம் மதங்களுக்கு எதிரான கொள்கை என அழைக்கப்பட்டது. இப்பொழுது இரட்சிப்பு ஒரு இலவச பரிசு அல்லவென்றும் உதவியில்லாத மனித முயற்சியின் வெகுமதி என்று கருதப்பட்டது.

கிறிஸ்துவின் பின்னடியார்களை துன்புறுத்தல்கள் அழிக்கவில்லை என்று சாத்தான் அறிந்து தனது யுத்த தந்திரத்தை மாற்றி சமரசத்தை பயன்படுத்த ஆரம்பித்தான் என்று நாம் முன்னமே படித்தோம். ஆனால் சாத்தான் முழுமையாக துன்புறுத்தல்களை கைவிட்டுவிட்டானா என சொல்ல முடியுமா?

மிக தெளிவாக, இல்லை.

“இன்று சபையின் கவனம் வேறொரு மிக முக்கியமான கேள்வியில் ஈடுபட்டிருக்க வேண்டியதிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார்: "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" 2 தீமோத்தேயு 3:12. ஆனால் ஏன் துன்புறுத்தல் தூங்கிக் கொண்டிருப்பதுப்போல தெரிகின்றது? இதற்கு ஒரே காரணம் சபை உலகத்தின் தரத்திற்கு தன்னை சமரசம் செய்துக் கொண்டதால் எதிர்ப்பும் எதுவும் எழவில்லை. கிறிஸ்துவும் அவருடைய

அப்போஸ்தலரின் காலகட்டத்தில் கிறிஸ்தவ நம்பிக்கியை குறித்து காட்டிய தூய மற்றும் பரிசுத்த குணம் அன்று மதத்திலிருந்ததுப் போல இன்று நமது நாட்களில் இல்லை. பாவத்துடன் சமரசத்தின் ஆவி இணைந்ததால் தான், தேவ வார்த்தையின் பெரிய உண்மை அலட்சியமாக எண்ணப்பட்டு மிகவும் அவசியப்படுகின்ற தேவபக்தி சபையில் குன்றிப்போனதால்தான், கிறிஸ்தவம் உலகத்தில் இவ்வளவு பிரபலமாக உள்ளது. ஆதி சபையில் இருந்தது போல விசுவாசம் மற்றும் சக்தி மறுமலர்ச்சி அடைந்தால், துன்புறுத்தலின் ஆவியும் மறுமலர்ச்சி அடையும், துன்புறுத்தலின் ஆவி மறுபடியும் பற்றிக்கொள்ளும்" - இறுதி போராட்டம், ப. 48.

ஒருவேளை ஆதிக்கிறிஸ்தவர்களை வசீகரிக்கும் சாத்தானின் முயற்சி வெற்றி பெற்றிருக்காவிட்டால் - அவர்கள் இடைவிடாமல் உண்மையாக இருந்திருந்தால் - மேலே கொடுக்கப்பட்டிருக்கும் கருத்தில் கூறியதுபோல சாத்தான் மறுபடியும் இன்னும் அதிக துன்புறுத்தலுக்கே திரும்பியிருப்பான்.

ஆதிக்கிறிஸ்தவர்கள் அனுபவித்தது போன்ற துன்புறுத்தல்கள் இப்போது ஏன் இல்லை? ஏனென்றால் சமரசம் மிகவும் நன்றாக வெற்றிநடை போடுகின்றது, சபையளவில் (வேதாகம உண்மைகள் குறித்த அலட்சியம்) தனி நபர் (பாவத்துடன் சமரசம்) அளவிலும் தான்.

எல்லா அட்வென்டிஸ்த்தருக்கும் எப்படியும் பின்மாறி வருமென்று தெரியும். முடிவுக்கு முன் ஒரு பெரிய மறுமலர்ச்சி ஏற்படும் என்று அறிந்திருக்கிறோம். "பழங்கால தெய்வபக்தி" மறுபடியும் பிரபலமாகும் என்றறிந்திருக்கிறோம்.

அது நடக்கும் போது, துன்புறுத்தல் மறுபடியும் திரும்பும். உபத்திரவத்தின் காலம் துவங்கும். ஆதிகிறிஸ்தவர்கள் தாங்கி கொண்டது போலவும் அதற்கும் மேலாகவும் இறுதி காலத்தில் வாழும் தேவ மக்களும் அனுபவிப்பர்.

சிலருக்கு இது அச்சுறுத்தலாகத் தெரியலாம் - துன்புறுத்தலிலும் ஏன் மரணத்திலும் உண்மைக்காகவும் உண்மையாய் இருக்கிற அவருக்கு நாம் திடனாய் நிற்க நமக்கு வலிமை உள்ளதா என்று எண்ணலாம். சித்திரவதை, பட்டினி, சிறை, மரணம் இவைகளையெல்லாம் நம்மால் தாங்கிக் கொள்ள முடியுமா?

கிருபை அது தேவைப்படுகிற நேரத்தில்

தேவன் கூறுகிறார்: "என் கிருபை" உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" - 2 கொரிந்தியர் 12:9.

இன்றைக்கு - இந்த தருணத்தில் - துன்புறுத்தலுக்கும் மரணத்திற்கும் உங்களுக்கு கிருபை இல்லாமல் இருக்கலாம். ஏனென்றால், இன்றைக்கு நீங்கள் அதை சந்திக்க போவதில்லை. ஆனால் நேரம் வருகின்றபோது தேவன் உங்களை கேட்டால், அனுமதித்தால், அல்லது இந்த காரியங்களை சந்திக்கும் மேன்மையை நமக்கு கொடுத்தால், அப்பொழுது மட்டும், அந்த நேரத்தில் கிருபை வழங்கப்படும்.

இருந்தபோதிலும், இப்பொழுது நாம் என் தேவனுக்கு எவ்வளவு விசுவாசம் உடையவர்களாய் இருக்கின்றோம் என்பது பின்னால் எப்படி விசுவாசம் உடையவராய் இருக்க போகின்றோம் என்பதற்கு ஒரு ஆயத்தம். தேவனுடைய உண்மைக்கு எவ்வளவு நம்பிக்கை உடையவனாய் நான் இருக்கின்றேன் - எவ்வளவு நம்பிக்கை உடையவர்களாய் நீங்கள் இருக்கின்றீர்கள் என்பது பின் எவ்வளவு நம்பிக்கை உடையவர்களாய் நாம் இருப்போம் என்பதற்கு ஓர் அளவு.

எபேசு, சிமிர்னா, பெர்கமு இம்மூன்றின் வழியாகவும் தேவனுக்கு விசுவாசமும் உண்மையுள்ள மக்கள் இருந்தனர். பூமியில் ஆதாமில் ஆரம்பித்து இறுதிவரை செல்லவிருக்கும் காலகட்டத்தில் இருந்த உடைக்கமுடியாத வரிசையின் ஒரு அங்கமாய் நின்றனர். அது ஒரு

உடைக்கமுடியாத சங்கிலி, அதின் இணைப்பாக நீங்களும் நானும் இருக்கின்றோம்.

மிக பெரிய சோதனை காலம் வரும்போது, நாம் உறுதியாய் நிற்க வேண்டும். நம்முடைய சிறந்த ஆயத்தம்? வலிமையின் ஆதாரமாக திகழுபவரிடம் வலுவான இணைப்பை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். இன்றைக்கு - நாளைக்கு - என்றென்றும்.

நாட்டுப்புற பாடகரான ஜோ டீ மெசீனாவின் மிக சிறந்த பாடலில் இந்த வார்த்தைகள் உள்ளன: "நாளை இன்னொரு தினம்... என்னவிருந்தாலும் நான் தாகமாக இருக்கின்றேன்... அதனால் மழையை கொண்டு வாருங்கள்."

மறுமலர்ச்சி குறித்து இதே கருத்தை எதிரொலிக்காமலும் உணர்ச்சியில்லாமலும் ஒரு அட்வென்டிஸ்ட் எங்கேனும் இருக்க முடியுமா?

ஆமாம், நாளை இன்னொரு தினம். நான் எப்போதும் தாகமாக இருக்கின்றேன் தேவனே.

அதனால் மழையைக் கொண்டு வாருங்கள் - பின்மாறி மழையை.

எல்லா காலத்திலும், தேவன் தனக்கென்று ஒரு கூட்ட மக்களை எப்பொழுதும் வைத்திருந்தார் - அவர்கள் உண்மை யுள்ளவர்களும், விசுவாச முள்ளவர்களும், அழைக்கப் பட்டவர்களும் தெரிந்து கொள்ளப் பட்டவர்களுமாவர் - மேலும் அவருக்காக விசேஷமான ஒரு கூட்ட மக்கள் இன்றும் இருக்கிறார்கள்.

வனாந்திர ஸ்திரீ

ஹாலிவுட்டின் திரைப்படத்துறை கடலில் அலை சறுக்குபவர் போன்றது - அடுத்தப் பெரிய அலை எப்போது வரும் என்று பார்த்துக் கொண்டே இருக்கும்.

மதம் சார்ந்த புத்தகங்கள் சிறந்த விற்பனையாளர் பட்டியலில் மேல் இருந்தால் உடனே அதை பணமாக்கும் முயற்சியில் ஈடுபடுவர். *லெப்ட் பிஹைண்ட்* (பின்னால் விடப்பட்ட) என்ற புத்தக தொடரின் உலகமுழுவதுமான வெளியீட்டு சாதனையினால் அமெரிக்க நடிகர் மெல் கிப்ஸன் தயாரிப்பில் *தி பேஷன் ஆப் தி கிறைஸ்ட்* (இயேசுவின் பேரார்வம்) என்ற திரைப்படம் தயாரிப்பதற்கு வழிவகுத்தது அதோடு அது நன்றாக ஓடியது. அந்த திரைப்படம் பாக்ஸ் ஆப்பீசில் நல்ல பணம் ஈட்டியதால், மற்ற தயாரிப்பாளர்கள் நேரத்தை வீணாக்காமல் *தி டா வின்சி கோட்* மற்றும் *தி லயன், தி விட்ச், அண்ட் தி வார்டரோப்* போன்ற கதைகளை படமாக்கினர்.

இதைக் குறித்து கவலை வேண்டாம், ஹாலிவுட் எப்போதுமே சரியானதொன்றை எடுப்பதில்லை. மனக்கிளர்ச்சியை ஈர்க்கின்ற வகையில் இல்லாதிருந்தால், அதை கஷ்டப்பட்டு பணமாக்க வேண்டும் என்று உண்மையை தவறாக்கி வேதாகமத்திற்கு புறம்பான மார்க்கத்தை கதையாக்கி - அல்லது கற்பனை வடிவத்தை அதிகமாக பயன்படுத்துகின்றனர்.

திரைப்பட படைப்பாளர்கள் உண்மையில் பார்வையாளர்களுக்காக ஒரு மதம் சார்ந்த திகைப்பூட்டும் படத்தை எடுக்க முற்பட்டால் - விசேஷித்த முயற்சியுடன் சவால் விடும் வகையில் அமைந்து

பரபரப்பான ஒரு நாடகம் தேவையென்றால் அவர்கள் வேதாகம புத்தங்களான தானியேல் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகங்களில் உள்ள தீர்க்கதரிசனங்களை பெரிய திரையில் வெளியிட கதையாக்க வேண்டும். ஆனால் அதை எடுக்காமல் இருப்பதே நல்லது, ஏனென்றால் அதை மேம்படுத்தும் முயற்சியில் கதையை மாற்றுவார்கள். அதை அப்படியே விடுவது அவர்களால் இயலாது.

ஆனால் உங்களால் தானியேல் மற்றும் வெளிப்படுத்தின விசேஷத்தை மேம்படுத்த முடியாது. உதாரணமாக வலுசர்ப்பமும் ஸ்திரீயின் கதையை எடுத்துக்கொள்ளுங்கள்.

ஒரு அட்வென்டிஸ்த்தராக, சந்தேகத்துக்கு இடமில்லாமல் இந்த கதையை நன்கு அறிந்திருப்பீர்கள். அப்படியென்றால் அது ஏற்கனவே ஒரு நல்லக் கதை என்று உங்களுக்கு தெரிந்திருக்கும். அதனால் உங்களுடைய மனக்கண்களில் உள்ள அந்த பெரிய, அகல திரையை திறந்து மறுபடியும் வெளிப்படுத்தின விசேஷம் 12 ல் உள்ள நாடகத்தை காணுங்கள்:

"அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள், அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவள் சிரசின்மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன. அவள் கர்ப்பவதியாயிருந்து, பிரசவவேதனையடைந்து, பிள்ளைபெறும்படி வருத்தப்பட்டு அலறினாள். அப்பொழுது வேறொரு அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும், தன் தலைகளின்மேல் ஏழு முடிகளையுமுடைய சிவப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது. அதின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கை இழுத்து, அவைகளைப் பூமியில் விழத்தள்ளிற்று; பிரசவவேதனைப்படுகிற அந்த ஸ்திரீ பிள்ளைபெற்றவுடனே, அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது" - வெளிப்படுத்தின விசேஷம் 12:1-4.

நல்ல கதை எழுத்தாளர்கள் "பின்னோக்கி பார்த்தல்" என்ற உத்தியை பயன்படுத்துவர், அதில் அவர்கள் சொல்லும் கதையை குறுக்கிட்டு பின்னொரு காலகட்டத்துக்கு எடுத்துசெல்லுவர். வெளிப்படுத்தின விசேஷத்தின் எழுத்தாளரான யோவான் அப்போஸ்தலன் ஒரு நல்ல எழுத்தாளர். மேலுள்ள வசனங்களில், அந்த வலுசர்ப்பம் தன்னுடைய வாலினால் "வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கை இழுத்து, அவைகளைப் பூமியில் விழத்தள்ளிற்று" என்று யோவான் கூறுகின்றார்.

கதை அப்படியாக முன்னோக்கி செல்லுகிறது, ஆனால் பின்னர் ஒரு காலக்கட்டத்தில் யோவான் "வானத்திலிருந்த நட்சத்திரங்கள்" பூமியில் தள்ளப்பட்டதை மீண்டும் சுட்டி காண்பிக்கின்றார்.

"வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று. உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்" - வெளிப்படுத்தின விசேஷம் 12:7-9.

வலுசர்ப்பத்தின் தூதர்கள் - பரலோகத்தின் நட்சத்திரங்களான மூன்றில் ஒரு பகுதி தூதர்கள் அவனுடனே பூமிக்கு தள்ளப்பட்டார்கள்.

சுருக்கமாக இந்த மூன்று வசனங்களும் நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான இறுதிப் போராட்டத்தின் துவக்கத்தை விவரிக்கின்றது. தேவன் மீது வலுசர்ப்பம் (தெளிவாக அடையாளம் கண்டுகொள்ளப்பட்ட சாத்தான் அல்லது பிசாசு என்றும் விழுந்து போன தூதன் லூசிபர்) போரை அறிவித்தவுடன், அவனும் அவனுடனிருந்த பொய்யுரைத்து

ஏமாற்றப்பட்ட மூன்றில் ஒரு பங்கு தூதர்களும் மிகாவேலுடன் (கிறிஸ்து) போரிட்டனர்.

வனாந்திரத்தில் இருந்த ஸ்திரீ

ஆனால் பூமியிலும், வலுசர்ப்பமான சாத்தான் தேவனுடன் உள்ள போரை தொடர்ந்தான். வெளிப்படுத்தின விசேஷத்தை கவனமாக படிக்கும் பொழுது ஸ்திரீ என்பது சபைக்கு அடையாளம் என்பதை தெளிவுபடுத்துகின்றது. இங்கு வெளிப்படுத்தின விசேஷம் 12 ல் நாம் ஒரு நல்ல ஸ்திரீயை குறித்து பார்க்கின்றோம். வெளிப்படுத்தின விசேஷம் 17 ல் ஒரு மிக கெட்ட ஸ்திரீயை பற்றியும் பார்க்கிறோம்.

இங்கு நமது கதையில், ஸ்திரீ ஒரு பிள்ளையை பெற்றெடுப்பதற்காக ஆயத்தமாக இருக்கின்றாள், பிறந்த அக்கணமே பிள்ளையின் மீது பாய்வதற்காக கோபமான வலுசர்ப்பம் காத்துக்கொண்டிருப்பது போன்ற படத்தை யோவான் நமக்காக வரைந்திருக்கிறார். ஆனால் தேவன் தாயையும் அவளுடைய பிள்ளையையும் பாதுகாத்தார்.

"சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகைசெய்யும் ஆண்பிள்ளையை அவள் பெற்றாள்; அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும், எடுத்துக்கொள்ளப்பட்டது. ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்; அங்கே ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காகத் தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது" - வெளிப்படுத்தின விசேஷம் 12:5, 6.

அந்த ஆண்பிள்ளை வேறுயாருமில்லை பரலோகத்திலே வலுசர்பத்துக்கு எதிராக யுத்தம் செய்த மிகாவேலான இயேசுவே. இப்பொழுது இயேசு பூமிக்கு வந்து பாலகனாக பிறந்து, வாலிபனாக வளர்ந்து, மனிதகுலத்தின் இரட்சகராக மாறினார்.

ஆனால் அவருடைய வாழ்வு, மரணம், மற்றும் உயிர்தெழுதலுக்குப் பிறகு இயேசு பிதாவினிடத்திற்கும் தம்முடைய சிங்காசனத்திற்கும் ஏறிச்சென்றார். பின்பு வலுசர்ப்பம் தனது முழு கவனத்தையும் இயேசு பரமேறி செல்வதற்கு முன்பாக நிறுவிய சபையாகிய ஸ்திரீ மீது திருப்பியது.

யோவான் சொல்லும்போது அவள் "வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்," அங்கு தேவன் அவளை "ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும்" போஷித்தார்.

"வலுசர்ப்பமானது தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்து, அந்த ஆண்பிள்ளையைப்பெற்ற ஸ்திரீயைத் துன்பப்படுத்தினது. ஸ்திரீயானவள் அந்தப் பாம்பின் முகத்திற்கு விலகி, ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்துபோகும்படி பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது" - வெளிப்படுத்தின விசேஷம் 12:13, 14.

ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும். ஆயிரத்திருநூற்றறுபது நாள். இது என்ன?

காலத் தீர்க்கதரிசனங்களில், வேதாகமம் கூறுகிறது ஒரு நாள் ஒரு வருடத்திற்கிணையாகும் (பார்க்கவும் எண்ணாகமம் 14:34, எசேக்கியேல் 4:6). தீர்க்கதரிசன கணக்கீட்டின் படி ஒரு வருடத்திற்கு 360 நாட்கள். ஒரு சிறிய கணக்கு போட்டுப் பார்ப்போம். ஆயிரத்திருநூற்றறுபது நாள் (1,260) அது 1,260 வருடங்களுக்கு இணை. வேதாகம வசனங்களுடன் ஒப்பிட்டால், "காலம்" என்பதுக் கூட ஒரு வருடத்தை குறிக்கின்றது என்று தெளிவாக தெரிகின்றது. அதனால் காலம் (360 நாட்கள்) காலங்கள் (2 x 360 நாட்கள், அல்லது 720 நாட்கள்) அரைக்காலம் (180 நாட்கள்) இம்மூன்றையும் கூட்டினால் 1,260 நாட்கள். கணக்கு முக்கியப் பாடமாக கொண்டோரே, இது சரிதானா?

வசனம் 6 ல் கொடுக்கப்பட்டுள்ள "ஆயிரத்திருநூற்றறுபது நாள்" என்பதும் 14 ல் கொடுக்கப்பட்டுள்ள "காலம், காலங்கள், அரைக்காலம்" என்பதும் எல்லாம் ஒன்றே.

ஸ்திரீ வனாந்திரத்திலே 1,260 வருடமிருப்பாள்.

இப்பொழுது நாம் காரியங்களை சிறிதளவு சுவாரஸ்ய படுத்தலாம். பழையேற்பாட்டில் தானியேல் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளதை கவனியுங்கள்:

"உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; அவர்கள் ஒருகாலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்" தானியேல் 7:25.

இங்கு "அவன்" என்று சொல்லப் பட்டிருக்கிறது அந்த பெரிதும் பயங்கரமுமான பத்துக் கொம்புள்ள மிருகம் தான். எவ்வளவு நாட்கள் இந்த பெரிய சக்தி பரிசுத்தவான்களை துன்புறுத்தும் என்பதை கவனியுங்கள். "காலம், காலங்கள் மற்றும் அரைக்காலம்" எங்கோ கேட்டிருப்பதுபோல் தெரிகின்றதா?

தானியேல் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் இவ்விரண்டுமே 1,260 வருடங்கள் குறித்து முன்னறிவிக்கின்றது. பரிசுத்தவான்கள் இந்தக் காலக்கட்டத்திலே துன்புறுத்த படுவார்கள் என்று தானியேல் கூறுகிறார். ஸ்திரீ இந்தக் காலக்கட்டத்திலே துன்புறுத்த படுவாள் என்று வெளிப்படுத்தின விசேஷம் கூறுகிறது. ஸ்திரீ, சபை, பரிசுத்தவான்கள் எல்லாம் ஒன்றே.

தானியேல் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகங்கள் இவ்விரண்டின் மேலும் பார்வையை வைத்து, 1,260 வருடங்களில் பல காரியங்கள் நடைபெறுவதை அறிந்துகொள்ளுகின்றோம்.

- பரிசுத்தவான்கள் (அல்லது ஸ்திரீ) துன்புறுத்த படுவார்கள்.
- வனாந்திரத்திற்குள்ளே தேவன் ஆயத்தம் பண்ணிய இடத்திற்கு ஸ்திரீ தப்பி சென்றாள், அங்கு அவள் போஷிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகிறாள்.
- ஒரு பெரிய வல்லமை ஆளுகைசெய்கிறது, அது "உன்னதமானவருக்கு விரோதமாய் வார்த்தைகளை பேசுகின்றது."
- இந்த வல்லமை பரிசுத்தவான்களை துன்பப்படுத்துகின்றது.
- இந்த வல்லமை "காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற" நினைக்கிறது.

பல ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் வேத மாணாக்கர்களுக்கு 1,260 வருட தீர்க்கதரிசனத்தின் விவரங்கள் ஏற்கனவே தெரிந்திருக்கும். அதில் நீங்களும் ஒரு அங்கமாயிருந்தால், உங்களுக்கும் தெரிந்திருக்கும், ஆளுகை செய்த அந்த பெரிய மிருகத்தின் வல்லமை அப்போஸ்தல கிறிஸ்துவத்துவமும் மற்றும் சிலை வணக்கத்தாரின் ஐக்கியத்தால் உருவானது, அது பின்னர் போப் வல்லமையின் எழுகைக்கு காரணமாயிருந்தது.

ரோமாபுரியில் பிஷப்புகளின் வளரும் ஆதிக்கம்

பிஷப்புகள் அல்லது ஆதி கிறிஸ்தவ சபையின் தலைவர்கள் என்றைழைக்கப்பட்டோருக்கு முதலில் நடுவான ஆளுகையின் அதிகாரம் எதுவும் கிடையாது. ஆனால் காலப்போக்கில், ஒரு இடத்தில் இருந்த சபை வலுப்பெற்றது - அதனுடைய தலைவர் முக்கியத்துவம் வாய்ந்தவரானார்: ரோம சபை. மற்ற பிஷப்புகள் அந்த சபையின் நடைமுறைகளுக்கு ஏதாவது வழிகாட்டுதல் இருக்கின்றதா என்று கவனித்து பார்த்தனர், மற்றும் அதன் பிஷப்பிடம் வழிகாட்டுதலுக்குகாக நாடிச்சென்றனர்.

முந்திய அத்தியாயத்தில் நாம் பார்த்ததுப்போல சிலைவழிபாட்டு முறை சபைக்குள் நடைபோட்டது, வேறெந்த இடத்திலும் இல்லாத

வெற்றியை பேரரசரின் சொந்த ஊரில் கண்டது. நான்காவது நூற்றாண்டின் துவக்கத்தில் பேரரசர் கான்ஸ்டன்டின் கீழே கிறிஸ்தவம் அல்லது கிறிஸ்தவம் போன்று தோன்றிய மதம், நாட்டு மதமாக மாறியது. இதற்குள், சமரசத்தின் சபை ஆதி கிறிஸ்தவர்களின் கிறிஸ்தவத்திற்கு சம்பந்தமில்லாத சிலை வணக்க கோட்பாடுகளையும், பழக்கங்களையும் தனக்குள் ஏற்றுக்கொண்டிருந்தது.

மற்ற கிறிஸ்தவ சபைகளை இணைக்கும் அரசாணைகளை கொடுக்குமளவிற்கு "பிஷப்" அல்லது "பாப்பா" (போப்) என்பவரின் அதிகாரமும் வல்லமையும் சீராக வளர ஆரம்பித்தது. பின் கி.பி. 533 ல், "பரிசுத்த சபைகளின் தலைவராக" ரோமானிய பிஷப்பை நியமிக்க ரோமானிய பேரரசனான ஜஸ்டினியன் அரசாணையை பிறப்பித்தார். ஆனால் இந்த அரசாணையை செயல் படுத்துவதற்கு ரோமானிய பேரரசிலிருந்த மற்ற வல்லமைகளை வெளியேற்ற வேண்டியிருந்தது. அந்த வல்லமைகள் 538 ம் வருடம் தோல்வியுற்றது, அந்தக் காலக்கட்டத்திலிருந்து அடுத்த 1,260 வருடங்கள் போப்பின் வல்லமை உச்சத்திலிருந்தது.

இந்த அத்தியாயமும் அடுத்ததும் 1,260 வருட காலத்தில் கவனம் செலுத்தும். சரியாக நீங்கள் வாசித்து கொண்டே வந்திருந்தீர்கள் என்றால் வெளிப்படுத்தின விசேஷத்திலுள்ள ஏழு சபைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக தொடர்ந்து பார்த்து வருகின்றோம் என்பதை அறிந்திருப்பீர்கள். அந்த சபைகளில் இரண்டு இந்த 1,260 வருடங்களில் அடங்கும்: அவையாவன தியத்தீரா கி.பி. 538 லிருந்து 1517 வரை, சர்தை கி.பி. 1517 லிருந்து 1798 வரை. இப்பொழுது நாம் தியத்தீராவின் காலக்கட்டத்தில் கவனம் செலுத்துவோம். அத்தியாயம் 9 ல் சர்தையை குறித்து படிக்கவிருக்கின்றோம்.

கவலைகரமாக, கி.பி. 538 ல், தவறான போதகங்களாலும் பழக்கங்களாலும் ரோம சபையின் அமைப்பு மாறிற்று. வேதாகமத்தை காட்டிலும் போப்பின் பிரகடணங்களும் மனித பாரம்பரியங்களும் அதிக அதிகாரம் பெற்றன. பாதிரியார்கள் தவிர மற்ற எல்லாரிடமுமிருந்து

வேதாகமம் மூடப்பட்டிருந்தது. ஆசாரியத்துவத்துவம் வழியாக மட்டுமே தேவனை அணுகமுடிந்தது. மத வேலைகள் சார்ந்த அமைப்புகள் மூலமாக மட்டும் இரட்சிப்பு கிடைத்தது. இறந்தப் பிறகு ஆத்துமாவைப் புனிதப்படுத்தும் இடம், மன்னிப்புசீட்டுகள், கன்னி மரியாள் வழிபாடு, தெளிப்பு ஞானஸ்நானம், சபையின் நிறுவனராக பேதுரு, தவறே செய்யமுடியாத போப், கூடுகை, அப்பம் ரசம் இயேசுவின் உடல் இரத்தம் என கூறுதல். பாதிரியாரிடம் பாவமன்னிப்பு கோருவது, விக்கிரக வணக்கம் என தவறுகள் பெருகிக்கொண்டே போனது. எல்லாம் வேதத்துக்கு புறம்பானது. இதெல்லாம் ஆதி கிறிஸ்தவர்களுக்கு முற்றிலும் தெரியாதவை.

இந்த பொய்களெல்லாம் கவலைக்குரியது என்றாலும், தனது வலிமையினால் இந்த உபேதேசங்களையும் பழக்கங்களையும் திணிப்பதில் ரோம சபை காட்டிய உறுதி இன்னும் கவலைக்குரியதாக இருந்தது. விட்டுக்கொடுக்காதவர்கள் துன்புறுத்தப்பட்டனர் மேலும் பலர் இறுதியில் அழிக்கப்பட்டனர்.

ஆனால், கி.பி. 538 லிருந்து 1798 வரையிலான போப் ஆதிக்கம் முடியும்வரை இருந்த காலத்திலும் தேவனுக்காக விசுவாசமுள்ள, தாழ்மையான, உபத்திரவத்திலும் அவருக்காக உறுதியாய் நிற்க ஒரு கூட்டமக்கள் இருந்தனர். துன்புறுத்தல் மற்றும் மரணமானாலும் சரி.

என்ன ஆனாலும் சரி தேவனுடைய சத்தியத்தில் நிலைத்து நிற்பார்கள். ரோம சபை திணித்த மனிதனால் உண்டாக்கப்பட்ட ஞாயிறு ஓய்வுநாளையல்ல அவருடைய ஏழாம் நாள் ஓய்வுநாளை ஆசரிப்பார்கள். வேதாகமத்தை தொடர்ந்து பற்றிக்கொள்ளுவார்கள் - தவறு செய்யக்கூடிய மனிதர்களின் பாரம்பரியம் மற்றும் பிரகடணங்களை அல்ல வேதாகமத்தை மட்டும்தான் தங்களுடைய அதிகார புத்தகமாக பற்றிகொள்ளுவர். மரித்தோரின் நிலை, ஞானஸ்நானம், இரட்சிப்பு போன்ற வேதாகம உண்மைகளுக்கு உண்மையாக இருப்பார்கள்.

முற்றுகையினால் இந்த உண்மையுள்ளவர்கள் "வனாந்திரத்திற்கு" ஓடிப்போனார்கள். இந்த ஸ்திரீ, சபை அல்லது விசுவாசிகள் மலைகளிலும் மக்கள் குறைவாகக் காணப்படும் இடங்களிலும் தஞ்சம் புகுந்தனர். சாத்தான் என்ன செய்தான் என்பதை கவனியுங்கள்:

"அப்பொழுது அந்த ஸ்திரீயை வெள்ளங்கொண்டுபோகும்படிக்குப் பாம்பானது தன் வாயிலிருந்து ஒரு நதிபோன்ற வெள்ளத்தை அவளுக்குப் பின்னாக ஊற்றிவிட்டது. பூமியானது ஸ்திரீக்கு உதவியாகத் தன் வாயைத் திறந்து, வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து ஊற்றின வெள்ளத்தை விழுங்கினது" - வெளிப்படுத்தின விசேஷம் 12:15, 16.

பூமியும் தண்ணீரும்

தண்ணீர்? தண்ணீர் என்பது வேதாகம தீர்க்கதரிசனத்தில் மக்கள் அல்லது அதிக மக்கட்தொகை நிறைந்த இடத்தை குறித்தது. (வெளிப்படுத்தின விசேஷம் 17:15 ஐ பார்க்கவும்). ஸ்திரீக்கு பின்னால் வலுசர்ப்பம் அல்லது பாம்பு, ஒரு "நதிபோன்ற வெள்ளத்தை" அனுப்பியது. மக்கள் என்ற வெள்ளம். கொடிய வலுசர்ப்பத்தின் வாயிலிருந்து மிக கொடூர மக்கள் தான் வந்திருக்க முடியும்.

ஆனால், "பூமியோ" அந்த அழிவை பின் தொடர்ந்து துன்பப்படுத்தும் மக்களை விழுங்கியது. தண்ணீர் என்பது அநேக மக்கள் கூட்டத்தின் அடையாளம் என்றால், "பூமி" மக்கள் குறைவாக இருந்த இடத்தை குறிக்கும்.

1,260 வருடங்கள் முடிவதற்குள், தேவனை உண்மையாக பின்தொடர்ந்தவர்களுக்கு கொடிய துன்பக்காலத்தில் தூரத்திலுள்ள மலைகளில் தங்குமிடம் கிடைத்தது மட்டுமல்லாமல் பல லட்சக்கணக்கான மக்கள் ஒடுக்குமுறையிலிருந்து தப்பித்து குறைந்த மக்கள் தொகைக் கொண்ட புதிய உலகத்தை சென்றடைந்தனர்.

1,260 வருடங்கள் துவங்கியவுடன், தன் கட்டுப்பாட்டில் முழு உலகத்தையும் கொண்டு வருவதற்காக ரோம சபை தனக்கு புதிதாக கிடைத்த அதிகார தனியுரிமையை பயன்படுத்தி தனது பழக்கவழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகளை வலிய முறையில் செயல்படுத்த ஆரம்பித்தது. இதை செய்வதற்காக துன்புறுத்தலை கையிலெடுத்தனர், அது அநேக நூற்றாண்டுகளுக்கு நீடித்தது.

ஆனாலும் அதின் வழியாகவும் நம்பிக்கை மற்றும் விசுவாசமுள்ள மக்கள் உடைக்க முடியாத சங்கிலியாக நிலைத்து நின்றனர். தேவனையும் அவர் சத்தியத்தையும் இந்த இருண்ட நூற்றாண்டுகளிலும் சிலர் கைவிடவில்லை. அவர்கள் சமரசம் செய்யவில்லை. தங்களைக் காத்துக் கொள்ளுவதற்காக தங்கள் நம்பிக்கையை மறுக்கவில்லை.

அவர்களுள் எண்ணி பார்க்க வேண்டியது ஆல்பிஜென்ஸஸ் மற்றும் வால்டென்சியரின் உண்மை கதைகள். வனாந்திரத்திலே ஒரு ஸ்திரீ? ரோம சபையின் கொடுமைகளிலிருந்து தப்பிப்பதற்காக ஐரோப்பாவின் உயர்ந்த மலைகளுக்கு தப்பி சென்றவர்களுக்கு சரியாகப் பொருந்தும். வரப்போகும் அத்தியாயத்தில் சீர்திருத்தக்காலத்தில் உண்மைக்காக அசையாமல் உறுதியாய் நின்ற ஹுகியுநாட்ஸ் என்ற பக்தியுள்ள கூட்டத்தின் கதையை பார்க்க விருக்கின்றோம்.

ஆல்பிஜென்ஸஸ்

12 வது நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியில், நம்பமுடியாததுமான வேதகாமத்துக்கு புறம்பான கோட்பாடுகளை ஏற்கமுடியாமல் ரோமன் கத்தோலிக்க சபையிலிருந்து சீர்திருத்த எண்ணம் கொண்ட ஒருகூட்ட கிறிஸ்தவர்கள் பிரிந்து சென்றனர்.

ஆல்பிஜென்ஸஸ் என்றவர்கள் (இப்பொழுது தெற்கு ப்ரான்ஸில் இருக்கும் துலூஸிலிருந்து இருபத்திரண்டு மைல் வடக்கே

அமைந்துள்ள ஆல்பி என்ற நகரத்தினால் இந்த பெயர்), ரோமன் கத்தோலிக்க போதனைகளான மனித ஆசாரியத்துவம், அருட்தொண்டர் மற்றும் சிலை வழிபாடு, வேதாகமத்தை விட போப் ஆதிக்கத்தை உயர்த்துதலுக்கு எதிராக போதனை செய்தனர். கி.பி. 1167 க்குள், தெற்கு ப்ரான்ஸின் மிக அதிகமான ஜனக்கூட்டமாக மாறினர் இந்த ஆல்பிஜென்ஸஸ்.

இந்த ஆல்பிஜென்ஸஸ் இப்போதிருக்கின்ற ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் சபையின் எல்லா சத்தியங்களையும் நம்பிப் போதித்தனரா? இல்லை. இப்பொது நம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாத நம்பிக்கைகள் அவர்களிடமிருந்ததா? ஆமாம். ஆனால் அவர்கள் தேவனை நேசித்தனர், அவரை மறுதலிப்பதற்கு பதிலாக மரணத்தை தேர்ந்தெடுத்தனர்.

கத்தோலிக்க சபை இந்த ஆல்பிஜென்ஸஸ் தங்களுடைய சக்திக்கும், கட்டுப்பாட்டுக்கும் அச்சுறுத்தலாக இருக்கிறார்கள் என்றரிந்து மிக வலிமையுடன் எதிர் செயலில் ஈடுபட்டனர். "மதத்திற்கு புறம்பானவர்கள்" என்று தவறாக பெயரிடப்பட்டு போப் இன்னொசென்ட் III என்று அழைக்கப்பட்டவர், அவர்களுக்கு எதிராக அவர்களை அடியோடு அழிக்கும் இரத்தப்போருக்கு 1208 ம் வருடம் உத்தரவிட்டான். ஆல்பிஜென்ஸியர் வாழும் இடங்களின் வழியாக போப்பின் இராணுவம் அணிவகுத்து சென்றது. நகரம் முழுவதும் படுகொலை செய்யப்பட்டது. இந்த முறையிலான படுகொலைகள் பல ஆண்டுகள் தொடர்ந்தது. ரோம சபையானது இவர்களை - சபைக்கு விரோதமானவர்கள் என்றழைத்து இவர்களுக்கு இன்னும் அதிக வலிய துன்புறுத்தல்களும், கூண்டோடு அழிக்க படுகொலைகளும் உத்தரவிடப்பட்டது.

இந்த போப் பிரச்சாரம் மிகப்பெரிய வெற்றிக்கண்டது. அது துவங்கி நூறு ஆண்டுகளுக்கு உள்ளாக ஆல்பிஜென்ஸியர் கூண்டோடு அழிக்கப்பட்டனர். கடைசி விசுவாசி வரை தேவ வார்த்தையின் மீது அவர்கள் வைத்திருந்த நம்பிக்கையில் நிலைத்திருந்தனர். போப்

சபையின் தவறான கோட்பாட்டிற்கும், சிலைவணக்க பழக்கங்களுக்கும் அசைக்கமுடியாத எதிர்ப்பை தெரிவித்தனர்.

வால்டென்செஸ்

கி.பி. 1170 ன் ஆரம்பக் காலத்தில் பிரான்ஸிலுள்ள லயன்ஸ் என்ற இடத்தை சார்ந்த பீட்டர் வால்டோ என்னும் பண செல்வாக்குள்ள வியாபாரி ஒருவர் லயன்ஸின் ஏழை மனிதர்கள் என்றழைக்கப்பட்ட ஒரு விசுவாசக் கூட்டத்தை திரட்டினார். கத்தோலிக்க சபை அங்கத்தினராக இருந்த இவர்கள் தங்கள் தலைவர் செய்தது போல தங்களுடைய சொத்துக்களை விட்டு விட்டு, இந்த அப்போஸ்தல வறுமை கிறிஸ்தவ வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று நம்பினர்.

1179 ல், இவர்கள் ரோம் சென்று, போப் அலெக்சாண்டர் III ஐ சந்தித்தனர். அங்கு அவர்களை ஆசீர்வதித்து உள்ளூர் குருமார்கள் அங்கீகாரம் கொடுத்தாலொழிய இதுப்பற்றி பிரசங்கிக்க தடையிட்டிருந்தார். ஆனால் வால்டென்சியர்கள் (அல்லது வாடூஸ் என்று பிரெஞ்சு மொழியில் அழைக்கப்பட்டனர்) ரோமுக்கு கீழ்ப்படியாமல், தாங்கள் வேதத்திலிருந்து கண்டறிந்த உண்மைகளை மற்றவர்களுக்கு கற்றுக்கொடுக்க ஆரம்பித்தனர்.

அவர்கள் வேதாகமே தங்களுடைய நம்பிக்கையின் கட்டளை என்றும் வாழ்வின் நடைமுறை என்றும் பிரகடனம் செய்தனர். கத்தோலிக்க கோட்பாடுகளான பாவக்கடன், போப்பின் அதிகாரம், மாஸ் வழிபாடு முறை, மன்னிப்புசீட்டு போன்றவைகளுக்கு எதிராக பிரசங்கித்தனர்.

1184 ல், இவர்கள் மதத்திற்கு விரோதமானவர்கள் என்று போப் லூசியஸ் III அறிவித்தார். பின்னர் 1215 ல் நடந்த நான்காவது லேட்டரன் மன்றத்தில் இது உறுதி செய்யப்பட்டது. ஆனால் முன்னமே, 1211 ல் ஸ்ட்ராஸ்பர்க் என்றழைக்கப்பட்ட இடத்தில் மத விரோதிகள் என்று

எண்பது வால்டன்சியர்களை உயிருடன் எரித்தனர். இது பல நூற்றாண்டுகளாக தொடரப்போகும் கொடுமைகளின் துவக்கம்.

வால்டென்சியர்கள் அநேகர் டாப்னே, பீட்மாண்ட் மற்றும் ஆல்ப்ஸின் தென் மேற்கு பகுதியான தூரின் என்ற இடத்திலும் குடியேற ஆரம்பித்தனர்.

1487 ல், போப் இன்னொசென்ட் VIII ஒரு மிருகத்தனமான துன்புறுத்தலை கொண்டு வால்டென்சியரை அழிப்பதற்காக முடிவெடுத்தான். டாப்னே வால்டென்சியர் மேற்கொள்ளப்பட்டனர், ஆனால் பீட்மாண்ட் விசுவாசிகள் தங்களை வெற்றிகரமாக காத்துக் கொண்டனர்.

சபையும் பிரஞ்சு அரசாங்கமும் தொடர்ந்து வால்டென்சியர்களை கொடுமைப்படுத்தியது, இதனால் அநேகர் சுவிஸ் ஆல்ப்ஸ்க்கு தப்பிச் சென்றனர். இறுதியாக 1848 ல் சவாயை சார்ந்த சார்லஸ் ஆல்பர்ட் என்ற அரசன் வால்டென்சியர்களுக்கு முழு தனியுரிமை மற்றும் மத உரிமையும் வழங்கினார். பிறகு விரைவில், வால்டென்சியர் பலர் அமெரிக்காவிலுள்ள வடக்கு கரோலினாவிற்கு குடியேறி சென்றனர்.

எலென் உவைட் எழுதுகையில் "ரோமிலிருந்து உண்மையான சபை பிரிவதற்கான காரணங்களுள் வேதாகம ஓய்வுநாளை ரோம் வெறுத்ததே முக்கிய காரணம். தீர்க்கதரிசனம் முன்னறிவித்ததுப்போல, போப் ஆதிக்கம் உண்மையை தரையில் தள்ளிவிட்டது. தேவனுடைய சட்டம் தரையில் காலால் மிதிக்கப்பட்ட அதேநேரத்தில் மனித பாரம்பரியங்களும் வழக்கங்களும் உயர்த்த பட்டது...
வால்டென்சியர்கள் இருண்ட மற்றும் விசுவாச துரோக காலங்களிலும் ரோம மேலாதிக்கத்தையும், சிலை வணக்கத்தையும் மறுத்து உண்மையான ஓய்வுநாளை கடைப்பிடித்தனர். கடுமையான பெருங்காற்றாய் வந்த எதிர்ப்புகள் இருந்த போதிலும் தங்களுடைய விசுவாசத்தை பாது காத்துக்கொண்டனர்" - இறுதி போராட்டம், ப. 65.

"எல்லாக்காலத்திலும் துன்பப்படுத்தப்பட்டு ஒடுக்கப்பட்டவர்களுக்கு புகலிடமாக இருந்த மலைகளின் உயர்ந்த அரணுக்கு பின்னால் வால்டென்சியர்கள் தங்கள் மறைவிடத்தை தெரிந்து கொண்டனர். மத்திய காலங்களில் நிலவிய இருளிலும் இங்கு உண்மையின் தீபம் எரிந்துகொண்டே இருந்தது. ஆதிகால நம்பிக்கையின் உண்மையை ஆயிரம் வருடங்களாக விசுவாசிகள் காத்துக்கொண்டனர்" - இறுதி போராட்டம், ப. 65, 66.

தங்களுடைய விசுவாசத்திற்காக மரித்த வால்டென்சியர்களின் முழு எண்ணிக்கை தெரியாமலே போகலாம். 1540 முதல் 1570 வரை சுமார் 900,000 வால்டென்சியர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சில ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன.

பல நூற்றாண்டுகளாக இந்த தெய்வ பக்தியுள்ள மக்களை துன்புறுத்திய போதும் தங்கள் இரட்சகரை மேன்மைப்படுத்தும் விதமாக அவர்கள் அதை சீராக பொறுமையுடன் தாங்கிக்கொண்டனர். தங்களுக்கு எதிரான ஏற்பட்ட யுத்த போராட்டத்திலும் மனிதத் தன்மையற்ற கொலைகளுக்கு ஆளாக்கப்பட்டிருந்தும் அவர்கள் ஊழியக்காரர்களை இந்த விலைமதிப்பில்லா உண்மையை பகிர்ந்து கொள்ளும் பொருட்டு வெளி இடங்களுக்கு மிஷனரிகளாக அனுப்பினர். அவர்கள் வேட்டையாடப்பட்டுக் கொல்லப்பட்டனர்; ஆனாலும் அவர்களின் இரத்தம் விதைக்கப்பட்ட விதைக்கு தண்ணீராக அமைந்தது, அது பலன் தருவதற்கு தோல்வியடையவில்லை" - இறுதி போராட்டம், ப. 78.

வால்டென்சியர்களை பற்றிய விரிவான வரலாற்றை அறிந்துகொள்ள இறுதி போராட்டம் என்ற புத்தகத்தில் 4 வது அத்தியாயத்தை படியுங்கள். என்ன நடந்தாலும் சத்தியத்திற்காக நிலைத்து நிற்பதை வலுப்படுத்தும் வகையாக இதைவிட அதிக எழுச்சியூட்டும் ஆதாரத்தை நீங்கள் எங்கும் காணமுடியாது.

ஸ்திரீயானவள் வனாந்திரத்திற்குள்ளே 1,260 நீளமான, இருண்ட வருடங்களுக்குள்ளே நுழைந்தாள் - அது தேவ நம்பிக்கை உடையவர்களுக்கு வேறெப்பொழுதும் இல்லாத கொடுமைகள் நிறைந்த நூற்றாண்டுகளாக இருந்தது.

நண்பர்களே - துன்புறுத்தல், சித்திரவதை, மரணம் இவைகளினால் உடைக்க முடியாத இயேசு கிறிஸ்துவிலும் அவர் சத்தியத்தின் மீதான அன்பு நம்மில் எத்தனை பேருக்கு உள்ளது? எத்தனை பேர் என்ன நடந்தாலும் நமது இரட்சகருக்காக உண்மையாக இருக்க ஆயத்தமாயிருக்கின்றோம்?

இந்த பூலோக வாழ்வில் ஆணுக்கும் பெண்ணிற்கும் இடையே அன்பு மலர்கிறது. தேவைப்பட்டால் ஒரு தயக்கமும் இல்லாமல் தன்னுடைய வாழ்க்கையை கூட ஒருவர் மற்றொருவருக்காக அர்ப்பணிக்கும் அளவிற்கு மிக ஆழமான அன்பாக இருக்கின்றது. இயேசுவிடம் இதேபோன்ற அன்பை நம்முடைய வாழ்க்கையைக்கூட அவருக்கு தத்தம் செய்யும் அளவிற்கு வளர்த்து கொண்டிருக்கின்றோமா? எந்த தயக்கமுமில்லாமல் நமக்காக தனது வாழ்வை அவர் தந்ததுப்போல நாமும் அவருக்காக தர தயாராக இருக்கிறோமா?

சோதனையில் நிலைத்து நிற்பது

இப்பொழுது இந்த சமாதான காலத்தில் சத்தியத்திற்காக அதின் எழுத்தாளரான இயேசுவிற்காகவும் நிலைத்து நிற்க முடியும். ஆனால் நாம் நினைப்பதற்கு முன்பாகவே ஒரு காலம் வெகு சீக்கிரமாக வருகிறது, அப்பொழுது இயேசுவிற்காக நிற்பது அவரை எதிர்க்கிறவர்களின் உக்கிர கோபத்தை அழைக்குமாறாக அமையும்.

அந்த நாளுக்காக, தேவன் பேரில் நாம் வைத்திருக்கும் அர்ப்பணிப்பை ஆழப்படுத்தி இருக்கின்றோமா? எந்த அழுத்தமான நேரத்திலும் சமரசம் செய்துக்கொள்ளாமலும், விட்டுக்கொடுத்து

விடாமலும் நம்மை காப்பாற்றிக் கொள்ளாமலும் உறுதியாய் நிற்க நாம் நம்முடைய மனதை தைரிய படுத்துகிறோமா? நினைவிருக்கிறதா, தியாகத்தின் கிருபை அதை தேர்ந்தெடுக்கும் தருணத்தை தவிர வேறெப்பொழுதும் தேவைப்படாது. அன்பு மற்றும் அர்ப்பணிப்பை உறுதி செய்துகொள்ளுவதில் கவனம் செலுத்துங்கள். ஆல்பிஜென்ஸஸ் மற்றும் வால்டென்சியர்கள் செய்ததைப் போன்ற உச்சக்கட்ட தியாகத்தை செய்வதற்கு தேவன் நம்மை அழைத்தால், அப்பொழுது மட்டும்தான் அவர் நமக்கு தேவையான கிருபையை அளிப்பார்.

இந்த உலகத்தில் நாம் ஒரு வாழ்க்கை துணையாகவோ அல்லது குழந்தைக்கு பெற்றோராகவோ அவர்கள் மீது ஆழமான அன்பு கொண்டிருந்து அவர்களுக்காக மரிக்க வேண்டியது நேர்ந்தால் அதை ஒரு சிறப்புரிமையாகவும், மரியாதையாகவும் எண்ணுகின்றோம் அல்லவா. வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவிற்கு நம்மை படைத்தவர் மீது அன்புக்கொண்டால் உண்மையில் இதையே தான் செய்வோம்.

எல்லா காலத்திலும், தேவன் தனக்கென்று ஒரு கூட்ட மக்களை எப்பொழுதும் வைத்திருந்தார் - அவர்கள் உண்மை யுள்ளவர்களும், விசுவாச முள்ளவர்களும், அழைக்கப் பட்டவர்களும் தெரிந்து கொள்ளப் பட்டவர்களுமாவர் - மேலும் அவருக்காக விசேஷமான ஒரு கூட்ட மக்கள் இன்றும் இருக்கிறார்கள்.

"இதோ நான் நிற்கிறேன்"

எப்பொழுதாவது உங்களது பணப்பையையோ அல்லது தோல் பையையோ தொலைத்திருக்கிறீர்களா?

ஒருவேளை நீங்கள் தொலைத்திருக்கலாம், அப்படி தொலைத்தபோது மக்கள் உங்களுக்கு உதவுவதற்காக சில காரியங்கள் கூறியிருக்கலாம்.

எப்படியென்றால்: "எங்கு கடைசியாக பார்த்தீர்கள்?"

அல்லது: "அது தானாக கால் முளைத்து எங்கேயும் நடந்து சென்றிருக்காது."

அல்லது: "கவலைப்படாதீர்கள், அது திடீரென்று தானாக காற்றில் மறைந்து போயிருக்காது."

அந்த நேரத்தில் இதைப்போன்ற கருத்துக்கள் உங்களுக்கு உதவிகரமாய் இருந்திருக்காது. ஆனால் அவர்கள் கூறியதெல்லாம் உண்மை தான். எப்போதுமே ஒரு பணப்பை கால் முளைத்து கதவு வழியாய் நடந்து போனதாக சரித்திரம் எதுவும் இல்லை. ஒரு முறைக்கூட நடைபெறவில்லை. ஒருபோதும் பணப்பை திட நிலையிலிருந்து ஆவியாக மாறியதாகவுமில்லை. எப்போதுமில்லை.

அதற்கு அர்த்தம் என்னெவென்றால் ஏதேனும் தொலைந்திருந்தால், அது எங்கேயோ இன்னும் இருக்கின்றது. அது கண்டுபிடிக்க படவேண்டும் - மீட்கப்பட வேண்டும்.

இயேசு தொலைந்துபோன காசு, தொலைந்துபோன ஆடு, தொலைந்துபோன மகன் போன்ற கதைகளை சொன்னார். இந்த மூன்றுமே கடைசியில் கண்டு பிடிக்கப்பட்டது.

நீரில் முக்குளிப்பவர் தங்கம் மற்றும் ஆபரணங்களை, தாங்கி மூழ்கிப்போன கப்பல்களிலிருந்து புதையலை தேடுவர். புதையலைத் தேடுவோர் காணாமற்போன தங்க சுரங்கத்தையோ அல்லது "X" என்று நிலப்படத்தில் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் புதைக்கப்பட்டுள்ள மலைக்கவைக்கும் செல்வத்தை தேடுவர். காவல்துறையினர் தொலைந்த பிள்ளைகளைத் தேடுவர். பழையவைகளை புதுப்பிப்போர் மேலுள்ள பழைய தேவையற்ற வண்ணங்களை அகற்றி அதற்குள் புதைந்திருக்கும் விலை மதிப்பற்ற தலைசிறந்த கலை வெளிப்பாட்டை தேடுவர். சாகச துணிவுடையோர் தொலைந்துபோன பேழைகளைத் தேடுவர் - அது உடன்படிக்கைப் பெட்டியாக இருந்தாலும் சரி, நோவாவின் பேழையாக இருந்தாலும் சரி அதைத்தேடுவர்.

பொருட்கள் தொலைந்துபோகும் போது, அது இன்னமும் எங்கேயோ இருக்கின்றது. அதை மறுபடியும் கண்டுபிடிக்க வேண்டும்.

இந்த உலகத்தின் மிகப்பெரிய புதையல் இயேசு பயன்படுத்திய பாத்திரமோ, சாலமோனின் சுரங்கங்களோ அல்லது இன்னும் கண்டுபிடிக்கப்படாத பந்தின் அளவில் உள்ள வைரங்களின் சுரங்கமோ அல்ல. இந்த உலகத்தின் மிகப்பெரிய பொக்கிஷம் அதன் படைப்பாளர் இயேசு கிறிஸ்துவே. அவர் பூமியை விட்டு சென்றபோது தனது பின்னடியார்களுக்கு சத்தியம் என்ற பொக்கிஷத்தை அவர்கள் அனுபவிக்கவும் பகிர்ந்துக்கொள்ளவும் விட்டுச்சென்றார்.

ஆனால் வருடங்கள் செல்லச் செல்ல, இந்த சத்தியம் என்னும் பொக்கிஷத்தை தவறுகள் அடுக்குகளாக மூடத் தொடங்கியது. இது ஒரு திடீர் சம்பவமல்ல, வேண்டுமென்றே கிறிஸ்துவின் பெரிய எதிரியானவன் கிறிஸ்துவின் சபைக்குள்ளே ஊடுருவி சமரசத்தையும்

பொய்யையும், அதற்கு கிடைத்த சத்தியத்தை காலால் மிதித்து போடவும் செய்தான்.

காலப்போக்கில் ஒவ்வொரு சத்தியமும் பல அடுக்குகளான தவறு என்னும் பொய்களுக்கு அடியில் புதைக்கப்பட்டுவிட்டது.

- இரட்சிப்பு இலவச ஈவு என்னும் உண்மைக்கு பதிலாக மனித முயற்சியின் பலனால் இரட்சிப்பு என்ற பொய்யான உபதேசம்.
- தேவனை அணுக இயேசுவின் மூலமாக முடியும் என்ற உண்மைக்கு பதிலாக மனித பாதிரியார்கள் மூலமாக மட்டும் தான் அணுக முடியும் என்ற தவறான கோட்பாடு.
- வேதாகமத்தின் அதிகாரத்திற்கு பதிலாக போப் மற்றும் மனித பாரம்பரியங்களின் ஆதிக்கம்.
- இப்போது மன்னிப்பு என்பது இலவச ஈவு இல்லையென்றும் அது கட்டணம் கொடுத்து சம்பாதிக்க வேண்டியது என்ற கருத்து.
- ஓய்வுநாளின் ஓய்வை மனிதன் தேர்ந்தெடுத்த ஞாயிற்றுக் கிழமைக்கு மாற்றியது.
- தேவனிடம் மட்டும் பாவ மன்னிப்பு கோரமுடியும் என்பதற்கு பதிலாக பாதிரியார்களிடம் பாவ மன்னிப்பு கோருதல்.
- சபை தலைவர்களை தவிர மற்ற எவருக்கும் இலவச பரிசான வேதாகமத்தை படிப்பதற்கோ அல்லது வைத்துக் கொள்ளுவதற்கோ தடை.
- தேவனுடைய சட்டமான பத்துக் கற்பனைகளை கூட வழிவிலகி போன சபைகளுக்கு ஏற்றது போல மாற்றப்பட்டது.

அதோடுகூட வேதத்திற்கு புறம்பான பலப் போதனைகளும் வழக்கங்களும் "சத்தியம்" என்று கற்பிக்க பட்டது. அதில் ஆராதனை முறை (மாஸ்), அப்பமும் பழரசமும் கிறிஸ்துவின் உண்மையான

உடலாகவும் இரத்தமாகவும் மாறுகின்றது என்ற கருத்து, மரித்தோருக்காக பிரார்த்தனை, மரியாளுக்கும் மற்ற "புனிதர்களுக்கும்" பூஜைகள், சிலைகளுக்கும் படங்களுக்கும் புனிதத்தன்மை கொடுத்தல் என்பவைகள் அடங்கும்.

நினைவிலிருக்கிறதா, இந்த புத்தகத்தின் மிக முக்கியமான செய்தி என்னவென்றால்: தேவனுக்காகவும் அவருடைய சத்தியத்திற்காகவும் ஒரு கூட்ட பக்தியுள்ள மக்கள் எப்போதுமே இருந்தனர். ஏதேனிலிருந்து, ஒவ்வொரு காலகட்டத்திலும் அவனால் முடிந்தவரை சாத்தான் உண்மையை மறைத்து, மூடிவைத்து, பொய்யாக்கினான். இருந்தபோதிலும் தேவனுக்காக தீர்மானித்து எப்போதும் சத்தியத்தை நம்பி, வாழ்ந்து, சாட்சி பகிர்ந்தவர்கள் இருந்தனர்.

ஆதாமை தொடர்ந்து வந்த நமது முன்னோர்களாக இருந்தாலும் சரி, உண்மையுள்ள இஸ்ரவேலர்களாக இருந்தாலும் சரி, ஆதிகால பக்தியுள்ள சபை விசுவாசிகளாக இருந்தாலும் சரி, அல்லது போன அத்தியாயத்தில் நாம் பார்த்த வாழ்நாள் முழுவதும் சத்தியத்திற்காக நின்ற ஆல்பிஜென்ஸஸ் அல்லது வால்டென்சியரானாலும் சரி, தேவனுக்காக முறிக்கமுடியாத சங்கிலியாக விசுவாசமுள்ள மக்கள் எப்போதும் இருந்தனர்.

இருண்ட காலத்தின் மிக இருண்ட தருணங்களின் போது, தனது தொலைந்துப் போன சத்தியத்தை திரும்பவும் வெளிச்சத்திற்கு கொண்டு வருவதற்காக துணிச்சலும் விசுவாசமுள்ளவர்களை தேவன் வைத்திருந்தார்.

தகவல் பலகை செய்தி

ஜெர்மானிய பல்கலைக்கழகத்தில் உள்ள ஒரு தகவல் பலகையில் இருந்த செய்தியில் அது துவங்கியது.

அந்தக் காலத்தில் பல்கலைக்கழக சபையின் கதவு அந்த வளாகத்தின் மத்திய செய்தி பலகையாக திகழ்ந்தது. அக்டோபர் 31, 1517 ல், அந்த கதவை பார்த்தவர்கள் ஒரு கத்தோலிக்க பாதிரியாரும் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவரின் அறிவிப்பு செய்தி ஒட்டப்பட்டிருப்பதை கண்டனர். அந்த அறிவிப்பு செய்தி வரலாற்றை மாற்றயிருந்தது, ஏனென்றால் மார்ட்டின் லூத்தரின் 95 ஆய்வு தீர்மானங்கள் விட்டன்பெர்க் கோட்டை ஆலய சபையின் கதவில் ஆணியடிக்கப்பட்டிருந்தது. அது மிகவும் நேராக காணப்பட்ட தவறை வேதாகம சத்தியத்தால் எதிர்த்து நின்று புராடெஸ்டன்ட் சீர்திருத்தத்தை பரவ செய்தது.

வரலாறு, லூத்தரின் 95 ஆய்வு தீர்மானங்களையும் புராடெஸ்டன்ட் சீர்திருத்தத்தின் துவக்கமாக குறித்திருந்தாலும், சீர்திருத்தத்தின் பேருண்மைகளை ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே ஜான் விக்லிஃப் என்பவரால் கூறப்பட்டது. மார்ட்டின் லூத்தரின் பிறப்புக்கு நூறு வருடங்களுக்கு முன்பாகவே அவர் மரித்திருந்தாலும் தன் தைரியமான கற்பித்தலுக்காகவும் வேத உண்மைகளை பிரசங்கித்ததற்காகவும் அவர் "சீர்திருத்தத்தின் விடிவெள்ளி" என அறியப்பட்டார். பின் வந்த லூத்தர் போன்ற சீர்திருத்தவாதிகளின் மீது விக்லிஃபின் ஈர்ப்பு ஆழமாக இருந்தது. சராசரி ஆணும் பெண்ணும் புரிந்து கொள்ளும் பாஷையில் முதல் வேதாகமத்தை வெளியிட்டவர் என்றும் அறியப்பட்டார்.

விக்லிஃபின் மாணாக்கனும், பின்னடியாருமான ஜான் ஹஸ் தனக்கு பின் வந்த சீர்திருத்தவாதிகளிடையே தாகத்தை ஏற்படுத்தினார். அவர் எல்லா சத்தியங்களையும் கற்பித்தார், லூத்தரும் மற்றவர்களும் பல அடுக்கு தவறுகளால் மூடப்பட்டிருந்த சீர்திருத்தத்திற்கு எடுத்த முயற்சிகளுக்கு மூலைக் கல்லாக அது திகழ்ந்தது.

ஹஸ் எந்த பயமுமில்லாமல் சபையின் பலவிதமான தவறுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அதில் மன்னிப்புசீட்டு விற்பது, பாவமன்னிப்பிற்காக நன்கொடைகள் கொடுப்பது போன்றவைகளும் அடங்கும். மதவிரோதி என்று ஹஸ்ஸிற்கு சபை முத்திரைப்போட்டது,

1411 ம் வருடம், ஹஸ் சபையிலிருந்து விலக்கிவைக்கப்பட்டார். ஆனாலும் அவர் தொடர்ந்து வேதாகம உண்மைகளை பிரசங்கித்தார், மற்றும் சபையின் தவறுகளை எதிர்த்தார், இறுதியாக 1415 ம் வருடம் சபை ஹஸ்ஸை உயிருடன் மரத்தில் கட்டிவைத்து கொளுத்தியது. ஹஸ்ஸின் நண்பனும் பின்னடியாருமான ப்ராகைச் சார்ந்த ஜெரோம் என்பவரும் ஒரு வருடம் கழித்து அதே கொடூரநிலையை சந்திக்கவிருந்தார்.

சீர்திருத்தம் ஆரம்பமாயிற்று

பின் வர இருந்த சீர்திருத்தத்திற்கு இந்த முன்னோடி தலைவர்கள் அடித்தளத்தை நாட்டினார்கள். லூத்தர் 1517 ல் உண்மைக்கும் தவறுக்குமான வித்தியாசத்தை தெளிவாக வரைந்தபோது மிக ஊக்கமாக சீர்திருத்தம் துவங்கிற்று. விரைவில் லூத்தரும் சபையிலிருந்து நீக்கப்பட்டிருப்பதை கண்டறிந்தார். புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட அச்சகத்தினால் இந்த இயக்கம் சடுதியாக பரவியது. சுவிச்சர்லாந்தில் லூத்தருடைய முயற்சிகளை எதிரொலிக்கும் விதமாக உல்ரிச் ஸ்விங்கிலி இணைந்தார். பிரஞ்சு தத்துவ அறிஞர் ஜான் கால்வின் ஐரோப்பாவிலுள்ள சுவிச்சர்லாந்து, ஸ்காட்லாந்து, ஹங்கேரி, ஜெர்மனி போன்ற நாடுகளிலுள்ள இந்த இயக்கம் சார்ந்தவர்களை ஒன்று திரட்டினார். டச்சு தத்துவ அறிஞர் எராஸ்மஸ், லூத்தர் மீது வலுவான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தார், அவர் தனது வாழ்நாள் முழுவதும் கத்தோலிக்க சபையின் அங்கமாக நீடித்திருந்தும், தவறுகளைக் குறித்த தனது எதிர்ப்பை திறனுடன் எழுதி வந்தார்.

இந்த சீர்திருத்த இயக்கத்தின் முக்கியத் தருணம் 1521 ம் ஆண்டு, ஏப்ரல் 16 ம் தேதி ரோம பேரரசனான சார்லஸ் V போப்புடன் இணைந்து ஜெர்மனியின் வார்ம்ஸ் நகரத்தில் லூத்தரை ஒரு கூட்டத்துக்கு வருமாறு அழைப்பு விட்டதுதான்.

அங்கு, உள்ளூர் பிரதான பாதிரியின் உதவியாளர் ஜோஹன் எக் என்பவர் லூத்தருடைய கவனத்தை ஒரு மேஜையின் மீது மூடி வைக்கப்பட்டிருந்த லூத்தரின் எழுத்துக்களின் மீதுத் திருப்பினார். எக் லூத்தரைப் பார்த்து அந்த புத்தகங்கள் அவர் எழுதியதுதானா என்றும் அவர் எழுதியுள்ளதை இன்னும் நம்புகிறாரா என்று கேட்டார்.

பதிலளிப்பதற்கு முன் சற்று நேரம் தேவை என லூத்தர் கேட்டதால் நேரம் வழங்கப்பட்டது. லூத்தர் யோசித்தார், ஜெபித்தார் பின் நண்பர்களுடன் கலந்தாலோசித்தார். அடுத்த நாள் மீண்டும் கூட்டத்திற்கு சென்றார்.

எக் இப்போது லூத்தர் "அந்த புத்தகங்களையும் அதிலுள்ள தவறுகளையும் நீங்கள் நிராகரிக்கின்றீர்களா? என்ற கேள்விக்கு பதில் கோரினார்.

லூத்தரின் பதில் பெருமையளிக்கக் கூடியதாக மற்றும் தேவன் நமக்கு தந்த உண்மைகளுக்காக நிலைத்து நிற்க ஆசையுடையவர் எல்லோருக்கும் சவால் விடும் விதமாக அமைந்தது.

லூத்தரின் பதில்: "வேதாகமத்தாலும் மற்றும் நேரான காரணங்களால் மட்டுமே என் மனதை மாற்றுவேனே தவிர, நான் போப்பின் அதிகாரத்தையும் அதன் ஆலோசனை மன்றத்தையும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் ஏனென்றால் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானது. தேவ வார்த்தைக்கு எனது மனசாட்சி அடிமை. நான் முன்பு கூறியது எதையும் என்னால் திரும்ப பெற முடியாது, பெறவும் மாட்டேன், ஏனென்றால் என் மனசாட்சிக்கு விரோதமாக போவது சரியுமில்லை பாதுகாப்பானதுமில்லை. என்னால் வேறு எதுவும் செய்ய முடியாது, இதோ நான் நிற்கிறேன். தேவனே என்னைக் காப்பாற்றும். ஆமென்."

கொஞ்ச நாட்களுக்கு பிறகு, அந்த கூட்டம் லூத்தரை சட்டத்துக்குப் புறம்பானவர் என்றும் மதத்திற்கு விரோதமானவர் என்றும் பிரகடனம் செய்தது. ஆனால் அதற்குள், நண்பர்கள் லூத்தரை

வார்ட்பெர்க் கோட்டைக்கு பத்திரமாக அனுப்பிவைத்து விட்டனர். அங்கிருக்கும் போது லூத்தருக்கு தனது நண்பனும் கூட்டாளியுமான பிலிப் மெலாங்தனுக்கு கடிதம் எழுதவும் அறிவுரைக் கூறவும் வாய்ப்புக் கிடைத்தது. பொதுமக்களுக்கு சென்றடையும் விதமாக பிற்காலத்தில் லூத்தர் வேதாகமத்தை ஜெர்மானிய மொழிக்கு மொழிபெயர்த்தபோது அவருக்கு உதவிய பலருள் இந்த மெலாங்தனும் ஒருவர்.

இந்த 1534 ம் வருடத்தின் மொழிப்பெயர்ப்பு வில்லியம் டின்டேல் என்பவர்மேல் பெரியத் தாக்கத்தை ஏற்படுத்தியது, இவர் பின்னர் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட புதிய ஏற்பாட்டை வெளியிட்டார். இது பல ஆண்டுகள் கழித்து வெளிவந்த கிங் ஜேம்ஸ் வேதாகம மொழிபெயர்தலுக்கு அடித்தளமாக அமைந்தது.

தெளிவாக, சபையினால் பல நூற்றாண்டுகளாக அடைத்து வைக்கப்பட்டிருந்த வேதாகமம், இப்போது தடை உடைக்கப்பட்டு வெளியில் வர ஆரம்பித்தது. அப்பொழுது மக்களும் அதை படித்த போது சபைத் தங்களுக்கு கற்றுக் கொடுத்த தவறான காரியங்களிலிருந்து வேறுபட்டிருப்பதை தெரிந்துக் கொண்டனர் - இதனால் சீர்திருத்த வேலை இன்னும் வேகமாக முன்னேற ஆரம்பித்தது.

1546 ம் ஆண்டு தான் மரிக்கும் வரை சீர்திருத்தத்தின் மிகப்பெரிய மனிதன் என்றழைக்க பற்ற லூத்தர் தொலைந்துப் போன வேதாகம சத்தியங்களை மீட்கவும் அதை புதுப்பிக்கும் வேலையை தொடர்ந்து செய்தார்.

பல நூற்றாண்டுகளாய் இருந்த பொய்களையும் தவறான போதனைகளையும் லூத்தர், கால்வின் மற்றும் பல சீர்திருத்த தலைவர்களால் எடுத்து போடப்பட்டு - அப்போஸ்தலர்களையும், ஆதி கிறிஸ்துவர்களையும் கொண்ட ஆதி சபையிடம் இருந்த இயேசுவின் சுத்தமான சத்தியம் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட்டது.

காலப் போக்கில் சீர்திருத்தம் அதன் இயங்கும் வேகத்தை இழந்து, சத்தியத்தால் புதுப்பிக்கப்பட்டு மறுசீர் அடைவதற்கு பதிலாக குறையத் தொடங்கி, சத்தியத்தை எல்லா இடங்களுக்கும் எடுத்து செல்வதை விட்டுவிட்டு தங்களுக்குள்ளே நிர்வாகத்தை பல கேள்விகள் கேட்டு, தர்க்கம் செய்வதிலும் அதன் சீர்திருத்த நிலையிலிருந்து தங்களைக் கெடுத்து கொள்ள தொடங்கினார்கள்.

பிற்கால கிறிஸ்தவர்கள் தாங்கள் இழந்து போன பெரிய சத்தியங்களான ஓய்வு நாள், இயேசுவின் இரண்டாம் வருகை, கிறிஸ்துவின் நமக்கான மத்தியஸ்த ஊழியம், வாழ்க்கையிலும் மரணத்திலும் மனிதனின் நிலை போன்ற பல சத்தியங்களை மறுபடி புதுபிக்க வெகு பாடுபட்டனர்.

சர்தை

வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள ஏழு சபைகளிலும் சீர்திருத்த காலத்தில் இருந்த சபையானது சர்தையின் சபை. இந்த சபைக்கு தேவன் கூறியதை கவனியுங்கள்:

"சர்தை சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய். நீ விழித்துக்கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து; உன் கிரியைகள் தேவனுக்குமுன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை. ஆகையால் நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு. நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும்வேளையை அறியாதிருப்பாய். ஆனாலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையிலும் உனக்குண்டு; அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரந்தரித்து

என்னோடேகூட நடப்பார்கள். ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்" - வெளிப்படுத்தின விசேஷம் 3:1-5.

திரும்பவும், சர்தைக்கு அளிக்கப்பட்ட முழு செய்தியின் விளக்கத்தை நாம் இங்கு பார்க்க போவதில்லை. ஆனால் குறைந்த பட்சம் இரண்டு காரியங்களை கவனியுங்கள்:

"நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்" என தேவன் அவர்களிடம் கூறுகின்றார். உயிருள்ள சபை போன்று அது தோன்றுகிறது: எப்போதும் கூட்டங்கள், அரசியல் மற்றும் மத உலகங்களின் ஆதிக்கம், விரிவான ஆசாரியத்துவம், பணபலம் மற்றும் அழகுப்படுத்தப்பட்ட கட்டிடங்கள்.

ஆனால் ஆவிக்குரிய வகையில் அது முன்பே செத்து காணப்பட்டது.

பின்பு இதை கவனியுங்கள்: "ஆனாலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையிலும் உனக்குண்டு; அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள்."

சிலர். அசுசிப்படாதவர். மதிப்பிற்க்குரிய. ஆமாம் இந்த சிலரைத்தான் நாம் எல்லா காலங்களின் வழியாகவும் பின்தொடர்ந்து வருகிறோம். என்ன நடந்தாலும் இந்த சிலர் இயேசுவுக்காகவும் அவரின் சத்தியத்திற்காகவும் நம்பிக்கை உள்ளவர்களாய் இருந்தனர்.

இந்த சிலரில் நிச்சயமாக எந்த விலையானாலும் பொய்யை எதிர்த்து உண்மைக்கு உறுதியாய் நின்ற மனிதர்களில் ஜான் ஹஸ், ப்ராகில் உள்ள ஜெரோம், லூத்தர் போன்றவர்கள் அடங்குவர். ஆனால்

இந்த கூட்டத்தில் புகழப்படாத, ஏடுகளில் குறிப்பிடப்படாத அநேக துணிச்சலுள்ள விசுவாசிகளும் அடங்குவர்.

இவர்களுள் பிரான்ஸ் மற்றும் சுவிச்சர்லாந்தை சார்ந்த ஹுகியுநாட்ஸ்களும் அடங்குவர். சீர்த்திருத்தத்திற்காக லூத்தர் மற்றும் கால்வின் கொடுத்த அழைப்பை உற்ச்சாகத்துடன் வரவேற்றனர். விசுவாசத்தினால் இரட்சிப்பு, வேதத்தின் அதிகாரம், தேவனை நேரடியாக இயேசு மூலம் அணுக முடியும் பாதிரியார்கள் மூலம் அல்ல போன்ற சீர்திருத்தத்தின் அடிப்படை உபதேசங்களை முழு இருதயத்துடன் நம்பினர்.

கத்தோலிக்க சபையின் உபதேசங்களையும் பழக்கங்களையும் அவர்கள் முழு வேகத்துடன் எதிர்ப்பு தெரிவித்தபடியால் துன்புறுத்தல்களுக்கு ஆளாகினர். அவர்களுக்கு எதிராக மதத்தை சார்ந்த பிரஞ்சு யுத்தங்களில் 1562 ம் ஆண்டு மார்ச் மாதம் துவங்கிய படுகொலைகளில் அறியப்படாத அளவிற்கு ஹுகியுநாட்ஸ்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

ஆகஸ்ட் 24 லிலிருந்து செப்டம்பர் 17, 1572 ம் ஆண்டு புனித பார்தோலோமிவ் தின படுகொலை என்றழைக்கப்பட்ட படுகொலையில் பாரிஸ் நகரம் துவங்கி சுற்று வட்டாரத்திலுள்ள சிறு நகரங்களிலும் இருந்த சுமார் 70,000 ஹுகியுநாட்ஸ்கள் படுகொலை செய்யப்பட்டனர். துன்புறுத்தல்கள் 1598 ம் ஆண்டு வரை தொடர்ந்தது, அதற்கு பின் பிரான்சின் புதிய மன்னனான ஹென்றி IV என்பவர் அவர்களுக்கு அவர்கள் மாகாணங்களில் மட்டுமே மத மற்றும் அரசாங்கம் சார்ந்த சுதந்திரத்தை அளித்தார்.

1600 களில், பல ஹுகியுநாட்ஸ்கள் தெற்கு ஆப்பிரிக்காவிற்கும் மற்றும் வடக்கு அமெரிக்காவிலுள்ள பதிமூன்று மாகாணங்களுக்கு குடியேறினர். இவர்களுள் அபொல்லோஸ் ரிவோரி என்ற வெள்ளி தட்டான் இருந்தார், அவர் தன்னுடைய ஆங்கில பெயர் மற்றும் தொழிலை தன்னுடைய மகனான பால் ரேவரி என்பவரிடம்

விட்டுவிட்டு ஒரு மிகப்பெரிய புகழ்வாய்ந்த அமெரிக்க புரட்சிக்காரராக மாறினார்.

இந்த அத்தியாயத்தை படிக்கும் இந்த நேரத்தில் நீங்கள் சத்தியத்திற்காக வாழவும் உபதேசிக்கவும் முழு சுதந்திரத்தின் சலுகையை பெற்றுள்ளீர்கள். ஆனால் நமது கண்களுக்கு முன்பாகவே இந்த உலகம் மாறிவருவதை காண்கிறோம். தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் தனி நபர் சுதந்திரம் பறிக்கப்படுவதை பார்க்க முடிகிறது.

நாம் அற்பமாக எண்ணுகின்ற இந்த சுதந்திரம் நம்முடன் எப்பொழுதும் நிலைத்திருக்காது. ஒரு நாள் வரப்போகிறது மீண்டுமாக எதிர்ப்புகளும், துன்புறுத்தலும் எழும்பும்.

அப்போது மீதியாய் இருக்கும் விசுவாசமுள்ளவர்கள் கூட்டத்தில் நாமும் இருப்போமா?

அந்த கேள்வியின் பதிலை தெரிந்துக் கொள்ளுவதற்கு இப்பொழுது நாம் எப்படி விசுவாசமுள்ளவர்களாய் இருக்கிறோம் என்று நிச்சயிக்க வேண்டும். நம்முடைய விசுவாசம் கொள்கையிலும் அர்ப்பணிப்பிலும் வேரூன்றி இருக்கிறதா அல்லது வசதிக்காக இருக்கிறதா? நம்முடைய பற்றுறுதி ஒரு சில சத்தியங்கள் மீதா அல்லது முழு சத்தியத்தின் மீதும் உள்ளதா? இயேசு சொல்கிறார் "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" - யோவான் 14:6.

சத்தியத்தை நேசித்தோமென்றால், சத்தியத்தையே நேசிப்போம்.

சத்தியத்திற்கு உண்மையாக இருந்தால், சத்தியத்திற்கே உண்மையாயிருப்போம்.

இந்த அத்தியாயத்தின் கடைசி கேள்வி: துன்புறுத்தலின் அச்சுறுத்தலுக்கு நாம் பயப்படுவோமா? அல்லது அது வருகிறபோது இயேசுவிற்காக உண்மையாய் நிற்கும் வாய்ப்பை வரவேற்று அதை ஒரு பெரிய மரியாதையாகவும் சலுகையாகவும் எண்ணுவோமா?

எல்லா காலத்திலும், தேவன் தனக்கென்று ஒரு கூட்ட மக்களை எப்பொழுதும் வைத்திருந்தார் - அவர்கள் உண்மை யுள்ளவர்களும், விசுவாச முள்ளவர்களும், அழைக்கப் பட்டவர்களும் தெரிந்து கொள்ளப் பட்டவர்களுமாவர் - மேலும் அவருக்காக விசேஷமான ஒரு கூட்ட மக்கள் இன்றும் இருக்கிறார்கள்.

சாம்பலிலிருந்து வெற்றி

தொடர் ஓட்ட பந்தயம் எவ்வளவு தூரமாக இருந்தாலும் சரி, எவ்வளவு வீரர்கள் ஓடினாலும் சரி, துவக்கத்திலிருந்து முடிவுவரை ஒன்று மட்டும் நிலைத்திருக்கும்: சிறிய கோல்.

முதல் ஓடியவரிடமிருந்து கடைசி வரை, சிறிய கோல் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு கடந்து செல்லும்.

முதலில் ஆதாமில் துவங்கி அந்த சிறிய கோல் பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து வந்த விசுவாசமுள்ளவர்கள் வழியாக பத்திரமாக இந்த நீண்ட பந்தயம் இயேசுவின் இரண்டாம் வருகையில் முடிவு பெறும்போது வந்து சேரும்.

சிறிய கோல்? அது சத்தியமென்னும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி, அவரைப்பற்றிய சத்தியம். இந்த உலகத்தில் அவர் வாழ்ந்தபோது பகிர்ந்துக் கொண்ட சத்தியம். அவருடைய வார்த்தையின் மூலமாக இன்னமும் பகிர்ந்து கொள்ளப்பட்டு கொண்டிருக்கும் சத்தியம்.

ஒரு நூற்றாண்டிலிருந்து அடுத்த நூற்றாண்டுக்கு இந்த சிறிய கோல் கடந்து வந்து கொண்டிருக்கின்றது:

- ஆதாமிலிருந்து பழைய ஏற்பாட்டின் முற்பிதாக்களுக்கும்... இஸ்ரவேலுக்கும் அதன் தீர்க்கதரிசிகளுக்கும்.
- இஸ்ரவேலிலிருந்து... ஆதி கிறிஸ்தவ சபைக்கும்.

- ஆதி கிறிஸ்தவ சபையிலிருந்து... நீண்ட இருண்ட கால சபைக்கும்.
- வனாந்திரத்திலிருந்த அந்த சபையிலிருந்து... சீர்திருத்தத்தின் துணிச்சல் மிகுந்த தலைவர்களுக்கும்.
- சீர்திருத்தவாதிகளிடமிருந்து... பெரிதான இரண்டாம் வருகை இயக்கத்தின் தலைவர்களிடம் கடந்து வந்திருக்கின்றது.

மிக நாளாக புறக்கணிக்கப்பட்ட மற்றும் வேண்டுமென்றே அடக்கப்பட்ட சத்தியத்தை புராடெஸ்டன்ட் சீர்திருத்தம் வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது. தங்களை காத்துக்கொள்வதற்காக சரணடைய மாட்டோம் என்று கூறியோரை சித்திரவதை செய்து சத்தியத்துக்கு பதிலாக பொய்களையும் தவறுகளையும் கொண்டு வந்து, பெரிய எதிரியிடம் விற்கப்பட்ட அந்த சபையை அம்பலப்படுத்தியது.

லூத்தர், ஸ்விங்கிலி, கால்வின், மெலாங்தன் போன்ற அர்ப்பணிக்கப்பட்ட மனிதர்கள் இந்த சத்தியமெனும் சிறிய கோலை சீர்திருத்தம் வழியாக முன்னேற்றி கொண்டு சென்றனர். அதையே தான் பெயரறியாத ஆயிரக்கணக்கான பக்தியுள்ள ஆண்களும் பெண்களும் செய்தனர்.

ஒரு காரணம் இன்னும் சற்று நேரத்தில் தெளிவாக்கப்படும், இது நம்மை சுரங்கப்பாதை பற்றிய படிப்பிற்கு கொண்டு வந்திருக்கிறது.

இப்பொழுது உலகத்தின் மிகப் பெரிய சுரங்கப்பாதையாக 31 மைல் நீளமுள்ள ஹோன்ஷூ மற்றும் ஹொக்கைடோ என்ற தீவுகளை இணைக்கும் ஜப்பானை சார்ந்த சீக்கான் என்னும் ரயில் சுரங்கப்பாதை திகழ்கின்றது. 2012 ம் ஆண்டு முடிவுக்கு கொண்டுவரப்படவிருக்கிற தற்போதைக்கு கட்டுமான பணியிலிருக்கும் சுவிச்சர்லாந்தை சேர்ந்த கோத்தார்ட் பேஸ் சுரங்கப்பாதை 35 மைல் நீளமுள்ளது.

அமெரிக்காவிலுள்ள இல்லினாய்ஸ் மாநிலத்தின் சிகாகோ நகரத்திலுள்ள சுரங்கப்பாதைக்குள் நுழைவது போல கற்பனை செய்துக் கொள்ளுங்கள், அங்கிருந்து புளோரிடாவில் உள்ள மியாமிக்கு 1,186

மைல் தூரம் அந்த சுரங்கப்பாதையிலிருந்து வெளியே வராமல் வண்டி ஒட்டுகிறீர்கள். இப்பொழுது 1,260 மைல் நீளமுள்ள ஒரு சுரங்கப்பாதையை கற்பனை செய்து கொள்ளுங்கள். அது ஒரு இருள் சூழ்ந்த, இடிபாடுகள் நிறைந்த மற்றும் கொள்ளை கும்பல்களைக் கொண்ட மிக ஆபத்தான சுரங்கப்பாதை.

கி.பி. 538 ல் தேவனுடைய பின்னடியார்கள் மைல் கணக்கில் அல்ல வருடங்களால் கணக்கிடப்பட்ட ஒரு சுரங்கப்பாதைக்குள் நுழைந்தனர். இந்த சுரங்கப்பாதை 1,260 வருட காலமாக சென்றது. மத துரோகம் செய்த ரோம சபையின் ஆதிக்கத்தால் ஒடுக்குமுறையாலும் கொடுமைகளாலும் நிறைந்த சுரங்கப்பாதையாக இருந்தது. தேவனுடைய வார்த்தைகள் மட்டுமே பாதைக்குத் தீபமாக அமைந்த இருண்டக் காலம் என்ற சுரங்கப்பாதை அது.

ஆனால் கி.பி. 1798 ல் பிரெஞ்சு ஜெனரல் பெர்த்தியர் என்பவரால் ரோமின் போப் பிடிபட்டப் போது போப் ஆதிக்கத்தின் வல்லமை முடிவுற்றது. இந்த நிகழ்வு வெளிப்படுத்தின விசேஷம் 13:3 ல் "சாவுக்கேதுவாய் காயம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

லூத்தர் 1517 ல் தனது 95 வாதங்களையும் விட்டென்பர்க் கோட்டை சபையின் கதவில் ஒட்டியதிலிருந்து 1798 வரை சீர்திருத்தம் முன்னேறி சென்றது. நீண்ட நாட்களாக அடக்குமுறையிலிருந்த, தொலைந்து போன சத்தியம் மீட்கப்பட்ட காலக்கட்டம் அதுவே.

சீர்திருத்தத்தின் இயக்கம் ஸ்தாபனபடுத்துவதிலும், பிரிவுமைப்படுத்துவதிலும் தனது வேகத்தை இழங்க துவங்கியிருந்தாலும், ஐரோப்பா மற்றும் அமெரிக்காவை சேர்ந்த சில பணிவான உண்மை தேடல்காரர்கள் தேவ வார்த்தையில் இன்னும் அதிக சத்தியம் கிடைக்கும் என்று எண்ணித் தங்களது தேடுதலை தொடர்ந்தனர்.

இதைவிட சரியான சமயத்தில், அந்தத் தேடப்பட்ட சத்தியம் வெளி வந்திருக்க முடியாது. ஏனென்றால் இந்த சிறிய நாற்பது

வருடங்களில் மத உலகத்தை ஒரு பெரிய இயக்கம் வாரி கொண்டுப் போனது. அது தேவனின் வார்த்தையில் இருந்து வெளிவந்த இயேசு கிறிஸ்துவின் அதிசீக்கிர இரண்டாம் வருகையை குறித்த பளிச்சிடும் செய்தி.

ஐரோப்பாவிலிருந்து அமெரிக்கா வரையிலான அட்லாண்டிக் முழுவதிலுமுள்ள அநேக தீர்க்கதரிசன வல்லுநர்கள் இதே முடிவுக்குத்தான் வந்திருந்தனர். மேலும் இந்த பெரிய இரண்டாம் வருகையின் இயக்கம், சபைகள் முழுவதும் பரவி பிரமிக்கவைக்கும் விளைவுகளைக் கொடுத்தது.

ஆனால், அமெரிக்காவில் இந்த இயக்கத்தின் மத்திய மனிதனானவர் ஒரு கல்லூரிப் பயிற்சி பெற்ற அறிஞர் அல்ல. செல்வாக்கு மிகுந்த ஒரு நகர சபையின் ப்ரசித்தி பெற்ற போதகரும் அல்ல. அவர் உண்மையில் தனது சொந்த ஆவிக்குரிய பயணத்தை மங்கிய தெளிவற்ற நிலையில் மற்றும் தேவனை பற்றிய மிக குறைந்த கருத்தை உடைய ஒரு மனிதன்.

வாலிப இயற்கைச் சமயவாதி

ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த வில்லியம் மில்லர், வாலிப நாட்களில் தன்னுடைய ஆதி நம்பிக்கைகளுக்கு பதிலாக இயற்கைச் சமயவாத கொள்கையை நம்ப ஆரம்பித்தார். இயற்கைச் சமயவாதம் என்பது ஒரு கடவுள் ஒருவர் உண்டு என்ற மத தத்துவம் - இதன்படி தேவன் ஒரு மறைமுக இடஉரிமையாளர், ஒரு கடிகாரத்தை கீ கொடுப்பதுபோல உலகத்தை முதலில் கீ கொடுத்துவிட்ட பின்பு அது தானாகவே சொந்தத்தில் ஓடட்டும் என்று சொல்லி நடந்து செல்பவர். இயற்கைச் சமயவாதத்தின் படி அப்படிப்பட்ட தெய்வம் தன்னுடைய சிருஷ்டிகள் மீது எந்த தனிப்பட்ட ஆர்வமும் கவனமும் கொள்ளாதவர். அதிசயங்கள் எதையும் அவர் எப்போதும் அவர்களுக்காக செய்ய மாட்டார்.

அவருடைய தாத்தாவும், மாமாவும் இருவரும் பாப்டிஸ்ட் பாதிரியார்கள் வில்லியமை சந்தித்து தங்களுடைய விசுவாச நம்பிக்கைகள் குறித்து அடிக்கடி பேசுவார்கள், ஆனால் அவர்கள் சென்ற பிறகு தன்னுடைய நண்பர்களிடம் அவர்களை கேலி செய்து பேசுவார்.

1812 ல் அவர் யுத்தகளத்தில் பணியிலிருந்த போது சாவின் விளிம்பிற்கே சென்று திரும்பினார், அப்போது தனது இயற்கைச் சமயவாத நம்பிக்கைகளைக் குறித்து மறுபடியும் யோசனை செய்து பார்த்தார். பின்பு தான் சிறுவனாக இருந்த அப்ஸ்டேட் நியூ யார்க்கிலுள்ள லோ ஹாம்ப்டன் வீட்டிற்கு திரும்பி, அந்தக் காலத்தில் பத்தில் ஒன்பது அமெரிக்கர்கள் வேலை செய்யும் தொழிலான விவசாயத்தை செய்ய ஆரம்பித்தார். அப்பொழுது இயற்கைச் சமயவாதத்தை குறித்த சந்தேகங்கள் அவருக்கு அழமாயின, ஒரு தனிப்பட்ட இரட்சகரின் சமாதானம் தேவையென்ற பசி அவருக்குள் தீவிரமானது.

வேதாகமத்தை ஆராய்ச்சி செய்த போது தான் தேடிய இரட்சகரை அவர் கண்டு கொண்டார். அவர் தன்னுடைய தாத்தாவையும் மாமாவையும் கேலிபண்ணினது போல தன்னுடைய விசுவாசமில்லாத நண்பர்கள் அவரை வேதாகமம் முற்றிலும் முரண்பாடானது என்று சொல்லி கேலி செய்தனர்.

வேதாகமத்தை ஆராய்ச்சி செய்தபோது அவர் கூறியதாவது, "வேதாகமம் தேவ வார்த்தை என்றால் அதிலிருக்கும் எல்லாவற்றையும் புரிந்துக் கொள்ள முடியும், அதனுடைய எல்லாப் பகுதிகளும் ஒன்றுக்கொன்று ஒத்து போக வேண்டும். எனக்கு சிறிது காலம் தாருங்கள், அதனுடைய வெளிப்படையான முரண்பாடுகளை நான் ஒத்து போக வைப்பேன் அப்படிச் செய்யாவிட்டால் நான் இன்னும் ஒரு இயற்கைச் சமயவாதியாக இருப்பேன்."

வேதகாமமும் ஒரு அகராதியும்

ஒரு அட்வென்டிஸ்த்தருக்கு, இதற்கு அடுத்தது என்ன நடந்தது என்று நீங்கள் நன்று அறிந்திருப்பீர்கள். மில்லர் தன்னிடத்திலிருந்த மற்ற எல்லா புத்தகங்களையும் ஒதுக்கிவைத்துவிட்டு வேதகாமத்தையும் க்ரூடன்ஸ் அகராதியையும் வைத்துக் கொண்டு, ஆதியாகமம் 1 ல் தேவனுடைய வார்த்தையை ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார். வேகமாக படிப்பதை விட மெதுவாக எந்த பிரச்சனையாகும் முரண்பாடாகவும் தோன்றுகிறதை தீர்க்காமல் முன் செல்ல கூடாது என்று தீர்மானித்தார். வேதாகமம் தன்னைத்தானே விளக்கிக் கொள்ள அனுமதிப்பதே அவருடைய ஆராய்ச்சியின் கொள்கையாக இருந்தது.

ஒன்றன்பின் ஒன்றாக வெளிப்படையான குறைபாடுகள் எல்லாம் மறைய துவங்கியது. ஒரு அதிகாரத்திலிருந்து அடுத்த அதிகாரத்திற்கு செல்ல செல்ல இயேசுவினோடே தான் கொண்ட நட்பு இன்னும் வலுவாகவும் ஆழமாகவும் மாறுவதை அவர் உணர்ந்தார்.

வசனத்திலிருந்து வசனமாக அவர் முன்னேறி சென்றார், ஒரு நாள் தனது வாழ்நாளின் கவனத்தை சிறைப்பிடித்த அந்த வசனத்திற்கு வந்தடைந்தார். அதன் மூலமாக இன்னமும் பதினேழு மில்லியன் மக்கள் தொகையை மட்டுமே கொண்ட சிறிய அமெரிக்க தேசத்தின் கவனத்தை சிறைப்பிடித்த ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார்.

"இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும், பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்றான்" - தானியேல் 8:14.

மில்லருடைய ஆராய்ச்சி சிலநேரம் முழு இரவுகள் நீளக்கூடியதாக இருந்தது. வசனத்தை வசனத்துடன் ஒப்பிட்டு, வேதாகம நேர கணக்கு தீர்க்கதரிசனங்களின்படி, வேதாகமத்தில் ஒரு நாள் ஒரு வருடத்தை குறிக்கின்றது என்று கண்டறிந்தார். ஆதலால் இந்த 2,300 நாட்கள் 2,300 வருடங்களைக் குறிக்கும். தானியேல் புஸ்தகத்தின் 8, 9

அதிகாரங்களை மேலும் படித்தபோது 2,300 வருடங்கள் கி.பி. 457 ல் ஆரம்பித்தது என்று மில்லர் முடிவுக்கு வந்தார், அப்படி என்றால் அவருடைய கணக்கின் படி அது 1843 ம் ஆண்டு நிறைவுபெறும் என்று கண்டறிந்தார், அது நிறைவடைவதற்கு இன்னமும் சொற்பமான 25 வருடங்கள் மட்டுமே இருந்தது.

பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்பதற்கு அர்த்தம், இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வரப்போகும் இரண்டாம் வருகை என்ற முடிவுக்கு வந்தார். அவருடைய ஆத்துமாவில், யாரோ மில்லரிடம், "சென்று இதை உலகத்திற்கு கூறு" என்ற சத்தம் கேட்டது.

ஐந்தாண்டுகளுக்கு மேலாக தன்னுடைய உள்ளுணர்வின் கூப்பிடுதலை தவிர்த்து இன்னும் ஆழமான வேத ஆராய்ச்சியிலும் கண்டுபிடிப்பதிலும் மேலும் இரண்டு முறைகளாக தன்னுடைய முடிவு சரியானதா என்று ஆராய்ந்தார். இத்தனை வருட ஆராய்ச்சி எல்லா சந்தேகங்களையும் போக்கிய பின் மக்கள் முன்னே சென்று எப்படி பேசுவதென்ற புதிய தடை உருவானது. இன்னும் எட்டு வருடங்களுக்கு தான் கண்டுபிடித்த உண்மைகளை பிரசங்கிக்க வேண்டுமென்ற தன்னுடைய உள்ளுணர்வின் கூப்பிடுதலை புறக்கணித்தார். ஆனால் அவருடைய உள்ளுணர்வு மேலும் அவரை வற்புறுத்தியது.

அதனால் ஒரு சனிக்கிழமை காலையில், தேவன் தன்னுடைய பாரத்தை நீக்குவார் என்ற நம்பிக்கையில் மில்லர் அவரிடம் ஒரு "பேரத்தில்" ஈடுபட்டார். "தேவனே நான் உம்முடன் ஒரு உடன்படிக்கை செய்கிறேன். இந்த காரியங்களைக் குறித்து நான் பிரசங்கிக்க வேண்டுமென்று உம்மிடத்திலிருந்து ஒரு அழைப்பு வருமானால் நான் செல்லுவேன்" என்று அவர் கூறினார்.

பெரிய நிவாரணத்துடன் மில்லர் தனது இருக்கையில் அமர்ந்தார். இரண்டாம் வருகையை குறித்து யாரும் ஒரு 50 வயதான படிப்பறிவு இல்லாத விவசாயிடம் வந்து பிரசங்கம் செய்யுங்கள் என்று கேட்கமாட்டார்கள்.

அது தவறு. யாரோ கூப்பிடுவதற்கு ஆயத்தமாயினர்.

முப்பது நிமிடங்களுக்குள்ளாக, தனது கதவை மிக சத்தமாக தட்டும் சத்தம் மில்லரை எழுப்பிற்று.

"உங்களுக்கு எனது காலை வணக்கம், வில்லியம் மாமாவே," என்று கதவின் அருகில் இருந்த சிறுவன் கூறினான்.

"மருமகன் இர்விங்!" என்று உரத்துக் கூறினார் மில்லர். "இந்த விடியக்காலையில் உனது வீட்டிலிருந்து பதினாறு மைல் தொலைவில் நீ என்ன செய்கிறாய்?" என்று வினாவினார்.

"வில்லியம் மாமாவே, நான் காலை உணவு உண்பதற்கு முன்பாகவே, ட்ரேஸ்டெனில் இருக்கும் நமது பாப்டிஸ்ட் போதகர் நாளை நமது சபை கூட்டத்தில் பேச முடியாத நிலையில் இருக்கிறார் என்பதை சொல்வதற்காகவே நான் இங்கு வந்திருக்கிறேன். தந்தை உங்களிடம் வேண்டிக் கேட்க சொன்னார், வேதாகமத்தில் நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து வந்து பேசுவீர்களா என்று கேட்டறிய சொன்னார். நீங்கள் வருவீர்களா?"

மேப்பிள் மர தோப்பிற்குள் போராட்டம்

மில்லர் ஒரு வார்த்தையும் சொல்லாமல் தனது கால்களை திருப்பி அருகாமையிலிருந்த மேப்பிள் மர தோப்பிற்கு கதவு வழியாக சிறுவன் இர்விங்கை சந்தேகத்தில் ஆழ்த்திவிட்டு விரைந்து சென்றார். அங்கு, பழைய ஏற்பாட்டில் யாக்கோபு ஒரு தேவதூதனிடம் போராடியதை குறிப்பிடப்பட்டது போல மில்லரும் ஒரு மணி நேரம் முழுமையாக தேவனிடம் போராடினார்.

தேவனிடம் வாக்குத்தத்தம் பண்ணியதற்காக தனக்கு தானே கோபித்து கொண்டார். வில்லியம் மில்லர் தேவனிடத்தில் கெஞ்சி அழவும் முறையிடவும் ஆரம்பித்தார், தனக்கு பதிலாக வேறு

யாரையாவது அனுப்புமாறு தேவனிடம் மன்றாடினார். இறுதியாக வேதனையோடும் கண்ணீரோடும் தேவனிடம் தன்னை ஒப்புக்கொடுத்தார், அது அவருக்கு அமைதியையும் சந்தோஷத்தையும் கொடுத்தது. மில்லர் எவ்வளவு சந்தோஷத்தினால் நிறைக்க பெற்றார் என்றால் இப்பொழுது மேலும் கீழுமாக குதித்து சத்தமாக தேவனைத் துதித்தார். அவரை கதவிலிருந்து மிகவும் ஆர்வத்துடன் கவனித்த அவரது சிறிய மகளாகிய லூசி ஆன் வீட்டுனுள் விரைந்து "அம்மா, அம்மா - சீக்கிரம் வாருங்கள்!" என்றழைத்தாள்.

சிறிது நேரம் கழித்து மில்லரும் இர்விங்கும் ட்ரேஸ்டென் செல்லும் பாதையில் பயணிக்க ஆரம்பித்தனர். ட்ரேஸ்டெனின் மக்கள் மில்லரின் பிரசங்கத்தால் ஈர்க்கப்பட்டு அடுத்த ஒரு வாரம் வரைக்கும் ஒவ்வொரு இரவும் தங்களுக்கு பிரசங்கிக்க வேண்டுமென்று வற்புறுத்தினர்.

துவக்கத்திலிருந்தே, ட்ரேஸ்டெனில் அவரது செய்தியைக் கேட்ட மக்களிடமிருந்து அழைப்புகள் குவியத்துவங்கியது. படிப்படியாக வளரும் பனிச்சரிவுப்போல ஏகதேசம் எல்லாப் பக்கங்களிலிருந்தும் அவருக்கு அவசரக் கோரிக்கைகள் வந்துக் கொண்டே இருந்தது.

மில்லர் பிரசங்கித்தப் போதெல்லாம் மறுமலர்ச்சி பின்தொடர்ந்தது. இயேசுவின் இரண்டாம் வருகை மிக மிக சடுதியில் உள்ளது என்ற அவரது திகைப்பிற்குரிய செய்தி முழு நகரங்களையும் மாற்றியது. பின் வந்த எட்டு வருடங்களும், மில்லர் நிலையாக ஒரு நகரத்திலிருந்து மற்றொண்டிற்கு ஓய்வில்லாமல் பிரசங்கித்தார். பின்னர் 1839 ம் ஆண்டு நியூ ஹாம்ப்ஷயரிலுள்ள எக்ஸ்சிட்டர் என்ற இடத்தில் கூட்டம் முடிந்த உடன் தன்னுடைய ஊழியப் பாதையை முற்றிலுமாக மாற்றிய - ஒரு வாலிபனை சந்தித்தார்.

ஜோஷுவா வி. ஹைம்ஸ் வெறும் 34 வயதுள்ளவர், ஆனால் ஏற்கனவே அடிமைத்தனம், மது, போர் போன்றவைகளை வெளிப்படையாக எதிர்த்ததற்காக எல்லோராலும் அறியப்பட்டவர்.

எக்ஸ்சிட்டர் கூட்டத்திற்கு பிறகு ஹெம்ஸ் தன்னை தானே மில்லரிடம் அறிமுகப் படுத்திக் கொண்டு அவரை மாசசூசெட்ஸிலுள்ள பாஸ்டன் நகர சார்டன் தெருவிலுள்ள ஹெம்ஸ் தேவாலயத்திற்கு பிரசங்கிக்க வருமாறு வேண்டுகோள் விடுத்தார்.

அதனால் டிசம்பர் 8, 1839 ல் மில்லர் ஒரு முக்கிய அமெரிக்க நகரில் தனது முதல் பிரசங்க தொடரை ஆரம்பித்தார். ஒரு நாளில் இரண்டு கூட்டங்கள் நடந்தப்போதும் நூற்றுக்கணக்கானோரை இடமில்லாமல் திருப்பி அனுப்ப வேண்டிய நிலை இருந்தது.

ஒரு நாள் இரவு ஹெம்ஸ் மில்லரைப் பார்த்து "நீங்கள் எங்களுக்குப் பிரசங்கித்துக் கொண்டிருப்பதை உண்மையில் நம்புகிறீர்களா?" என்று வினாவினார்.

"நான் அதை உண்மையில் நம்புகிறேன் சகோதரர் ஹெம்ஸ், இல்லையென்றால் அதை நான் பிரசங்கிக்க மாட்டேன்" என்று மில்லர் பதிலளித்தார்.

"அப்படியென்றால் உலகெங்கும் அது சென்றடைவதற்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்?".

தன்னால் முடிந்தவரை தன்னை அழைத்த ஒவ்வொரு சிறிய நகரத்திற்கும், கிராமத்திற்கும் சென்று செய்தியை கூறிவருகின்றேன் என்ற மில்லரின் பதிலைக் கேட்ட ஹெம்ஸ் திகைத்துப்போனார்.

ஒவ்வொரு சிறிய நகரமும், கிராமமுமா?

அப்படியென்றால் பால்டிமோர், நியூ யார்க், பிலடெல்பியா போன்ற பெரு நகரங்கள்? அமெரிக்காவிலுள்ள பதினேழு மில்லியன் மக்கள், இவர்களுக்கு யார் அறிவிப்பது?

"நீங்கள் நம்புவதுப் போல கிறிஸ்து இன்னும் சில வருடங்களில் வருவாரேயானால் அந்த செய்தி மக்களை ஆயத்தம் செய்யத் தூண்டும் வகையில் இடிமுழக்கம் போல அறிவிக்கப்படுவதற்கு நேரத்தை வீணாக்குவதற்கு சமயமில்லை" என்று கூறினார்.

என்ன செய்ய வேண்டுமென்ற நோக்கத்தினால் அனல் மூட்டப்பட்டு ஹைம்ஸ் ஒரு அனுசரணையாளனாக, ஒரு திட்டமிடுவோனாக, ஒரு ஒருங்கிணைப்பாளனாக மாறினார். விரைவில் தேசத்தின் மிகப் பெரிய நகரங்களில் மில்லரின் பிரசங்கங்களுக்கு முன்னேற்பாடு செய்தார், விரைவில் எங்கு பார்த்தாலும் மில்லரின் பெயர் அறியப்பட்டது.

"கிறிஸ்தவ இணைப்பு" என்ற பிரிவை சேர்ந்த ஹைம்ஸ் தனது சபை போதகர்களிடம் தங்கள் பிரசங்க மேடையை மில்லருக்கு திறந்து விட வற்புறுத்தினார். இந்த சபைகளில் ஒன்றில், மில்லரின் செய்தி ராபர்ட் ஹார்மோன் குடும்பத்தை சென்றடைந்தது. அவர்களுடைய வாலிப வயதுள்ள மகளாகிய எலென், ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் சபையின் வருங்கால நிறுவனராக இருப்பார், அந்த இரண்டாம் வருகையின் நம்பிக்கைக்காக தனது வாழ்வை அர்ப்பணித்தார்.

காட்டுத்தீயை போல் இந்த இயக்கம் பரவியது. எப்போதும் துடிப்புடன் காணப்பட்ட ஹைம்ஸ், மில்லரின் பேச்சு செய்திக்கு துணையாக வெளியீட்டு ஊழியத்தை துவங்கினார். தங்களுடைய முயற்சிகளை அதனுடன் இணைக்கும் விதமாக அநேக ஊழியர்கள் இந்த இயக்கத்துடன் இணைந்தனர். மில்லரின் விரிவுரையைக் குறித்து 200 பக்கம் கொண்ட புஸ்தகத்தை மெத்தடிஸ்டான ஜோசய்யா லிட்ச் என்பவர் வெளியிட்டார். தனக்கு உதவுமாறு பாஸ்டனின் காங்கிரிகேஷனலிஸ்ட்டின் போதகராக இருந்த சார்லஸ் ஃபிட்ச் என்பவரையும் வற்புறுத்தினார். லிட்ச்சும் இன்னொரு நன்கறியப்பட்ட மெத்தடிஸ்டாக இருந்த அபொல்லோஸ் ஹேல் என்பவரும் "1843 விளக்கப்படம்" என்றழைக்கப்பட்ட மில்லரின் செய்திகள் சார்ந்த தீர்க்கதரிசன காலவரிசையை உருவாக்கினர்.

ஆனால் இந்த "மில்லரைட் இயக்கம்" ஆனது தெளிவாக ஒரு மனிதனிலிருந்து மிக அப்பால் வளர ஆரம்பித்தது. சுனாமி பேரலையைப் போன்று இந்த பெரிய இரண்டாம் வருகையின் இயக்கம் வட அமெரிக்காவிலுள்ள சபைகள் அனைத்திற்கும் அடித்துச்

செல்லப்பட்டது. முகாம் கூட்டங்களும், மாநாடுகளும் பல்லாயிரக்கணக்கானோரை இழுத்தது.

மில்லர் வெகு நாளாக கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் துல்லியமான நேரத்தை கூறுவதை தவிர்த்து வந்தார், அவருடைய செய்தி இயேசு 1843 வருடம் வரலாம் என்பதுதான். ஆனால் அந்த வருட ஜனவரி மாதத்திற்குள்ளாக யூத வருஷத்தை கணக்கில் கொண்டு இன்னும் அதிக ஆராய்ச்சியின் பலனாக இயேசு மார்ச் 21, 1843 ல் இருந்து மார்ச் 21, 1844 ற்குள் வரலாம் என்ற முடிவிற்கு வந்தார்.

அந்த முழு வருடமும் கழிந்த உடனே, இயேசு திரும்பி வராமல் போனதால் முதல் பெரிய ஏமாற்றம் இந்த இயக்கத்தின் மீது அமர்ந்தது. பின்னர் 1844 ல் நியூ ஹாம்ப்ஷயரிலுள்ள எக்ஸ்சிட்டரில் நடந்த ஆகஸ்ட் முகாம் கூட்டத்தில், எஸ். எஸ். ஸ்னோவ் என்றழைக்கப்பட்ட மில்லரைட் போதகரின் கண்டுப்பிடிப்புகளால் இந்த இயக்கம் புத்துயிர் பெற்றது. தானியேல் தீர்க்கத்தரிசனத்திலுள்ள 2,300 நாட்கள் குறித்தப் படிப்பு அவரை இயேசு யூத மாதத்தின் ஏழாம் மாதம் பத்தாம் நாளிலே வருவார் என்ற முடிவுக்கு வர வைத்தது, அது 1844 ம் வருடம் அக்டோபர் 22 ம் தேதியாக இருந்தது - அதற்கு இன்னமும் 2 மாதங்களே இருந்தன.

இந்த திடுக்கிடவைக்கும் செய்தி உற்சாகத்தை தொற்று நோய்ப்போல பரவச் செய்தது. மக்கள் அந்த முகாம் கூட்டத்தைவிட்டு இந்த வார்தையைப் பரப்ப கிளம்பினர்: "இதோ மணவாளன் வரவிருக்கிறார்!" விரைவில், மில்லர், ஹைம்ஸ் மற்ற இயக்கத் தலைவர்கள் ஸ்னோவின் இந்த கணக்கு சரியானது என்று கூறினர்.

அக்டோபர் 22, 1844 ல் நூறாயிரக்கணக்கான விசுவாசிகள் தேவன் விரைவில் வருவார் என எண்ணி காத்திருந்தனர். ஆனால் அந்த நாளும் வந்து சென்றது, இந்த இரண்டாம் ஏமாற்றம் அவர்களை வார்த்தைகளால் வருணிக்க முடியாத வண்ணமாக ஆழமாக உருக்குலைத்து.

அக்டோபர் 24 ம் தேதி, லிட்ச் மில்லருக்கு எழுதினார்: "இங்கே இது ஒரு மேகமூட்டமான இருண்ட நாள் - ஆடுகள் சிதறி சென்று விட்டது - தேவன் இன்னமும் வரவில்லை."

பின்விளைவு

பெரிய ஏமாற்றத்திற்கு பிறகு, சில விசுவாசிகள் எல்லா நம்பிக்கையையும் இழந்து இயக்கத்தை கைவிட்டு அல்லது கிறிஸ்து வருவார் என்ற விசுவாசத்தை விட்டு அல்லது இவ்விரண்டையுமே கைவிட்டனர். சிலர் அக்டோபர் 22 ம் தேதி எதுவுமே நடைப்பெறவில்லை என்றும், தாங்கள் வசனத்தை தவறாக புரிந்து கொண்டோம் என்னும் முடிவிற்கு வந்தனர். சிலர் இயேசு அக்டோபர் 22 ல் வந்ததாகவும், ஆனால் அந்த வருகை கண்களுக்குத் தெரியாத ஆவிக்குரிய வருகை என்றும் எண்ணினர். இன்னும் சிலர் மீளமுடியாத மிக அதிகமான மன சோர்விற்கு உள்ளாயினர். சிலர் ஜெபத்துடன் தங்கள் தேடலை தொடர்ந்தனர், எப்படியேனும் வேதத்தை குறித்த தங்கள் புரிதலில் எதையாவது விட்டுப்போயிருக்கலாம் என்று நினைத்தனர்.

இப்பொழுது ஒவ்வொரு அட்வென்டிஸ்த்தருக்கும் தெரிந்ததுப்போல, இந்த கடைசிக் கூட்டத்திலிருந்து தான் ஒரு சிறு எண்ணிக்கையிலான ஊக்கமான வேதாகம மாணாக்கர்கள் ஏதோ அக்டோபர் 22, 1844 ல் நடந்திருக்கிறது என்ற முடிவுக்கு வந்தனர். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு பதிலாக என்ன நடந்தது என்றால் இயேசு பரலோக பரிசுத்த ஸ்தலத்தில் இருந்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் கடந்து சென்று தன்னுடைய கடைசி பரிந்துபேசும் ஊழியத்தை துவங்கியுள்ளார் என்று கண்டறிந்தனர்.

ஹிராம் எட்சன், ஓ. ஆர். எல். க்ரோசியர், மற்றும் எப். பி. ஹான் போன்றோர் பரிசுத்த ஸ்தல சுத்திகரிப்பு என்பது பூமியிலுள்ள பரிசுத்த ஸ்தலத்திலல்ல பரலோக பரிசுத்த ஸ்தலத்தின் சுத்திகரிப்பை குறிக்கின்றது என்ற முடிவுக்கு வந்தனர்.

சில காலத்திற்குள்ளாக மற்றவர்களும் இவர்களின் ஆராய்ச்சி முடிவும் சரிதான் என்று கூறி அவர்களுடன் இணைந்தார்கள். அவர்களுள் ஒரு வாலிப "கிறிஸ்தவ இணைப்பு" என்ற அமைப்பில் போதகராக இருந்த ஜேம்ஸ் உவைட்டும் ஒருவர், அப்போது ஹார்மோன் குடும்பத்தின் வாலிப மகளாக இருந்த எலென் ஹார்மோன் இப்பொழுது ஜேம்ஸ் உவைட்டின் மனைவி, ஜோசப் பேட்ஸ் என்ற ஓய்வுபெற்ற கப்பல் மாலுமியும் அந்த கூட்டத்துக்குள் ஒருவராக மாறினார்கள்.

கசப்பான ஏமாற்ற சாம்பலிலிருந்து அதன் அசல் நோக்கத்தை தாண்டிய ஒரு பெரிய இரண்டாவது அட்வெந்து இயக்கம் எழுந்தது. பெரும் ஏமாற்றத்தின் கண்ணீரிலிருந்து தேவ வார்த்தை சார்ந்த புதிய உறுதிப்பாடு எழுந்தது. அது இயேசுவின் வருகை இதோ இன்னமும் சமீபமாக வாசலண்டையில் வந்து விட்டது என்ற தேவனின் இறுதி அழைப்பை உலகிற்கு எடுத்துக் கூறும் மக்களை எழும்ப செய்தது.

வெளிப்படுத்தின விசேஷத்தின் ஏழு சபைகளுள், சீர்திருத்தத்திலிருந்து இரண்டாவது அட்வெந்து இயக்கம் வரையிலாக இருந்த சபையின் பெயர் - "சகோதர அன்பு" மிகுந்த பிலதெல்பியா சபை. குழம்பின பாபிலோனான மற்ற சபைகளிலிருந்து வெளியே அழைக்கப்பட்டதுமான தேவனுடைய இறுதி மக்கள் எழும்ப துவங்கியதுமே ஏழாம் மற்றும் கடைசி சபை தொடரும்: லவோதிக்கேயா சபை. தேவன் இந்த சபைக்கு வலுவான எச்சரிக்கைகளையும் கண்டித்தலையும் வைத்திருந்தார், அதை குறித்து பின் வரும் அத்தியாயங்களில் பார்ப்போம்.

தேவனுக்கு விசுவாசமுள்ளவர்களின் உடைக்க முடியாத சங்கிலி? நிச்சயமாக, பெரிய இரண்டாம் அட்வெந்து இயக்கத்திலிருந்த தலைவர்களான மில்லர், ஹைம்ஸ், ஃபிட்ச் மற்றும் பின்னர் வந்த எட்சன், உவைட்ஸ் மற்றும் பேட்ஸ் போன்றோர்.

ஆமாம், எப்பொழுதும் இருந்தவாறு அதில் என்ன வந்தாலும் சத்தியத்திற்காக உண்மையாய் நின்ற பெயர் அறியப்படாத பெரியக்கூட்ட விசுவாசமுள்ளவர்களும் அடங்குவர்.

இந்த ஓட்ட பந்தயம் மிகவும் நீளமானது. ஆதாமிலிருந்து அந்த சிறியக் கோல் தொடர்ந்து வந்துக் கொண்டே இருக்கிறது. அட்வெந்து இயக்கத்தினால் அந்த கோல் இப்பொது உங்கள் கரங்களுக்கும், எனது கரங்களுக்கும் வந்தடைந்திருக்கின்றது.

இந்த தொடர் பந்தயத்தின் முடிவு கட்டத்தில் நாம் நிற்கிறோம்.

அந்த கோல் உங்களின் கரங்களில் இருக்கிறது என் நண்பனே - உறுதியாய் அதை பற்றிக்கொள்ளுங்கள். இவ்வளவு தூரம் அது பிரயாணம் செய்து வந்திருக்கிறது. அதன் மீது ஆதாமின், நோவாவின், தானியேலின், யோசேப்பின், தாவீதின், பவுலின், பேதுருவின், யோவானின் மற்றும் வால்டென்செஸ், ஆல்பிஜென்ஸஸ், ஹுகியுநாட்ஸ்களின் மற்றும் லூத்தரின், கால்வினின், ஸ்விங்கிலியின், விக்லிஃபின், மில்லரின் மற்றும் ஹைம்ஸின், எட்சனின், உவைட்டின் கைரேகைகள் பதிந்துள்ளது.

உங்கள் கரங்களின் வழியாக அது எங்கு பிரயாணிக்கும்?

எல்லா காலத்திலும், தேவன் தனக்கென்று ஒரு கூட்ட மக்களை எப்பொழுதும் வைத்திருந்தார் - அவர்கள் உண்மை யுள்ளவர்களும், விசுவாச முள்ளவர்களும், அழைக்கப் பட்டவர்களும் தெரிந்து கொள்ளப் பட்டவர்களுமாவர் - மேலும் அவருக்காக விசேஷமான ஒரு கூட்ட மக்கள் இன்றும் இருக்கிறார்கள்.

சத்தியத்தின் வெற்றி வீரர்கள்

எப்போதேனும் ஒரு பெரிய நகரை சுற்றி வாகனத்தை ஓட்டிச் செல்லும்போது காணாமல் போய் இருக்கிறீர்களா?

அந்த சமயத்தில், நாமிருக்கும் இடத்தை கண்டறிவதற்காக அப்படியே மாயமாக நாம் சற்று உயரமாக காற்றினுள் பறந்து சென்று கீழேயிருக்கும் பரந்த இடத்தை பார்த்து, நாம் எங்கு இருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ள முடியும். ஆனால் வானத்திற்கு மிதந்து செல்லுவது நடைமுறையிலான ஒரு காரியம் அல்ல.

எனினும், நீங்கள் அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா அல்லது உலகில் எந்த இடத்தில் இருந்தாலும் கூட, உங்கள் வாகனத்தில் ஜி.பி.எஸ் என்ற புவிக்கோள் இருப்பு நிலை கருவி அமைப்பு இருக்குமானால் எந்த பிரச்சனையும் கிடையாது. இந்த கருவி இருந்தால் வானத்தில் நீங்கள் பறக்க வேண்டிய அவசியம் இராது. 12,000 மைல் தொலைவில் விண்வெளியில் செயற்கை கோள்களின் பிணைப்புகள் உள்ளது. அவை ஒன்றுடன் ஒன்று தங்களுக்குள்ளே “குறிப்புகளை ஒப்பிட்டு” பார்த்து நீங்கள் இருக்கும் இடத்தை துல்லியமாக "காட்டிவிடும்".

உங்களுடைய வாகனத்தில் இந்த புவிக்கோள் இருப்பு நிலை கருவி அமைப்பு இருக்குமேயானால், நீங்கள் எங்கு இருக்கிறீர்கள் என்பதை பார்க்க முடிவது மட்டும் அல்லாமல் நீங்கள் எங்கு சென்று

கொண்டு இருக்கிறீர்களோ அந்த இடத்திற்கு செல்லும் வழியை கூட காண்பித்து விடும். எந்த திசையில் செல்லுவது என்று அறியாதவர்களுக்கு இந்த கருவி உண்மையிலேயே ஒரு "ஆசிர்வாதம்" தான்.

சில சமயம் ஒரு புத்தகத்தை படித்து கொண்டிருக்கும் போது நீங்கள் "காணாமல்" போகும் வாய்ப்பு உள்ளது. ஒரு தலைப்பில் வலது பக்கமாக அல்லது இடது பக்கமாக பக்கங்களை திருப்பலாம், பல வாக்கியங்கள் அல்லது அத்தியாயங்கள் வழியாக பயணித்த பின், எங்கு தொடங்கினோம் எங்கு செல்லுகிறோம் என்பதை கூட மறந்து போய் தொலைந்து போகும் வாய்ப்புகள் உள்ளது.

அதனால், ஒரு கணம் நம்மை நாமே நிறுத்தி கொண்டு இப்போது எங்கு நிற்கிறோம் என்று பார்ப்பதற்கு சமயம் எடுத்து கொள்ளலாம். எங்கு ஆரம்பித்தோம், எங்கு இருந்து வந்திருக்கின்றோம், இங்கிருந்து வேறெங்கு செல்லவிருக்கின்றோம் என்பதை நாம் மதிப்பாய்வு செய்ய வேண்டும்.

இந்த புத்தகத்தை நாம் துவங்கும்போது நூற்றாண்டுகளாக தேவனை பின் தொடர்ந்த - அவரது உண்மையுள்ள பின்னடியார்களை குறித்து சொல்லுவது தான் இந்த பாடத்தின் நோக்கம் என்று பார்த்தோம். சத்தியத்தின் வெற்றி வீரர்களாக திகளுவோம் என்று தேவனிடம் இருந்து வந்த நோக்கத்தை அவரின் பின்னடியார்கள் ஏற்று கொண்டனர்.

இந்த சத்தியம் இரு வகை பட்டது. அந்த சத்தியம், தேவன் தனது வார்த்தையின் மூலமாக பகிர்ந்து கொண்ட எல்லா சத்தியம் மற்றும் - இயேசுவின் உலக வாழ்வில் அவர் கற்பித்து, வாழ்ந்த சத்தியம் எல்லாவற்றையும் உள்ளடக்கியது. ஆனால் இந்த சத்தியத்தின் மிக முக்கிய அங்கமானது தேவனுடைய குணத்தை பற்றிய சத்தியம் தான்.

பெரிய சத்துருவானவன் தேவன் நம்பத் தகாதவர் என்றும், அவர் பொய் உரைப்பவர் என்றும், முடியாததை செய்யுமாறு கோரிக்கை விடுபவர் என்றும், மதிப்பீடு செய்பவர் என்றும், வஞ்சகமானவர் என்றும், நம்முடைய சந்தோஷத்தை அழிப்பவர் மற்றும் நமது சுதந்திரத்தை பறித்து கொள்ளுபவர் என்றும் கூறுகின்றான். தேவன் தான் இந்த உலகில் நடைபெறும் எல்லா வேதனைகளுக்கும், துயரத்திற்கும் காரணம் என்றும் நம்முடைய வாழ்க்கையில் நிகழும் எல்லா கொடிய நிகழ்வுகளுக்கும் அவரே பொறுப்பேற்க வேண்டுமென்று கூறிவருகிறான். மேலும், இந்த பிரபஞ்சத்தின் அதிபதியாக ஒருவேளை அவன் இருந்திருந்தால் எல்லோருக்கும் அதிகபட்ச சந்தோஷம் கிடைத்திருக்கும் எனவும் கூறுகின்றான்.

ஏன், பல கிறிஸ்துவ தலைவர்கள் கூட தேவன் இந்த உலகத்தை நியாயம் தீர்ப்பவர் என்றும் பாவம் செய்பவரை அழிப்பவர் என்றும் கூறுகின்றனர். அதனால், சுனாமி பேரலை, சூறாவளி அல்லது நிலநடுக்கம் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிரை எடுக்கும் போது பாவிகள் மீதுள்ள கோபத்தினால் தான் தேவன் தனது நீதியை அவர்கள் மீது நிலைநாட்டுகிறார் என்று நினைக்கின்றனர்.

சத்துரு இதை ஒரு படி மேலாக எடுத்து சென்று, தன்னுடைய கட்டளைகளை கை கொள்ளாததினால் தேவன் மக்களை அழிப்பதோடு மட்டுமல்லாமல் மக்களால் கைக்கொள்ள முடியாத ஒரு சட்டத்தை உருவாக்கி இருக்கிறார் என்று சொல்லிவருகிறான்.

தேவன் உண்மையிலேயே எப்படிப்பட்டவர்? அவர் அன்பின் தெய்வமா? இல்லை என்றால் கண்டிப்பான நீதி அல்லது அழிவை உண்டாக்குகிறவரா? யாராலும் கை கொள்ள முடியாத ஒரு சட்டத்தை இயற்றி உள்ளாரா? பின்னர் அதை கை கொள்ள வில்லை என்று கூறி அனைவரையும் சாகும் அளவிற்கு நியாயம் தீர்ப்பவரா? நன்னடத்தையின் வெகுமதியாக பரலோகத்தையும் நித்திய வாழ்க்கையையும் காண்பிக்கின்றாரா? நாம் தவறான குணத்தை வெளிக்காட்டும் போது தனது கோலை நீட்டி தண்டிக்கின்றாரா? அவர்

நாம் அவரை நேசிக்க வேண்டுமென்று கூறுகின்ற போது - "நேசி இல்லை என்றால்..." என்ற அர்த்தமா?

வஞ்சகன்

அவர் உண்டாக்கின மனிதர்களுடன் தேவன் பகிர்ந்து கொள்ளுகிற ஒவ்வொரு சத்தியத்திற்கும் சத்துரு ஒரு கள்ள சத்தியத்தை வைத்துள்ளான். பாவம் சாவுக்கேதுவானது என்று தேவன் எச்சரிக்கை செய்திருந்தார். அதிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்றும், இல்லையேல் அது உங்களை கொன்று விடும் என்றும் கூறி இருந்தார். அப்படி இல்லை என்று சாத்தான் கூறினான். "நீங்கள் மெய்யாகவே மரிக்க மாட்டீர்கள்!" இல்லை நீங்கள் "மரித்த" பிறகு உங்கள் ஆத்துமா வாழ்கிறது என்று கூறினான். அப்படி என்றால் வேறுக் கோணத்திலிருந்து நீங்கள் இன்னமும் உயிருடன் இருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

ஏழாவது நாள் ஓய்வுநாள் என்று தேவன் கூறி இருந்தார். அப்படி இல்லை, வாரத்தின் முதல் நாளான ஞாயிற்று கிழமை தான் ஓய்வுநாள் என்று சாத்தான் கூறுகின்றான்.

வேதம் கூறுகிறது இயேசு வரும்போது கண்கள் யாவும் அவரைக் காணும் என்று. அப்படி இல்லை என்கின்றான் சாத்தான். தேவன் ரகசியமாக வருவாரென்றும் வெகு சிலரே அவரை காண்பர் என்றும் கூறுகின்றான்.

இத்தகைய பொய்களின் வரிசை நீண்டு கொண்டே செல்லுகின்றது. ஏன்? ஏனென்றால் தேவனுக்கு எதிரான சாத்தானின் கலகம் ஒரு முழுமையைப்பெற்று அவனால் எந்த உண்மையையும் கூற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அவனால் பொய்யை மட்டும் தான் இப்பொழுது கூற முடியும்.

அதனால், தேவன் நம்முடன் பகிர்ந்து கொண்ட ஒவ்வொரு உண்மைக்கும் உலகத்திலுள்ள பெரும்பாலான கிறிஸ்துவர்கள் கூட அங்கீகரிக்க தக்க பொய்களை சாத்தான் வைத்துள்ளான்.

ஆனால் தேவன் நமக்கு கற்பித்தவைகளுக்கு எதிரான பொய்களை கூறுவதுடன் மட்டும் சாத்தான் நிறுத்திவிட வில்லை. அவன் உண்மையாகவே தேவனைக் குறித்து மேலும் அதிகமான பொய்கள் உரைப்பதில் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றான்.

ஆனால் ஆதியிலிருந்தே, சாத்தான் பொய் சத்தியத்தை பிரசங்கித்தும் அவனின் பொய்களை ஏற்க மறுத்த ஒரு கூட்ட உண்மை பின்னடியார்கள் தேவனுக்காக இருந்தனர். ஆதியிலிருந்தே தேவன் மனிதர்களுடன் பகிர்ந்துகொண்ட சத்தியத்தில் மாத்திரம் நிபுணத்துவம் உடையவர்களாய் அல்ல, "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" என்று கூறின அந்த இயேசுவை பற்றின காரியங்களிலும் கூட நிபுணத்துவம் உடையவர்களாய் இருந்த ஒரு கூட்ட உண்மை பின்னடியார்கள் தேவனுக்கென இருக்கின்றனர்.

இயேசு இங்கிருந்த போது, அவர் "என்னை கண்டவன் பிதாவை கண்டான்" (யோவான் 14:9) என்று கூறினார். சத்தியமான இயேசு தனது சத்தியங்களை பகிருவதற்கு மட்டுமல்லாமல் பிதாவை குறித்த சத்தியங்களை பகிர்ந்து கொள்ளவும் வந்தார்.

- ஆதாமும் முற்பிதாக்களும் சத்தியத்திலும், இயேசுவாகிய சத்தியத்தின் மேலும் நிபுணத்துவம் உடையவர்களாய் இருந்தனர்.
- இஸ்ரவேலும், அவர்களுடைய தீர்க்கதரிசிகள் மற்றும் ராஜாக்களும் சத்தியத்திலும், இயேசுவாகிய சத்தியத்தின் மேலும் நிபுணத்துவம் உடையவர்களாய் இருந்தனர்.
- ஆதி சபை சத்தியத்திலும், இயேசுவாகிய சத்தியத்தின் மேலும் நிபுணத்துவம் உடையதாய் இருந்தது.

- ஆதி நூற்றாண்டுகளில், அப்போஸ்தலர்களும் அவர்களுக்கு பின் வந்த விசுவாசிகளும் துன்புறுத்தல்களாலும், சமரசத்தினாலும் முற்றுகை செய்யப்பட்டிருந்தும், சத்தியத்திலும், இயேசுவாகிய சத்தியத்திலும் வல்லுனர்களாக காணப்பட்டனர்.
- விசுவாச துரோக சபையுடன் யுத்தம் செய்து கொண்டிருந்தபோதும் சீர்திருத்தவாதிகள் சத்தியத்திலும், இயேசுவாகிய சத்தியத்தின் மேலும் உறுதியாக காணப்பட்டனர்.
- சீர்திருத்தம் முடிந்தவுடனே ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள வேத மாணாக்கர்கள் இயேசுவின் இரண்டாம் வருகையில் கவனத்தை திருப்பி சத்தியத்திலும், இயேசுவாகிய சத்தியத்தின் மேலும் வல்லுனர்களாக காணப்பட்டனர்.

பிறகு, இயேசு திரும்ப வரவில்லை என்ற கசப்பான ஏமாற்றம் நிகழ்ந்தது. ஆனால் இந்த பெரிய மன முடைவிலிருந்து "உயர்ந்த எதிர்காலத்தின் இயக்கம்" என்று அட்வென்டிஸ்ட் வரலாற்று ஆசிரியராக இருந்த எல். ஈ. ப்ரூமினால் அழைக்க பட்ட இயக்கம் எழும்பியது. கடைசிமுறையாக, தேவனின் உண்மை மீதமானவர்களான இவர்கள் சத்தியத்திற்காகவும், இயேசுவாகிய சத்தியத்திற்காகவும் வெற்றி வீரர்களாக இருப்பார்கள்.

உடைக்க முடியாத சங்கிலி

இந்த சத்தியத்தை சற்றே நிறுத்திவிட்டு நாம் எந்த திசையில் இருக்கிறோம் என்பதை பார்ப்போம். ஏதேனிலிருந்தே, நிலையான, உடைக்க முடியாத சங்கிலியாக உண்மையும் விசுவாசமும் உள்ளவர்கள் நூற்றாண்டின் பின் நூற்றாண்டாக தொடர்ந்து நீடித்து வருகின்றனர் என்பதை நம்மால் காண முடிகின்றது. தேவனுடைய உண்மை பின்னடியார்களின் நோக்கம் எப்போதுமே மாறியதில்லை

என்பதை பார்க்கிறோம். காட்டு மிராண்டித்தனமாகவும், வெட்கப்படும் வகையிலும் சத்துரு அவர்களை வஞ்சித்திருந்தும் சத்தியத்தின் வெற்றி வீரர்களாய் நிகழ்வதும் அதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுவதும் தான் அவர்களுடைய நோக்கமாய் இருந்து வந்துள்ளது. இன்னும் அதிக உற்சாகத்துடன் நமது தேவனும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சத்தியத்தை பகிர்ந்துக் கொள்ளுவதும் அதில் வெற்றி வீரர்களாய் திகழ்வது அவர்களது பெரிய நோக்கமாய் இருந்தது.

பல காலங்களாக அடக்கி வைக்கப்பட்ட தொலைந்து போன சத்தியங்களை சீர்திருத்தம் மீட்டெடுத்தது. அது நூற்றாண்டுகளாக நிகழ்ந்த தவறுகளையும், பொய்களையும், கள்ளத்தனங்களையும் அம்பலப்படுத்தியது. உலகிற்கு அவர்கள் கொடுத்த பரிசுகளில் மிக பெரியது - மனிதப் பாரம்பரியங்களை அல்ல வேதத்தின் அதிகாரம் மட்டும் தான் நிலைக்கும் - மனித முயற்சிகளால் அல்ல தேவன் மீதுள்ள விசுவாசத்தினால் தான் இரட்சிப்பு போன்ற வலியுறுத்தல்கள் தான்.

ஆனால் சீர்திருத்தம் முடிவதற்குள் தனது வேகத்தை இழந்து, மற்ற முக்கிய சத்தியங்கள் இன்னும் மீட்டெடுக்கப்படாமல் இருக்கின்றது. வேத தீர்க்கதரிசனத்தின் மேல் தனக்கு தவறான புரிந்துகொள்ளுதல் ஆதியில் இருந்த போதிலும் பெரிய அட்வெந்து விழிப்புணர்வு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்த சத்தியத்தை மறுபடியுமாக கண்டுபிடித்து அதில் வெற்றி வீரர்களாய் திகழ்கின்றனர்.

இந்த புத்தகத்தில் நாம் ஏற்கனவே பார்த்த தொடர் ஓட்டப் பந்தயத்தில் ஓடுகின்ற வீரர்கள் போல, இப்பொழுது அந்த சிறிய கோல் கடைசி ஓட்ட வீரருக்கு கடந்து போகும் தருவாயில் உள்ளது. பூமியின் வரலாற்றின் இறுதி ஆண்டுகளாய் இருக்கும் இந்த நேரத்தில் தேவன் கடைசியாக மீதமானவர்களை சத்தியத்தின் மீதும் இயேசுவாகிய சத்தியத்தின் மீதும் வெற்றி வீரர்களாய் திகழ ஒரு இறுதி அழைப்பை அனுப்ப இருக்கின்றார். இந்த இறுதி ஓட்டக்காரருக்கு எல்லா வேலைகளை காட்டிலும் மிக முக்கிய வேலை ஒன்றை கொடுக்க விருக்கின்றார்.

ஆமாம் இந்த இறுதி கட்ட உண்மை மக்கள், இந்த இறுதி மீதமானவர்கள், பல நிராகரிக்க பட்ட உண்மைகளான ஓய்வுநாள், பரலோக ஆசரிப்பு கூடாரத்தில் இயேசு கிறிஸ்துவின் ஊழியம், வாழ்விலும் மரணத்திலும் மனிதனின் நிலை, உடனடியாக நிகழவிருக்கின்ற கிறிஸ்துவின் இரண்டாம் வருகை போன்ற சத்தியங்களை மீட்டு எடுத்துள்ளனர்.

ஆனால் கடைசி மீதமானவர்களுக்கு மூன்று மிக முக்கிய அவசரமாக உலகத்துடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய செய்திகளான வெளிப்படுத்தின புஸ்தகத்தில் காணப்படும் தீர்க்கதரிசனமான முத்தூது செய்தியை கொடுக்க விரும்புகிறார்.

வெளிப்படுத்தின விசேஷம் 14:6-12 ல் கொடுக்கப்பட்டிருக்கும் முத்தூது தேவனின் கடைசி அழைப்பும், காலம் தனது கடைசி வருடங்களையும் மணி நேரங்களையும் இழந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் பூமியில் வாழும் கோடிக் கணக்கானோருக்கு அவரது இறுதி எச்சரிப்பு. நோவா தேவனின் நேரம் குறித்து உலகிற்கு அழைப்பையும் எச்சரிப்பையும் கொடுத்தது போல, யோவான் ஸ்நானகன் கிறிஸ்துவின் முதல் வருகைக்கு முன் அழைப்பையும் எச்சரிப்பையும் கொடுத்ததுபோல, தேவ மக்களது வேலையும் சிலாக்கியமும் என்னவென்றால் கி.பி. 2000 மற்றும் அதற்கு பின்னால் இயேசு இங்கு ஏகதேசம் வர இருக்கின்றார் என்பதை உலகிற்கு பறைசாற்றுவதும் எச்சரிப்பதும் தான்.

சுருக்கமாக, வெளிப்படுத்தின விசேஷத்தின் முத்தூது செய்தி என்னவென்றால்:

1. நித்திய சுவிசேஷம், நியாத்தீர்ப்பு நேரத்தின் சமீபத்தினால் அவசர படுத்தபட்டுள்ளது.
2. தவறான மதங்களாகிய குழப்பமான பாபிலோனில் இருந்து வெளியே வருமாறு தேவன் தனது மக்களுக்கு அழைப்பு விடுகின்றார்.

3. தவறான மார்க்கத்தில் அதிக காலம் ஒட்டிக் கொண்டிருப்பதினால் பெரிய சத்துருவின் "மிருகத்தின் முத்திரையை" பெரும் ஆபத்து இருக்கிறது என்ற எச்சரிப்பு.

ஆமாம், இங்கு அவசர எச்சரிப்புகள் இருக்கின்றது. தவறான மற்றும் கள்ள சத்தியத்திலிருந்து உண்மை சத்தியத்தை வித்தியாச படுத்த வேண்டிய அவசியம் தேவனின் இறுதி மீதமானவர்களுக்கு உள்ளது. ஆனால் கவனிக்க வேண்டியது என்னவென்றால் இந்த மூன்று தூதுகளும் "நித்திய சுவிசேஷம்" என்று தான் துவங்குகின்றது. இதை விட வேறெதற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வில்லை. இதற்கு மட்டுமே முன்னுரிமை. இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை மரணத்தை மிக தெளிவாக எடுத்துரைப்பது தான் தேவ பின்னடியார்களின் முழு முதல் கடமை.

"கிறிஸ்துவை உலகிற்கு பறைசாற்றுகிற கிறிஸ்துவர்களுள் ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தர்கள் கிறிஸ்துவை மேன்மை படுத்துவதில் முதன்மை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்" என்று எலன் உவைட் எழுதியுள்ளார்" - சுவிசேஷ ஊழியர்கள், ப. 156.

1844 ம் ஆண்டின் ஏமாற்றத்திலிருந்து இன்றைய நாள்வரை தேவனின் மீதமானவர்கள் மீட்டெடுத்த மற்றும் கண்டுபிடித்த கோட்பாடுகள் மற்றும் சத்தியங்களுக்கு என்ன நேரும்? இயேசுவாகிய சத்தியத்தின் மற்ற சத்தியங்களுக்கு முக்கியத்துவம் கிடையாதா?

அரிதாக தான். இந்த சத்தியங்களுக்கு ஆதாரம் யார்? யார் அதை கற்பித்தது?

ஆனாலும் இரண்டு பெரிய தவறுகளிலிருந்து நாம் நம்மை காத்துக்கொள்ள வேண்டும்.

ஒன்று, நம்மை சுற்றி பார்த்து மற்ற சபைகள் இந்த சத்தியங்களை போதிக்காமல் இயேசுவின் மீதும் இரட்சிப்பின் மீதும் மாத்திரம் வெளிப்படையான கவனத்தை செலுத்துவதினால், நாம் அவற்றை

அவர்களிடம் விட்டு விட்டு நம்முடைய பெரிய வேலை தேவனால் வழிகாட்ட பட்டு கண்டு பிடிக்க பட்ட சத்தியங்களை பகிர்ந்து கொள்ளுவது மாத்திரம் தான் என்ற தவறான எண்ணம்.

இரண்டாவது தவறு என்னவென்றால், இந்த சத்தியம் தனியாக மற்றும் சொந்தமாக நிற்கின்றது என்று அறிமுக படுத்துவதுதான். எந்த சத்தியமும், கோட்பாடுகளும் இயேசுவாகிய சத்தியத்துடன் இணைத்து பார்க்காவிட்டால் சரியாகவோ, ஏன் புரிந்து கொள்ள கூட முடியாது. அனைத்து கோட்பாடுகளும், சத்தியங்களும் இயேசுவுடன் ஆரம்பித்து பின் அவருடனே முடிவு பெறுகின்றது. ஓய்வுநாள் இயேசுவை குறித்து என்ன சொல்லுகிறது, அது தேவனுடைய அன்பின் குணத்தை நாம் புரிந்துகொள்ளுவதற்கு எவ்வாறு உதவுகின்றது என்பதுதான் அதின் முக்கியத்துவம். ஆசரிப்பு கூடாரம் வெறும் சின்னங்கள் மற்றும் ஆராதனைகள் மட்டும் அல்ல, இயேசுவின் அன்பு நம்மை எப்படி மீட்டெடுக்கின்றது என்பது பற்றிய தெளிவான விளக்கவுரை தான் அது.

குறைந்த பட்சம் இந்த உலகிலுள்ள குழப்பமான மதங்கள் இயேசுவை குறித்து போதிக்கவும், கற்பிக்கவும் செய்கின்றன. ஆனால், அவர்கள் சுலபமாக பாதை மாறி சென்று "மலிவான கிருபை" அல்லது "ஒருமுறை இரட்சிக்கப்பட்டால், எப்போதுமே இரட்சிக்கப்பட்டது", அல்லது சிலர் இரட்சிக்க படவும் மற்றவர் தொலைந்து போவதும் முன்னமே தீர்மானிக்க பட்டிருக்கிறது போன்றவைகளை கற்பிக்கின்றனர்.

மனிதர்களுக்கு வேறெப்போதுமே வெளிப்படுத்த படாத விதத்தில் தேவன் அவரது கடைசி மீதமானவர்களுக்கு தெளிவான, சமசீரான, மற்றும் துல்லியமான இரட்சிப்பின் புரிந்துகொள்ளுதலை கொடுத்துள்ளார். கூடுதலாக, வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு படிப்பினையும், ஒவ்வொரு கோட்பாடும் இயேசுவை குறித்து எதையாவது கூறுகிறது என கற்பித்துள்ளார். இந்த சத்தியங்கள் ஒவ்வொன்றும் உண்மையில் தேவன் எப்படி பட்டவர் என்பதை எடுத்து காட்டுகின்றது என கற்பித்துள்ளார்.

மீதமானவர்கள்

ஒரு அட்வென்டிஸ்த்தராக அண்மையில் ஞானமுழுக்கு பெற்று இருந்தாலோ அல்லது சிறு வயதிலிருந்தே சபை அங்கத்தினராய் இருந்திருந்தாலோ நீங்கள் ஒருவேளை "மீதமானவர்கள்" குறித்து கேள்விப்பட வாய்ப்பு இருக்கின்றது. ஒரு சபை நிர்வாக குழுவினால் வோட்டு போட்டு தேர்ந்தெடுக்க பட்ட வியாபார குரல் அல்ல அது. தன்னுடைய கடைசி, பக்தியுள்ள பின்னடியார்கள் குறித்த தேவனின் விளக்கம் அது.

வெளிப்படுத்தின விசேஷம் 12:17 ஐ கவனியுங்கள்: "அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின் மேல் கோபங் கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவை குறித்து சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடன் யுத்தம் பண்ணப்போயிற்று."

வலுசர்ப்பமாகிய சாத்தான் தேவனின் உண்மை பின்னடியார்களை கொண்ட சபையாகிய ஸ்திரீயின் மீது கோபப்பட்டு அவளுடைய வித்தாகிய "மீதமானவர்களுடனே" யுத்தம் பண்ண போயிற்று என்று இந்த தீர்க்கதரிசனம் கூறுகின்றது. மீதமானவர்கள் என்பவர்கள் கடைசியில் நிலைத்து நிற்பவர்கள், கடைசி பங்கு.

இரண்டு காரியங்களாலே மீதமானவர்களை அறிந்து கொள்ளலாம் என தீர்க்கதரிசனம் சொல்லுகின்றது: 1. தேவனுடைய கட்டளைகளை கடை பிடிப்பவர்கள். 2. “இயேசு கிறிஸ்து பற்றிய சாட்சியை” உடையவர்கள்.

மீதமானவர்களை அறிந்து கொள்ளும் இவ்விரண்டு குறிகளை இன்னும் விரிவாக நாம் வரவிருக்கின்ற அத்தியாயத்தில் பார்க்கவிருக்கின்றோம். ஆனால் இப்போது ஒரு எச்சரிக்கை. முனைவர் ப்ரூம் எழுதிய "உயர்ந்த எதிர்காலத்தின் இயக்கம்" என்றழைக்க பட்ட ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் சபை தேவனின் ஒரே மெய்யான ஜனத்தின் இல்லம் என்றும், அந்த சபையில் அங்கத்தினராய் ஆனபிறகு

இரட்சிப்பு உறுதி செய்யப்படும் என்ற முடிவுக்கு சுலபமாக வர தோன்றலாம்.

வேதாகமம் தெளிவாக கூறுகின்ற உண்மை என்னவென்றால் இரட்சிப்பு, சபை அங்கத்துவத்திலிருந்து வந்து விடாது, கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையினால் மட்டும் தான் வரும் என்ற உண்மை தவிர, மேலும் ஒரு உண்மை என்னவென்றால் தேவனுடைய விசுவாசமிக்க பின்னடியார்களாய் இருக்கும் அவருடைய உண்மை "மீதமானவர்களில்" சிலர் இன்னும் அட்வென்டிஸ்ட் சபையின் அங்கத்தினராய் இணைய வில்லை என்பது தான்.

"பாபிலோனை உள்ளடக்கிய சபைகளில் காணப்படும் ஆவிக்குரிய இருள் மற்றும் தேவனிடமிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட நிலையை பொறுக்க முடியாமலிருந்தும் கிறிஸ்துவின் உண்மை பின்னடியார்கள் கொண்ட பெரிய கூட்டம் இன்னும் அவர்களுடன் ஒன்றி உள்ளனர்" என்று எலென் உவைட் எழுதுகின்றார் - இறுதி போராட்டம், ப. 390.

அப்படியானால், ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் திருச்சபை தேவனின் மீதமானவர்கள் அல்ல என்ற அர்த்தமா? இல்லை. ஆனால் தேவனுடைய எல்லா மீதமானவர்களும் இன்னும் மீதமான சபைக்குள் வந்தடைய வில்லை என்பது தான் அதனுடைய அர்த்தம். உண்மையில், மீதமான சபையின் அதிகார பூர்வ அங்கத்தினராகும் வாய்ப்பு இல்லாமலேயே அந்த மீதமானவர்கள் மரித்திருந்திருக்கலாம், இனிமேலும் மரிக்கலாம்.

ஆனால் தேவன் "பாபிலோனை விட்டு வெளியே வாருங்கள்" என்று அழைக்கும் போது, "மீதமான சபையினுள்" வாருங்கள் என்றும் அழைக்கிறார். இந்த மீதமான சபை அழைக்கப்பட்டவர்களின் கூடுகை, இது தேவனின் இறுதி வேலையை செய்து முடிப்பதற்காக நியமிக்க பட்ட அமைப்பு. தேவன் மீதமான சபையை, சபை அங்கத்துவத்தின் மூலம் இரட்சிப்பு பெறும் அனுகூலத்திற்காக உருவாக்கவில்லை. மீதமான சபையை தேவன், தன் உண்மை பின்னடியார்கள் கூடி வந்து

தங்களுடைய முயற்சிகளை எவ்வாறு இணைத்து தேவனுடைய சத்தியத்தையும், சத்தியமாய் இருப்பவரின் வெற்றி வீரர்களாய் மாற முடியும் என்பதை குறித்து பயிலுமிடமாக இருக்க வேண்டும் என்று உருவாக்கினார்.

மிக அதிகமாக சிக்கி இருப்பது போல் தோன்றுகின்ற கயிறு அல்லது மின்சார தண்டு அல்லது தோட்டத்தில் தண்ணீர் அடிக்கும் ரப்பர் குழாயினுடன் எப்போதேனும் போராடியது உண்டா? கடைசியில் அதின் சிக்குகளை எப்படி அவிழ்ப்பீர்கள்? அதனுடைய ஒரு முனையை கண்டுபிடித்து அதிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

அட்வென்டிஸ்த்தராகிய நாம் சில நேரம் அதிக நேரத்தாலும், முயற்சிகளாலும், ஏன் வாக்குவாதங்களாலும் கூட சிக்கை அவிழ்க்க முயற்சிக்கின்றோம். சபை தரத்தை குறித்து விவாதிக்கின்றோம், இறையியலில் உள்ள சிறிய தவறுகளை கண்டெடுக்கின்றோம், சபை குறிப்பு புத்தகத்தை எவ்வாறு உபயோகிப்பது என வாதாடுகிறோம், கோட்பாடுகளை பிரித்து வைத்து சோதனை செய்கின்றோம்.

காரியங்கள் சிக்கிக்கொண்டு முடிப்பாய் இருக்கின்றது போல தெரிகின்ற சமயத்தில் தானாகவே பின் சென்று ஒரு "முனையை" கண்டு பிடித்திருந்தால் ஏராளமான நேரத்தை சேமித்திருக்கலாம், நம்முடைய திறனை இன்னும் அதிகமாக பயன்படுத்தி இருக்க முடியும். ஒவ்வொரு கோட்பாடும், ஒவ்வொரு சபை தரமும், ஒவ்வொரு சபை நடைமுறையும் இயேசு கிறிஸ்துவில் ஆரம்பித்து அவரிலேயே முடிவு பெறுகின்றது. நாமும் அங்கேயே ஆரம்பித்து முடித்து விட்டால் எல்லா சிக்கலும் மறைந்துவிடும். எல்லோருக்கும் இடையே நல்லிணக்கம் மலரும். நாமும் சிறியவைகளில் முக்கியத்துவம் காட்டுவதை நிறுத்திக்கொள்ளலாம்.

நாம் அவசரமாக செய்ய வேண்டிய மிக முக்கிய வேலை ஒன்று உள்ளது. நம்மை சுற்றி இருப்பவர்களிடம் உயர்த்தி காட்ட வேண்டிய இரட்சகர் ஒருவர் நம்மிடம் உள்ளார். நம்மிடம் பகிர வேண்டிய

சத்தியங்கள் உள்ளன. நம்மிடம் எச்சரிப்பு குறித்த செய்திகளும், தவறுகளை குறித்த செய்திகளும் உள்ளது. கிறிஸ்துவின் வருகை குறித்து அறிவிக்க வேண்டிய வேலையும் உள்ளது.

நீங்கள் ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தராக இருப்பது ஒரு விபத்து அல்ல. நீங்கள் அழைக்கப்பட்டும் தெரிந்தெடுக்கப்பட்டும் இருக்கிறீர்கள். ஆமாம் உங்களை தான் தேர்ந்தெடுத்துள்ளார். தன்னுடைய நீண்ட உண்மை விசுவாசிகளின் வரிசையில் உங்கள் இடத்தை எடுத்துக்கொள்ளுமாறு உங்களை தேவன் அழைக்கிறார். இந்த ஓட்டத்தின் இறுதி ஓட்டத்தை அந்த சிறிய கோலை எடுத்து கொண்டு ஓட கேட்டு கொள்ளுகிறார். உங்களை சத்தியத்தின், இயேசு என்னும் சத்தியத்தின் வெற்றி வீரர்களாக இருக்குமாறு அழைக்கிறார்.

அதனால் உங்கள் வகுப்பிற்கு செல்லுங்கள். வேலைக்கு செல்லுங்கள். உங்களின் அனைத்து வேலைகளையும் கவனியுங்கள். உங்களின் பிள்ளைகளை கவனியுங்கள். நீங்கள் வாழ வேண்டிய வாழ்க்கையை வாழுங்கள். ஆனால் இன்றே தேவனுக்கு பயன்பட கூடியவர்களாய் மாறுங்கள். அவருடைய குரலாய் இருங்கள். தொலைந்து போய், குழப்பத்தில் தேடி கொண்டிருக்கும் மக்கள் மேல் உங்களுடைய அன்பு வழிந்தோடட்டும். உங்களுக்காக அவர் உண்டு பண்ணின "பரிசுத்த அழைப்புகளை" நம்புங்கள். பகிர்ந்து கொள்ளுவதற்கு ஆயத்தமாய் இருங்கள்.

அவரது "உயர்ந்த எதிர்காலத்தின் இயக்கத்தில்" உங்களை அங்கமாக்கி இருப்பதால், தேவன் உங்களை எவ்வளவு மேன்மை மற்றும் கவுரவ படுத்தி இருக்கிறார் என்று எண்ண வேண்டும், எவ்வளவு அதிகமாக அவரையும் அவரது சத்தியத்தையும் நம்மை சுற்றி இருப்போரிடம் பகிர்ந்து கொள்ளுகிறோமோ அவ்வளவு சீக்கிரமாக அவரது திருமுகத்தை காண்போம்!

எல்லா காலத்திலும், தேவன் தனக்கென்று ஒரு கூட்ட மக்களை எப்பொழுதும் வைத்திருந்தார் - அவர்கள் உண்மை யுள்ளவர்களும், விசுவாச முள்ளவர்களும், அழைக்கப் பட்டவர்களும் தெரிந்து கொள்ளப் பட்டவர்களுமாவர் - மேலும் அவருக்காக விசேஷமான ஒரு கூட்ட மக்கள் இன்றும் இருக்கிறார்கள்.

வேறெதைபோலும் இல்லாத வரம்

"உனது கைகளில் இருப்பது என்ன?" என்று மோசேயிடம் தேவன் கேட்டார்.

- ஒரு கோல். ஒரு சாதாரண மரக் கோல். ஆனால் அதை வைத்து கொண்டு மோசே இஸ்ரவேலை விடுவித்தார்.
- முன்னூறு மனிதர்களின் கைகளில் இருந்த எக்காளங்கள், தீவெட்டிகள், மண்பானைகள் போன்றவற்றை கொண்டு தேவன் கிதியோன் மற்றும் அவனின் படைகள் மூலமாக மீதியானியரின் படையை படு தோல்வி அடைய செய்தார்.
- இயேசுவின் கரங்களில் இருந்த ஐந்து அப்பம், இரண்டு மீன்களை கொண்டு ஐயாயிரம் பேரை போஷித்தார்.

சாதாரணமாக, தாழ்மையாக, மற்றும் பலவீனமாக இருப்போரை தேவன் எடுத்து பயன் படுத்துகின்றார்.

ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் திருச்சபை 1844 ன் மாபெரும் ஏமாற்றத்தின் சாம்பலில் இருந்து வெளி வர துவங்கியதும், தேவன் மீதமானவர்களின் தூதுவராக ஒரு வாலிப பெண்ணை எடுத்து உபயோகித்தார்.

வெறும் பதினேழே வயது நிரம்பிய தருவாயில் 1827 ல் பிறந்த எலென் ஹார்மோன் "பரலோக பிரயாணத்தில் தேவ பிள்ளைகள்"

செல்லும் பயணம் என்ற தரிசனத்தை பெற்றார். அவருடைய வாழ்நாள் முழுவதும் நீடித்த ஊழியத்தில் அவர் பெறவிருந்த சுமார் 2,000 தரிசனங்களில் இது ஒரு முதன்மையான தரிசனம். 1846 ல் இயேசு விரைவில் வரப்போகிறார் என்ற செய்தியை தன்னைப் போலவே முழுமனதுடன் ஏற்று கொண்ட ஜேம்ஸ் உவைட் என்ற வாலிப போதகரை எலென் மணமுடித்தார். தங்கள் திருமணம் முடிந்த உடனே ஜேம்ஸ் மற்றும் எலென் ஆகிய இந்த இருவரும் சேர்ந்து வேத சத்தியமான ஓய்வுநாள் சத்தியத்தை ஏற்று கொண்டனர்.

1863 ம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்ட ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் திருச்சபையின் முதன்மை நிறுவனர்களாக இருந்தவர்கள் என கருதப்பட்டவர்கள் எலென், அவருடைய கணவன் ஜேம்ஸ் இவர்களுடன் இணைந்து செயலாற்றிய ஓய்வு பெற்ற கப்பல் மாலுமியான ஜோசப் பேட்ஸ் என்பவர்.

அட்வென்டிஸ்ட் வாசகர்களுக்கு தெரிந்திருக்கும் "சகோதரி உவைட்" என்று சபையில் சிலரால் அழைக்கப்படும் திருமதி உவைட் ஒரு சிறந்த எழுத்தாளர். நாற்பதுக்கும் மேலான புத்தகங்கள் மற்றும் அவ்வப்போது வெளிவந்த 5,000 தனி கட்டுரைகளை அவர் எழுதியுள்ளார். 1915 ல் அவருடைய மரணத்திற்கு பிறகு அவரால் வெளியிடப்படாத பல புத்தகங்களும் அவர் ஏற்கனவே வெளியிட்டிருந்தவைகளின் தொகுப்பும் வெளியாயின. இன்றைக்கு நூற்றிற்கும் மேலான அவருடைய புத்தகங்கள் ஆங்கில மொழி மட்டுமல்லாமல் பல மொழிகளிலும் அச்சடிக்கப்பட்டுள்ளது. எல்லாக் காலத்தையும் உள்ளடக்கிய அமெரிக்க வரலாற்றில் அதிகம் மொழிபெயர்க்க பட்ட படைப்புகள் கொண்ட ஒரே பெண் எழுத்தாளர் இவரே.

அவருடைய நீண்ட ஊழிய காலத்தில் தனிப்பட்ட முறையில் சபையின் மருத்துவம், வெளியீட்டு ஊழியம் மற்றும் கல்வி ஊழியம் உண்டாவதற்கு கருவியாக இருந்தார். சபையின் ஆதி வருடங்களில்

அவரது தரிசனம் சார்ந்த அறிவுரைகள் சபைக்கு எவ்வளவு உதவியாயிருந்ததோ அதேப்போல் இன்னமும் உதவிவருகின்றது.

ஆரம்பத்திலிருந்தே அட்வென்டிஸ்ட் விசுவாசிகள் திருமதி உவைட்டிற்கு வேதாகம வரமான தீர்க்கதரிசன வரம் உள்ளது என நம்பினர். வெளிப்படுத்தின விசேஷம் 12:17 மற்றும் 19:10 ல் கூறப்பட்டிருப்பது போல தேவனின் மீதமானவர்களின் அடையாளமாக திகழும் இரண்டு காரியங்களுள் தீர்க்கதரிசன வரம் உள்ளதாக நம்பினர்.

எலென் உவைட் தன்னை தானே தீர்க்கதரிசி என்று கூறாமல் இருந்திருந்தாலும், "தேவ தூதுவன்" என்று மற்றும் குறிப்பிட்டிருந்தாலும், தீர்க்கதரிசிகளின் தகுதிகள் என்று வேதாகமம் குறிப்பிட்டிருப்பவைகளை திருமதி உவைட் மற்றும் அவருடைய எழுத்துக்களுக்கு ஒப்பிட்டு பார்த்ததில் அவரிடம் உண்மையான வேதாகம தீர்க்கதரிசன வரம் உள்ளது என்று அட்வென்டிஸ்த்தர்கள் நம்பினர்.

தீர்க்கதரிசன வரத்தை உண்மையில் ஒருவர் பெற்றுள்ளாரா இல்லையா என்று அறிந்து கொள்ளுவதற்கு வேதாகமம் கொடுக்கும் முக்கிய சோதனைகளின் பட்டியல் பின்வருமாறு கொடுக்க பட்டுள்ளது:

1. நிறைவேறி முடிந்த கணிப்புகளின் சோதனை - எரேமியா 28:9 இவ்வாறாக கூறுகிறது: "சமாதானம் வரும் என்று தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் சொல்லியிருக்க, அந்தத் தீர்க்கதரிசி சொன்ன வார்த்தையின்படியே வந்தால், அப்பொழுது அவன் கர்த்தர் மெய்யாய் அனுப்பின தீர்க்கதரிசியாக விளங்குவானென்று" எரேமியா தீர்க்கதரிசி கூறுகின்றார்.

இந்த வேதாகம தேர்வு "நிபந்தனை" அடங்கிய தீர்க்கதரிசன கொள்கையை உள்ளடிக்கியதாகவும் இருக்க வேண்டும். ஏனென்றால் சில தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதல் தேவ மக்களின் செயல்களை

பொறுத்து நிறைவேறியது. மறுபடியும் எரேமியா தான் இந்த கொள்கையை முன்வைக்கின்றார்:

"பிடுங்குவேன், இடிப்பேன், அழிப்பேன் என்று நான் ஒரு ஜாதிக்கு விரோதமாகவும், ஒரு ராஜ்யத்துக்கு விரோதமாகவும் சொன்னமாத்திரத்தில், நான் விரோதமாய் பேசின அந்த ஜாதியார் தங்கள் தீங்கைவிட்டுத் திரும்பினால், நானும் அவர்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன். கட்டுவேன், நாட்டுவேன் என்றும், ஒரு ஜாதியையும் ஒரு ராஜ்யத்தையும் குறித்து நான் சொல்லுகிறதுமுண்டு. அவர்கள் என் சத்தத்தைக்கேளாமல், என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வார்களானால், நானும் அவர்களுக்கு அருள்செய்வேன் என்று சொன்ன நன்மையைச் செய்யாதபடிக்கு மனம் மாறுவேன்" - எரேமியா 18:7-10.

2. வேதாகமத்திற்கு ஒத்து இருக்கின்றதா என்று அறிவதற்கான தேர்வு - ஏசாயா 8:20: "வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை." வேதாகம காலங்களிலும் அதற்கு பின் வந்த நூற்றாண்டுகளிலும், எல்லா தீர்க்கதரிசனங்கள் மற்றும் வசனங்களின் கூட்டுத் தொகையானது பிற்காலத்தில் வந்த ஒவ்வொரு தீர்க்கதரிசியின் செய்திகளை அளக்கும் அளவுகோலாக அமைந்தது. பின்னர் வந்த தீர்க்கதரிசிகள் தேவ சத்தியத்திற்கு ஒரு புதிய கண்ணோட்டத்தை கொடுத்திருந்தாலும், அவர்களது கருத்துக்கள் முன்னிருந்த வேதாகம தீர்க்கதரிசிகள் வெளிப்படுத்தின அடித்தளமான சத்தியங்களிடமிருந்து முரண்பாடாய் இராது.

3. கனிகொடுக்கிறவர்களா என்ற தேர்வு - மத்தேயு 7:15-20: "கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில்

திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா? அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது; கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது. நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்."

இந்த சோதனை முதல் சொல்லப்பட்ட அந்த இரண்டு சோதனைகள் போலல்லாமல் தெரிந்து கொள்ளுவதற்கு அதிக காலம் எடுக்கக் கூடியது. ஏனென்றால் கனி ஒரு இரவுக்குள் காய்த்து கனிந்துவிடாது. ஆனால், ஒரு தீர்க்கதரிசியின் குணம், ஊழியம், மற்றும் செய்திகள் தெளிவாக தெரிய ஆரம்பித்தவுடன் ஒரு கவனமான மதிப்பாய்வின் மூலம் தீர்க்கதரிசன மரம் கொடுக்க வேண்டிய கனிகளைதான் இந்த மரமும் கொடுக்கிறதா என நாம் தெரிந்து கொள்ளலாம்.

4. இயேசு கிறிஸ்துவின் தெய்வீக - மனித இயல்பை சாட்சி பகருபவர்களா இல்லையா என்ற தேர்வு - 1 யோவான் 4:1-3: "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனாலுண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள். தேவஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது."

ஒரு உண்மை தீர்க்கதரிசி இயேசு ஒருகாலத்தில் இந்த பூமியில் வாழ்ந்தார் என்று மட்டும் ஒப்பு கொள்ளுவது இல்லை. உண்மை தீர்க்கதரிசிகள் இயேசு முழுமையான தெய்வம், முழுமையான மனிதன்

என்பதை கூறி அறிவிப்பர். இயேசுவின் மனித அவதாரம் ஒரு உண்மை தீர்க்கதரிசியின் ஊழியத்தின் மையமாக காணப்படும்.

5. ஆதாரத்தின் தேர்வு - உண்மைத் தீர்க்கதரிசிகள் தங்களுடைய சொந்த தீர்க்கதரிசனங்களை உற்பத்தி செய்யாமல், பரிசுத்த ஆவி அவர்களுக்கு வெளிப்படுத்தியதை மட்டும் மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவர் - 2 பேதுரு 1:21: "தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்."

அதேப்போல உண்மையான தீர்க்கதரிசிகள் தங்களுடைய தனிப்பட்ட விளக்கத்தை தீர்க்கதரிசனத்திற்கு கொடுப்பதில்லை. "வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது" - 2 பேதுரு 1:20.

அட்வெந்து இயக்கத்தின் ஆதி நாட்கள் துவங்கி இப்போதுள்ள இயக்கம் வரை, நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான ஏன் லட்சக்கணக்கானவர்கள் எலன் ஜி. உவைட்டின் வாழ்க்கை மற்றும் செய்திகளை படித்து ஒரு உண்மை தீர்க்கதரிசிக்கு வேதாகம நடத்தும் சோதனைகளை உபயோகித்து அவரை சோதித்து பார்த்திருக்கின்றனர். ஒவ்வொரு கால கட்டத்திலேயும் முடிவு ஒன்றாகவே தான் இருந்துள்ளது: எலென் உவைட் தனது வாழ்க்கை, பிரசங்கம், மற்றும் எழுத்துக்களில் ஒரு உண்மை தீர்க்கதரிசியின் அடையாளங்களை வெளிப்படுத்தி உள்ளார் என்பது தான் அது.

ஆனாலும், சிலர் அது எப்படி என்று கேட்கலாம். திருமதி உவைட்டின் எழுத்துக்கள் வேதாகமத்துடன் ஒத்து இருக்கின்றதா? அவருடைய எழுத்துக்கள் வேதாகமத்தினுடைய கூடுதல் தகவல்களா? அப்படி என்றால் அந்த யோசனை எப்படி வேதாகம சீர்திருத்த சத்தியதுடன் அல்லது வேதாகமத்துடன் மட்டும் பொருந்துகிறது?

சபையின் ஆதி வருடங்களிலேயே அட்வென்டிஸ்த்தர்கள் இது போன்ற கேள்விகளை வகை படுத்த வேண்டி இருந்தது. 1863 ம் ஆண்டு, முன்னோடி பதிப்பாசிரியரும் எழுத்தாளருமாயிருந்த உரையா ஸ்மித் சபையின் பத்திரிக்கையான "தி ரேவ்யூ அண்டு ஹெரால்ட்டு" பத்திரிக்கையில், "தரிசனங்களை ஏற்று கொண்டு வேதாகமத்தை நிராகரிக்கின்றோமா?" என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதினார். அதில், சீர்திருத்தத்தின் இந்த முக்கிய கோட்பாட்டை மட்டும் கவனத்திற்கு கொண்டுவருகிறார்: "வேதாகமம், வேதாகமம் மட்டுமே".

துறைமுக மாலுமி

மூப்பர் ஸ்மித்தின் கட்டுரையில் துறைமுகத்தை நெருங்குகின்ற ஒரு கப்பலை குறித்த உவமை பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்த கப்பலின் கையேட்டின் படி ஒரு துறைமுகத்தில் நுழைவதற்கு முன் அந்த கப்பலை நிறுத்திவிட்டு முன்னே இருக்கும் ஆபத்தான தண்ணீரை குறித்து அறிந்த ஒரு துறைமுக மாலுமியை உள்ளே அனுமதிக்க வேண்டும்.

அவர் இப்படியாக எழுதுகிறார்: "ஆவியின் வரங்கள் இந்த கடினமான நேரத்தில் நமது மாலுமிக்கு வழங்கப்பட்டுள்ளது, எங்கேயாவது யாரிடமாவது இந்த காரியங்களின் உண்மையான வெளிப்பாடு காணப்பட்டால், அவர்களை நாம் மதிக்க வேண்டும், அவர்களை ஏற்று கொள்ள வேண்டும் என்று சொல்லுகிற தேவ வார்த்தையை நாம் உதாசினம் செய்து விட்டு இந்த காரியத்தை நாமாக செய்ய முடியாது. யார் இப்போது வேதாகமத்தின் மேலும் வேதாகமத்தின் மேல் மட்டுமே நின்றுகொண்டிருக்கின்றனர்?" - ரேவ்யூ அண்டு ஹெரால்ட்டு, ஜனவரி 13, 1863.

மீதமான சபை துறைமுகத்தை அடையும் போது, வேதம் கூறுகின்றது என்னவென்றால் இந்த மீதமான சபைக்கு ஒரு தீர்க்கதரிசன வரம் பெற்ற "மாலுமி" கொடுக்கப்படும். தீர்க்கதரிசன ஆவி

இந்த யாத்திரையின் கடைசி ஆபத்தான தண்ணீர்கள் வழியாக நம்மை வழிநடத்திச் செல்லும்.

இதைப் பற்றி வேதாகமம் சொல்லுவது என்னவென்றால், இதை குறித்து நாம் முன்னமே வெளிப்படுத்தின விசேஷத்தில் படித்தோம் - மூப்பர் ஸ்மித் கேட்கிறார்: பின்பு யார் உண்மையாகவே வேதாகமத்தை, வேதாகமத்தை மட்டுமே நம்புகிறவர்கள் - மாலுமியை ஏற்று கொண்டவர்களா, ஏற்றுக்கொள்ளாதவர்களா?

எலென் உவைட் தன்னுடைய எழுத்துக்களை வேதாகமத்தின் கூடுதலான பகுதி என்று எப்போதும் கருதவில்லை, ஆனால் அந்த "பெரிய வெளிச்சத்திற்கு வழி நடத்தும் சிறிய வெளிச்சம்" என கருதினார். எப்படி இயேசு, பிதாவை வெளிப்படுத்த வந்தாரோ, இயேசுவை பரிசுத்த ஆவி உயர்த்துகின்றாரோ அதேபோல் தான் அவருடைய தீர்க்கதரிசன எழுத்துக்கள் வேதாகமத்தை உயர்த்தவும் கௌரவ படுத்தவும் செய்கிறது.

மற்ற சபைகளிலும் நிச்சயமாகவே தீர்க்கதரிசிகள் இருக்கின்றனர் – அல்லது ஊக்கமளிக்கும் புத்தகங்கள் இருக்கின்றன. ஆனால் மிகப் பெரிய வித்தியாசங்கள் உள்ளன. மோர்மோன் என்றழைக்க படுகின்ற பிற்கால பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்துவின் சபை, ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் சபை தோன்றிய அதே காலக்கட்டத்தில் தான் தோன்றியது. அவர்களிடமும் மோர்மோன் புத்தகம் மற்றும் தேவ ஆவியால் உந்தப்பட்டு எழுதப்பட்ட என அவர்கள் கூறுகிற பல்வேறு புத்தகங்கள் இருக்கின்றன. இந்த புத்தகங்களை அவர்கள் வேதாகமத்துடன் சம நிலையில் வைத்திருக்கின்றனர். அல்லது வேதாகமத்துடைய கூடுதல் ஆகமங்களாக கருதுகின்றனர். "அப்பாகிரிப்பாவையும்" (தள்ளுபடி ஆகமங்கள்) ரோமன் கத்தோலிக்க சபை இவ்வாறாகவே வேதாகமத்தில் ஒரு பகுதியாக பாவிக்கின்றது.

"தீர்க்கதரிசன ஆவியின்" எழுத்துக்கள் என அட்வென்டிஸ்ட் மக்களால் அழைக்க படும் எலென் உவைட்டின் எழுத்துக்கள்

வேதாகமத்திலுள்ள சத்தியத்தை புரிந்து கொள்ளுவதற்கும், அதை எளிதாக பார்ப்பதற்கும் ஒளிர பண்ணுகின்ற பிரகாசமான விளக்கு அல்லது பூதக்கண்ணாடி என்று கருதபடுகின்றது.

தீர்க்கதரிசிகள் அல்லது ஏவப்பட்டு எழுதப்பட்ட எழுத்துக்களை உரிமை கோரும் மற்ற சபைகளுக்கும் ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் மக்களுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உள்ளது. உதாரணமாக கத்தோலிக்கர்கள் போப்பின் ஆணைகள் மற்றும் சபையின் பாரம்பரியங்களை வேதாகமத்திற்கு மேலாக கருதுகின்றனர். ஒருவேளை இவ்விரண்டும் ஒன்றோடு ஒன்று ஒத்து போகா விட்டாலும் கூட போப்பின் ஆணைகள் மற்றும் சபை பாரம்பரியங்களுக்கு முன்னுரிமை கொடுக்க படுகின்றது. ஆனால் அட்வென்டிஸ்த்தர்கள் எல்லா ஆவியின் வரங்களையும், வெளிப்பாடுகளையும் வேதாகமத்தினால் மதிப்பேடு பண்ண வேண்டுமென்றும், தேவ வார்த்தையுடன் ஒன்றி ஏதேனும் காணப்பட வில்லை என்றால் அது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்று நம்புகின்றனர்.

ஏன் தீர்க்கதரிசன வரம்?

அப்படியென்றால் சபையில் தீர்க்கதரிசன ஆவியின் பங்கை நாம் எப்படி பார்க்கவேண்டும்? ஏன் தேவன் இது சபைக்கு அவசியம் என்று நினைத்தார்? பின் வரும் பரிந்துரைகளை கருத்தில் கொள்ளுங்கள்:

1. **ஒரு சிறு கூட்ட தேவ மக்கள் வேதாகமத்தின் சத்தியம் ஒடுக்கப்பட்ட நிராகரிக்கப்பட்ட நிலையிலிருந்தும் சத்தியத்தின் வெற்றி வீரர்களாக பல நூற்றாண்டுகள் இருந்ததுபோல, மனித வரலாற்றின் இந்த இறுதி நாட்களில் தேவன் புதுப்பிக்கின்ற சத்தியத்தின் மீது தீர்க்கதரிசன ஆவி தனது வெளிச்சத்தை வீசுகிறது. அந்த சத்தியங்களாவன:** ஓய்வுநாள், ஆசரிப்பு கூடாரம், மரித்தோரின் நிலை, இரண்டாம் வருகை, நீதியின் பெரிய சத்தியமாகிய இயேசுவின் மேலுள்ள விசுவாசம்.

ஒருபோதும் எலென் உவைட்டின் தரிசனங்கள் மற்றும் எழுத்துக்களை முதன்மையாக சார்ந்து அட்வென்டிஸ்த்தர்கள் தங்கள் கோட்பாடுகளை உருவாக்கியிருக்கின்றனர் மற்றும் சத்தியத்தின் உறுப்புகளை ஒன்று சேர்த்திருக்கின்றனர் என்ற குற்றச்சாட்டை நாம் ஏற்றுக்கொள்ள கூடாது.

உதாரணமாக, ஆதி விமர்சகர்கள் திருமதி உவைட்டின் தரிசனங்களை மட்டுமே முதன்மையாக சார்ந்து பரலோக ஆசரிப்பு கூடார கோட்பாடு உருவாக்க பட்டிருக்கின்றது என கூறினர். 1874 ல் மூப்பர் உரையா ஸ்மித், ரேவ்யு அண்ட் ஹெரால்ட் பத்திரிக்கையின் அன்றைய பதிப்பாசிரியராய் இருந்த போது இந்த கருத்து அநேக நேரம் அவரின் கவனத்திற்கு கொண்டுவர பட்டதால் பதிப்பாசிரியருக்கு உரிய பகுதியில் அவர் இவ்வாறாக எழுதினார்:

"இந்த தலைப்பில் நூற்றுக்கணக்கான கட்டுரைகள் எழுத பட்டிருக்கின்றது. ஆனால் ஒரு முறை கூட இந்த தலைப்பின் ஆதாரம் தரிசனங்கள் என்றோ அல்லது அது இந்த இடத்தில் இருந்து எடுக்கப்பட்டவை என்று எங்குமே குறிப்பிட படவில்லை... இதற்கு ஆதாரம் வேதாகமமே, இந்த தலைப்பு சார்ந்த எங்களுடைய கருத்துகளுக்கு ஏராளமான ஆதாரங்கள் அதில் அடங்கியுள்ளது" - ரேவ்யு அண்ட் ஹெரால்ட், டிசம்பர் 22, 1874.

நமது சபையின் ஆதி வரலாற்றை கவனமாக புலனாய்வு செய்வோமானால், மூப்பர் ஸ்மித் ஆசரிப்பு கூடார சத்தியத்தை குறித்து எழுதிய அதே வார்த்தைகள் அட்வென்டிஸ்த்தர்கள் கவனமாக தேடியது மூலம் கண்டெடுத்த மற்ற எல்லா சத்தியத்திற்கும் கூட பொருந்தும். எனினும் அடிக்கடி, ஆதி அட்வென்டிஸ்ட் வேதாகம மாணாக்கர்கள் நீண்ட நேர ஜெபத்தினாலும் ஆய்வினாலும் உலகிற்கு வெளிப்படுத்தின வேதாகம சத்தியத்தை உண்மையென திருமதி உவைட்டிற்கு கிடைக்க பெற்ற மிக முக்கிய தரிசனத்தில் உறுதி செய்யப்பட்டது. பின் தொடர்ந்த வருடங்களில், திருமதி உவைட்டின் எழுத்துக்களை அந்த

சத்தியத்தின் முக்கியத்துவத்தை உயர்த்தி, கௌரவப்படுத்தி வலியுறுத்தியது.

2. **தேவனுடைய சத்தியம் மற்றும் அவருடைய அன்பின் குணத்தை கூறி அறிவிக்கின்ற ஊழியத்தில் தீர்க்கதரிசன ஆவி அட்வென்டிஸ்த்தர்களுக்கு மிக பெரிய மதிப்பை கூட்டும் காரியமாக உள்ளது.** கிறிஸ்துவுக்கும் சாத்தானிற்கும் இடையில் நடக்கும் இந்த இறுதி போராட்டத்தில், சத்துரு தேவனின் குணத்தை தாக்குவதற்கு தன்னை அர்ப்பணித்துள்ளான். இந்த அண்டத்தை ஆளுகின்ற அன்பான தெய்வத்தின் சத்தியத்தை எடுத்து கூறுவது மற்றும் அதை பாதுகாப்பது இவ்விரண்டுமே எப்போதுமே தேவனின் உண்மை விசுவாசிகளுக்கு ஒரு சிலாக்கியமாகவே இருந்துள்ளது. இந்த போராட்டம் தனது இறுதி யுத்தத்திற்கு வந்தடைந்துள்ளது. இந்த சமயம் மீதமானவர்களின் ஊழியமாக இருக்கிற இந்த ஊழியம் இன்னும் அதிக அவசரமும் நெருக்கடி மிகுந்த வேலையாகவும் மாறியுள்ளது.

துன்பம், மரணம், மற்றும் துயரத்தின் காரணர் தேவன் அல்ல.

தேவன் அழிப்பவர் அல்ல.

நாம் தவறுகள் செய்யும் போது நம்மை கவ்வி பிடிக்கும் நீதிபதி அல்ல அவர்.

தேவன் நம்மால் கை கொள்ள முடியாது என்று அறிந்த ஒரு சட்டத்தை நமக்காக இயற்றவில்லை.

எலென் உவைட் தேவனின் சத்தியத்தை குறித்து நேர்த்தியாகவும் நல்ல நடையிலும் எழுதின *இயேசு கிறிஸ்துவிடம் செல்லும் படிகள், யுகங்களின் வாஞ்சை, மற்றும் கிறிஸ்துவின் மாதிரி பாடங்கள்* புத்தகங்களில் அவர் வரைந்த தேவனின் நேர்த்தியான படங்களை சாத்தானின் பொய்களினால் வஞ்சிக்க பட்டோரிடம் நாம் பகிர்ந்து கொள்ளலாம்.

3. **இறுதி போராட்டத்தின் முழு சரித்திரத்தையும் தீர்க்கதரிசன ஆவி நமக்கு எடுத்துரைக்கின்றது.** வேதாகம சரித்திரத்தின் மையம் என்று அழைக்கப்படுகின்ற இறுதி போராட்டத்தை பூமியிலுள்ள எந்த சபையேனும், கூட்டமேனும் இவ்வளவு தெளிவாக கற்பிக்கவோ அல்லது புரிந்து கொள்ளவோ செய்திருக்கின்றதா என்று நீங்கள் எப்போதாயினும் உணர்ந்துள்ளீர்களா? இது ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தர்களின் தனித்தன்மை, இதை பற்றி இன்னமும் கேள்வி படாமலோ அல்லது உணர்ந்து கொள்ளாமலோ இருப்பவர்களிடம் இதை பகிர்ந்து கொள்ளுவதை நாம் பெரிய சிலாக்கியமாக கருதுகின்றோம். "இறுதி போராட்டத்தின் மையக்கருத்து" ஒரு பெரிய படம். நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான இந்த பிரபஞ்ச போட்டியின் விரிவான சரித்திர கதை. அது ஒரு முழு காட்டிலுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட மரத்தின் முக்கிய இடத்தையும் காண்பிக்கின்ற காட்சி.

மிகவும் பெரிய மற்றும் மறை பொருளான மனித வாழ்வின் நோக்கமான கேள்விகள்: நான் எங்கிருந்து வந்திருக்கின்றேன்? நான் எங்கே செல்லுகின்றேன்? தேவன் இவ்வளவு நல்லவர் என்றால் உலகம் ஏன் இவ்வளவு கேடு விளைவிக்கின்றதாய் இருக்கின்றது? ஏன் அப்பாவிகள் பாதிப்புள்ளாகின்றனர்? என்பவைகளுக்கு இறுதி போராட்டத்தின் மைய கருத்தால் மாத்திரம் தான் பதிலளிக்க முடியும்.

இறுதி போராட்ட மைய கருத்து தீமை எங்கிருந்து ஆரம்பமானது என்று மட்டும் கூறாமல் அது எப்படி முடிவடையவிருக்கின்றது என்றும் கூறுகின்றது. அது பாவமும் மரணமும் நம்மை விட்டு என்றென்றைக்குமாக அகன்று விடும் என்ற நிச்சயத்தையும், பாவமில்லாத நேர்த்தியான அமைதியான இடத்திலான நித்திய வாழ்வின் நம்பிக்கையையும் நமக்கு அளிக்கின்றது.

இறுதியில் வேதாகம சத்தியம் ஒன்றோடு ஒன்று எப்படி பிணைக்க பட்டிருக்கின்றது என்பதை காட்டும் ஒரே கட்டமைப்பாக

இந்த இறுதி போராட்டம் திகழ்கின்றது. ஆயிர வருட அரசாட்சியின் சத்தியம் எப்படி ஓய்வுநாளுடன் இணைக்க பட்டுள்ளது என்று அறிய வேண்டுமா? இறுதி போராட்டத்தின் மைய கருத்து அதை உங்களுக்கு எடுத்துரைக்கும். இறுதி போராட்டத்தின் அமைப்பை பார்த்தீர்கள் என்றால், ஒவ்வொரு சத்தியமும் 'பசில்' என்றழைக்கப்படும் புதிர்கள் விளையாட்டில் உள்ள ஒரு சிறு துண்டிற்கு ஒப்பாகும்.

மக்களுக்கு கதைகள் பிடித்தமானது. கதைகள், விளங்கி கொள்ள முடியாத காரியங்களை மக்கள் விளங்கி கொள்ளுவதற்கு உதவுகின்றது. இறுதி போராட்டத்தை விட இன்னொரு பெரிய, மிக முக்கியத்துவம் வாய்ந்த, மிக ஆணித்தரமான கதை வேறெதுவும் இல்லை.

4. **தீர்க்கதரிசனத்தின் ஆவி வாசிப்போரை தேவ வார்த்தையினடம் வழிநடத்துகிறது**. வேதம் தன்னை தானே வார்த்தை என்று அழைக்கின்றது. ஆனால், அதுவே இயேசு தான் உயிருள்ள வார்த்தை என்றும் தெளிவு படுத்துகின்றது. வேறெந்த காரணங்களை விடவும் தேவன் இந்த பெரிய வரத்தை தனது மீதமானவர்களுக்கு வழங்கியுள்ளார் என்றால், அது அவர்களை ஜீவ வார்த்தையினிடமும், எழுதப்பட்ட வார்த்தையினிடமும் வழிநடத்தி செல்லும் என்ற காரணத்திற்காக தான்.

எலென் உவைட்டின் எழுத்துகள் வார்த்தை என்றழைக்க பட்ட இயேசுவின் அன்பையும் குணத்தையும் சுவாசிக்கின்றதாக இருக்கின்றது. அவருடைய பெரிதான பாரம் என்னவென்றால் அந்த எழுத்துக்களின் வாசகர்கள் தேவனிடம் ஒரு ஆழமான, உண்மையான, வளருகின்ற அன்றாட உறவை வைத்து கொள்ள வேண்டும் என்பதுதான். அவர் எழுதிய வற்றிலெல்லாம் தேவனை மகிமை படுத்தினார். அவர் உயிர்த்தெழுதலுக்கு பிறகு இயேசு தன்னை எழுதப்பட்ட வார்த்தையின் மூலமாக தெளிவாக தெரிய படுத்தினார் என்பதை அவர் உணர்ந்து வேதாகமத்தை மகிமை படுத்தினார். சபை

அலுவலக கூடுகையின் கூட்டத்தின் முடிவில் அவருடைய கடைசி பொது கூட்ட தோற்றத்தின் போது அவர் தனது வேதாகமத்தை உயர்த்தி "சகோதரரே இந்த புத்தகத்தை பரிந்துரை செய்கிறேன்" என்று கூறினார்.

5. **தீர்க்கதரிசன ஆவியின் மூலமாக எப்படி பரிசுத்தமாகவும் சந்தோஷத்துடனும் இருக்க முடியும் என்பதை மட்டும் தேவன் பகிர்ந்து கொள்ளவில்லை, எவ்வாறாக ஆரோக்கியமாக இருக்க முடியும் என்றும் பகிர்ந்துள்ளார்.** அட்வென்டிஸ்த்தர்கள் "ஆரோக்கிய செய்தி" என்று அழைக்கும் செய்தி தீர்க்கதரிசன ஆவியின் மூலமாக தேவன் மக்களுக்கு அளித்த பெரிதான ஈவுகளில் ஒன்று.

நூற்றிற்கும் மேலான வருடங்களுக்கு முன் ஆரோக்கியம், நோய்கள், மற்றும் மனித உடல் குறித்து எலென் உவைட் எழுதிய கருத்துக்களை இப்போதுள்ள மருத்துவ, அறிவியல், மற்றும் ஆராய்ச்சிகள் உறுதி செய்கிறது. மருத்துவர்கள் நுரை ஈரல் கோளாறுகளுக்கு புகை பிடிப்பதை பரிந்துரை செய்து வந்த காலத்தில் இவர் நிக்கோடினின் கொடிய விளைவுகள் குறித்து எச்சரித்தார். மதுபானம், மாமிசம் சார்ந்த உணவுகள், பெருந்தீனி இதை பற்றி எல்லாம் பல வருடங்களுக்கு முன்னமே அவர் எச்சரித்தார். பல வருடங்களுக்கு முன் அவர் எழுதிய இயற்கையின் எளிய மற்றும் இயற்கை சார்ந்த சிகிச்சை முறைகளை இப்போதுள்ள ஆரோக்கிய மையங்கள் பயன்படுத்தி வருகின்றது.

6. **தனது மக்களுக்கு நேரத்திற்கு தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் கணிப்புகளை தீர்க்கதரிசன வரத்தின் மூலம் தேவன் பகிர்ந்துள்ளார்.** உள்நாட்டு போர் துயரமாக மாறவிருக்கின்றது என அவருடைய ஆதி ஊழிய நாட்களில் எலென் உவைட் எச்சரிக்கை செய்திருந்தார். நமது காலங்களில், ஆவி மார்க்கத்தின் பல்வேறு அவதாரங்களான புது யுக தத்துவம், கிழக்கத்திய மறை பொருட்கள், மரித்தோருடன் தொடர்பு, ஜோதிடம், மனம் சார்ந்த

அணுகுமுறைகள் மற்றும் ஊடகங்கள் போன்ற மேலும் ஏராளமானவைகளை குறித்து எச்சரித்திருந்தார். வேதாகமத்தின் தீர்க்கதரிசன நிறைவேறுதலாக இருக்கும் போப் ஆதிக்கம் மற்றும் அமெரிக்காவின் பங்கு பற்றி அவர் எடுத்துரைக்கும் கணிப்புகள் இன்றைக்கு நமக்கு மிகவும் தொடர்புடையதாய் இருக்கின்றது.

உண்மைதான், தன்னுடைய மீதமான மக்களுக்கு தேவன் இந்த மாபெரும் தீர்க்கதரிசன வரத்தை கொடுத்திருக்கின்றார் என்றால், நிச்சயமாக அதிக உக்கிரத்துடன் சத்துரு அதை தாக்குவான். அவன் அப்படி ஏற்கனவே செய்ய ஆரம்பித்துள்ளான். இந்த வரத்திற்கு எதிராக முடிந்தவரை குற்றச்சாட்டுகளும், கேள்விகளும், பழிகளும் சுமத்த பட்டுள்ளது. முடிந்தவரையிலான சந்தேகங்களும், மறைமுறை குற்றச்சாட்டுகளும், அவதூறுகளும் சுமத்தப்பட்டுள்ளது. ஆனால், அது மகிமை படுத்தும் வார்த்தையான வேதாகமம் பல நூற்றாண்டுகள் தாண்டிய தாக்குதல்களையும் நிலைத்து நின்றது போல, தேவனின் மீதமானவர்களின் தீர்க்கதரிசன வரமும் நிலைத்து நிற்கும்.

நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்... மற்றும் மேன்மை படுத்தப்பட்டவர்கள்

எல்லா கேள்விகளுக்கும் அப்பால் எலென் உவைட் ஒரு தவறு செய்ய கூடிய மனுஷியே. எழுத்தாளராகவும் அவர் தவறுகள் செய்திருக்கலாம். ஒரு வார்த்தை அல்லது வாக்கியத்தை மட்டும் தனியாக பார்ப்பதை விட அவர் எழுதினவைகளை முழுமையாக கவனித்தால் அவருடைய எழுத்துக்களை அந்த "பெரிய ஒளியுடன்" சீராகவும் விவேகமாகவும் ஒன்றுடன் ஒன்று ஒன்றி இருப்பதையும் காணமுடியும்.

சில அட்வென்டிஸ்த்தர்கள் சில சமயத்தில் "நமக்கு ஒரு தீர்க்கதரிசி இருக்கின்றார்" என்றெண்ணி வெட்கப்படுகின்றனர். ஆனால் இஸ்ரவேல் தங்களுடைய ஆசாரிப்புக் கூடாரம், தேவாலயம், சொந்த

தீர்க்கதரிசிகள், ஏன் தேவன் தேர்ந்தெடுத்த மக்கள் என்பதை எல்லாம் எண்ணி வெட்கப்பட்டனரா? கடைசி காலத்தில் மீதமானவர்களாய் இருக்கும் நமக்கு தேவன் அற்புதமான இந்த வரத்தை அருளியுள்ளார் என்பதை எண்ணி ஆசிர்வதிக்க பட்டவர்களாயும் மேன்மை படுத்த பட்டவர்களாயும் உணர வேண்டும்.

சமுத்திரத்தில் பாறைகள் நிறைந்த கால்வாய்கள் வழியாக அவர்களே அவர்களின் வழியை கண்டுபிடித்துக் கொள்ளட்டும் என்று தேவன் நம்மை விட்டு விட வில்லை... அவர் ஒரு துறைமுக மாலுமியை அனுப்பி வைத்துள்ளார்.

இது நம்மை குறித்து என்ன சொல்லுகிறது? தேவனை குறித்து என்ன சொல்லுகிறது?

எல்லா காலத்திலும், தேவன் தனக்கென்று ஒரு கூட்ட மக்களை எப்பொழுதும் வைத்திருந்தார் - அவர்கள் உண்மை யுள்ளவர்களும், விசுவாச முள்ளவர்களும், அழைக்கப் பட்டவர்களும் தெரிந்து கொள்ளப் பட்டவர்களுமாவர் - மேலும் அவருக்காக விசேஷமான ஒரு கூட்ட மக்கள் இன்றும் இருக்கிறார்கள்.

நாம் யார்?

1844 வது ஆண்டின் பெரிய ஏமாற்றத்திற்கு பின், அந்த கால கட்டத்தை சேர்ந்த ஒரு இல்லத்தின் "வரவேற்பு அறை" அல்லது "அமரும் அறை" என அழைக்கப்படும் ஒரு அறையில் பிற்காலத்தில் ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் சபை என்று அழைக்கப் படவிருக்கும் சபையின் முன்னோடிகள் எல்லோரும் ஒன்று கூடினர்.

1863 ம் ஆண்டிற்குள் சபை அதிகாரப் பூர்வமாக நிறுவப்பட்ட போது அதில் மொத்தம் 3,500 சபை அங்கத்தினர்கள் இருந்தனர்.

2006 ல் சபையின் உலகளாவிய மக்கள் தொகை கிட்ட தட்ட 1 கோடியே 50 லட்சமாக இருந்தது. சமீப காலங்களில் அது ஒரு வருடத்திற்கு 10 லட்சம் என்ற கணக்கில் வளர்ந்து வருகிறது.

உண்மையில் இந்த அற்புதமான வளர்ச்சி கொண்டாடுவதற்கான ஒரு காரணம் தான். கடைசி கால சத்தியத்தினிடத்திற்கும் இயேசுவினிடத்திற்கும் மற்றவர்களை கொண்டு சேர்ப்பதில் தேவனுடைய "அழைக்கப்பட்ட" மக்கள் எவ்வளவு வெற்றி கண்டிருக்கின்றனர் என்பதற்கு இது ஒரு அளவுக் கோல். ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் சபை அதிகாரப்பூர்வமாக நிறுவப்பட்ட ஒரு கிறிஸ்துவ பிரிவாக இருந்தாலும்கூட அவர்கள் தங்களை "மற்றும் ஒரு சபை" என்ற கண்ணோக்கத்தில் எப்போதுமே பார்த்ததில்லை. அதற்கு பதிலாக அட்வென்டிஸ்த்தர்கள் தங்களை ஒரு "இயக்கமாக" பார்க்கின்றனர். இவர்கள் இப்படி இருப்பார்கள் என்று தேவன் தீர்க்கதரிசனம் சொல்லியது மாத்திரம் அல்லாமல், அந்த தீர்க்கதரிசனம் நிறைவேறும் காலம் வந்தபோது, மற்ற சபைகளிலிருந்து தனது கடைசி கால

செய்தியை உலகிற்கு எடுத்துரைக்கும் பொருட்டு குழம்பிய "பாபிலோனை" விட்டு வெளியே வாருங்கள் என்ற அழைப்பையும் கொடுப்பார்கள்.

பழங்கால இஸ்ரவேலை போலவே அட்வென்டிஸ்த்தர்களும் தாங்கள் பிரத்தியேகமாக தேர்ந்தெடுக்க பட்டவர்கள் என்று நம்புகின்றனர். ஆனால், தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதால் ஆவிக்குரிய வகையில் மற்றவர்களை விட தாங்கள் மேலோங்கியவர்கள் என்று அர்த்தம் கொள்ள கூடாது என்றும் அவர்கள் அறிந்திருக்கின்றனர். இந்த தனித்தன்மை வாய்ந்த அவசர செய்தியை உலகத்துடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது தான் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதின் அர்த்தம் என்று தெளிவாக உணர்ந்துள்ளனர். உலகத்தில் மற்ற எந்த மக்களிடமும் இல்லாத முழுமையான சத்தியத்தின் அமைப்பாக இருப்பதால் அது தனித்தன்மை வாய்ந்த செய்தி என்றும் இயேசுவின் இரண்டாம் வருகை மிக சடுதியில் இருப்பதாலும் நேரம் மிக விரைவாக ஓடிக் கொண்டிருப்பதாலும் அது அவசர செய்தி என்று எண்ணுகின்றனர்.

ஆனால், பல ஆண்டுகளாக நிகழ்ந்து கொண்டிருக்கும் சபையின் இந்த அசரவைக்கும் வளர்ச்சி கொண்டாடுவதற்கும் நன்றியுடன் இருப்பதற்கும் ஒரு நல்ல காரணமாக இருந்தாலும் கூட உண்மையில் இந்த வேகமான குழப்பமான ஒழுங்கற்ற வளர்ச்சி அழிவிற்கு வழி நடத்தலாம். வேகமான, குழப்பமான, ஒழுங்கற்ற முறையில் பெருகும் உயிரணுக்களே புற்று நோய் என்று எந்த மருத்துவராலும் உங்களிடம் கூற முடியும்.

ஆகையால், நம் வரலாற்றின் முழுவதுமாக நம் சபை முதலில் ஒருங்கிணைக்கப்பட்டு, பின் மறு ஒருங்கிணைக்கப்பட்டு, பின்னர் திரும்பவும் ஒருங்கிணைக்கப்பட வேண்டி இருந்தது. இயேசுவின் வருகைக்கு முன்னரும், நமது ஊழியம் இவ்வுலகில் நிறைவேறும் முன்னரும், தொண்டு நிறுவன சபையான நாம் இன்னும் பல

மாற்றங்களை சந்தித்து மறு ஒருங்கிணைக்கப்படுதலை பார்க்கவிருக்கின்றோம்.

1863 ல், வெறும் 3,500 அங்கத்தினர்களை மட்டும் கொண்ட காலத்தில், நம்மை நாமே ஒருங்கிணைத்துக் கொண்ட முறை இன்றைய சூழ்நிலைக்கு போதுமானதாய் இருக்காது. அது எந்த வகையிலும் 1 கோடியே 50 லட்சம் அங்கத்தினர்களை கொண்ட இந்நாள் சபைக்கு பயன்படாது.

ஆகையால் சபை வளர வளர, தேவன் நமக்கு அளித்த இந்த ஊழியத்தை ஒழுங்குடன் உலகமெங்கும் எடுத்து செல்லுவதற்க்காக இந்த உலகளாவிய ஊழிய வேலையை சிறு உலகளாவிய அமைப்புகளாக நாம் ஒருங்கிணைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. முதலில், நம் ஊழியத்தின் தலைமையகமாக ஜெனரல் காண்ப்பிரென்ஸ் மட்டும் இருந்தது. சில மாநிலங்களிலும் மற்றும் சிறிய மாகாணங்களிலும் கூட "உள்ளூர்" காண்ப்பிரென்ஸ்கள் காணப்பட்டது. சபை சடுதியாக விரிவடைய ஆரம்பித்தவுடன் அது பல உள்ளூர் காண்ப்பிரென்ஸ்களை ஒன்றிணைத்து "ஒன்றியம்" காண்ப்பிரென்ஸ் என்ற ஒன்றை அமைக்க வேண்டுமென்று உணர்ந்து, 1901 ல், ஒன்றிய காண்ப்பிரென்ஸ்கள் உருவாக்கப்பட்டது.

கீழ்காணும் "படிகள்" அல்லது நிலைகள் இன்றைக்கு சபை அமைப்பில் காணப்படுகின்றது:

- ஸ்தல சபை
- பகுதி காண்ப்பிரென்ஸ்கள்
- ஒன்றிய காண்ப்பிரென்ஸ்கள்
- ஜெனரல் காண்ப்பிரென்ஸ் மற்றும் அதின் மண்டலங்கள்

ஒரு முழு கண்டத்தை உள்ளடக்கியதாகவோ, கண்டத்தின் பகுதியையோ, தீவு பகுதியை உள்ளடக்கியதாகவோ இருக்கும் இந்த பகுதி பிரிவுகள் உலகத்தின் அந்தந்த பகுதிகளில் உள்ள ஜெனரல் காண்ப்பிரென்ஸின் "கிளைகளாக" இருப்பதினால் தான் அது பகுதி

பிரிவுகள் (டிவிசன்) என்று அழைக்கப்படுகிறது. இந்த பகுதி பிரிவுகள், சபை அமைப்பின் தனிப்பட்ட சுயாதீன நிலை அல்ல, மாறாக அது உலகில் அந்தந்த பகுதிகளில் இயங்கி வரும் ஜெனரல் காண்ப்பிரென்ஸ்களே. தற்போது நமது சபையில் பதிமூன்று மண்டலங்கள் (டிவிசன்ஸ்) உள்ளது:

- கிழக்கு-மத்திய ஆப்பிரிக்கா டிவிசன் (மண்டலம்)
- ஐரோப்பா-ஆப்பிரிக்கா டிவிசன் (மண்டலம்)
- ஐரோப்பா-ஆசியா டிவிசன் (மண்டலம்)
- ஐரோப்பா -மத்திய டிவிசன் (மண்டலம்)
- அமெரிக்க-மத்திய டிவிசன் (மண்டலம்)
- வட அமெரிக்கா டிவிசன் (மண்டலம்)
- வட ஆசிய-பசிபிக் டிவிசன் (மண்டலம்)
- தென் அமெரிக்கா டிவிசன் (மண்டலம்)
- தென் பசிபிக் டிவிசன் (மண்டலம்)
- தென் ஆப்பிரிக்க-இந்திய பெருங்கடல் டிவிசன் (மண்டலம்)
- தென் ஆசிய டிவிசன் (மண்டலம்)
- ட்ரான்ஸ் ஐரோப்பா டிவிசன் (மண்டலம்)
- மேற்கு ஆப்பிரிக்க டிவிசன் (மண்டலம்)

இந்த ஒவ்வொரு மண்டலத்திற்குள்ளும் ஒன்றிய காண்ப்பிரென்ஸ்களும் மிஷன்களும் உள்ளன. உதாரணமாக மேற்கு அமெரிக்க மண்டலத்தில் 9 ஒன்றிய காண்ப்பிரென்ஸ்கள் உள்ளன, அதில் ஒவ்வொன்றும் பல மாநிலங்களையோ, மாநிலங்களின் பகுதிகளையோ, அல்லது கனடாவில் உள்ள மாகாணங்களை உள்ளடக்கியதாகவோ இருக்கின்றது.

நமது சபை அமைப்பில் உள்ள ஒவ்வொரு "நிலையும்" அதின் பகுதியில் உள்ள மற்ற நிலைகளுக்கு சேவை செய்வதற்காகவே உள்ளது. அவைகளுக்கு தேவையான பொருட்கள், நிர்வாகம், பயிற்சி மற்றும் ஆவிக்குரிய எழுச்சியை கொடுப்பதற்காக இயங்கிவருகிறது. சபை அமைப்பின் ஒவ்வொரு நிலையும் தனது அதிகாரத்தை அந்த

பகுதிகளில் வாழும் அங்கத்தினர்களின் ஓட்டுமொத்த விருப்பதிலிருந்தும் அவர்களுடைய பிரதிநிதித்துவத்திலிருந்தும் பெறுகின்றது. ஸ்தல சபை, காண்ப்பிரென்ஸ், அல்லது ஒன்றியம் இதில் எந்த நிலையாக இருந்தாலும், சபை அமைப்பிலுள்ள பல்வேறு நிலைகளும் தங்களுடைய இலக்கை எட்டுவதற்கு ஒன்றுக்கொன்று பரஸ்பர பொறுப்புகளை கொண்டுள்ளது.

உதாரணமாக, ஒரு காண்ப்பிரென்ஸில் உள்ள ஸ்தல சபைகள் ஓவ்வொன்றும் ஓட்டுமொத்த அங்கத்தினர்களை உள்ளடக்கிய அந்த முழு காண்ப்பிரென்ஸின் விருப்பத்தினால் இயங்கவும் அதின் பொறுப்பாளர்களாகவும் இருக்கின்றது. ஒரு காண்ப்பிரென்ஸில் வழக்கமாக நடை பெரும் காரிய நிர்ணய கூட்டத்தில் பங்கேற்கும் பிரதிநிதிகள் காண்ப்பிரென்ஸ் தலைமையையும் மற்றும் நிர்வாக குழுவையும் பொறுப்பாளர்களாக பாவிப்பது போல, ஒரு காண்ப்பிரென்ஸில் உள்ள சபைகளின் ஒட்டுமொத்த விருப்பத்தின் பொறுப்பாளர்களாக அந்த காண்ப்பிரென்ஸில் உள்ள ஓவ்வொரு ஸ்தல சபைகளும் இருக்கின்றன.

ஒரு அட்வென்டிஸ்த்தராக இருக்கும் உங்களுக்கு நமது சபை அமைப்பை குறித்து ஏற்கனவே தெரிந்திருக்கும், ஆகையால் இங்கு ஒரு முழு அத்தியாயத்திலும் உலகளாவிய ஒன்றிய காண்ப்பிரென்ஸ் மற்றும் ஸ்தல காண்ப்பிரென்ஸ்கள் குறித்து பட்டியலிட வேண்டிய அவசியம் எதுவும் இல்லை. அல்லது, உலகில் அந்தந்த பகுதியில் அவைகளின் வரலாறு மற்றும் பங்கு குறித்து பட்டியலிட வேண்டியது இல்லை. இந்த பல்வேறு நிலைகள் குறித்த கூடுதல் தகவல்கள் அட்வென்டிஸ்ட் ஆண்டு புத்தகத்திலோ, அல்லது ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் கலைக்களஞ்சியத்திலோ பதிப்பு பிரதியாகவோ அல்லது இணையதள பிரதியாகவோ சுலபமாக பெற முடியும்.

ஆனால், இப்பொழுது நாம் படித்து வரும் காரியத்தில் முக்கியமாக குறித்துக் கொள்ள வேண்டியது என்னவென்றால், நாம் பெருமை படும் அளவிற்கு ஒரு இராணுவம் எப்படி தனது இலக்கை

அடைவதற்கு சீராக ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கின்றதோ, அதேபோல் தான் நமது சபையும் ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கின்றது! அதிக பலனை தருவதற்கு தங்களால் இயன்ற திறனை அளித்துள்ள சபையின் அங்கமாய் நீங்கள் இருக்கின்றீர்கள். இங்கே, பங்கு சந்தை பங்குதாரர்களின் இலாபம் குறித்தோ அல்லது இராணுவத்தின் வெற்றிகள் குறித்தோ கூறப்படவில்லை. சத்தியமாகிய இயேசு குறித்த சத்தியத்தையும் அவருடைய கடைசிகால உண்மைகளையும் நம்மால் முடிந்தவரை ஒவ்வொரு மனிதனிடமும் கொண்டு சேர்ப்பதே நாம் எதிர்பார்க்கும் அந்த பலன்கள்.

உங்களது சொந்த ஊரிலுள்ள அட்வென்டிஸ்ட் சபையில் நீங்கள் கலந்துகொள்ளும் போது, உலகளாவிய இயக்கமாக மாறியிருக்கும் ஒரு இயக்கத்தில் அங்கமாய் இருக்கிறீர்கள் என்று அறிந்திருப்பீர்கள். நீங்கள் நம்புவதையே நம்பி, இயேசுவின் வருகையையும் "முடிந்தேறிய வேலை" குறித்த உங்களது கண்ணோக்கை பகிர்ந்து கொண்டவர்களுமான லட்ச கணக்கான சகோதரர்களும், சகோதரிகளும் உலகமெங்கும் உங்களுக்கு உள்ளனர்.

இந்த சபை வட அமெரிக்காவில் துவங்கப்பட்டிருந்தாலும் கூட அதனுடைய ஆதி அங்கத்தினர்களும் தலைவர்களும் ஆதியில் இருந்தே தேவனுடைய கடைசி கால சத்தியத்தை உலகமெங்கும் எடுத்து செல்ல வேண்டும் என்ற உலகளாவிய இலக்கு உடையவர்களாய் இருந்து வந்துள்ளனர்.

1874 ல், ஜே. என். ஆன்ட்ரூஸ், சபையின் முதல் கடல் கடந்த ஊழியகாரனாக அமெரிக்காவை விட்டு ஸ்விட்சர்லாந்திற்கு பயணம் செய்தார். விரைவில் அட்வென்டிஸ்ட் ஊழியர்கள் ஒவ்வொரு வருடமும் மற்ற தேசங்களிலேயும் நாடுகளிலேயும் சேவை செய்வதற்காக புறப்பட்டனர். முதலில் வெகு சிலராக மட்டும் இருந்தவர்கள் விரைவில் அலை அலையாய் அந்நிய தேசங்களுக்கு சென்று நற்செய்தியை அறிவிக்க ஆண்களும் பெண்களும் புறப்பட்டனர்.

ஜே. என். ஆன்ட்ரூஸின் அடிச்சுவட்டை தொடர்ந்து கடல் கடந்து சென்ற ஆதி ஊழியக்காரர்களான ஆண்களும் பெண்களும் அதிலும் அநேகர் தங்கள் குடும்பத்துடன் சென்றவர்களின் பட்டியல் பின்வருமாறு:

1874: ஸ்விட்சர்லாந்திற்கு சென்ற சி. எம். ஆன்ட்ரூஸ், ஏ. வில்லியூமர்
1875: ஜெர்மனிக்கு சென்ற ஜேம்ஸ் ஏர்சன்பெர்கர்
1875: ஸ்விட்சர்லாந்திற்கு சென்ற தீ. டூ. போர்டோ
1876: பிரான்சிற்கு சென்ற தீ. டூ. போர்டோ
1877: நார்வேய்க்கு சென்ற ஜே. ஜி. மேட்டிசன்
1877: ஸ்விட்சர்லாந்திற்கு சென்ற திரு மற்றும் திருமதி வில்லியம் இங்ஸ்
1878: இங்கிலாந்திற்கு சென்ற ஜே. என். லோபோரோ
1878: இங்கிலாந்திற்கு சென்ற மாட் சிசுலே
1879: நார்வேய்க்கு சென்ற திரு மற்றும் திருமதி ஜே. பி. ஜாஸ்பெர்ஸன்

1880 ல் துவங்கி, வருடாந்தர ஊழியக்காரர்கள் எண்ணிக்கை சடுதியாக வளர்ந்து, விரைவில் ஒவ்வொரு வருடமும் பலர் கடல் கடந்த ஊழியங்களுக்காக நியமிக்கப்பட்டு பிரயாணித்தனர்.

ஆஸ்திரேலியா, மேற்கிந்திய தீவுகள், இந்தியா, டிரினிடாட், மத்திய மற்றும் தென் அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா, நியூசிலாந்து, ஹவாய் தீவுகள், மெக்ஸிக்கோ, பொலினீசியா, போன்ற பல நாடுகள் மட்டும் அல்லாமல், ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் ஊழியர்கள் பூமி எங்கும் சுற்றி வர ஆரம்பித்தனர்.

இன்றைக்கு, சபையின் ஊழியம் முன்னேறி செல்லாத ஒரு நாடு அல்லது ஒரு தொலைக் கோடியான மூலைக் கூட பூமியில் கிடையாது.

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், நமது சபையை போல உண்மையான உலகளாவிய சபை பூமியில் இல்லை.

உண்மைதான், "முடிந்துபோன வேலை" நோக்கி செல்லும் ஊழியம் தற்போதைக்கு உலகமெங்கும் சீராக நடைபெறவில்லை. சில இடங்களில், மீதமானவர்கள் காற்றினால் பரவும் காட்டுத்தீயை போல வளர்ந்து வருகின்றனர். இந்த வளர்ச்சி மிக அபரிதமான அளவில் உள்ளதால் பெருந்திரள் ஞானஸ்நானங்கள் பெரிய நீச்சல் குளங்களில் நடைபெற்று, வியக்க வைக்கும் அளவில் புதிய சபைகள் உருவாகி வருகின்றன.

உலகின் மற்ற பகுதிகளில், லவோதிக்கேயாவின் அக்கறையின்மை இன்னும் நீடித்து கொண்டிருக்கிறது. செல்வத்தினாலும், அதிக வேலை பழுவினாலும் மற்றும் பொழுது போக்குகளின் திசை திருப்பல்களாலும் சபை அங்கத்தினர்கள் வஞ்சிக்கப்பட்டு மந்தமான செயலற்ற நிலைக்கு தள்ளப் பட்டிருக்கின்றனர். மக்களால் தங்களுடைய சொந்த அனுபவத்தையும், அறிவையும் மட்டுமே பகிர்ந்துகொள்ள முடியும். அவர்களது "முதல் அன்பு" குளிர்ந்து போயிருந்தாலோ அல்லது தாங்கள் ஏன் அட்வென்டிஸ்த்தராக உள்ளோம் என்பதை நினைவில்லாமல் போயிருந்தாலோ, மற்றவர்களோடு எதையும் பகிருவதற்கான தூண்டுதலோ அல்லது ஆர்வமோ இல்லாமல் போய்விடும்.

ஆனால், நற்செய்தி என்னவென்றால் இறுதியில், முழு உலகளாவிய சபை மீதும் பரிசுத்த ஆவியானவரின் பின் மாரியின் மழை பொழிய விருக்கிறது, அது புதிய உணர்வுகளையும், சக்தியையும் மற்றும் கண்ணோக்கத்தை கொண்டு வந்து தங்கள் அன்பின் உறவை புதுப்பித்து கொண்ட இயேசுவிடம் மற்றவர்களை வழி நடத்த வேண்டும் என்ற ஒரு புதிய விருப்பத்தை சபை அங்கத்தினர்களுக்குள் கொண்டுவரும்.

அந்த தருணம் வரும் போது உலகம் முழுவதும் உள்ள சபை யெங்கிலும் சீரான வளர்ச்சி காணப்படும். பொது கூட்டங்களினால் மட்டுமல்ல சுயாதீன அங்கத்தினர் ராணுவம் அணி வகுத்து செல்வது போல அக்கினி ஏவுதலாலும் ஊழியம் முன்னேறி செல்லும். இந்த பிரபஞ்சத்திலேயே அன்பு தான் மிகவும் சக்தி வாய்ந்தது, தேவனின் இறுதி உண்மை பின்னடியார்களுக்கு தூண்டும் சக்தியாக அன்பு மாறும்போது, முழு உலகமும் ஒரு இறுதி நித்திய தீர்மானத்தை எதிர்கொள்ளும். அந்த தீர்மானமாவது: தேவன் மீதும் அவரது சத்தியத்தின் மீது விசுவாசமா - அல்லது தனக்கு தான் சேவை செய்வதின் மூலம் சத்துருவிற்கு விசுவாசமா என்பது தான்.

உலகமுழுவதும் சென்றடைவது

உங்களுடைய சபையின் ஊழியமும் ஏன் உங்களுடைய சபையும் கூட உலகமுழுவதும் சென்றடைகிறது என்பதை குறித்து நீங்கள் சிந்தித்து பார்க்கும்போது, எவ்வாறாக அது பல்வேறு முக்கிய வழிகளில் மக்களுடைய வாழ்க்கையை தொடுகின்றது என்பதை குறித்தும் சிந்தியுங்கள். உலகம் முழுவதும் அட்வென்டிஸ்த்தர்கள் ஓய்வில்லாத, சுறுசுறுப்பான, ஈடுபாடுள்ள கிறிஸ்தவர்களாய் உள்ளனர். இந்த சேவை அநேக வடிவங்களை எடுக்கின்றது, அவைகளுள் முக்கியமானவைகள் பின்வருமாறு:

ஊழியம் - பொது கூட்டங்களினால் (அதிலும் குறிப்பாக சமீப காலங்களில் செயற்கை கோள்கள் மூலமாக பெருங்கூட்ட மக்களை சென்று அடைகிறோம்), தனிப்பட்ட வேதாகம ஆய்வுகளினால், புத்தக அல்லது கை பிரதி விநியோகங்களினால், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்புகளினால், ஆரோக்கிய கருத்தரங்குகளினால், மற்றும் இது போன்ற பல்வேறு வழிகளின் மூலமாக நம்மண்டை உள்ளோரிடமும், நண்பர்களிடமும் இயேசு கிறிஸ்து குறித்த நற்செய்தியை சென்று சேர்க்கின்றோம்.

கல்வி - உலகமுழுவதும் அட்வென்டிஸ்த்தருக்கு ஆரம்ப நிலை கல்வியிலிருந்து கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்கள் வரை ஏறக்குறைய 6,000 கல்வி நிலையங்கள் இயங்கி வருகின்றது.

ஆரோக்கியம் மற்றும் மருத்துவம் - 500 க்கும் அதிகமான அட்வென்டிஸ்ட் மருத்துவமனைகள், உடல் நலமற்றவர்களுக்கும் மற்றும் உடல் தேறுபவர்களுக்குமான ஸ்தலங்கள், சிறு மருத்துவ மையங்கள், மற்றும் மருந்தகங்கள் உலகமுழுவதும் பரவி காணப்படுகின்றது.

பேரழிவு மற்றும் பஞ்ச நிவாரணம் - அட்வென்டிஸ்ட் துயர் துடைக்கும் மற்றும் நிவாரண நிறுவனமான "அட்ரா" உலக முழுவதும் எந்த பகுதியில் பேரழிவு நிகழ்ந்தாலும் உடனே உணவு, உடை மற்றும் மருத்துவ பொருட்களை கொண்டு சேர்த்து விடும். மேலும் உலகத்தின் மிக வறட்சியான பகுதிகளில் "அட்ரா" தொடர்ச்சியான பஞ்ச நிவாரண திட்டங்களை நடத்தி வருகின்றது.

சமூக சேவைகள் - அநேக உள்ளூர் ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் சபைகள் சமூக சேவை மையங்களை துவங்கி, தங்களது சமூகத்திலுள்ள வீடற்றவர்களுக்கும், உதவி தேவையுள்ளோருக்கும் தொண்டாற்றி வருகின்றது.

வெளியீடு ஊழியம் - அச்சுகளின் மூலமாக தேவனின் நற்செய்தியை உலகமெங்கும் பகிர வேண்டும் என்ற ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தர்களின் வாஞ்சையினால் உலகமுழுவதும் ஏறக்குறைய 60 வெளியீடு நிலையங்கள் செயலாற்றி வருகின்றது.

தகவல் தொடர்பு - வானொலி மற்றும் தொலைக்காட்சி இவ்விரண்டின் மூலமாகவும் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை மக்களிடையே கொண்டு சேர்க்கும் முதன்மை நிறுவங்களில் அட்வென்டிஸ்ட் சபையும் ஒன்று. இன்றைக்கு, "தீர்க்கதரிசனத்தின் முழக்கம்", "வாழ்க்கை முறை பத்திரிக்கை", "உயிரின் மூச்சு" மற்றும்

"இதோ எழுதப்பட்டிருக்கிறது" என்னும் ஒளிபரப்புகள் உலகமெங்கும் லட்சக்கணக்கானோரை சென்றடைகிறது.

நாம் நம்மை ஒரு உலகளாவிய, ஒருங்கிணைக்கப்பட்ட, வளருகின்ற சபை என்று அறிந்து கொள்ளுவதே ஒரு அற்புதமான விஷயம். ஆனால் நாம் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். மொத்தத்தில், வெளிப்படுத்தின புஸ்தகத்தில் ஏழாவது மற்றும் கடைசி சபையாக இருப்பது லவோதிக்கேயா தான்.

"லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன். நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒருகுறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால்; நான்: நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன். நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு. இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" - வெளிப்படுத்தின விசேஷம் 3:14-20.

எதனிடத்திலிருந்து நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்? ஒரு அனலும் குளிருமில்லாத ஆவிக்குரிய அனுபவத்திலிருந்து தான். இயேசுவினிடத்திலுள்ள நமது தனிப்பட்ட உறவை தளர விடுவோமானால் அது அப்படி நடைபெறும். அவருடனுள்ள நமது உறவை நேர மில்லாமையினால் நாம் புதுப்பிக்க தவறினாலும் அது அப்படி நடைபெறும்.

வேறெதிலிருந்தும் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்? தன்னிறைவு உணர்விலிருந்து தான். நம்மிடம் எதுவும் இல்லாவிட்டாலும் கூட நாம் நன்றாக தான் இருக்கின்றோம் என்று நம்மை நாமே நம்ப செய்வதுதான் அது. நம்முடைய தனிப்பட்ட கிறிஸ்தவ வாழ்விற்கும், சபையாக நாம் எவ்வாறு இயங்குகின்றோம் என்ற இவ்விரண்டு காரியங்களுக்குமே அது பொருந்தும். சபைகள் கூட தன்னிறைவினால் மேற்கொள்ளப்பட்டு தங்களுடைய சொந்த நிகழ்ச்சிகள், வரவு செலவு திட்டங்கள் மற்றும் இதர திட்டங்கள், மற்றும் தங்கள் ஒருங்கிணைப்பின் மீது மட்டும் சார்ந்து வல்லமையின் மூல ஆதாரமாய் இருக்கும் தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் மீது சாராமல் இருக்கும் நிலைமை ஆகிவிடும்.

ஆனால், லவோதிக்கேயாவிற்கு வந்த செய்தி என்னவென்றால், நாம் மனம்திரும்பலாம். தேவனுடைய நீதி எனும் பொன்னையும், அன்பு எனும் வெள்ளை அங்கியையும், ஆவியில் கண்களுக்கு கலிக்கமும், அவரிடத்திலிருந்து நாம் பெற்று கொள்ளலாம். அவர் கதவை தட்டிக்கொண்டிருக்கும் போது அவரை உள்ளே வருமாறு அழைக்கலாம்.

இயேசு கதவை தட்டிக்கொண்டு இருப்பதாகவும் நீங்கள் அதை திறக்காமல் இருப்பதாகவும் கற்பனை செய்யுங்கள்! ஆனால், அத்தகைய ஆபத்து தனிப்பட்ட முறையிலோ அல்லது சபை மொத்தத்திற்கும் இருக்கலாம்.

மீதமானவர்களில் ஒரு பகுதியாக நாம் இருப்பது எப்படி இருக்கும் என்று எண்ணிக் கொண்டிருக்கும் இந்த தருவாயில், அட்வென்டிஸ்த்தராக இருப்பது உண்மையில் என்ன என்று நீங்கள் சிந்திக்க துவங்கும்போது லவோதிக்கேயாவின் நோய்களை பற்றி தேவன் கொடுத்துள்ள எச்சரிப்பை தீவிரத்துடன் எண்ணிப் பார்க்க ஆரம்பிப்போம். ஏனென்றால் நாம் தான் அந்த லவோதிக்கேயா!

கல்லூரி வகுப்பறைகளில், நல்ல பேராசிரியர்கள் ஒவ்வொரு விரிவுரை கொடுத்த பின்பும் எதிர்பார்ப்பது என்னவென்றால், அந்த பாடத்தின் முக்கிய கருத்தை மாணவர்கள் வீட்டிற்கு தங்களுடன் எடுத்து செல்லுவார்கள் என்பதே. இந்த புத்தகத்திலும் கூட நீங்கள் "வீட்டிற்கு எடுத்து செல்லும்" செய்தி ஒன்று உள்ளது. இதோ அது உங்களுக்காக: நீளமான ஒன்றின் ஒரு பகுதியாக நீங்கள் இருக்கின்றீர்கள் - அது உலகத்தை உலுக்க கூடிய வகையில் மிக முக்கியத்துவம் பெற்றது, கேபிள் தொலைக்காட்சி செய்திகளில் நீங்கள் முன் எப்போதும் கேட்டிராத எல்லாவற்றையும் விட முன்னிடம் வாயந்தது. நீங்கள் ஒரு பகுதி - இறுதி பகுதி - தொலைந்துபோன ஏதேனிலிருந்து புதுப்பிக்கப்பட்ட ஏதேன் வரை நீடிக்கும், தேவன் மேல் விசுவாசம் கொண்டிருப்போரின் உடைக்க முடியாத சங்கிலியின் ஒரு பகுதி. நீங்கள் செய்து முடிக்க வேண்டிய முக்கிய பங்கு ஒன்று உள்ளது. அது என்னவென்றால், தேவன் உங்களுக்கு அளித்திருக்கும் ஆவிக்குரிய வரங்களை நீங்கள் கண்டுபிடித்து அதை நீங்கள் உபயோகிப்பதற்காக அவருக்கு நீங்கள் அவசியமாயுள்ளீர்கள். ஆமாம் அவருக்கு நீங்கள் தான் தேவைப்படுகிறீர்கள். நீங்கள் அவரை அறிந்திருக்கிறீர்கள், அறியாதவர்கள் மேல் தன் அன்பை வளர்ப்பதற்காக அவருக்கு நீங்கள் தேவை. தேவன் உங்கள் மூலமாக மற்றவர்களை சென்றடைவதற்கு ஒவ்வொரு நாளும் அவருக்கு நீங்கள் அவசியப்படுகின்றீர்கள். சாத்தானின் பொய்களினால் கண்கள் கட்டப்பட்டவர்களிடம் நீங்கள் தேவனுடைய குரலாகவும், கைகளாகவும், அவருடைய பிரசன்னமாகவும் இருப்பதற்காக அவருக்கு நீங்கள்

தேவை. அவர் உண்மையில் யாரென்று நீங்கள் எடுத்துரைக்க வேண்டுமென்று எண்ணுகிறார். உங்கள் வழியாக மற்றவர்கள் மேல் அன்பு செலுத்துவதற்கு அவருக்கு நீங்கள் தேவை. "அருகாமையில், தனிப்பட்ட முறையில்" தேவனுடைய குணத்தை மற்றவர்கள் காணும் வண்ணம் உங்களுக்குள் அவர் வாசம் செய்ய நீங்கள் அவரை அனுமதிக்க வேண்டுமென்று எண்ணுகிறார்.

நம்முடைய தனித்தன்மை

நாம் நம் வாழ்க்கையினூடாக பயணிக்கும்போது, நம்முடைய தனிப்பட்ட தனித்தன்மை என்ன என்ற பெரிய கேள்வி நம்மை தொற்றிக்கொள்ளுகிறது: "நான் யார்?" சில சமயங்களில் நாம் செய்து கொண்டிருக்கும் காரியங்களினாலோ, நாம் சாதித்துவிட்ட காரியங்களினாலோ மற்றவர்கள் நம்மை குறித்து என்ன நினைக்கின்றனர் என்பதினாலோ நம்முடைய தனித்தன்மை என்ன என்று தெரியாமல் குழம்பி போகின்றோம். ஆனால் நீங்கள் தனித்தன்மையானவர்கள், நான் தனித்தன்மையானவன். நாம் உண்மையில் யார் என்று அறிந்து கொள்ளுவது முக்கியமானது. நம்முடைய வேலை, வாழ்க்கை, மற்றவர்கள் நம்மை குறித்து என்ன நினைக்கின்றனர் என்பதை எல்லாம் தாண்டி உண்மையில் நாம் யார் என்று அறிந்துகொள்ளுவது மிக முக்கியமானது.

மேலும் நீங்கள் ஒரு ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தராக இருப்பீர்களேயானால், தனித்தன்மை குறித்த மற்றுமொரு கேள்வி உங்களை தொற்றிக்கொண்டிருக்கும். தனி நபர் தனித்தன்மை குறித்து அல்ல, நம்முடைய சபை குறித்த தனித்தன்மை. "நாம் யார்?"

அட்வென்டிஸ்ட் என்றால் என்ன? இங்கு நாம் ஏன் இருக்கின்றோம்? நாம் வாழ வேண்டிய அவசியம் தான் என்ன?

அமெரிக்க ஐக்கிய நாட்டில் மட்டும் 1,588 மத பிரிவுகள் இருப்பதாக அமெரிக்க மதங்கள் குறித்த கலைக்களஞ்சியத்தில்

கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் *உலக கிறிஸ்தவ கலைக்களஞ்சியத்தில்* உலகமெங்கும் 10,000 தனித்துவம்பெற்ற மதங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்த மதங்களில் ஒன்று தான் கிறிஸ்துவ மதம். இந்த மதம் உலகமுழுவதும் 33,830 வேறுபட்ட பிரிவுகளை உள்ளடக்கியதாக உள்ளது.

ஆகையால், பூமியிலிருக்கும் அந்த ஆயிரக்கணக்கான சபைகள் மற்றும் பிரிவுகளில் அட்வென்டிஸ்த்தராகிய நாமும் மேலும் ஒரு பிரிவாக மட்டும் இருக்கின்றோமா? உண்மையில் நமது சபையில் சிறப்பாக ஏதேனும் உள்ளதா? பாபிலோனின் தவறான கோட்பாடுகளினால் வஞ்சிக்கப்பட்டு தொலைந்து போனவர்களை தேவன் மீண்டும் கூட்டி சேர்க்கும் புகலிடமாக இருக்கின்றதா நமது சபை? சடுதியில் முடிவு பெறவிருக்கும் உலகம் குறித்த அவசர சத்தியத்தையுடைய இயக்கமாக இருக்கின்றோமா?

ஆமாம், உண்மை தான் அட்வென்டிஸ்த்தராக இருக்கும் நாம் சில சமயத்தில் திசை திரும்பியிருக்கலாம், கவனத்தை கூட இழந்திருக்கலாம். சில நேரங்களில் தீர்க்கதரிசன வரம் இக்காலத்திலும் பொருந்துமா என்ற கேள்வியிலும், சபை கோட்பாடுகள் அல்லது சபை நிலைப்பாடுகள் குறித்த தேவையற்ற வாதங்களில் ஈடுபட்டு தடம் புரண்டு சென்றிருக்கலாம். நம்முடைய பெரிய சத்துருவானவன் நம்மை அவ்வளவு சுலபமாக விட்டு விடுவதில்லை. அட்வென்டிஸ்ட் திருமணங்கள், பள்ளி கூடங்கள், நிறுவனங்கள் ஏன் அட்வென்டிஸ்ட் தலைவர்களையும் கூட தாக்கி வருகிறான்.

ஆனால் நண்பர்களே, பிசாசானவன் கொடிய தீமைகளை செய்திருந்தாலும் கூட, தேவன் நன்மையே செய்து வருகின்றார். மேலும் தீர்க்கதரிசனத்தில் உரைக்கப்பட்டிருக்கும் பரிசுத்த ஆவியின் சக்திவாய்ந்த வெளிப்பாடாய் இருக்க போகும் பின்மாரியின் முழு சக்தியையும் நாம் இன்னமும் காணவில்லை. உறுதியான சாட்சியாக இருப்பதற்காக முன்னெப்போதும் இல்லாத பெந்தெகொஸ்தே சக்தி பின்மாறி மூலமாக தேவ ஜனத்திற்கு வழங்கப்படும்.

வெளிப்படுத்தின விசேஷம் 7 கூறுகிறது என்னவென்றால் கடைசி காலங்களில், தேவனுடைய மக்கள் "தேவனுடைய முத்திரையை" பெறுவார்கள்: "ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக் கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவரக்கண்டேன்; அவன், பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம்பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி: நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்" - வெளிப்படுத்தின விசேஷம் 7:2,3.

நெற்றிகள்: மனங்கள்... இருதயங்கள். தேவனுடைய முத்திரையை பெற்றவர்கள் அவருடைய விசுவாசத்திலும் சத்தியத்திலும் தீர்மானமாய் நிற்பதினால் அவர்களை அசைக்க முடியாது, தேவன் மேல் தாங்கள் கொண்டுள்ள அர்ப்பணிப்பு திரும்பபெறமுடியாத ஒரு அர்ப்பணிப்பு. இவர்கள் தங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒரு மேலான இடத்தை அடைந்தவர்கள். எப்போதாகிலும் சுயநல வழிகளை தேர்ந்தெடுப்பதற்கு பதிலாக மரிப்பதையே தேர்ந்தெடுப்பார்கள்.

இந்த "உறுதியான நிலையின்" செயல்முறை நிலையானதாகவும், படிப்படியாக அடையப்பட்டிருப்பதாயும் இருக்கும். இந்த நிலையை எட்டுவதற்கு சில காலம் ஏன் பல வருடங்கள் கூட பிடிக்கும். சிலருக்கு அது விரைவாக நடைபெறலாம், மற்றவர்களுக்கு அநேக நாட்கள் பிடிக்கலாம். எவ்வாறாக, மெதுவாய் படி படியாய் புதிதாக கொட்டப்பட்ட சாந்து அல்லது சிமெண்ட் கலவை உறைகின்றதோ அதே போல தான் சத்தியத்தில் உறுதியாய் நிற்கும் முறையும் உள்ளது. இறுதியில் கொட்டப்பட்ட அந்த சாந்து மிக உறுதியாகவும், கடினமாகவும் மாறுகின்றது. கடினமாய் மாறிய பின் அதை மறுபடியும் மெதுவாக மாற்ற முடியாது.

தேவனுடைய ஜனம் ஒருமுறை அவருடைய சத்தியத்தில் உறுதியாக உறைந்துவிட்டனர் என்றால், தேவன் மீது தலைகீழாக மாற்ற முடியாத விசுவாசத்தை கொண்டுவிட்டார்களேயானால், அப்போதுதான்... முடிவாக அப்போதுதான்... பரிசுத்த ஆவியின் எல்லை இல்லா வல்லமையை அவர்கள் மீது ஊற்ற முடியும்.

காண்பிப்பதும் கூறுவதும்

தேவனுடைய ஜனங்கள் சாட்சி பகிரும் போதும், தங்களுடைய விசுவாசத்தை குறித்து பகிர்ந்து கொள்ளும் போதும் தேவ அறிவிப்பாளர்களை விட மேலோங்கி விடுகின்றனர். எழுத்து ஆசிரியர்கள் வலியுறுத்துவது போல, கூறுவதை விட காண்பிப்பதே மேலானது! ஆவியினால் ஏவப்பட்டு சாட்சி பகிருதல் தகவல்களை பகிர்ந்து கொள்ளும் செயலாக இருந்தாலும் கூட அது வெறும் தகல்வல்களை மட்டும் பகிர்ந்து கொள்ளும் செயல் மாத்திரம் அல்ல. அடிப்படையில் சாட்சி பகிருதல் என்பது ஒருவர் என்ன சொல்லுகின்றார் என்பதை மற்றவர்கள் கேட்பது மட்டும் அல்ல அவரது வாழ்வே காணும் மற்றவர்களுக்கு தேவனை குறித்த சாட்சியாக அமையும்.

தேவ ஜனங்கள் தேவன் அவர்களுக்குள் வருவதற்காக அழைப்பு கொடுத்தால் அவர்கள் மூலமாக பிறரை மாற்றுவதற்கு உண்மையில் தேவனிடம் எவ்வளவு வல்லமை உள்ளது என்பதை எடுத்துக்காட்டமுடியும். தேவனுடைய பரிசுத்த வல்லமையின் மீது சார்ந்து எவ்வாறு இயேசு தனது பிதாவுக்கு கீழ்ப்படிய முடிந்ததோ அப்படியே நமது வாழ்விலோ அல்லது தேவனுடைய எந்த பின்னடியார் வாழ்விலோ அவர்களும் தேவனை சார்ந்து அவருக்கு கீழ்ப்படிய முடியும் என்பதை அவர்களது வாழ்வு எடுத்துரைக்கும்.

இறுதி போராட்டத்தை முடிப்பதற்கும் அது ஏற்படுத்தி கொண்டிருக்கும் இருதயத்தை உடைக்கும் துயரங்களை முடிவுக்கு

கொண்டு வருவதற்கும் தேவன் மிகுந்த ஆர்வமாய் இருக்கின்றார். ஆனால் அதற்கு முன், கை கொள்ளமுடியாத சட்டத்தை தேவன் உண்டுபண்ணியுள்ளார் என்று சாத்தான் முன்வைத்திருக்கும் தவறான குற்றச்சாட்டிற்கு (தன்னுடைய கலகத்தின் மீதிருந்து திசை திருப்ப) முழு பதில் கிடைத்தாக வேண்டும். அதனால் தான் தேவ ஜனங்களின் வாழ்க்கை மூலமாக இந்த குற்றசாட்டு மிக தவறானதென்றும் அத்தகைய குற்றசாட்டுகள் மீண்டும் எழும்பாமல் இருக்கவும் தேவன் பொறுமையாய் இருந்து அவர்கள் அதை நிரூபித்து காட்டுவதற்கான எல்லா நேரத்தையும் அவர்களுக்கு கொடுத்துள்ளார். ஆனால், பூமியில் உள்ள நாம் இந்த போராட்டம் முடிவடைய வேண்டும் என்பதில் பொறுமையின்மையாய் உள்ளோம். அப்படியானால், ஒவ்வொரு நாளும் நம்மை தேவனுக்கு முழுமையாக ஒப்புக்கொடுப்பதின் மூலமாகவும், என்றென்றைக்கும் நாம் அவருடையவர்கள் என்ற முத்திரை கிடைப்பதற்காக நம்மை அவர் மாற்றுவதற்கு அனுமதிப்பதின் மூலமாகவும் நம்முடைய இரட்சகருமாகிய தேவன் திரும்ப வருவதை துரித படுத்த முடியும்.

உலகின் சில பகுதிகளில், உலர்ந்த புல்லில் பரவும் காட்டு தீயின் தீவிரத்தை போல சபையின் வேலை துரிதமாக மக்களிடம் சென்றடைந்து வருகின்றது. முற்குறிக்கப்பட்ட பின்மாரியின் ஆதி துவக்கம் ஏற்கனவே ஆரம்பித்து இருக்கலாம் என்று சிலர் சந்தேகிப்பது சரிதான். உலகின் மற்ற பகுதிகளோடு ஒப்பிட்டு பார்ப்போம் என்றால் மற்ற பகுதிகளில் வேலை சற்று மெதுவாக தான் சென்று கொண்டு இருக்கின்றது.

ஆனால் இந்த நிலை விரைவில் ஒரு மாற்றத்தை சந்திக்கவிருக்கிறது.

நம்மை சுற்றி உலகத்தில் நடந்து வரும் காரியங்கள் நமக்கு விழித்தெழும் அழைப்பாக இருக்க வேண்டும். சுற்றுசூழல் வேகமாக மாசடைந்து வருகின்றது. எங்கு பார்த்தாலும் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இருந்து வருகின்றது. பிசாசினால் ஏவப்பட்ட

பேரழிவுகள் உலகில் இங்குமங்குமாக இருந்து வருகின்றது. இந்த எல்லா சம்பவங்களும் உலகை உலுக்கும் ஒரு பெரிய காரியத்தின் உச்சக்கட்டத்தை அடையவிருக்கிறது.

எவ்வளவு சிறிய காலம் மட்டும் மீந்து இருக்கிறது என்பதை நாம் அறிந்து கொண்டால், ஸ்தம்பித்து வார்த்தை இல்லாமல் போய் விடுவோம்.

விரைவில் நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான இறுதி நேர் முக மோதல் எல்லாவற்றிற்கும் மேலானதாக மாறும். அது நடைபெறும்போது இறுதி, தேர்ந்தெடுக்கப்பட்ட, விசுவாசமுள்ள மீதியான தேவனின் பின்னடியார்கள் அரங்கத்தின் மையத்திற்கு கொண்டு வர படுவார்கள். நாடகத்தின் இறுதி அத்தியாயங்களில் தேவன் தன்னுடைய இறுதியான நோவாக்களுக்கும், தாவீதுகளுக்கும், மற்றும் லூத்தர்களுக்கும் அழைப்பு விடுவார்.

இறுதி முடிவு இவ்வளவு சடுதியாய் இருக்கும் தருவாயில், நாம் என்ன செய்து கொண்டிருக்கவேண்டும்?

எப்போதேனும் நீங்கள் அன்பு வசப்பட்டிருப்பீர்களேயானால் இந்த கேள்வியின் விடையை சுலபமாக புரிந்துகொள்ளுவீர்கள். பெற்றோரின் அல்லது பிள்ளையின் அல்லது சகோதரரின் அல்லது சகோதிரியின் அல்லது நண்பனின் அன்பு குறித்து உங்களுக்கு தெரிந்திருக்கும். அல்லது காதலை குறித்தோ, திருமண அன்பு குறித்தோ அறிந்திருப்பீர்கள்.

நீங்கள் எப்போதாயினும் மிக ஆழ்ந்த அன்பை அனுபவித்தவர் என்றால், நீங்கள் அன்பு செலுத்துபவர்க்காக எதை வேண்டுமானாலும் செய்வீர்கள் என்பதை அறிந்திருப்பீர்கள். நீங்கள் அன்பு கூறுகிறவர் எவ்வளவு அற்புதமானவர் என்று மற்றவர்களிடம் கூறும் போது எவ்வளவு சந்தோஷ படுகிறீர்கள் என்று அறிந்திருப்பீர்கள்.

இப்போது நாம் என்ன செய்து கொண்டிருக்க வேண்டும்? இறுதி போராட்டத்தின் கடைசி மோதலுக்கு நாம் காத்திருக்கும் இந்த தருவாயில் நம்மை என்ன ஆக்கிரமித்திருக்க வேண்டும்?

இரண்டு பத்திகளுக்கு முன்பாக கொடுக்கப்பட்டிருக்கும் வார்த்தைகளை மறுபடியும் படியுங்கள். இயேசு கிறிஸ்துவின் மீது அன்பு கொண்டிருந்திருப்பீர்களேயானால், அவருக்காக எதையும் செய்வீர்கள். நீங்கள் செய்யவேண்டுமென்று அவர் எண்ணும் காரியத்தை நீங்கள் அறிவீர்களேயானால் அதை செய்து முடிப்பதற்கு எவ்வளவு ஆர்வமாய் இருப்பீர்கள். உங்கள் மூலமாக அவர் வாழ்ந்து மற்றவர்களுக்கு தான் எப்படிப்பட்டவர் என்பதை அதின் மூலமாக காண்பிக்க விரும்புகின்றார். சில சமயங்களில், அவரை பற்றி நீங்கள் அறிந்த சத்தியத்தை மற்றவர்களுடன் பகிர வேண்டும் என்று உங்களிடம் அவர் கேட்பார். பகிர்ந்துகொள்ளுதல், பிரசங்கித்தல், அல்லது கற்பித்தல் போன்ற சிறந்த தாலந்துகளையும் உங்களுக்கு அவர் தருவார். நாம் ஒவ்வொருவரும் அவருடைய அன்பையும் ஆசீர்வாதங்களையும் மற்றவர்களுடன் பகிரும் ஆறுகளாக இருக்க வேண்டும் என்பது தான் அட்வென்டிஸ்த்தராக இருக்கும் நம் ஒவ்வொருவரிடமும் தேவன் எதிர்பார்க்கிறார், அதுவும் இன்றே எதிர்பார்க்கிறார். மற்றவர்களுடைய பார்வையில் இருந்து தப்பி செல்லாத அளவிற்கு அவருடைய குணத்தை மற்றவர்கள் முன் நாம் தெளிவாக வாழ்ந்து காண்பிக்க வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கின்றார். தான் உண்மையில் யார் என்று மற்றவர்களுக்கு அவர் காண்பிப்பதற்காக அவசரமாக சில மக்கள் அவருக்கு தேவை படுகின்றனர். மிக அருகாமையிலிருந்து அவரை எடுத்துக்காட்டும் அன்பின் மூலம் தன்னுடைய கலகக்கார்களை மீண்டும் அவர் தன் வசமாய் இழுத்து கொள்ளுவார்.

இயேசு கிறிஸ்துவின் மீது நாம் அன்பாயிருப்போமானால், சற்றும் வெட்கமோ சுய எண்ணங்களோ இல்லாமல் அவரை பற்றி மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளுவோம். ஆமாம், உண்மைதான்,

அவரை பற்றி மற்றவர்களுடன் நாம் பகிர்ந்து கொள்ள வேண்டிய அநேக சத்தியங்கள் நம்மிடம் உள்ளது. ஆனால், நமக்கு தெரிந்த, நாம் அன்புகூருகிற இரட்சகர் குறித்த சத்தியத்தை அவர்களுக்கு அறிய செய்து, அவர்களையும் நம்மைப்போல மாற்றுவது தான் நமது முதல் ஊழியம். ஒருமுறை அவர்கள் அவரை அறிந்து அவரை நேசிக்க ஆரம்பித்தவுடன், சுலபமாக அவருடைய கடைசி நாள் சத்தியங்களை அவர்களிடம் கொண்டு சேர்த்துவிடலாம்.

தாங்கள் நேசித்த தேவனுக்காக கணக்கற்ற உண்மையும் விசுவாசமுள்ளவர்கள் ஆதாமின் காலம் துவங்கி இந்த 2000 நூற்றாண்டின் துவக்க காலம் வரை உறுதியாக நின்றிருக்கின்றனர். அவர்கள் சத்தியத்திலிருந்து தடுமாறாமலும் தங்களை காப்பாற்றிக் கொள்ளுவதற்காக பிழைகளை ஏற்றுக்கொள்ளாமலும் இருந்து வருகின்றனர்.

விரைவில் ஒருநாள், சந்தேகத்திற்கு இடம் இல்லாமல், நாம் நினைப்பதற்கும் முன்பாகவே, ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் மக்களாகிய நமக்கு அந்த "மறுபக்கத்தில்" நமக்கு முன்பாக சென்ற விசுவாசமுள்ளோர்களை சந்திக்கும் சிறந்த வாய்ப்பு கிடைக்கும். தாங்கள் நேசித்த அந்த ஒருவருக்காக அசைக்க முடியாத உறுதியுடன் நிற்பதென்றால் என்னவாயிருந்தது என்று அவர்களை நாம் பகிர சொல்லலாம்.

இந்த துயரம் நிறைந்த பூமியில் நீண்ட காலம் தரித்திருப்பதற்கு உண்மையில் வேறெந்த காரணமும் உள்ளதா?

தேவன் நமக்கு அளித்த இந்த ஊழியத்தை நம்மிடத்தில் உள்ள அனைத்தையும் கொடுத்து செய்து முடிப்போமா? என்ன சொல்லுகிறீர்கள்?

வீட்டிற்கு செல்லலாமா? என்ன சொல்லுகிறீர்கள்?

எல்லா காலத்திலும், தேவன் தனக்கென்று ஒரு கூட்ட மக்களை எப்பொழுதும் வைத்திருந்தார் - அவர்கள் உண்மை யுள்ளவர்களும், விசுவாச முள்ளவர்களும், அழைக்கப் பட்டவர்களும் தெரிந்து கொள்ளப் பட்டவர்களுமாவர் - மேலும் அவருக்காக விசேஷமான ஒரு கூட்ட மக்கள் இன்றும் இருக்கிறார்கள்.

நீங்கள் யார்?

நீங்கள் ஒரு ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தர்.

ஒருவேளை நீங்கள் ஒரு அட்வென்டிஸ்ட் இல்லத்தில் பிறந்திருக்கலாம், அட்வென்டிஸ்ட் பள்ளிகளுக்கு சென்றிருக்கலாம், மற்றும் உங்கள் வாழ்நாள் முழுவதுமே அட்வென்டிஸ்த்தராக இருந்திருக்கலாம். அல்லது உங்கள் வாழ்க்கையின் பின் பகுதியில் உங்கள் சிறு வயதின் சபையை விட்டு விட்டு அட்வென்டிஸ்ட் சபையை "கண்டுபிடித்து" அதில் சேர்ந்திருக்கலாம். அல்லது ஒருவேளை குறுகிய காலத்திற்கு மட்டுமே ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தராக இருந்திருக்கலாம்.

நீங்கள் ஒரு ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தர்.

ஒரு கத்தோலிக்கரோ, பாப்டிஸ்ட்டோ, எப்பிஸ்கோப்பலியானோ, அல்லது மெதடிஸ்டோ அல்ல. யூத மதத்தின், அசெம்பிலிஸ் ஆப் காட்டின், அல்லது சர்ச் ஆப் ஜீசஸ் கிரைஸ்ட் ஆப் லேட்டர் டே செயிண்ட்ஸின் அங்கத்தினரோ அல்ல. நீங்கள் ஒரு முஸ்லீமோ, அல்லது இந்துவோ அல்லது புத்த மதத்தை சேர்ந்தவரோ அல்ல. நீங்கள் ஒரு இல்லைவாதியோ, யதார்த்தவாதியோ, அல்லது இயற்கை சமயவாதியோ அல்ல.

நீங்கள் ஒரு ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தர்.

இருக்கிறவண்ணமாகவே, மற்ற சபைகள் போலிருந்தும் சில முக்கிய காரியங்களில் மற்றவைகளை விட முற்றிலுமாக வேறுபட்ட ஒரு சபையின் அங்கமாய் நீங்கள் இருக்கிறீர்கள். 1844 வது ஆண்டின்

முக்கியத்துவம் குறித்து உங்களுடைய சபை நம்புகிறதுபோல மற்ற சபைகளும் என்ன நம்புகிறது என்பது ஏன் முக்கியமானது? வேறெங்கு பரலோக ஆசரிப்பு கூடாரம் குறித்தும், நுட்ப நியாய விசாரணை அல்லது "இறுதி போராட்டம்" குறித்தும் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்? நம்மை தவிர மேலும் ஒரு சில கிறிஸ்தவர்கள் மட்டுமே ஏழாம் நாள் ஓய்வுநாளையும், தங்கள் நடுவே இருக்கும் தீர்க்கதரிசன வரத்தையும், மரணத்தில் எந்த உணர்வும் இல்லை என்றும் நம்புகின்றனர்.

நீங்கள் ஒரு ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தர்.

இது உங்களுக்கு என்ன அர்த்தத்தை கொடுக்கின்றது?

வெகு நாட்களாக ஓடிக்கொண்டிருக்கும் குழந்தைகளுக்கான "சேஷமே ஸ்ட்ரீட்" என்ற தொலைக்காட்சி தொடரில், கெர்மிட் என்ற தவளை "பச்சையாக இருப்பது சுலபமல்ல" என்ற தலைப்புடைய பாடல் ஒன்றை பாடும். நீங்கள் ஒருவர் மாத்திரமே பச்சையாக இருப்பீர்களேயானால் அப்படி இருப்பது சுலபமல்ல என்று அதற்கு அர்த்தம். "வேறுபட்டு" இருப்பது ஏளனத்தையும், வெட்கத்தையும், பெரிய குழுவில் இணைய கோரும் தோழமை வற்புறுத்தல்களையும் கொண்டுவரும். சில சமயங்களில், அட்வென்டிஸ்த்தராக இருப்பது சுலபமாக இருந்திருக்காது, இருக்காது, இருந்திருக்கவும் முடியாது.

ஒரு உணவகத்தில் ஜெபத்தை ஏறெடுக்கும்போது. நீங்கள் ஒருவர் மாத்திரம் சைவ உணவின் கட்டணத்தை கேட்கும்போது. ஓய்வுநாளை கடைபிடிப்பதற்கு எதிர்ப்புகள் வரும்போது "கல்ட்" (சமய மரபு) என்று எண்ணப்படாமல் **எலென் உவைட்டின்** பங்கு மற்றும் உங்கள் சபையின் நிலைப்பாடுகள் குறித்து மற்றவர்களுக்கு விளக்கும் போது.

நீங்கள் ஒரு ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தர்.

ஒருவராக இருந்தாலும், பெருமையாக (ஆடம்பர மற்றும் திமிர்த்தன எண்ணத்தினால் அல்ல, தேவன் உருவாக்கிய தனிபட்ட முக்கியத்துவம் பெற்ற ஒன்றின் அங்கமாய் இருப்பதினால்)

எண்ணுவதற்கு உங்களுக்கு எல்லா காரணங்களும் உள்ளது. வெட்கப்படாமல் நீங்கள் நம்புகிறதை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளுவதற்கு உங்களிடம் எல்லா காரணங்களும் உள்ளது.

ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தராக இருப்பதென்றால் என்ன? இந்த கேள்விக்கு அநேக பதில்கள் உள்ளது, அதில் சிலவற்றை மாத்திரம் நாம் பின்வருமாறு காணலாம்:

1. பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பு தேவனால் தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்ட ஒரு இயக்கத்தில் அங்கமாய் இருக்கின்றீர்கள் என்பதே ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தராய் இருப்பதின் பொருள். இந்த இயக்கம் தோன்றின நாள் முதல் அது நம்பியவைகளை நாம் நம்பி, அதனை அடையாளம் காணுவதற்கான எல்லா அடையாளங்களும் அதனிடத்தில் காணப்பட்டது. இதனின் பொருள் என்னவென்றால் 2300 மற்றும் 1260 வருட தீர்க்கதரிசனங்களின் முடிவில் எழும்பவிருக்கும் "மீதமானவர்களாகிய" தீர்க்கதரிசன மக்களின் ஒரு அங்கமாய் நீங்கள் இருக்கின்றீர்கள் என்பதே.

2. உலகில் உள்ள செய்தி நிறுவனங்கள் எதை முக்கியமாக நினைத்தாலும்கூட தேவன் இந்த 2000 வது நூற்றாண்டில் எதை முக்கியமாக எண்ணுகிறார் என்பதை நினைத்து பார்க்கும் கூட்டத்தில் ஒரு அங்கமாய் இருக்கின்றீர்கள் என்பதே ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தராக இருப்பதின் அர்த்தம். தேவனிடத்திலிருந்து இந்த உலகிற்கு அனுப்பப்பட்ட செய்திகளில் கடைசியும் மிக அவசரமுமான இந்த செய்தியை எடுத்துரைக்கும் அவரது அமைப்பின் அங்கமாய் இருக்கிறீர்கள். நீங்களே அவரது குரல். உங்களை சுற்றி உள்ளவர்களிடம் அவரின் அன்பை எடுத்துரைக்கவும் மாறிக்கொண்டிருக்கும் சத்தியத்தை குறித்தும் சடுதியில் வரவிருக்கும் இயேசுவின் வருகை குறித்தும் எடுத்துரைக்கும் செயல் விளக்கமாக உங்களது வாழ்வு அமையும்.

3. உண்மையான தீர்க்கதரிசன வரமா அல்லது போலியானதா என காணுவதற்காக வேதம் வைக்கும் தேர்வில் தேர்ச்சியடைந்த தீர்க்கதரிசன வரம் மாதிரியான அவசியப்படுகின்ற எல்லா ஆவிக்குரிய அனுகூலங்களையும் தேவன் இந்த சபைக்கு அருளியுள்ளார் என்றும் அதை நேசிக்கிறார் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் என்பதே ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தராய் இருப்பதின் அர்த்தம்.

4. தேவனுடைய சத்தியமெனும் வெளிச்ச சுடர்களை மீட்டெடுத்து அதை உலகம் முழுவதற்கும் சென்று சேர்க்கவேண்டும் என்று உறுதியாய் இருக்கும் ஒரு இயக்கத்தின் அங்கமாய் இருக்கிறீர்கள் என்பதே ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தராய் இருப்பதின் அர்த்தம். ஆமாம், சீர்திருத்த காலகட்டத்தில் மீட்டெடுக்கப்பட்ட அதே சத்தியம் தான். அதனுடன் சேர்த்து இயேசுவின் வருகைக்கு அனைவரையும் ஆயத்தம் செய்யும் வேறு முக்கியமான தனித்தன்மை வாய்ந்த கடைசி நாள் சத்தியங்களையும் மீட்டெடுத்துள்ளனர்.

5. தேவன் உங்களை எவ்வளவு ஆரோக்கியமாகவும், சந்தோஷமாகவும், ஆமாம், அவரை போல் பரிசுத்தமாகவும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார் என்பதை தெரிந்துக்கொள்ளும் சிலாக்கியம் உங்களுக்கு உள்ளது என்பது தான் ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தராக இருப்பதின் அர்த்தம்.

6. தேவனுடைய கட்டளைகளான அவருடைய சட்டத்தை ஒரு புதிய பரிமாணத்தில் காண முடியும் என்பதே ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தராக இருப்பதின் அர்த்தம். உங்களுடைய சந்தோஷங்களை மறுப்பதற்காகவோ அல்லது தாங்க முடியாத இல்லா நிலையில் உங்களை தள்ளி விடுவதற்காக அந்த சட்டங்கள் உருவாக்கபடவில்லை. அவைகள் உச்சகட்ட நோவுகளிலிருந்தும் இறுதியில் மரணத்தினின்றும் உங்களை காத்துக்கொள்ளுவது எப்படி என்பதற்கான தேவனின் அன்பு

வழிகளே. வேதம் கூறுவதால் மட்டும் தேவனை பின் தொடர வேண்டும் என்று பின்தொடராமல், நீங்கள் விரும்புகிறதால் மாத்திரம் தேவனை பின்தொடருகிறீர்கள் என்பதில் உள்ள சந்தோஷத்தை அறிந்து கொள்ளும் சுதந்திரம் உங்களுக்கு உள்ளது என்பதே ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தராக இருப்பதின் அர்த்தம்.

7. "விசுவாசத்தினால் நீதி" என்றால் என்ன என்று அனுபவத்தினால் படித்து கொள்ளுவதுதான் ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தராய் இருப்பதின் அர்த்தம். இரட்சிப்பு குறித்த உங்களது அட்வென்டிஸ்ட் கருத்து ஒருபுறம் "மலிவான இரக்கத்தை" புறக்கணித்து மறுபுறம் கடுமையான சட்டத்திட்டத்தை புறக்கணிக்கிறது. தேவன் உங்களுக்கு என்ன செய்த்துள்ளார் என்பதற்கும் உங்களுள் என்ன செய்ய விரும்புகிறார் என்பதற்கும் இடையிலான ஏற்ற தாழ்வுகளை இது தவிர்க்கிறது.

8. ஏன் இங்குள்ளனர் என்பதை பல காலங்களுக்கு முன்பே மறந்துபோய் இப்பொழுது வெறும் சிறு அசைவுகளாக மாத்திரம் காணப்படும் அநேக மற்ற மத குழுக்கள் போலில்லாமல், உங்களுக்கு உங்கள் சபை ஏன் இங்குள்ளது என்று தெரியும் என்பதே அட்வென்டிஸ்த்தராக இருப்பதின் அர்த்தம். ஒரு மகத்தான காரணத்திற்காக உங்கள் சபை இங்குள்ளது. உலக வரலாற்றிலேயே மிக தனித்தன்மை வாய்ந்த ஒரு ஊழியம் அதற்கு உள்ளதென நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். புதியேற்பாட்டின் நற்செய்தி மற்றும் வெளிப்படுத்தின விசேஷத்தில் காணப்படும் முத்தூது இவைகளுடன் சேர்ந்து தேவனுடைய அன்பு குறித்த செய்திகளை முடிவில் இந்த முழு உலகமும் கேட்கும்படியாக செய்யும் முக்கிய வேலை தான் அந்த தனித்தன்மை வாய்ந்த ஊழியம்.

9. வெறும் தண்ணீர் மேல் நடந்து செல்லும் சபை அல்ல இது. மரித்துக்கொண்டிருக்கும் ஒரு சபையின் அங்கம் அல்ல நீங்கள் என்பதே ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தராக இருப்பதின் அர்த்தம். சபை வளர்ச்சி குறித்து ஆராய்ச்சிகள் செய்பவர்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கும் சக்திவாய்ந்த மற்றும் வெகு விரைவாக வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு இயக்கத்தின் அங்கமாக இருக்கிறீர்கள்.

10. ஒரு சிறு பகுதியில் இயங்கும் கண்மூடித்தனமான சமய மரபுகளை கொண்டிருக்கும் அமைப்பின் அங்கத்தினர் அல்ல நீங்கள் என்பதே ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தராக இருப்பதின் அர்த்தம். யாரோ ஒருவரின் கிளை அல்ல நீங்கள். உலகெங்கும் தனது வளர்ச்சிக்காக மட்டுமல்லாமல், தனது உலகளாவிய மருத்துவம், கல்வி மற்றும் மனிதாபிமான ஊழியங்களுக்காகவும் அறியப்படும் ஒரு இயக்கத்தின் அங்கமாக இருக்கிறீர்கள்.

11. உங்களுடைய சபை தனது தரங்களை எந்த மறைமுகமும் இல்லாத வண்ணம் நேராக கொண்டுள்ளது என்பதே ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தராக இருப்பதின் அர்த்தம். அரசியலுக்குள்ளோ, புதிய கால கோட்பாடுகளுக்குள்ளோ, அல்லது சுய உதவி மன தத்துவங்களுக்குள்ளோ அது வழி தவறி சென்றுவிடவில்லை, இனிமேலும், எப்போதும் செல்லாது. அறநெறி சட்டங்களை இயற்றுவதுதான் தன்னுடைய ஊழியம் என்று எண்ணாமல் ஒவ்வொருவருக்குள்ளும் நன்னடத்தையை கொண்டுவரக்கூடியவரான அந்த ஒருவரையே உங்கள் சபை உயர்த்துகிறது. திரும்ப திரும்ப உங்களுடைய சபை தன்னைத்தானே புதுப்பித்துக்கொள்ளவில்லை. தனது ஒரே "பொருளான" இயேசுவையும் அவருடைய சத்தியத்தையும் அது எப்போதுமே மாற்றிக்கொண்டதே இல்லை.

12. அநேக காலமாக நீடித்துவரும் கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும், மற்றும் நன்மைக்கும் தீமைக்குமான இறுதி போராட்டத்தின் "பெரிய படத்தில்" நீங்களும் மற்றும் உங்களுடைய சபையும் எவ்வாறு பொருந்தும் என்று விளங்கி கொள்ளுவதே ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தராக இருப்பதின் அர்த்தம். வரலாற்றின் வழியாக வந்துக்கொண்டிருக்கும் தேவனின் பின்னடியார்களின் உடைக்க முடியாத சங்கிலியின் இறுதி இணைப்புகளாக, கடைசி உண்மையுள்ளோரின் மற்றும் விசுவாசமுள்ளோரின் ஒரு அங்கமாக நீங்கள் இருக்கின்றீர்கள். கடந்த காலத்தில் வாழ்ந்த விசுவாசமுடையவர்களான முற்பிதாக்கள் மற்றும் தீர்க்கதரிசிகள், இஸ்ரவேலின் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், அப்போஸ்தலர்கள் மற்றும் ஆதி சபை விசுவாசிகள், ஆதி நூற்றாண்டுகளில் துன்புறுத்தல்களுக்கு உள்ளானவர்கள், இருண்ட காலத்தில் உண்மையாய் இருந்தவர்கள், சீர்திருத்தத்தின் தைரியமான சீர்திருத்தவாதிகள், இரண்டாம் வருகையின் இயக்கத்தின் புத்துணர்ச்சி பெற்ற வேத மாணாக்கர்கள், மற்றும் உங்களுடைய சொந்த சபையின் முன்னோடிகளானவர்களுடனே இணைக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் தனியாக நிற்கவில்லை. உங்களுக்காக தன்னுடைய ஒரே பேரான குமாரனை அருளிய தேவனுக்காக உண்மையுடனும், தைரியமாகவும், பொறுமையுடனும் எந்த வித பயமுமில்லாமல் நிற்கிறீர்கள். எவ்வளவு சிறிய காலமே உள்ளது, எவ்வளவு அதிக ஜனங்களை இரட்சகரிடத்திற்கும் அவருடைய சத்தியத்தினிடத்திற்கும் அறிமுகபடுத்த வேண்டியுள்ளது என்ற அவசரத்தை அறிந்த தேவனுடைய கடைசியான, தவிர்க்கமுடியாத ஒரு ஜனக்கூட்டத்தின் அங்கமாய் நீங்கள் நிற்கின்றீர்கள்.

இந்த உலகத்தை விட்டு உயிருடன் எப்படி வெளியேறமுடியும் என்ற வழியை அறிந்த மீதமான அறிவிப்பாளர்களில் நீங்களும்

ஒருவராக உள்ளீர்கள். மற்றவர்களுடன் இதை பகிர்ந்து கொள்ளும் உரிமையும் அதற்கான பொறுமையும் உங்களிடம் உள்ளது.

நீங்கள் ஒரு ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தர்.

தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மீதமானவர்களில் நீங்களும் ஒருவர்.

வெட்கப்படுகிறீர்களா? கூச்சமாகவுள்ளதா? "உங்களுக்கு கிடைத்த இந்த (அசாதாரண மற்றும் தனித்தன்மை வாய்ந்த) வெளிச்சத்தை மரக்காலின் அடியில் ஒளித்து வைப்பதற்கு ஆயத்தமாய்" இருக்கிறீர்களா? அல்லது அதற்கு பதிலாக, உலகிற்கு மிக அவசியமாக தேவைப்படுகின்ற ஒன்று உங்களுடன் இருக்கிறது என்று கருத்தில் கொள்ளுவீர்களா? நீங்கள் கண்டுபிடித்த இதை அநேகர் தேடி அலைகின்றனர். நீங்கள் வித்தியாசமானவர் அல்ல. இந்த உலகத்தில் உள்ள மற்ற பிச்சைக்காரர்களுக்கு மிக அவசரமாக தேவைப்படும் அப்பத்தை உடைய அந்த ஒருவர் நீங்களே. தங்கத்தை கண்டுபிடிப்பதற்கான நிலப்படம் உங்களிடத்தில் தான் உள்ளது.

இல்லை என்றால் நீங்கள் பயப்படுகிறீர்களா? வரலாற்றை திரும்பி பார்க்கும்போது தேவனுக்கு விசுவாசமாய் இருந்தவர்கள் துன்பப் படுத்தப்பட்டது போல இறுதியில் நீங்களும் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்க படுவீர்கள் என்று பயப்படுகிறீர்களா? உபத்திரவத்தின் பெரிய காலத்தினூடாக செல்லவேண்டியுள்ளதை நினைத்து பயப்படுகிறீர்களா? உங்களுக்கு தண்ணீரும் அப்பமும் உறுதியாக கிடைக்கும் என்ற வேத வாக்குத்தத்தத்திற்கு மேலாக, சங்கீதத்தின் 91 வது அதிகாரத்தின் வாக்குத்தத்தத்திற்கும் மேலாக இன்னும் ஒரு காரியத்தை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். தேவனுக்கு யாரால் துன்புறுத்தல்களை தாங்கிக் கொள்ளமுடியும் என்று தெரிவது மாத்திரம் அல்லாமல் தேவை பட்டால் யாரால் தியாக மரணத்தை சந்திக்க முடியும் என்றும் தெரியும். முற்காலங்களில் அவர் அளித்திருந்தது போலவே உங்களுக்கு தேவைப்படுகின்ற எல்லா அனுகூலங்களையும் உங்களுக்கு

அளித்தபின் மட்டுமே அத்தகைய அழைப்பை தேவன் உங்களுக்கருள்வார். ஆகையால் பயத்தை அல்ல அவருடைய வாக்குத்தத்தங்களையே பற்றிக்கொள்ளுங்கள். நாம் பயத்தோடும் திகிலோடும் வாழ்வது அவருக்கு பிரியமல்ல.

ஆகையால் பயத்தையெல்லாம் விட்டு விட்டு நமது வாழ்க்கையிலுள்ள சங்கடங்கள் அனைத்தும் முடிவுக்கு வரயிருக்கிறதை சந்தோஷமாக எதிர்நோக்குவதில் கவனத்தை செலுத்துங்கள். சடுதியில் முடிவுக்கு வரவிருக்கும் வலி, கண்ணீர், மற்றும் மரணத்தை கொண்டாடுங்கள். நித்தியமான நிறைவான அமைதிக்காகவும், சந்தோஷத்திற்காகவும், உங்களின் ஒவ்வொரு பாவமில்லா ஆசையின் நிறைவேறுதலுக்காகவும், இந்த உலகத்தை கைவிட ஆயத்தமாகுங்கள்.

நீங்கள் ஒரு ஏழாம் நாள் அட்வென்டிஸ்த்தர்.

விசுவாசமுள்ளோர்களில் கடைசியாக இருப்போரில் நீங்களும் ஒருவர்.

உண்மையுள்ளவர்களின் உடைக்க முடியாத சங்கிலியின் ஒரு அங்கம் நீங்கள்.

நீங்கள் எவ்வளவு பாக்கியமானவர்கள். எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

எல்லா காலத்திலும், தேவன் தனக்கென்று ஒரு கூட்ட மக்களை எப்பொழுதும் வைத்திருந்தார் - அவர்கள் உண்மை யுள்ளவர்களும், விசுவாச முள்ளவர்களும், அழைக்கப் பட்டவர்களும் தெரிந்து கொள்ளப் பட்டவர்களுமாவர் - மேலும் அவருக்காக விசேஷமான ஒரு கூட்ட மக்கள் இன்றும் இருக்கிறார்கள்.

அன்றும்... மற்றும் இன்றும்

ஒரு சில அட்வென்டிஸ்ட் குடும்பத்தின் புகைப்பட ஆல்பம்



வில்லியம் மில்லர் (இடதுபுறம்) 19 ம் நூற்றாண்டின் பாதியில் பெரும் இரண்டாம் அட்வந்து இயக்கம் வளர உதவியாய் இருந்தவர்.



வில்லியம் மில்லரின் சிறுகோயில் (வலதுபுறம்)



வில்லியம் மில்லரின் நியூ யார்க் லோ ஹாம்ப்டனின் பண்ணையிலுள்ள வீடு (இடதுபுறம்)





எலென் ஜி. உவைட் (மேல் இடதுபுறம்) அவரின் கணவர் ஜேம்ஸ் (மேல் வலதுபுறம்) மற்றும் கேப்டன் ஜோசப் பேட்ஸ் (கீழே இடதுபுறம்) இவர்கள் ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் சபையின் நிறுவனர்கள் ஆவர். திருமதி உவைட் அவர்களின் மகன் வில்லியம் சி. ("வில்லி") உவைட் (கீழே வலதுபுறம்) இவர் அவரது தாயின் வாழ்நாள் முழுவதும் ஊழியத்தில் உதவியாளராக இருந்தார்.











எலென் ஜி. உவைட் அவர்களின் பின்னான காலத்தில் வட கலிபோர்னியாவின் எல்ம்ஸ்ஹேவன் என்ற இடத்திலுள்ள அவர்கள் வீடு (மேல்புறம்). 1800 நூற்றாண்டுகளில் அட்வென்டிஸ்ட் டாக்டர் ஜான் ஹார்வே கெல்லாக், மிச்சிகனில் உள்ள பேட்டில் கிரீக் மருத்துவமனையை நிறுவினார். மத்திய வலதுபுறம்: அந்த மருத்துவமனை 1902 ம் வருடம் முற்றிலும் ஒரு தீ விபத்தினால் அழிக்கப்படுவதற்கு முன்னால் உள்ள தோற்றம். அடிப்புறம் இடது: அந்த மருத்துவமனை மறுபடியும் கட்டப்பட்டு 1929 ல் உள்ள தோற்றம்.



1905 ல் தெற்கு கலிபோர்னியாவிலுள்ள லோம லின்டா மலையடிவாரத்தில் போதகர் ஜான் பெர்டென் அவர்கள் உதவியுடன் எலென் உவைட் அவர்கள் தலமையில் வாங்கப்பட்ட ஆரோக்கிய சுகாதார மையம் (மேலேயுள்ள புகைப்படத்தை பார்க்கவும்). அந்த தாழ்மையான நிலையில் வாங்கப்பட்ட லோம லின்டா இன்று உலக புகழ் பெற்ற பல்கலை கழகமாகவும் மருத்துவ மற்றும் மருத்துவ பயிற்சி மையமாகவும் காணப்படுகிறது (முக்கிய மருத்துவ மையம்/மருத்துவ பயிற்சி ஸ்தாபனம் 2005 ல் எடுத்த கீழே உள்ள புகைப்படத்தை பார்க்கவும்).





இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப வருடங்களில் தென் மத்திய லாஸ் ஏஞ்சல்ஸ் பட்டணத்திலுள்ள போயில் தெருவில் சிறிய மருந்தகம் ஒன்று நிறுவப்பட்டது. அந்த மருந்தகம் வளர்ந்து பெருகி இப்போது உவைட் ஞாபகார்த்த மருத்துவ மையம் என்றழைக்கப்படுகிறது. இது ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் சபையின் நிறுவனரான எலென் ஜி. உவைட் பெயரை கொண்டது. கீழே உள்ள படத்தை பார்க்கவும்.



உலக முழுவதும் ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் சபை ஸ்தாபனம் சுமார் 60 அச்சு கூடங்களை நடத்திக் கொண்டு வருகிறது. வட அமெரிக்காவில் இருக்கும் இரண்டு ஸ்தாபனங்கள் ரேவ்யூ அண்டு ஹெரால்ட்டு வெளியீட்டாளர் மேரிலாண்டிலுள்ள ஹாகர்ஸ்டவுனிலும் (வலதுபுறம்) மற்றும் பாய்ஸீ, ஐடஹோவிலிருக்கும் பசிபிக் பிரஸ் அச்சு கூடம் (கீழ்புறம்).







ஏழாம்-நாள் அட்வென்டிஸ்ட் ஜெனரல் கான்பரன்ஸின் உலகளாவிய தலைமை அலுவலக கட்டிடம் (மேல்புறம்) மற்றும் தலைமை அலுவலகத்தின் பெயர் அடையாளம் (கீழ்புறம்). *புகைப்பட பதிப்புரிமை © 2005 ஏழாம்-நாள் அட்வென்டிஸ்ட் ஜெனரல் கான்பரன்ஸ்க்கு உரியது.*



புத்தக பிரதிகள் பெற தொடர்பு:

மின்னஞ்சல் முகவரி: steve.hanson@pacificpress.com

மொத்தமாகப்பெற தொடர்பு: 800-600-7197

தற்போது கிடைக்கிறது:

- ஆங்கிலம்
- ஸ்பானிஷ்
- பிரஞ்சு
- போர்ச்சுகீஸ்
- ஸ்வாஹிலி
- ரோமானியன்
- ரஷியன்

எதிர்காலத்தில் கிடைக்கும்:

- தமிழ்
- கொரியன்
- ஜெர்மன்
- டாகாலோக்
- இன்னும் பல மொழிகள்

இன்னும் இதர மொழிகளில் இந்த புஸ்தகத்தை மொழி பெயர்க்க விரும்புகிறவர்கள் மேலும் விவரங்கள் பெற தயவுசெய்து இங்கு செல்லவும். www.thecalledthechosen.com

எங்களை தொடர்பு கொள்ள: calledchosen@gmail.com

www.thecalledthechosen.com



அழைக்கப் பட்டவர்கள்... தெரிந்துகொள்ளப் பட்டவர்கள்

அவர்கள் யார்?

அவர்கள் எல்லா காலத்திலும் உண்மையும் விசுவாசம் உடையவர்களாயிருந்து, அவரிடத்தில் அன்புடையவர்களும் - உறுதியாயிருந்து எந்த நிலையிலும் அசைக்க முடியாதவர்களும் - தங்களை அவருக்கு அர்ப்பணித்தவர்களுமாவர்.

தேவனுக்கு எப்போதும் ஒரு கூட்ட மக்களிருந்தார்கள் - அவர்கள் பிழையற்றவர்களும், சமரசம் செய்து கொள்ளாதவர்களும், பொய் பேசாதவர்களும் எப்பொழுதும் அவருக்காக பிரித்து எடுக்கப்பட்டவர்களுமாவர்.

தேவனுக்கு எப்போதும் ஒரு கூட்ட மக்களிருந்தார்கள் - அவர்கள் தேவன் எப்படிப்பட்டவர் என்று இந்த உலகத்திற்கு காட்டவும், அவரைப்பற்றி சொல்லவும் அவரின் சத்தியத்தை எடுத்துரைக்கவும் அதை பாதுகாக்கவும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுமாவர்.

தேவனுக்கு இப்போதும் ஒரு கூட்ட மக்கள் இருக்கிறார்கள். ஆதாம ஏவாளிலிருந்து தொடங்கி முறிக்க முடியாத வரிசையில் அவரால் அழைக்கப் பட்டவர்களும் தெரிந்து கொள்ளப் பட்டவர்களும் இந்நாள் வரையும் இருக்கிறார்கள். இந்த மீதமான அவருடைய பிள்ளைகள் நற்செய்தியை அறிவித்து அவர்களை இயேசுவுக்காக ஆதாய படுத்தி அவரை அறிந்து கொள்ளவும் அவருடைய அதிசீக்கிர வருகையை சந்திக்கவும் இந்த உலகத்தில் வைத்துள்ளார்.

அழைக்கப் பட்டவர்கள் யார்? தெரிந்துகொள்ளப் பட்டவர்கள் யார்?

அவர்கள் நீங்கள் தான்.